தமிழ் இசைச் சங்கம்
சென்னை

# பண் ஆராய்ச்சி வெள்ளி விழா

சிறப்பு மலர்
1974

# பண் ஆராய்ச்சி

# வெள்ளி விழாச் சிறப்பு மலர்

**1949-1974**

தமிழ் இசைச் சங்கம், சென்னை

**22–12–1974**

விலை ரூ. 5-00

பதிப்பாசிரியர் :

**பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார்**

அச்சிட்டோர் : மாஸ் மீடியா அண்டு பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
38/39, மவுண்ட்ரோடு, கிண்டி, சென்னை-34.

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR,
OF CHETTINAD.

THE PALACE
CHETTINAD.

25. 3. 1944

உ

சிவமயம்

நடராஜப் பெருமானைத்
தினந்தோறும் வண
ங்குகிறேன். அவருடைய
திருவருளால் தமிழ் வளர்ச்
சியை வேண்டிக் கொண்டிரு
க்கின்றேன். தமிழ்நா
டெங்கும் தமிழிசை
செழிக்கவேண்டுமென்பது
எனது ஆவல். பட்டமும்,
[illegible]
என் வாழ்க்கையின்
கொள்கை.

ரா. அண்ணாமலை

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## ஆட்சிக் குழுவினர்

தலைவர் :

திவான்பகதூர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளை

துணைத் தலைவர் :

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்

உறுப்பினர் :

திரு. வி. எஸ். தியாகராச முதலியார்

திரு. பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார்

திரு. ஆர். கே. வேங்கடாசலம் செட்டியார்

திரு. எல். அழகுசுந்தரம் செட்டியார்

திரு. ஓ. எம். எஸ்பி. எல். எம். மெய்யப்ப செட்டியார்

திரு. ஆர். இரத்தினசபாபதி செட்டியார்

கௌரவச் செயலாளர்கள் :

ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார்

திரு. மு. அ. சிதம்பரம்

சங்கம் நிறுவிய துங்கர்
செட்டிநாட்டு ராஜா டாக்டர் சர்
மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

# தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு

1. திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை (தலைவர்)
2. டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்
(தமிழ் இசைச் சங்கத்தின் துணைத் தலைவர்)
3. திரு. மு. அ. சிதம்பரம்
(தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்)
4. இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன்
5. திருமதி. சௌந்தரம் கைலாசம்
6. பேராசிரியர், இசைப்பேரறிஞர், சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
7. இசைப்பேரறிஞர், முசிறி, திரு. சுப்பிரமணிய ஐயர்
8. திரு. மீ. ப. சோமசுந்தரம்
9. இசைப்பேரறிஞர், பாலக்காடு திரு. டி. எஸ். மணி ஐயர்
10. இசைப்பேரறிஞர், வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை
11. பத்மபூஷண் எம். எல். வசந்தகுமாரி
12. பேராசிரியர், டாக்டர், சங்கீத பூஷணம் எஸ். இராமநாதன்
13. திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை
14. பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

# பண் ஆராய்ச்சி

## வெள்ளி விழா உட்குழு

—o—

இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன்

திரு. மு. அ. சிதம்பரம்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் *(செயலாளர்)*

# பண் ஆராய்ச்சி

## வெள்ளி விழாச் சிறப்பு மலர்க் குழு

—o—

இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன்

திரு. மு. அ. சிதம்பரம்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்—*பதிப்பாசிரியர்*

திரு. எஸ். ஸ்ரீராமன்

திரு. த. சங்கரன்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## பண் ஆராய்ச்சி வெள்ளி விழா

**1949—1974**

இடம்: ராஜா அண்ணாமலை மன்றம், சென்னை

விழா, 22—12—74 முதல் 26—12—74 வரை

22—12—74 முற்பகல் 10 மணி அளவில்

**திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்**
வரவேற்புரை நிகழ்த்துவார்கள்.

**சென்னை உயர் நீதிமன்ற நடுவர், திரு. எஸ். மகாராசன் அவர்கள்**
விழாவினைத் தொடங்கி வைப்பார்கள்.

**பத்மஸ்ரீ திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்**
விழாவிற்குத் தலைமை தாங்குவார்கள்.

**இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள்**
பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலரினையும்
பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்
என்னும் நூலினையும் வெளியிடுவார்கள்.
பண் ஆராய்ச்சியாளர்களுக்குச் சிறப்புச் செய்யப்பெறும்.

**டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள்**
நன்றியுரை நிகழ்த்துவார்கள்.

# உள்ளுறை


எனது ஆவல் .. 3

அரசர் அண்ணாமலை வள்ளல்

வாழ்த்துச் செய்திகள் .. 9

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாத் தலைமையுரை .. 41

நாதசுர வித்துவான், பத்மஸ்ரீ திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை

தமிழ் இசைச் சங்கமும் பண் ஆராய்ச்சி வரலாறும் .. 43

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

தமிழ் இசை விழாக்களில் வரவேற்புரை, தொடக்கவுரை தலைமையுரை, நிகழ்த்தியோர் பெயர்கள் 65

இசைப்பேரறிஞர் பட்டம் வழங்கப் பெற்றவர்களின் பெயர்கள்

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் வரவேற்புரை, தொடக்கவுரை, முதலியவை நிகழ்த்தியோர் பெயர்கள்

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் பங்கு கொண்ட ஓதுவார்களின் பெயர்கள்

பண் ஆராய்ச்சியும் அதன் பயனும் .. 69

இசைப்பேரறிஞர், ம. ப. பெரியசாமித்தூரன்

முல்லைப் பண்ணின் தொன்மையும் சிறப்பும் .. 71

ராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை

யாழ் நூலின் அமைப்பும் சிறப்பும் .. 73

வித்துவான் க. வெள்ளைவாரணனார்

யாழ் : இசை எழாலும் கரணங்களும் .. 77

பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன்

இராகங்களில் பழந் தமிழ்ப் பண்களின் செல்வாக்கு .. 80

சேலம் திருமதி எஸ். செயலட்சுமி

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண் ஆராய்ச்சி .. 86

திரு. டி. எஸ். பார்த்தசாரதி

பஞ்சமரபு என்னும் நூலின் வழியாக அறியப் பெறும் செய்திகள் .. 90

பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன்

நாட்டுப்புறப் பாடல்களும், நடனங்களும் .. 91

திரு. ர. அய்யாசாமி

தமிழிசை உரைக்கோவை .. 96

தொகுப்பு : பேராசிரியர் அன்பு கணபதி

பண் ஆராய்ச்சி உரைக்கோவை .. 102

தொகுப்பு : டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

நாதசுர வித்துவான் பத்மஸ்ரீ திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு .. 108

திரு. த. சங்கரன்

நன்றியுரை .. 110

கௌரவச் செயலாளர்கள்

பண் ஆராய்ச்சி வெள்ளி விழா நிகழ்ச்சி நிரல் .. 111

தமிழ் இசை முப்பத்திரண்டாம் விழா இசையரங்கு நிகழ்ச்சிகள் .. 119

விளம்பரங்கள் .. 150

# வாழ்த்துச் செய்திகள்

**மேதகு பி. டி. ஜட்டி**

**இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், புது தில்லி.**

தமிழ் இசைச் சங்கம், இவ் ஆண்டு டிசம்பரில், பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவைக் கொண்டாட இருப்பது அறிந்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன். இச் சங்கம், தமிழர்களின் இசைக்குப் புத்துயிர் அளித்து, மதிப்பிடற்கரிய தொண்டினை ஆற்றியுள்ளது. வெள்ளி விழாச் சிறப்பாக நடைபெற என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தலைமை அமைச்சர் செயலகம்**

**புது தில்லி.**

இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள், தங்கள் கடிதத்திற்கு நன்றி கூறுகிறார்கள். இவ் ஆண்டு டிசம்பரில், தமிழ் இசைச் சங்கம் நடத்தும் பண் ஆராய்ச்சி வெள்ளி விழா, வெற்றியாக நடைபெறுவதற்கு அவர்கள், தம்முடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**எச். இ. சாரதா பிரசாத்**

**செய்தித்துறை இயக்குநர்**

## மேதகு கே. கே. ஷா

தமிழக ஆளுநர், சென்னை.

தமிழ் இசைச் சங்கம், 1974 டிசம்பரில், பண் ஆராய்ச்சியின் வெள்ளி விழாக் கொண்டாடுவதன் அறிகுறியாகச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

தம் கூர்த்த மதியினுல், ஒரு பல்கலைக் கழகத்தினை நிறுவிய துடன், தம் வாழ்நாளில், தமிழ் இசை இயக்கத்தினைத் தோற்று வித்துத் தமிழ் இசைச் சங்கத்தினை நிறுவியவர்களும், தம் பல்கலைக் கழகத்தில், தமிழ் இசையினைப் போற்றி வளர்த் தவர்களும், அதற்கெனப் பெரு நன்கொடையாக ஒன்றரை லட்ச ரூபாய் வழங்கியவர்களும் ஆகிய டாக்டர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய நினைவு, இந்த நேரத்தில் எழுகின்றது. அண்ணுமலை அரசர் அவர்களின் தலைசிறந்த வழித்தோன்றல்கள், அரசர் அவர்களின் இச் சிறந்த மரபுகளைத் தமிழ் நாட்டின் பெருந்தலைவர்கள், தமிழ் அன்பர்கள், புகழ் மிக்க இசைவாணர்கள், இசைத்துறை வல்லுநர்கள், புலவர்கள் ஆகியோரது முழு ஒத்துழைப்புடன், தொடர்ந்து பாதுகாத்து வருவது, மிகுந்த மன நிறைவைத் தருவதாகும். தமிழ் இசை விளக்குக் குன்று ஒளியுடன் மிளிருமாறு காத்துவரும் அவர்களை, நான் உளமாரப் பாராட்டுகின்றேன்.

பாடல் பாடப்படும்போது, இசையின் முழு இன்பத்தையும் வெளிப்படுத்தும் வகையில், பண் எனப்படுவது, ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப் பெற்றது. 1000 பண்கள் உருவாக்கப் பெற்றும், 103 பண்கள் கடந்த காலத்தில் பழக்கத்திலிருந்தும், இப்போது 23 பண்களே நம்மிடம் நிலைத் திருப்பது, இரக்கப்படும்படியாக உள்ளது. வியக்கத்தக்க ஆய்வுப் பணியினை ஆற்றிவரும் தமிழ் இசைச் சங்கம், மறைந்து போன பண்கள் பலவற்றை மீண்டும் வெளிக் கொணர்வதில் வெற்றி பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

தமிழ் இசைச் சங்கம், பண் ஆராய்ச்சித் துறையில், தன் பாராட்டத்தக்க முயற்சிகளில் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகின்றேன்.

## டாக்டர் கலைஞர் தமிழவேள் மாண்புமிகு மு. கருணாநிதி

முதலமைச்சர், தமிழ்நாடு அரசு, சென்னை.

முத்தமிழில், இசைத் தமிழ் ஏற்றம் பெற்றிட, இயலும் வகையெல்லாம் உயர் தொண்டாற்றி வரும் தமிழிசைச் சங்கம், தன் வெள்ளி விழா நாளில் வெளியிட இருக்கும் ''பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்'' நறுமணம் வீசிச் சிறப்புடன் விளங்கிட வாழ்த்துகிறேன்.

**மாண்புமிகு சி. சுப்பிரமணியம்**

**இந்திய அரசாங்க நிதி அமைச்சர், புது தில்லி.**

தமிழ் இசைச் சங்கத்தின் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு, வருகிற டிசம்பர் மாதம், வெள்ளி விழாக் கொண்டாட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவ்வமயம் வெளிவரவிருக்கும் 'பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்' சிறப்பாக அமைந்திட என் நல்வாழ்த்துக்கள்.

## டாக்டர் நாவலர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன்

கல்வி--சுற்றுலா அமைச்சர், சென்னை.

தமிழ் இசைச் சங்கம், இசைக்கு ஊக்கமும் உயர்வும் அளிக்கும் வண்ணம், தமிழ் மொழிப் புலவர்களையும், இசை அறிஞர்களையும், வல்லுநர்களையும் ஒன்று கூட்டிப் பழந்தமிழர் இசைச் செல்வங்களை வளர்த்து வருவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் இசைக்காகத் தளராது பாடுபட்டு வரும் இச் சங்கத்தின் முயற்சிகள், நிகழ்காலத்தில் தமிழிசையைப் பரவச் செய்யவும், எதிர்காலத்தில் நிலைக்கச் செய்யவும் உதவ வேண்டு மெனக் கேட்டுக்கொண்டு, வெளியிடப்படும், ''பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்'' சிறக்க வாழ்த்துகிறேன்.

### திரு. கு. காமராஜ்
தமிழக முன்னாள் முதல்வர், சென்னை.

தமிழ் இசைச் சங்கத்தின் மூலம், இசைத் துறையில் சீரிய தொண்டாற்றி வரும் முயற்சி பாராட்டத் தக்கது. பண் ஆராய்ச்சி தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டதைக் குறிக்கும் வகையில், ''பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்'' வெளியிடுவதறிந்து மிக்க மகிழ்ச்சி.

மலர் சிறப்புற விளங்க, என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

### திரு. எம். பக்தவத்சலம்
தமிழக முன்னாள் முதல்வர், சென்னை.

தமிழ் இசை விழாவின்போது, பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர் வெளியிடப்போவது பற்றி மகிழ்ச்சி. இசைக்கு மொழியில்லை என்பது ஒரு பக்கத்தில் பொருந்துமாயினும் இசையின் மேன்மை, பாடலின் பொருளைப் பற்றியது என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். நம் தெய்வீகத் தமிழைப் போன்று, இசையும் தெய்வீகத் தன்மை பெற்றது. பக்தியோடும், இசை உணர்வோடும் பாடப்பட்டவைதான் நம் ஒப்புயர்வற்ற தமிழ்ப் பாசுரங்கள். தேவாரத்துக்கென்று உள்ள பண் ஆராய்ச்சி யில், தமிழ் இசைச் சங்கம் ஈடுபட்டிருப்பது, மகத்தான சாதனையே. தமிழ் இசைச் சங்கம் காட்டிய வழியினால், இன்று, பல தமிழ்ப் பாடல்கள், வித்துவான்களால் பாடப்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் இசை அரங்கில் அபூர்வமாகத்தான் தமிழ்ப் பாடல்கள் பாடப்பட்டு வந்தன. இன்று தமிழ்க் கீர்த்தனைகள், சாதாரணமாகப் பிரபல பாடகர்களால் பாடப்பட்டு வருவது, தமிழ் இசைச் சங்கத்தின் பெருமையே. பற்றோடும், உற்சாகத் தோடும், நம்பிக்கையோடும் தமிழ் இசையை வளர்த்து வரும் சங்கத்தாருக்கும், பண் ஆராய்ச்சியாளருக்கும் என் நல் வாழ்த்துக் கூறுகிறேன்.

## புலவர் மாண்புமிகு கா. கோவிந்தன்

**தலைவர், தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை, சென்னை.**

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில், 'பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்' ஒன்று வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, 30 ஆண்டுகளுக்கு மேலாக, இச் சங்கம், தமிழ் இசைக்கு ஆற்றி வரும் பணி, அனைவரும் அறிந்த ஒன்றாகும். தமிழ்ப் பண் குறித்துப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், இம் மலரில் இடம்பெறும் என்று நம்புகின்றேன். மலர், மணம் கமழ, என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

## திரு. என். எஸ். இராமசாமி

**உயர் நீதிமன்ற நடுவர், சென்னை.**

தமிழ் இசைச் சங்கம் தொடங்கப்படுவதற்கு முன்னதாகத் தமிழ் இசையை வளர்க்க வேண்டுமெனப் பெரியோர்கள் இயக்கம் நடத்திய காலத்தில், நான் கல்லூரி மாணவன். அந்த இயக்கம் பற்றி ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நிகழ்த்திய உரைகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். தமிழ் இசைச் சங்கம் தோன்றியபோது பெருமகிழ்ச்சி கொண்டவர்களில், நானும் ஒருவன். பண் ஆராய்ச்சி, பொதுவாகத் தமிழுக்கும், குறிப்பாகத் தமிழ் இசைக்கும் மிக அரிய தொண்டு. இத் தொண்டின் வெள்ளி விழாக் கொண்டாடப்படும் நேரத்தில், சிறப்பு மலர் வெளியிடுவது குறித்து மெத்த மகிழ்ச்சி.

தமிழ் இசையும், பண் ஆராய்ச்சியும் மேன்மேலும் வளர இறைவனை வேண்டுகிறேன்.

டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள்

*சங்கத் தலைவர் (1948—53)*

திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள்

சங்கத் தலைவர் (1953—56)

திரு. எம். எம். இஸ்மாயில் அவர்கள்

தமிழ் இசை முப்பத்திரண்டாம் விழாவினைத் தொடங்கி வைப்பவர்



திரு. எஸ். மகாராசன் அவர்கள்

சென்னை உயர் நீதிமன்ற நடுவர்

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவினைத் தொடங்கி வைப்பவர்

பத்மஸ்ரீ திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்

தமிழ் இசை முப்பத்திரண்டாம் விழாத் தலைவர்

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாத் தலைவர்



இசைப்பேரறிஞர், பத்மபூஷண்

**ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள்**

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலரினையும், பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும் என்னும் நூலினையும் வெளியிடுபவர்

திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்

சங்கத் தலைவர்



டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள்

இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சங்கத்தின் துணைத்தலைவர்

## திரு. பி. எஸ். கைலாசம்

**உயர் நீதிமன்ற நடுவர், சென்னை**

தமிழிசைச் சங்கம் பண் ஆராய்ச்சி நடத்தி இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தி ஆவதை ஒட்டி, வெள்ளி விழா மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்கின்றேன். தமிழிசை வளர்ச்சிக்காக, அண்ணாமலை அரசர் அவர்கள் ஆற்றிய தொண்டினைத் தமிழ் கூறும் நல்லுலகம், எப்போதும் நன்றியோடு பாராட்டும். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பழமையான பண் நலங்களையெல்லாம் புலவர்களையும், ஓதுவார்களையும் கொண்டு ஆராய்ந்து வருவது, போற்றத்தக்க செயலாகும். காலத்தால் மறைந்து போன இந்த இசை நுணுக்கங்களை மீண்டும் கண்டு வழங்குகிற இந்தப் புனிதமான செயலை மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

---

## திருமதி சௌந்தரம் கைலாசம்

**சென்னை**

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்கின்றேன்.

பண்ணாரின் தமிழைப் பாரெங்கும் பரப்புதற்கு அண்ணாமலை அரசர் ஆற்றிய அருந்தொண்டுகளை அனைவரும் அறிவர். இனிய தமிழ் இசைச் சங்கம், அரங்குகளை அமைத்து மகிழ்விப்பதோடு, செழுந் தமிழ்ப் பண்களின் சீரிய இயல்புகளை ஆராய்ந்து வருவதும் சிறப்பிற்குரிய செயலாகும். இழந்த பழம் புகழ் மீள வேண்டும்; நாட்டில் எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்; வழிந்தொழுகும் சுவைத் தமிழே பெருக வேண்டும்; வாயெல்லாம் மனமெல்லாம் இனிக்க வேண்டும்; பழந்தமிழன் கடவுளின்பால் கொண்ட பக்தி, பாரெங்கும் செழிக்கும் வகை செய்தல் வேண்டும் என்று பாடிய பாவேந்தரின் பாட்டுரையின்படி, இவ்வாராய்ச்சி, நிறைந்த பயனை விளைவித்துச் சிறந்த தமிழ்ப் பாடல்களை முழங்கச் செய்து வருகிறது.

புகழ் வாய்ந்த தந்தைக்குப் பொருந்திய மக்களாம் முத்தமிழ்த் தலைவராம் நம் முத்தையா அரசரும், வித்தகத் தொழில் வேந்தராம் நம் சிதம்பரச் செம்மலும் இப் பணிகளை ஈடில்லாச் சிறப்புடன் இயற்றி வருகின்றனர்கள்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்ப எண்ணும் இந் நல்லவர்கள் முயற்சி, வெள்ளி விழா மலராக விளங்குவது கண்டு வாழ்த்தி மகிழ்கின்றேன்.

*தமிழிசைச் சங்கம் வெல்க!*
*பண்ணாராய்ச்சி ஓங்குக!*
*நாதன்தாள் வாழ்க!*

## திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை

**தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை**

தமிழ் மக்களின் பழம் பெரும் செல்வமாகிய இசைத் தமிழின் வளர்ச்சிக்குத் தமிழ் இசைச் சங்கம் செய்து வரும் உயர் பணிகளை நாடு நன்கு அறியும். தமிழ் நாட்டில் தமிழ் இசை குறைந்து, வேற்று மொழி இசை முழங்கியதைக் கண்ட பெருங் கொடை வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் நாடு எங்கும் தமிழ் இசை முழங்க வேண்டும் என்று ஆவல் கொண்டார்கள். உடனே, தமிழ் இசை இயக்கத்தினைத் தொடங்கி, அதன் தொடர்பாகச் சென்னையில் 1943ஆம் ஆண்டில், தமிழ் இசைச் சங்கத்தினை நிறுவினார்கள். அவர்களுக்கு அருந் துணையாக, டாக்டர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், ராஜாஜி, கல்கி, கோவை இரத்தினசபாபதி முதலியார், டி.கே.சி. முதலிய பெரியோர்கள் அமைந்தார்கள். இவ்வாறு தோன்றி, இனிது வளர்ந்து வரும் தமிழ் இசைச் சங்கம் , 1968ஆம் ஆண்டில், தனது வெள்ளி விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது.

இச் சங்கம், ஆண்டுதோறும் இசை விழாவினை நடத்தி, மக்களுக்கு இன்பம் தருவதுடன், நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் தமிழ் இசை பயிலும் இசைக் கல்லூரியையும், நல்ல நூல் நிலையத்தினையும், அருமையான இசைக் கருவி நிலையத்தினையும் கொண்டதாய்த் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

இச் சங்கத்தில், 1949ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற பண் ஆராய்ச்சி, இசையுலகிற்குப் பெரும் பயன் தரும் அரும் பணியாகும். இதனைத் தொடங்கிய டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கும், அன்று முதல் இன்றுவரை இப் பணியில் ஈடுபட்டு ஒத்துழைத்து உதவியவர்களும், உதவுகின்றவர்களும் ஆகிய முத்தமிழ்ப் புலவர்கள் எல்லோருக்கும், இவ்வாராய்ச்சிக்கு உயிர்நாடியாக விளங்கும் ஓதுவார்களுக்கும், இசை உலகம் என்றும் கடப்பாடுடையது. இவ் ஆராய்ச்சியின் அருமை, காலப் போக்கில், மேலும் மேலும் பாராட்டப் பெறும் என்பதில் ஐயமில்லை. இப் பண் ஆராய்ச்சியின் வெள்ளி விழா, இவ் ஆண்டில் நடைபெறுவது, உளம் நிறைந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், அவர்களின் தம்பி, திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் தம் தந்தையார் அவர்களின் பணிகளைத் தொடர்ந்து, இச் சங்கத்தினைக் கண்ணெனப் பேணி வளர்த்து வருவது, தமிழ் மக்களின் தவப்பேறு ஆகும். அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினர்களுக்கும் நிறைந்த நல்வாழ்வு தந்தருள இறைவனை வேண்டுகிறேன்.

பண் ஆராய்ச்சி வெள்ளி விழா இனிது நடைபெறவும், தமிழ் இசைச் சங்கம், தனது பணிகளில் மேலும் மேலும் உயர்வு பெறவும் அம்பலவாணர் அருள் புரிவாராக.

# டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்

**இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,**
**துணைத்தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை**

தமிழ் நாட்டில், தமிழ் இசை, தனக்கு உரிய இடத்தினைப் பெறுமல் தளர்ந்திருந்த நிலையில், தமிழ் இசை இயக்கத்தினை 32 ஆண்டுகளுக்கு முன், என் தந்தையார் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொடங்கி, வெற்றி கண்டு, சென்னையில், தமிழ் இசைச் சங்கத்தினை நிறுவினார்கள். இப் பணிக்கு டாக்டர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், திவான்பகதூர் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை, திரு.சி. இராசகோபாலாச்சாரியார், திரு. டி.கே. சிதம்பரநாத முதலியார், பம்மல் சம்பந்த முதலியார், கல்கி திரு. ரா. கிருட்டிணமூர்த்தி, திரு. காமராஜ், அறிஞர் அண்ணுதுரை, திரு. சி. சுப்பிரமணியம், திரு. எம். பக்தவத்சலம், டாக்டர் மு. கருணுநிதி, சர். பி.டி. இராசன், திரு. டி. சதாசிவம், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனுர், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், திரு. டி.பி. மாணிக்க வாசகம் முதலிய பெரியோர்களும், இசைவாணர்களும், தமிழ்ப் புலவர்களும் ஆர்வத்துடன் வழங்கிய ஒத்துழைப்பையும், உதவிகளையும் ஒருநாளும் மறக்க முடியாது.

தமிழ் இசைச் சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்கு நிலையான நிறுவனமாய் நல் வளர்ச்சி பெற்று, 1968ஆம் ஆண்டில், வெள்ளி விழாக் கொண்டாடித் தமிழ் இசைக்கு அரும் பெரும் பணியாற்றி வருகின்றது.

இத் தமிழ் இசைச் சங்கத்தின் நோக்கங்களுள் ஒன்ருகிய தமிழ் இசை ஆராய்ச்சிப் பணி, நிலையான பயன் தரத் தக்கது; தொடர்ந்து நடைபெறுதற்குரியது. இப் பணிக்குத் தமிழ் இசைச் சங்கம், சிறப்பிடம் கொடுத்து, 1949ஆம் ஆண்டில், பண் ஆராய்ச்சியைத் தொடங்கியது. டாக்டர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் இச் சங்கத் தலைவராய் இருந்தபோது, அவர்களுடைய பெருமுயற்சியினுல், இப் பண் ஆராய்ச்சிப் பணியை அவர்கள் தொடங்கினுர்கள். அவர்களின் உருவச் சிலையினை, இந்த ஆண்டில் திறந்து வைத்துத் தமிழ் இசைச் சங்கம், தன் கடமையை ஆற்ற இருக்கின்றது.

இப் பண் ஆராய்ச்சிப் பணிக்கு டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனுர், இசைப்பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி, இசைப்பேரறிஞர் எம்.எம். தண்டபாணி தேசிகர், இசைப்பேரறிஞர் பி. எஸ். வீருசாமிப் பிள்ளை, ஔவை திரு. டி. கே. சண்முகம், இசைப்பேரறிஞர் பெரியசாமித்தூரன், ராவ்சாகிப் கே. கோதண்டபாணிப் பிள்ளை முதலிய அறிஞர் பெருமக்களும், இசைப்பேரறிஞர்கள் எல்லோரும், மற்றைய இசைப் புலவர்கள் பலரும், தமிழ்ப் புலவர்கள் பலரும், தேவாரம் பாடும் ஓதுவார்களும் ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளவிடற்கரியன.

நமது இசைப்பேரறிஞர்களில் ஒருவரும், நமது பண் ஆராய்ச்சியின் 21ஆம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியவர்களும் ஆகிய திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டு மணிலா நகரில், மக்சாய்சாய் நினைவுப் பெரும் பரிசினை இந்த ஆண்டில் பெற்றிருப்பது, நம் அனைவருக்கும் பெருமை தருகின்றது.

பண் ஆராய்ச்சிக் கூட்ட நிகழ்ச்சிகள் முழுதும் அடங்கியதாகப் பெரிய நூல் வடிவில், ஆண்டுதோறும் வெளிவந்துள்ள அறிக்கைகள், ஆராய்ச்சியாளர்களால், பெரிதும் மதிக்கப்பெறுகின்றன. இவ் அறிக்கைகள் எல்லாவற்றிலும் உள்ள ஆராய்ச்சிக் கருத்துக்கள் முழுதும் தொகுக்கப்பெற்றுப் பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும் என்னும் பெரு நூலாக, இவ் வெள்ளி விழாவில் வெளியிடப் பெறுவது, பெருமகிழ்ச்சிக்குரியது. இந் நூலின், தொகுப்பாசிரியராக, இசைப் பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களும், பதிப்பாசிரியராகப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும் அமைந்தது மிகவும் பொருத்தமாகும். இந் நூல், தமிழ் இசைக்கு ஒரு பெரிய கருவூலமாகும்.

இப் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில், ஆராய்ச்சியுடன், பழமையான குறவஞ்சி நாட்டிய நாடகம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள், அனைவரும் கண்டு மகிழ்ந்து பாராட்டும் முறையில், ஆண்டுதோறும் நடைபெற்று, அவை, பழந்தமிழ் இசைக்கு உயிரூட்டும் நிகழ்ச்சிகளாக அமைந்து வருகின்றன. இச் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த வகையிலும், ஆராய்ச்சிகளிலும் தொடக்கம் முதல் பெரும் பங்கு கொண்ட இசைப்பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி அவர்களின் அரும் பணிகளும், இவ் ஆராய்ச்சிப் பணிகளில் தொடக்கம் முதல் நம்முடன் ஒன்றுபட்டு ஒத்துழைத்த டாக்டர் மு. வரதராசனுர் அவர்களின் அரும் பணிகளும் நம் நினைவில் என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு, 24 ஆண்டுகளாகப் பற்பல வகைகளில் தமிழ் இசை ஆராய்ச்சிப் பணி புரிந்து வரும் இச் சங்கம், இப்போது, இவ் ஆராய்ச்சியின் வெள்ளி விழாக் கொண்டாடுவது, தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இப் பணியில் பங்கு கொண்டு உதவிவரும் எல்லோருக்கும், இப் பணிக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கி வரும் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவினருக்கும், ஆண்டுதோறும் தொடர்ந்து பண் ஆராய்ச்சி நிகழ்ச்சிகளைத் தொகுத்து உதவி வரும் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இச் சங்கத் தலைவராக இருந்துவரும் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், 1943ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழ் இசைக்கும், பண் ஆராய்ச்சிக்கும் செய்துவரும் அரும் பணிகளுக்குத் தமிழ் மக்கள், பெரிதும் கடப்பாடு உடையவர்கள் ஆவார்கள். அவர்களுக்கும், இச் சங்கப் பணி களில் ஒத்துழைத்து வரும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நம் நன்றி உரியதாகும்.

இச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்களாக, 1943ஆம் ஆண்டு முதல் பொறுப்பேற்றுத் தொடர்ந்து தமிழ் இசைக்கும், பண் ஆராய்ச்சிக்கும், பெரும் பணி ஆற்றிவரும் என் தம்பி திரு. மு. அ. சிதம்பரம் செட்டியார், ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் ஆகிய இருவர்களுக்கும் என் மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தந்தையார் அவர்கள் காலம் முதல், தமிழ் இசைப் பணிகளில் தொடர்ந்து ஒத்துழைத்து வருகின்றவர்களும், தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் செயலாளராய்த் தொடக்கம் முதல் இருந்து, இப் பண் ஆராய்ச்சிக்கும் இருபத் தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து செயலாளராகப் பணி புரிந்து வருகின்றவர்களும் ஆகிய பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் பெருந் தொண்டுகள், போற்றுதற்குரியன.

இச் சங்கத்தின் உதவிச் செயலாளராய்ப் பல ஆண்டுகளாக, நற்பணியாற்றி வரும் திரு. எஸ். ஸ்ரீராமன் அவர்களுக்கும், உதவிச் செயலாளராக நற்பணியாற்றி வரும் திருமதி சீதா சிதம்பரத்திற்கும் இவர்களுக்கு உதவியாக இருந்துவரும் சங்க அலுவலாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்கள் உரியனவாகும்.

பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவினைச் சென்னை உயர் நீதிமன்ற நடுவர் திரு. எஸ். மகாராசன் அவர்கள் தொடங்கி வைப்பதும், விழாவிற்கு நாகசுர வித்துவான், பத்மஸ்ரீ திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமை தாங்குவதும், வெள்ளி விழாச் சிறப்பு மலரினையும், பண் ஆராய்ச்சித் தொகுப்பு நூலினையும், முத்தமிழுக்கும் பெரும்பணியாற்றிவரும் இசைப்பேரறிஞர் பத்ம பூஷண் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள் வெளியிடுவதும், பண் ஆராய்ச்சி யாளர்களுக்குச் சிறப்புச் செய்வதும் நம் அனைவருக்கும் மகிழ்ச்சியும், பெருமையும் தருவனவாகும்.

தமிழ் இசைச் சங்கம், பெரியோர்கள், ஆராய்ச்சியாளர்கள், கலைஞர்கள், தமிழன்பர்கள் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்புடனும் மேலும் மேலும் வளர்ந்து ஓங்கத் தில்லைக் கூத்தன் திருவருள் புரிவாராக.

# திரு. லெ. அழகுசுந்தரஞ் செட்டியார்

தலைவர், தமிழ் இசைச் சங்கம், மதுரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய பெருவள்ளல், டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், 32 ஆண்டுகளுக்கு முன், சென்னையில், தமிழ் இசைச் சங்கம் தோற்றுவித்தது, தமிழ் மொழிக்குச் செய்த அரும் பெரும் பணியாகும். உலக இசைகளுள், தமிழ் இசை பழமையானது; முதன்மையானது. ஆயினும், அது, வழக்கில், உரிய இடத்தினைப் பெறாமல் மறைந்திருந்த நிலையினை உணர்ந்த அண்ணாமலை வள்ளல் அவர்கள், தமிழ் இசை இயக்கத்தின் வாயிலாகவும், தமிழ் இசைச் சங்கத்தின் வாயிலாகவும், 32 ஆண்டுகளுக்கு முன், அதற்குப் புத்துயிர் அளித்தார்கள். தமிழ்நலம் பேணும் பெரியோர்களாகிய, டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள், திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் முதலிய எல்லோரும் இப் பணியில், அரசர் அவர்களுக்கு உறுதுணையாக நின்றார்கள். தமிழ் இசை எங்கும் பரவியது; வளர்ந்து வருகின்றது.

அரசர் அவர்களின் இப் பணியினைத் தொடர்ந்து, அவர்களின் குமாரர்களாகிய டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் மேலும் மேலும் தமிழ் இசை வளர்த்து வருவது, நாடு முழுதும் நன்றியுடன் போற்றுதற்குரியதாகும்.

இச் சங்கத்தின் சார்பாக, 24 ஆண்டுகளாகப் பண் ஆராய்ச்சிப் பணி, சிறந்த முறையில் நடைபெற்று வருவது, அறிஞர் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறுகின்றது. இப் பணிக்குத் தொடக்கம் முதல் ஒத்துழைத்து வந்த காலஞ் சென்ற பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், இசைப்பேரறிஞர் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள், இசைப்பேரறிஞர் பி. எஸ். வீருசாமிப் பிள்ளை அவர்கள் முதலியவர்களின் பெரும் பணிகளும், தொடக்கம் முதல் ஒத்துழைத்து வருகின்ற இசைப்பேரறிஞர், ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் முதலியவர்களின் அரும்பணிகளும் என்றும் பாராட்டி மதிக்கத் தக்கனவாகும். இப் பண் ஆராய்ச்சியின் வெள்ளி விழா, இந்த ஆண்டில் நடைபெறுஞ் செய்தி மகிழ்ச்சி தருகின்றது. தமிழ் மக்களின் மிகப் பழமையான பண்களைப் பற்றிச் சங்க நூல்களிலேயே, நாம் அறிகின்றோம். ஆயினும், அவைகளைப் பாடும் மரபைப் பாதுகாத்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி வருகின்ற ஓதுவார்கள் இல்லையேல், பண்களைப் பாடும் பழைய மரபினை, நாம் அறிவதற்கு வழியில்லை. இத்தகைய ஓதுவார்களைப் பேணிப் பழைய பண் மரபினை மேலும் மேலும் வளர்த்துத் தமிழ் இசையின் பல்வேறு துறைகளில், தமிழ் இசைச் சங்கத்தின் ஆராய்ச்சிப் பணிகள் சிறந்து ஓங்க மிகவும் விரும்புகிறேன்.

## தவத்திரு. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தலைவர், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம்

தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணி நல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடம் ஓவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையது கொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவள வண்ணரே.

—திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

இசைக்கலை என்பது, செவியாற் கேட்கப்பட்டு உணர்வை ஒன்றுவித்து இன்புறுத்தும் மிகு நுண்கலை. இது, காட்சிக் கலைகளாகிய ஓவியம், சிற்பம் என்ப வற்றினும் சிறந்தது. இதற்கு, நீளம் அகலம் முதலிய அளவுகள் இல்லை; ஆயினும், காலவரையறையாகிய அடிநிலையை உடையது எனவும், ஓசை, சொல், உணர்வு என்னும் அளவுகளை உடையது எனவும் அறிஞர் ஆராய்ந்து கூறுவர்.

இத்தகைய ஒலி நயம், மக்களை மட்டும் அன்றி, விலங்குகளையும், மேகம் முதலிய இயற்கைப் பொருள்களையும் வயப்படுத்த வல்லது. பயிர்களின் வளர்ச்சி யில், இன்னிசை உதவுவதைப் பல்கலைக் கழகங்கள் ஆராய்ந்து வருகின்றன. தனி வழிச் செல்வோரை அச்சுறுத்தியும் கொன்றும் பொருள் பறிக்கும் கொடிய கள் வரும் இன்னிசை கேட்டு, உளங் கனிந்து, தம் கைப்படையைக் கீழே நழுவ விடுவர் எனப் பொருநர் ஆற்றுப்படை என்னும் சங்கப் பாட்டு இயம்புகிறது:

ஆறலை கள்வர் படைவிட அருளின்,
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை

என்பவை, அப் பாட்டில் வரும் அடிகள்.

இவ்வியல்புகளால், இசைக்கலை, மக்கட்குழுவின் பண்பாட்டிற்கும், நாகரிகத் திற்கும் அளவுகோலாய் நிலவுவது தெளிவாகும்.

இத்தகைய இசைக்கலை, எம்மொழியினர்க்கும் பொதுவாயிருப்பினும், தமிழ் மொழியினர்க்குச் சிறப்பாக உள்ளது என்பது குறிக்கத் தக்கது. தமிழைப் பண்டு முதல் முத்தமிழ் என வழங்கும் மரபு நிலைத்துள்ளது. அதற்குக் காரணம், இம் மொழிக்கண் இயலும், இசையும் நாடகமும் என்னும் பாகுபாடு, வழக்கினும் செய்யுளினும் உருவெடுத்துத் திகழ்ந்தமையே ஆகும். இக்காலத்துச் சுரம் என்பதைப் பண்டு ஏழ் இசை எனவும், இராகம் என்பதைப் பண் வகை எனவும் குறியிட்டு ஆண்டனர். மேலும், பாடல் தொழில்களை வகைப்படுத்தியுணர்ந்து பயின்றும் வந்தனர். இவ்வுண்மை,

பண்என்ஆம் பாடற் கியைபின்றேல் கண்என்ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்

என்னும் திருக்குறளையும்,

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே

என்னும் திருக்கோவையினையும் அவற்றின் உரையோடு உற்று நோக்கின் தெள்ளிதிற் புலனும். திருக்கோவையாரில் வரும் சூழல் என்னும் சொற்குப் பண்ணும், பாடற்றொழிலும் எனப் பொருள் கூறப்படுகிறது. 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என வரும் நம்பியாரூரர் திருப்பாட்டில், இசைப் பயன் என்றதும் அவற்றையே குறித்தல் தெளிவு.

இங்ஙனம், பண்டு வளர்ந்து செழித்தோங்கி நிலவிய தமிழிசைக் கலை, தமிழக வரலாற்றின் இருண்ட காலம் எனப்படும் கி.பி. 3 முதல் 6 வரையுள்ள நூற்றாண்டுகளில், போற்றப்படாது மறைந்து வந்தது. அந்நிலையில், அதற்குப் புத்துயிரும் திருவருட் சார்பும் கொடுத்து வளர்த்துப் பரவச் செய்த பெருமக்கள் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஆவர் என்பது மறக்கற்பாலது அன்று. 'நற்றமிழ்க் கின்றுணை' எனத் தம்மை நவின்ற ஆளுடைய பிள்ளையாரைச் சுந்தரர், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனக் குறிப்பார் ஆயினர்; அப்பர் அடிகளோ, 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என இறைவன் திருமுன்பு முறையிட்டவர்.

இத் திருவருட்செல்வர்கள் காலத்திற்குப் பின், தமிழ் மன்னர்களாற் போற்றிப் பாதுகாக்கப் பெற்று வந்த தமிழ்ப் பண் இசை மரபு, அயலார் ஆட்சியால் வாட்டம் அடைந்த காலமாகிய சென்ற ஐந்நூறு ஆண்டு காலத்தில், இதன் பழைய சீர்மையும், உருவமும் சிதையாமல் காத்துவந்த சிறப்புரிமை உடையவை, தமிழகத்தின் பல்கலைக் கழகம் எனத் தகும் சைவ ஆதீனங்கள் என்பதில் நாம் பெருமைகொள்ள இயலும்.

இங்ஙனம், நம்மோடு பிரிவுபடாக் கேண்மை கொண்டுள்ள தமிழிசையை வளர்க்கும் தமிழிசைச் சங்கத்தையும், அதன் பண் ஆராய்ச்சித் துறையினையும் நாம் என்றும் மகிழ்ச்சியுடன் ஆதரித்து வந்துள்ளோம். இத்துறையின் தெய்வ நற்பணி, வெள்ளி விழாச் சிறப்புப் பெறுவது, நமது மனக்கினியதும் மகிழ்ச்சி ஊட்டுவதுமாதல் இயல்பே.

இவ் வெள்ளி விழாச் சிறப்பு மலர், நன்கினிது மலர்ந்து, கண்ணிற்கும் கருத்திற்கும் இன்பம் பெருக்கவும், இதனை மலர்விக்கும் தமிழிசைச் சங்கம், மேன்மேலும் வன்மை பெற்று வளர்ந்து நற்பணிகளை நீடினிது புரிந்து வரவும் நமது பூசாமூர்த்தியும், முத்தமிழ்க் கலை உருவினனுமாகிய ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமானது உலகெலாம் மலர்தற்கு இடனும் முதலுமாக உள்ள செம்பொற் கழல்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

## தவத்திரு. சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தலைவர், தருமபுர ஆதீனம், தருமபுரம்

இயல், இசை, நாடகம் என்ற பாகுபாடுகளுடன் 'முத்தமிழ்' என்ற பெயரோடு விளங்குவது நம் தமிழ்மொழி. மனிதனின் எண்ணங்கள் — இயல். எண்ணங்களைப் பிறர்க்கு இனிமை பெற உரைப்பது இசை. எண்ணங்களை, இனிய உரையோடும், மெய்ப்பாடுகளோடும் கூட்டிப் பிறர்க்கு எடுத்துக் கூறுவது நாடகம். மனம், மொழி, மெய் இம் மூன்றையும் இணைக்கும் இவ் இனிய பிரிவுகள், தமிழ் மொழிக்கமைந்த தனிச்சிறப்புடைய பாகுபாடுகளாகும்.

இவற்றுள், இசை, எல்லா உயிர்களையும் கவரும் தெய்வீக இயல்பினை உடையது. ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' இறைவன் விளங்குகிறான் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்கிறார். ''நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே'' என அபிராமிப் பட்டர், அம்பிகை இசை வடிவாய் விளங்குவதைக் கூறுகின்றார்.

இவ் இசைத் தமிழ், இடைக்காலத்தில், திருமுறை ஆசிரியர்களால், சிறந்த முறையில் வளர்க்கப் பெற்றது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய அப் பெரு மக்கள், பண்ணொன்றத் தமிழ் இசை பாடி இறைவனை வழிபட்டனர். திருமுறைப் பாடல்கள், பண்டைத் தமிழிசையைப் பாதுகாத்து வருபவை.

தமிழிசை வளர்ச்சி கருதி, அன்பர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்ற சென்னைத் தமிழிசைச் சங்கம், திருமுறைகளில் பயிலும் பண்களை ஆராய்ந்து வெளிப்படுத்தும் ஆராய்ச்சிக் குழுக்களை அமைத்து, ஆண்டு தோறும் மாநாடுகள் நடத்தித் தமிழிசைப் பணி செய்து வருகிறது. இத் திருமுறைப் பண்ணாராய்ச்சிக் கூட்டங்களின் வெள்ளி விழாவினை, மலர் வெளியிட்டுச் சிறந்த முறையில் கொண்டாடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

விழாச் சிறப்புற நிகழவும், விழா மலர் நன்றாகச் சிறந்து பயன் தரவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கிறோம்.

ராவ்பகதூர் டி. எஸ். கர்சாபிகேச முதலியார் அவர்கள்

சங்கத்தின் கௌரவச் செயலாளர்

திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள்

சங்கத்தின் கௌரவச் செயலாளர்

# ஆட்சிக் குழு உறுப்பினர்கள்

திரு. வி. எஸ். தியாகராச முதலியார்



திரு. பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார்

திரு. ஆர். கே. வேங்கடாசலம் செட்டியார்

# ஆட்சிக் குழு உறுப்பினர்கள்



திரு. ஓ.எம்.எஸ்பி.எல்.எம். மெய்யப்ப செட்டியார்

திரு. எல். அழகுசுந்தரம் செட்டியார்

திரு. ஆர். இரத்தினசபாபதி செட்டியார்

# தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள்

திருமதி சௌந்தரம் கைலாசம்

மீ. ப. சோமசுந்தரம் (சோமு)

பத்மபூஷண், எம். எல். வசந்தகுமாரி
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்
தமிழ் இசைக் கல்லூரிக் கௌரவ முதல்வர்

## தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள்



பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன்



திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை



பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார்
தமிழிசை ஆராய்ச்சிக் குழுச் செயலாளர்

## தவத்திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

**தலைவர், காசிமடம், திருப்பனந்தாள்.**

சென்னையில், தமிழிசைச் சங்கம், தமிழிசையைப் பேணி வளர்ப்பதில் முதலிடம் பெறுகிறது. நாவுக்கரசர் சூலை நோய் தீரப் பாடிய பதிகத்தில், ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்று பாடியுள்ளார். பண்ணோன்ற இசை பாடின், பரமனே அவ் இசைக்கு உருகுவர். திருநெறிய தெய்வத் தமிழ்ப் பாடல்கள், பண் பொருந்தப் பாடப்பட வேண்டியவை. அப் பண்களின் நிலையை ஆய்ந்து முடிவு காணும் நிலையில், பண் ஆராய்ச்சி, பல ஆண்டுகளாக நடைபெறுவது, தமிழ்நாடு நன்கு அறியும். இப் பண் ஆராய்ச்சி பற்றிய வெள்ளி விழா மலர் வெளியிடுவது சாலவும் பொருந்தும். இம் மலர், தமிழிசை பற்றிய ஆய்வுகளையும், பண்களைப் பற்றிய செய்திகளையும் தாங்கிச் சிறப்புற இலங்கும் என்பது உறுதி. இம் மலர் வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள தமிழிசைச் சங்கத்துக்கும், அதன் தொடர்பான நல்லன்பர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் மல்குக என்று செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

**தலைவர், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.**

தமிழினம், காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது; நாகரிகத்தில் நனி சிறந்தது. தமிழினம், உலகில் தோன்றி வளர்ந்து வாழ்ந்து வந்துள்ள இனங்கள் பலவற்றுள்ளும் தனிச் சிறப்புடையது. இதனைத் தமிழ் மொழி அமைப்பு, மொழியினைச் சார்ந்து வளர்ந்த சிந்தனை வளம், இலக்கியச் செல்வம், இலக்கண வழக்கு, கலையார்வம் ஆகிய பல்வேறு துறைகளும் எடுத்துக்காட்டும். தமிழ், முன்னே தோன்றி மூத்தது; உலகத் தாய்மொழியாக விளங்கும் தகுதி மிகுதியும் உடையது. தமிழுக்கு இருக்கும் இனிமையும், எளிமையும், உணர்வைக் கிளர்த்திவிடும் ஆற்றலும் இன்றளவும் மனிதராய்ப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழிக்கும் வாய்ச்சவில்லை. மனித குலத்தின் மிக உயர்ந்த நாகரிக வளர்ச்சிக் கட்டத்தில்தான் கலையார்வம் அரும்புகிறது. அதாவது, இசை, ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள். மனிதன், கலை உணர்வு பெறவும், கலைத்திறன் பெறவும் பல தலைமுறைகள் ஆகியிருக்கும். சங்க காலத்திலேயே தமிழர், கலையார்வம் கொண்டவர்களாக வாழ்க்கை நடத்தினர். தமிழன் குடியிருந்த வீட்டுக்கு ஓவியத்தை உவமைப் படுத்தும் அளவுக்கு ஓவியக்கலை சிறந்திருந்தது. அறிவு நலமும், உணர்வு நலமும் இம்மியும் பெறாத விலங்கினங்களையும்கூட ஆட்படுத்தும் இசைத்திறன், தமிழர்களிடம் இருந்தது.

இங்ஙனம் தமிழ், முழு நிறைமொழியாக வளர்ந்திருந்தாலும் அயல் மொழி ஊடுருவலால், அதன் தனித் தன்மை ஒளி மழுங்கிற்று. தமிழ், தனக்கென இசைக்கலை மரபுகள் பெற்றிருந்தாலும் அயலவர் 'ராக'த்தால், தமிழிசை மறைந்தது. பாடற்கு இயைபின்றிப் பாடுவோர், பாடல், கேட்போர் உணர்வுக்கு உறவின்றித் தெலுங்கிசை, மேடைகளைப் பிடித்தது; இந்தி மெட்டு, இடம் பிடித்தது. இதனை வள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ''பண்என்னும் பாடற்கு இயைபின்றேல்'' என்று மறுத்தார்.

இங்ஙனம் தமிழர் தமது பெருமையை ஓர்ந்து உணராது ஒடுங்கி வாழ்ந்த காலத்தில், ஒரு மலை தோன்றியது. அந்த மலை, தம்மைச் சார்ந்தாரை ஊனம் நீக்கி ஆட்கொள்ளும் அண்ணாமலையெனப் பெயர் பெற்றது. இந்த அண்ணாமலை, செட்டிநாடு தந்தது; வழிவழிச் சிறப்புடை மரபில் தோன்றியது; தமிழனுக்கு என்று ஒரு பல்கலைக்கழகம் கண்ட பெருஞ் சிறப்புடையது. செட்டிநாட்டரசர், நமது தலைமுறையில், தமிழினத்தைத் தமிழைத் தமிழ்க் கலையை அரண்

செய்து காக்கத் தோன்றிய வள்ளல். மூவேந்தர் செய்த பணியை ஒருவராக நின்று செய்து முடித்த அண்ணல். அவர்தம் கொடையில் தோன்றி வளர்ந்ததே தமிழிசைச் சங்கம். தமிழிசைச் சங்கம், அயல் வழக்கின் நுழைவால் அயர்வில் மறந்து போன தமிழகத்தின் பழைய பண்களை அறிந்து அனுபவிக்கத் துணை செய்திருக் கிறது. இது, தமிழுக்குக் காலத்தினாற் செய்த தொண்டு. வரலாற்றில் இடம் பெறத்தக்க இனிய பணி.

இன்றைய தமிழிசைச் சங்கத்தின் புரவலர், செட்டிநாட்டரசர், தமிழவேள், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், தமது அருமைத் தந்தை தொடங்கிய திருப்பணியைத் தொடர்ந்து, மேலும் சிறப்பாகச் செய்து வருவது, நினைந்து நினைந்து பாராட்டு தலுக்குரியது.

வெள்ளி விழாக் காணும் தமிழிசைச் சங்கம் வளர்க! வாழ்க! தமிழர் வாழ் வின் அனைத்துத் துறைகளிலும் நமது அன்னைமொழி-தமிழ் இடம் பெறத் தொடர்ந்து முயலுவோமாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

---

## தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

**தலைவர், பேரூர் ஆதீனம், பேரூர்.**

தமிழகம், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்களை உடையது. கல் தோன்றி, மண் தோன்றாக் காலந்தொட்டுப் பண்பாலும், கலையாலும், வளம் பெற்ற தமிழினம், உளமுருக்கும் இசைக் கலையில் சிறந்திருந்தது. யாழ், குழல் முதலாகிய இசைக் கருவிகளையும் கண்டு, ஏழிசையின் திறத்தை உணர்ந்தவர் கள் தமிழர்கள். இசையின் சிறப்பைச் சங்க இலக்கியங்களிலும், சமய இலக்கியங் களிலும் பரவலாகக் காணலாம். இசை வகைகளைப் பண்களாகப் பிரித்தனர். காலைப்பண், மாலைப்பண் என அவ்வக் காலங்களுக்கு உரியனவாகப் பகுத்தனர். வண்டின் ஒலியை ஆய்ந்து, செவ்வழிப்பண் எனக் கண்டனர். பண், மனிதனது உளத்தை வளப்படுத்திச் செம்மை நெறியில் செலுத்தும் என்பதை உணர்ந்தனர். அம்மட்டோ! செம்மை மனத்தில் தெய்வத்தைக் காணவும், இறைவன், தம் வழி நின்று வேண்டுவன செய்யவும் இசை துணையாயிற்று.

ஆதலின், ''பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி'' என்றார் அப்பரடிகள். பாடல் என்றால், பண்ணுடன் இருக்க வேண்டும். பாடற்கியைந்த பண்ணின்றேல் பயனில்லை என்பதைப் 'பண்என்னும் பாடற் கியைபின்றேல்' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். நாட்டில், எங்கும், எதிலும் பண்ணிசை பரவியிருந்தது. காலப் போக்கில், இத்தகைய பண்ணிசை, ஓதுவார்கள் அளவில் கோயில் வழிபாடு களில் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. பிற நாட்டு இசைகள் புகுந்து நலிவு செய்தன. தமிழுள்ளம் கொண்ட சான்றோர்கள், பண்ணிசையை ஆய்ந்து வளப் படுத்த முயன்றனர். திரு. செட்டிநாட்டரசரும், திரு. ரா. க. சண்முகம் செட்டியார் அவர்களும் முன்னின்று, பண் ஆராய்ச்சிக்குரிய தமிழிசை மன்றத்தைத் தொடங் கினர். அதன் வழியாகப் பண்ணிசை தனக்குரிய இடத்தைப் பெறும் முயற்சிகள் நடைபெறுகின்றன. பண் ஆராய்ச்சி வெள்ளி விழா மலர், ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்கும் அருண்மிகு அம்பலவாணர் தண்ணருளால் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்.

## டாக்டர் சேவியர் எஸ். தனிநாயக அடிகளார்

**பிஷப் மாளிகை, அச்சுவேலி, இலங்கை.**

தமிழ் இசையின் ஆராய்ச்சியையும், வளர்ச்சியையும் சிறப்பு நோக்கங்களாகக் கொண்ட தமிழ் இசைச் சங்கத்தின் சிறப்புப் பணியின் வெள்ளி விழாவினைக் கொண்டாடுதல் பற்றித் தமிழ் அன்பர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி கொள்வர். ஈழநாட்டில் உள்ளோர் பலருக்கும் எழுச்சியை அளிக்கும் நற்செய்தி இது. எனவே, தமிழ் இசை அன்பர்களின் எண்ணங்களை நிறைவாக்கும் இச் சங்கம், என்றும் வளர்ந்தோங்கித் தமிழ் இசைச் செல்வங்களைத் தமிழர் வாழும் எல்லா நாடுகளிலும் வழங்கவேண்டுமென்று பன்முறை வாழ்த்துகின்றேன்.

---

## டாக்டர் கோ. அரங்கசாமி

**துணைவேந்தர், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், கோயமுத்தூர்.**

சென்னைத் 'தமிழ் இசைச் சங்கம்', இசையுலகம் அறிந்த புகழ் மிக்க சங்கம்; வள்ளல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்ட பெருமையுடையது. தமிழ் இசைக்கும், தமிழிசை மறுமலர்ச்சிக்கும் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களுடைய முயற்சியால், இச் சங்கம் ஆற்றிவரும் சீரிய தொண்டு போற்றுதற்குரியது.

தமிழ் இசைச் சங்கம், தனது பணிகளில் ஒன்றாகிய 'தமிழ்ப் பண் ஆராய்ச்சி' யைக் கடந்த 25 ஆண்டுகளாகச் செவ்வனே நடாத்தி, வெள்ளி விழாக் காணும் நிலை கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந் நன்னாளில், பண் ஆராய்ச்சி மலர் சிறக்கவும், 'தேமதுரத் தமிழோசை உலகம்எலாம் பரவும்வகை செய்யும்' பணி தொடர்ந்து நடைபெறவும் எனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

---

## திரு. பி. ஆர். பி. ரங்கன்

**இயக்குநர், அனைத்து இந்திய வானொலி நிலையம், திருச்சிராப்பள்ளி.**

வழக்கமாக டிசம்பரில் ஆண்டு விழாவைக் கொண்டாடும் தமிழ் இசைச் சங்கம், இவ் ஆண்டில், பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவைக் கொண்டாட இருப்பது குறித்து மகிழ்கிறேன். இச் சங்கம், 1943ல் தொடங்கிய காலத்திலிருந்து தமிழ்ப் பண்பாட்டிற்கும் – குறிப்பாகத் தமிழ் இசைக்கும் தலையாய தொண்டினைத் தளராது செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் தமிழ் இசைத் தொண்டினைத் தமிழ் இசைச் சங்கம், இடையறாத தொண்டு நோக்குடனும், தேவாரப் பண் ஆராய்ச்சி யினை, அதன் கருத்து நுட்பங்களும் தூய்மையும் துலங்கும் வகையிலும் மேற்கொண் டிருக்கும் செயல், மகிழ்ந்து பாராட்டற்கு உரியதாகும். தமிழ் இசை வளர்ச்சிக்குத் தமிழ் இசைச் சங்கம் ஆற்றிவரும் ஆழ்ந்த தொண்டினைப் பாராட்டி மகிழும் ஒரு வாய்ப்பாக இதனைக் கருதி, இச் சங்கம் தன் பணியில் வெற்றியினை மேலும் எய்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

## முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

**திருச்சிராப்பள்ளி**

கொடை வள்ளல் இராஜா சர் மு. அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்த தமிழிசைச் சங்கம், தமிழகத்தில் ஒரு விழிப்பு உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டதுடன், அதன் வளர்ச்சியில் வெற்றி நடை போட்டும் வருகிறது.

அதன் தொடர்பான பண் ஆராய்ச்சி வெள்ளி விழா, அண்மையில் நடைபெற இருக்கின்றது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவர இருக்கின்றது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன.

விழா, இனிது நடைபெற வேண்டும் எனவும், மலர், பண் ஆராய்ச்சி வித்தகர்களாகிய நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து சிறப்படைய வேண்டும் எனவும் முழு மனதோடு வாழ்த்துகிறேன்.

---

## கவியோகி சுத்தானந்த பாரதியார்

**சென்னை**

தமிழ் இசைச் சங்கம், தேவாரப் பண் ஆராய்ச்சியால், அரிய பெரிய கலைத் தொண்டு புரிந்துள்ளது.

1. நீற்றறையைக் குளிரச் செய்ததும் நீலநஞ்சமு தானதும்
சீற்றயானை பணிந்த தும்கடல் திரையிலேகல் மிதந்ததும்
கூற்றுவந்து குனிந்த தும்மிகக் கூனரசன் நிமிர்ந்ததும்
ஆற்றிலேடு தவழ்ந்த தும்திரு ஐந்தெழுத்தருள் அற்புதம்.

2. உருவெடுத்தன சாம்பும் என்புகள் உரைதமிழ்த்திரு வாக்கினுல்
திருவெலாந்திகழ் பாவை யாகிய செய்யபூங்கொடி நின்றனள்
திருவருட்குரு மார்கள் பண்ணுறச் செப்பியதமிழ் அற்புதம்
உருகியுருகியன் பூற்றெ டுத்திட ஓதுவோம்சிவ வேதமே.

தமிழிசைச் சங்கம் தழைத்து நீடு ஓங்குக.

---

## இசைப்பேரறிஞர் திருமுருக கிருபானந்த வாரியார்

**சென்னை**

தண்ணுர் தமிழிசைச் சங்கம் மிகவாழி
பண்ணுராய்ச் சிப்பணியும் பாங்குடனே — விண்ணுரும்
நின்று புகழ நெடுவேலன் தண்ணருளால்
என்றுமிக வாழ்க இனிது.

## இசைப்பேரறிஞர் செம்மங்குடி ரா. சீநிவாசையர்

சென்னை

தமிழிசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பாக நடந்தேற, ஆண்டவனது அருளை முன்னிட்டு, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களாலும், டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் முதலான பெரியோர்களாலும் நிறுவப்பட்டு, அமோகமாக நடந்து வரும் தமிழிசைச் சங்கம், இசைக் கலைக்குச் செய்து வரும் தொண்டும், சிறப்பாகத் தேவாரப் பண் ஆராய்ச்சி முதலான அரிய பெரிய செயல்களைச் செய்து வருவதும் மிகவும் போற்றத் தக்கதாகும்.

தொன்றுதொட்டுத் தேவாரப் பண்களில் வழங்கிவரும் இராகங்களையும், இசை வல்லுநர்களால் தொன்றுதொட்டுக் கையாளப்பட்டு நடைமுறையில் வந்துள்ள இராகங்களையும், இவ் இரண்டு முறைகளுக்கும் ஒத்துவரும் இராகங்களையும் கொண்டு, விரிவாக ஒரு இலக்கண நூல் செய்வது, வருங் காலத்திற்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. இப் பெரும் பணியைத் தமிழிசைச் சங்கம்போல் உள்ள பெரிய ஸ்தாபனங்கள்தான் செய்ய முடியும் என்பது என்போல் உள்ளவர்களின் நம்பிக்கையாகும். இந்த வேண்டுகோளை, வரும் பண் ஆராய்ச்சி வெள்ளி விழா, பூர்த்தி செய்துவிடும் என்றே எண்ணுகிறேன்.

---

## இசைப்பேரறிஞர் டி. கே. பட்டம்மாள்

சென்னை

1974ஆம் ஆண்டு நடக்க இருக்கும் தமிழ் இசை ஆராய்ச்சிக் கூட்டம், வெள்ளி விழாக் கூட்டமெனத் தெரிகிறது. சென்ற 24 ஆண்டுகளாக இக் கூட்டத்தை நடத்தி வருகிற தமிழ் இசைச் சங்கத்தையும் இந்த ஆராய்ச்சிக் குழுவை நிறுவிய காலஞ்சென்ற டாக்டர் ராஜா சர் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார் அவர்களையும், டாக்டர் சர். ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களையும் எவ்வளவு புகழ்ந்தாலும் அது மிகையாகாது.

இவ் ஆராய்ச்சிக் குழுவின் 25 ஆம் ஆண்டுக் கூட்டங்கள் வெகு விமரிசையாக நடக்க, இறைவன் அருள் புரிவதுடன், இதே மாதிரி தொடர்ந்து இன்னும் பல்லாண்டுகள் நடத்தச் சக்தியையும் அருளையும் கொடுத்து, மறைந்து கிடக்கும் பண்கள் யாவற்றையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர உதவ வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

---

## திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

சென்னை

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் துறைகளில், நடு நாயகமாய் விளங்குவது இசை. தமிழ் இலக்கிய நூல்கள், பெரும்பாலும் செய்யுள் வடிவில் இசைத் தமிழிலே அமைந்துள்ளன. சங்கத் தமிழ் நூல்கள், சிலப்பதிகாரம் மணிமேகலை சீவக சிந்தாமணி கம்பராமாயணம் முதலிய காவிய நூல்கள், தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள், ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எல்லாம் இசைத் தமிழிலேயே உள்ளன. நடன, நாடக நூல்களும் இசையோடு பொருந்தியவையே. ஆகவே, தமிழுக்கு இசையே உயிர்நாடி எனலாம்.

இசை என்னும் சொல், இசைவிப்பது எனப் பொருள்படும். இசையின் வயப்படாத உயிர்கள் இல்லை என்றே கூறலாம். செடிகள், பறவைகள், விலங்குகள் எல்லாம் இசையில் இன்பம் அடைகின்றன. சிறு குழந்தைகள், தாலாட்டுப் பாடல்களில் மயங்குகின்றன. மேலும், விளையாடும் பருவத்தில், பந்தாட்டம், அம்மானை, பொற் சுண்ணம், தோணேக்கம், பொன்னூசல் முதலிய ஆடல்களோடு கூடிய பாடல்களைப் பாடி மகிழ்வர். இறந்த பின்பும், ஒப்பாரிப் பாடல்கள் பாடி அழுவது மரபு. இவ்வாறு, தமிழ் மக்கள், பிறப்பு முதல் இறப்பு வரை இசையிலேயே வாழ்ந்தனர். இசைக்கு உயிர் நாடி பண். நம் நாட்டுத் திருக்கோயில்கள் பலவற்றில், தூண்களிலேயே இசை எழுப்பும் வகையில் அமைத்துள்ளனர். இன்றும், இசைத் தூண்கள், மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம் முதலிய இடங்களில் உள்ளன. நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகில் உள்ள செண்பகராம நல்லூர் என்னும் இடத்திலும், ஆழ்வார் திருநகரியிலும், தூண்களில் துளைகள் அமைத்து அவற்றில் இசை தோன்றுமாறு செய்துள்ளனர். மேலும், ஆழ்வார் திருநகரியிலும், கும்பகோணத்திலும் கல்லினால் செய்த நாதசுரக் கருவிகளும் உள்ளன. தென்காசிக் கோயிலில், சாரங்கி என்ற பழங்கால இசைக் கருவி இருக்கிறது.

நமது தேசத்தின் வடபாகத்திலிருந்து வந்த பல்லவர் காலத்தில், வடமொழிப் பண் வகைகள் நுழைந்தன. சோழர் காலத்தில், எல்லாக் கலைகளும் வளர்ச்சி பெற்றன. திருக்கோயில்களில், திருமுறைப் பாடல்களும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் பாட, ஓதுவார்களும் பாடல் மகளிர்களும் நியமிக்கப் பெற்றனர். தமிழ் இசைக் கலைக்கு நல்ல ஆதரவு இருந்தது. அவர்கள், தமிழ் இசைக்காகத் திருக்கோயில்களில் நியமித்த இசைவாணர்களைப் பற்றிய செய்திகள் பல, கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

ஆனால், நாயக்கர் காலத்தில், கன்னடமும், களிதெலுங்கும் கருநாடக இசையும் வளர்ந்தன. இஸ்லாம் கிறித்துவம் முதலிய சமயங்களின் நுழைவால், இந்துஸ்தானி இசையும், மேனாட்டு இசையும் தோன்றின. தமிழ் இசைக்கு ஆதரவு இல்லை என்ற நிலைமை உருவாயிற்று. இந்த நிலையில், 1943ஆம் ஆண்டு, தமிழிசைக்குப் புத்துயிர் கொடுக்கச் செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் தினந்தோறும் தில்லை நடராஜப் பெருமானை வணங்குவதோடு அண்ணாமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பதுடன், தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டுமென்ற தமது ஆவலைக் கொள்கை அறிக்கையாக, 25-3-1944ல் விடுத்தார்கள். இறை வணக்கத்துடன் தொடங்கிய அவர்கள் ஆவல், இனிதே பூர்த்தியாயிற்று. இன்று தமிழிசைக்குப் பேராதரவு உள்ளது. தமிழிசைக் கல்லூரியும் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ் இசை இயக்கத்துக்கு உறுதுணையாய் இருந்த டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார், கோவை சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் முதலியோருக்கும் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். இப்போது, தமிழிசை இயக்கம், உயர்ந்த நிலை பெற்றுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் மக்கள், பண்டைக் காலத்தில் கொண்ட பண்கள், முல்லைப் பண், குறிஞ்சிப் பண், மருதப் பண், நெய்தல் பண், பாலைப் பண் எனவும், அவற்றினின்றே ஏனைய பண்கள் கிளைத்திருக்க வேண்டுமென்பதும் ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. எந்தப் பண்ணிலிருந்து என்னென்ன பண்கள் தோன்றியவை என்றோ, பழந்தமிழ்ப் பண்களுக்கு உரிய, தற்போது வழக்கில் இருக்கும் இராகங்கள் எவை என்றோ அறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கி.பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து, தேவாரம் முதலிய தெய்விக இசைப் பாடல்கள் தோன்றி, மக்களிடம் சமய உணர்ச்சியை எழுப்பியதோடு, அவற்றைப் பண்ணோடு பாடவும், இசைவாணர்கள் திருக்கோயில்களில் அமர்த்தப் பெற்றனர். தேவாரப் பாடல்களுக்குப் பண்கள் குறிக்கப் பெற்றிருப்பினும், அந்தப் பண்களுக்கு உரிய தற்கால இராகங்களை எளிதில் தெரிந்து கொள்ள இயலாததால், தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டம் என்ற பெயரிலேயே தமிழிசைச் சங்கத்தின் முக்கியப் பகுதியாக, இக் கூட்டம், 1949ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், காலப் போக்கில், ஏனைய திருமுறைகளுக்கும், திவ்வியப் பிரபந்தங்களுக்கும் திருப்புகழ் முதலிய அருட்பாடல்களுக்கும் பண் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரையை அடுத்த அழகர் கோயில் ஆதரவில் பிரபந்தப் பாடற் பயிற்சி நிலையமொன்று அரியக்குடி இராமானுசய்யங்கார் மேற்பார்வையில் தொடங்கப் பெற்றது. திரு. எம்பார் விஜயராகவாச்சாரியார் போன்ற திருமால் அடியார்கள், இந்தப் பண் ஆராய்ச்சிக்கு ஆதரவளித்திருப்பது போற்றத் தக்கது. இசையோடு தொடர்புடைய கூத்து, நடனம், நாடகம் முதலிய துறைகளிலும் தமிழிசைச் சங்கம், ஆதரவளித்து வருவது பாராட்டுக்குரியது. இறைவனை இசையானுகவும், பண் காட்டும் இசையானுகவும், பண்ணவனுகவும், பண்ணவற்றின் திறவானுகவும், ஏழிசையாகவும், இசைப் பயனுகவும் அநுபவித்தவர்கள், தேவாரம் பாடிய சமய குரவர்கள்.

தமிழிசைப் பண் ஆராய்ச்சிக் குழு தோன்றி 25 ஆண்டுகளாக, அரும்பணி ஆற்றி வருகிறது. இவ் ஆண்டு அதன் வெள்ளி விழவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட வேண்டுவது தமிழ் மக்கள் கடமை. இவ் ஆராய்ச்சிக் குழுவினர், எந்த முடிவையும் எளிதில் ஏற்பதில்லை. ஆராய்ச்சியைப் பலமுறை தொடர்ந்து செய்து வருகின்றனர். இதன் ஆண்டறிக்கைகளைப் படித்தால், இக் குழுவில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு உறுப்பினரும் எத்தகைய ஆர்வத்துடனும் பண்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் பணி செய்கிருர்கள் என்பது நன்கு புலனுகும். குரலிசையுடன் கருவிகள் இசையும் தற்கால இராக தாளங்களுடன் ஒப்பிடப்படவேண்டியதும் அவசியமென்பதை உணர்ந்து, பக்க வாத்தியங்களைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து வருகின்றனர். தேவார இசையரங்கில், பன்னிரு திருமுறைகளையும் முறையே பாடுதல் வேண்டும் என்ற முடிவு, எல்லோராலும் வரவேற்கத் தக்கது. மற்ற முடிவுகளையும் எல்லோரும் அறிந்து நடக்கும்படி செய்ய வேண்டும்.

வாழ்க தமிழிசை! வாழ்க தமிழ்ப் பண் ஆராய்ச்சி!
ஓங்குக பண் ஆராய்ச்சிப் பணி!

---

## திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம்

**மதுரை**

வள்ளல், டாக்டர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்று நாளும் பிறைமதியெனப் பொலிவுற்று வளரும் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் வெளிவர இருக்கும் ''பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலருக்கு'' என் உளம் நிறைந்த வாழ்த்து.

''ஏழிசையாய் இசைப்பயனுய்'' விளங்கும் அம்பலக்கூத்தன் அருளால், தொன்மையதாய்த் தூய்மையதாய் இலங்குவது தமிழிசை. ''பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி'' என்று பத்தர்கள், இறைவனையே, போற்றும் பண்பு மிக்கது தமிழிசை. நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் ஆட்படுத்தியது தமிழிசை. இத்தகு பெருமையும் அருமையும் மிக்க தமிழிசையை அவனிக்கு வழங்கிய அருளாளர்கள், அவற்றைப் ''பண்முறைகளில்'' பாடினர். தமிழ்நாட்டில் திருக்கோயில்களில், ஓதுவார்களால், அவை, இன்றும் பண்முறைப்படி பாடப்பெற்று வருகின்றன. ஆயினும் பொதுமக்களிடமும், கச்சேரிகளிலும் பண்ணிசைப் பாடல்கள், ஏற்ற இடம் பெறவில்லை. நல்ல காலமாக 32 ஆண்டுகளுக்கு முன்பு ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் இசை உள்ளத்தில் தோன்றிய தமிழிசைச் சங்கம் வாயிலாக, இன்று தமிழிசையும், பண்முறைகளும் மறுமலர்ச்சி பெற்று விளங்குகின்றன; பண் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன; மாநாடுகள் நிகழ்கின்றன. இதனுல், சென்றகாலத்து இசையின் பழுதிலாச் சிறப்பைப் பாரோர் துய்க்கின்றனர். தமிழிசை-''தேமதுரத் தமிழோசை'', உலகமெலாம் பரவ வகை செய்த சங்கத்தாரையும், வள்ளலையும் மறக்க முடியாது.

தேவாரம், திவ்வியப் பிரபந்தங்களில் காணப்படும் கொல்லி, காந்தாரம், நட்டபாடை, குறிஞ்சி, முதலிய பண்களும், அவற்றிற்குரிய முறைகளும் மேலும் நாட்டில் பரவவேண்டும். பண்முறைகள் ஒரே முறையில் எங்கும் எப்பொழுதும்

பாடப்பெற வகை செய்ய வேண்டும். பண் ஆராய்ச்சி வித்தகர்கள், இவற்றை ஆய்ந்து நெறிப்படுத்தி இசைத்தட்டுக்கள் மூலம் வெளியிடவேண்டும்.

மேலும் இசைநூலில் கண்டவாறு, நேரத்திற்கு ஏற்ற பண்களையும் வரிசைப்படுத்த வேண்டும். சான்றாக, ''சுந்தரமூர்த்தி நாயனாரை'' இறைவன் திருவெண்ணெய் நல்லூரில் ஆண்டபோது, அவர் அருளிய பண், ''இந்தளம்'' ஆகும். இப் பண் பாடுதற்குரிய நேரம், காலை 10 மணிக்கு மேல் 12 மணிக்குள் என்று அறிஞர் கூறுகின்றனர். அம் முறையில், ''பித்தா பிறை சூடி'' என்று தொடங்கும் அப் பண்ணை அந் நேரத்தில் பாடுவது சிறப்பாக இருக்கும்.

தமிழகத்தின் சிவ வைணவக் கோயில்கள்தோறும் தமிழிசை ஒலிக்க, ஓதுவார்களை நியமிக்க வேண்டும். தமிழிசை கற்றுப் ''பண்ணொன்ற இசைபாடும்'' இசை அறிஞர்களை அங்கு இசை பாடவும், கற்பிக்கவும் ஏற்படுத்த வேண்டும். ''பண் ஆராய்ச்சிகள்'' பல வெளிவந்துள்ளமை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியுற்றேன். மேலும் பண் ஆராய்ச்சி மலர்க. வெள்ளி விழாச் சிறப்பு மலர்த் தோட்டத்தில் தமிழிசை, மணம் பரப்புக. தமிழிசை ஓங்குக.

தமிழ் இசைக்கு உருகும் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால், தமிழிசைச் சங்கம் வாழ்க! என்று மேலும் வாழ்த்துகிறேன்.

---

## திரு. சா. கணேசன்

**தலைவர், கம்பன் அறநிலை, காரைக்குடி.**

இராட்டையில் நூற்ற நூலைப் பாவோட்டித் தறியில் நெய்து ஆடையாக்கல் அநாதியானது. அப்படி நாம் ஆக்கிய, பஞ்சினும், பட்டினும், நாரினும் ஆன, துணிமணிகளை உரோமாபுரி போன்ற அந்நிய நாடுகளும் ஆர்வத்துடன் வாங்கி அணிந்து மகிழ்ந்தன. ஆனால், நாடு, அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட பின்னர், இத் தொழில், தேய்ந்து மங்கி மறைந்தது; பிற நாட்டுத் துணிமணிகள் நாட்டில் குவிந்தன; அவற்றின் படாடோபப் பளபளப்புக்கு மக்கள் அடிமையாயினர்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் செழித்துத் தழைத்துப் பயன் சுரந்து வந்த புனிதத் தொழிலான நூற்றல், நெய்தலுக்குப் புத்துயிர் ஊட்டி, நாட்டின் பொருளாதார வாழ்வு சிறக்கச் செய்தவர் மகாத்மா காந்தி அடிகளே! தேசத் தந்தையான மகாத்மாவை அறிவுடை உலகம், கதர்த் தந்தை என்று பாராட்டி நன்றி செலுத்துகிறது. அஃது உண்மை; நியாயம்; முற்றிலும் சரி.

அப்படித்தான், மூன்று கவடாய் முளைத்தெழுந்து, அநாதிக் காலமாக அரும் பயன் சுரந்து நிற்பது, காலம் கணிக்கவொண்ணாக் கன்னித் தமிழ். அக் கவடுகளின் நடுக் கவடே இசைத் தமிழ். அஃது, அண்மைக் காலத்தில், மதிப்பிழந்து மங்கத் தொடங்கிற்று. தமிழ் மக்கள், பல காரணங்களால் தயங்கி நின்றனர். ஒரு சில மெய்யன்பர்கள், உள்ளம் புழுங்கி வருந்தி எழுதியும், பேசியும் வந்தனர். அவற்றின் நியாயத்தை மனக்கொண்டு, முதன்முதல் தமிழ் இசை மாநாட்டைத் தேவகோட்டையில் கூட்டச் செய்து, வழிகாட்டிய பெருந்தகை அமரர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களே! அவர்கள், ரசிகமணி டி. கே. சி., கல்கி, சர். ஆர். கே. சண்முகம் முதலியோர் துணையுடன் 'தமிழிசை' இயக்கத்தைப் பேரார்வத்துடன் நடத்தி வெற்றியும் கண்டார்கள். எனவே, தமிழிசை இயக்கத் தந்தை என உலகம், டாக்டர் ராஜா சர் அவர்களைப் பாராட்டுவது, மிகச் சரி. அவர்கட்குத் தமிழ் கூறு நல்லுலகம், என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

தந்தையார் வகுத்த நெறியில், தமிழ் இசைச் சங்கத்தைத் தகவுடன் பேணிக் காத்துவரும் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களையும், திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களையும் அங்ஙனமே தமிழ் அன்பர்கள் பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர். வாழ்க அவர்கள் நற்றொண்டு என யானும் வாழ்த்துகிறேன்!

இவ் ஆண்டு, ''பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலர்'' வெளிவருவதறிய மிகவும் மகிழ்கிறேன். மலர், மிக்க பயனுடையதாய் அமையும். 'வாழ்க தமிழ் இசைச் சங்கம், 'வளர்க அதன் நற்பணி' என்று மனமார வாழ்த்துகிறேன்!

## தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் முன்னாள் உறுப்பினர்கள்



ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்



பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை

கல்கி ரா. கிருட்டிணமூர்த்தி



திருப்பாம்புரம் திரு. டி. என். சாமிநாத பிள்ளை



பேராசிரியர் டாக்டர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின்
முன்னாள் உறுப்பினர்



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பண் ஆராய்ச்சிக் கூட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர்



பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர்

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் முன்ஞள் உறுப்பினர்

பண் ஆராய்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய பெரியார்

# பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர்

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள், பொதுவாகத் தமிழ் இசைக்கும், சிறப்பாகப் பண் ஆராய்ச்சிக்கும் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளை விரிப்பின் அகலும்; அவற்றைத் தமிழ் இசைச் சங்கம் பொன்னே போல் போற்றும்.

நெடிய தோற்றமும், உயர்ந்த சிந்தனையும் கொண்ட டாக்டர் மு. வரதராசனர் அவர்கள், தம் வாழ்க்கையில், வித்துவான் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி., ஆகிய பட்டங்களைப் படிப்படியே பெற்றவர்கள். எழுத்தர் நிலையிலிருந்து துணைவேந்தர் நிலைக்கு உயர்ந்த இவர்களின் வாழ்வு, பலரும் பின்பற்றத் தக்க பெருவாழ்வு ஆகும். இவர்கள், தமிழ்நாட்டு மக்களால், தலைசிறந்த அறிஞராக, 'மு. வ.' என்று அன்புரிமையோடு அழைக்கப் பெற்றுர்கள்.

இவர்கள், எவரிடமும், சுருக்கமாகவும், இன்முகத்துடனும், மனம் புண்படாமலும் பேசும் இயல்பினர். தம்மைக் காண வருவோர், தமக்கு எவ்விதக் கையுறைப் பொருளும் கொண்டு வருவதை விரும்பாத மனப்பாங்கு உடையவர்கள். அவர்கள் எத்தகைய கருத்துக்களைக் கூறினுலும் அவற்றின் பெற்றி நோக்கி வரவேற்கும் பரந்த நோக்குடையவர்கள். எவ்வித ஆரவாரமும் இன்றித் தன்னடக்கத்துடன் அமைதியாகச் செயலாற்றும் திறமையுடையவர்கள். தம் பேச்சாலும், எழுத்தாலும் தமிழ் நாட்டு மக்களைக் கவர்ந்ததுடன், இலக்கியம், திறனாய்வு, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற துறைகளை மேலும் மேலும் வளர்த்தவர்கள். இவர்களிடம் பயின்ற மாணவர்கள், தம்மை 'மு. வ.வின் மாணவர்' என்று சொல்லிக் கொள்வதை ஒரு பேருகக் கருதுவர். 'மு.வ.' என்னும் சொல்லுக்கு 'முன்னுக்கு வரச்செய்பவர்' என்று விளக்கம் கூறுவர். மாணவர்கள், நாளும் சீராக உழைத்து, நீடிய நல்வாழ்வு வாழ்வதை விரும்புபவர்கள், மு.வ.

இவர்கள், திரு. வி. க. வழியினைப் பின்பற்றிப் பேராண்மையராக விளங்கினுர்கள். சீரிய சிந்தனைக் கூர்மையும், முதிர்ந்த பண்பாட்டு நிலையும் கொண்ட இவர்களின் தளரா உழைப்பைக் கண்டு, புகழும் பொருளும் இவர்களைத் தேடி வந்தன. உணர்ச்சி வயப்படாமல் நடுநிலையில் இருந்த காரணத்தாலேயே, இவர்கள், பலர் உள்ளங்களில் 'நின்ற சொல்ல'ராகவும், 'நீடுதோன்று இனிய'ராகவும் நிலவுகிறுர்கள் எனின், அது மிகையாகாது.

'' உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.''

(திருக்குறள்)

# இசைப்பேரறிஞர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி

---

இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டில் —கி. பி. 1901ல், வழிவழி இசை மேம்பட்ட சிறந்த குடியில், இசைப்பேரறிஞர் சாம்பமூர்த்தி அவர்கள் பிறந்தார்கள். சட்டக் கல்லூரி வரையில் பயின்று, பி.ஏ., பி. எல்., பட்டம் பெற்ற பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள், தாம் படித்த துறையில் பணியினை மேற்கொள்ளாமல், தம் மனத்திற்கு இசைந்த இசைத் துறைச்குப் பணியாற்ற முன்வந்தார்கள். இளமையில் இவர்கள், இனிமையாகப் பாடுவார்கள்; குழல் ஊதுவார்கள்; பிடில் வாசிப்பார்கள்; நாடகங்களில் நடிக்கவும் செய்வார்கள். இவர்கள் தமக்கு ஓய்வு கிட்டும்போதெல்லாம் இசை நுணுக்கம் பற்றிய நூல்களைப் பயின்றும், சிறந்த இசைவாணர்களுடன் பழகியும் தம் இசை அறிவை வளர்த்துக் கொண்டார்கள். 1931ஆம் ஆண்டில், மியூனிச் நகருக்குச் சென்று ஐரோப்பிய இசை பயிலும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

1928ஆம் ஆண்டில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறை ஆசிரியராக நியமிக்கப்பெற்ற இவர்கள், பத்தாண்டுகளில், அத்துறையில் பேராசிரியராக உயர்த்தப் பெற்றார்கள். இவர்களுடைய இசைப் புலமையினை-வழிகாட்டும் திறனைப் பயன்படுத்திக்கொள்ளாத இந்தியப் பல்கலைக் கழகங்கள் இல்லை எனலாம்.

இவர்கள், வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்று, சென்ற இடமெல்லாம் நம் நாட்டு இசையின் சிறப்பினை எடுத்து மொழிந்துள்ளார்கள். சென்னை அரசாங்க இசை ஆலோசனைக் குழுக்கள், மத்திய அரசாங்க இசை விளக்கக் குழு, சங்கீத நாடக அக்காதெமி, வானொலி ஆலோசனைக் குழு முதலிய பல அமைப்புக்களிலும் பங்கு கொண்டவர்கள். யுனெஸ்கோ நடத்திய இசை மாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதியாகவும், கிழக்காசிய இசை மாநாட்டிற்குச் சென்ற இசைக் குழுவிற்குத் தலைவராகவும் இவர்கள் சென்று, சீரிய பணியாற்றியுள்ளார்கள்.

பேராசிரியர் அவர்கள், தாய்மொழியாம் தமிழோடு, ஆங்கிலமும், தெலுங்கும், வடமொழியும், ஜெர்மன் மொழியும் கற்றவர்கள். இவர்கள் சிறந்த இசைப் பாடல்களையும் இசை நுட்ப நூல்களையும் இயற்றி, அரிய தொண்டு செய்துள்ளார்கள். இவர்களை ஓர் இசைக் கலைக்களஞ்சியம் என்று கூறினால், அது மிகையாகாது. சங்கீத கலாசிகாமணி என்னும் பட்டத்தினைத் தமிழ்க் கலையுலகம், இவர்களுக்கு அளித்துள்ளது.

1943ஆம் ஆண்டில், இத் தமிழ் இசைச் சங்கம் நடத்திய தமிழ் இசை முதல் மாநாட்டில், தமிழ்ப் பெருந் தலைவர்களோடு சேர்ந்து, பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு, என்றும் நினைவில் நிற்பதாகும். 1949ல் தமிழ் இசைச் சங்கம் தொடங்கிய பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டத்திற்குச் சாம்பமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார்கள். அன்றுமுதல் ஆண்டுதோறும் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொண்டு, பண் ஆராய்ச்சிகளுக்கும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் முதன்மையாகவும் பெருந்துணையாகவும் இவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். தமிழ் இசைச் சங்கம், தனது முதல் பட்டம் அளிப்பு ஆண்டில் (1957), இவர்களுக்கு இசைப்பேரறிஞர் பட்டம் வழங்கிப் பெருமை கொண்டது. இவர்களின் சீரிய பணிகளைத் தமிழ் இசைச் சங்கம் ஒரு நாளும் மறவாது.

**இசைப்பேரறிஞர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி**

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் முன்னாள் உறுப்பினர்

பண் ஆராய்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய பெரியார்

## பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

''கவிவாணரும், இசைவாணரும் ஆர்வமுடன் முன்வந்து தமிழிசையை வளர்க்கிறார்கள். இசையரங்கிற்குக் கூட்டம் கூட்டமாகத் தமிழர்கள் வருகின்றார்கள். தமிழிசை வேறெதற்கும் இளைத்ததல்ல என்பதை இசைவாணர்கள் விளக்கி விட்டார்கள். அரிய பெரிய ஆவேசக் கவிஞர்கள், தமிழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். கண்ணிருப்பவர், தமிழிசைக்குள்ள பொதுஜன ஆதரவைக் காணலாம். காதிருப்பவர், எத்திசையிலும் தமிழிசை கேட்டு இன்புறலாம். அதிவிரைவில் தமிழிசைக்கலை, உச்ச நிலையில் ஓங்கி விளங்கப் போகிறது'' என இவ்வாறு தமிழிசை இயக்கத் தந்தை வள்ளல் டாக்டர் அரசர் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழிசையின் முதல் மாநாட்டை 23-12-1943ல் திறந்துவைத்த தம் திறப்புரையில், ஆணித்தரமாக மொழிந்துள்ளார்கள். அவர்கள்தம் வாய்மொழிப்படி, தமிழிசை, இடையூறுகளை எல்லாம் கடந்து மலைபோல் நிலைபெற்று ஆல்போற் பரந்து அரசு போல் வேரோடித் தமிழகத்திலும் இந்தியாவிலும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. முத்தமிழில் ஒன்றாகிய இசைத் தமிழுக்குப் புத்துயிர் கொடுத்துக் கடமை போல் காத்துவரும் மரபுப் பெருமை, அரசர் அண்ணாமலையார் குடும்பத்துக்கு உண்டு. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி போலவும், ஆலமரத்தை விழுது தாங்குவது போலவும் டாக்டர் அரசர் முத்தையா செட்டியார் அவர்களும், இளவல் திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும், மைந்தர் மு. இராமசாமி அவர்களும் தமிழிசை வளர்ச்சியைக் குடும்பப் பணியாகக் கருதிப் போற்றி வருவதை நாடு அறியும். இவ் அரசர் குடும்பத்தார்க்குத் தமிழினம், என்றும் நன்றிக் கடப்பாடு கொண்டது.

தமிழிசைச் சங்கம், 1967—68ஆம் ஆண்டில் நாடு பாராட்ட வெள்ளி விழாக் கொண்டாடிற்று. சங்கத்தின் பேருறுப்பான தமிழிசை ஆராய்ச்சிக் குழுவும் பணி பல ஆற்றி வெள்ளி விழாக் கொண்டாடும் நிலையை அடைந்திருப்பது, இரட்டை மகிழ்வுக்குரியது. இவ் ஆராய்ச்சிக் குழு, இசைப்புலவர்களோடு இயற்புலவர்களையும் நாடகப் புலவர்களையும் கூட்டுவித்துப் பேராராய்ச்சி, ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. தமிழ்ப் பண்களின் பழைய பெயர்கள், அவற்றோடு ஒத்த கருநாடக இராகப் பெயர்கள், பண்களின் கட்டளை, பண்களின் காலம், பன்னிரு திருமுறைப் பண்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண்கள், அவற்றைப் பாட வேண்டிய முறைகள், திருப்புகழ்த் தாள நுட்பங்கள், இசைக் கலைச் சொற்கள், இசைக் கருவிகள், நொண்டி நாடகம், காவடிச் சிந்து, குறவஞ்சி என்ற பல்வகையிலும் சிறப்பான-விரிவான-நுட்பமான ஆய்வுகள் இதுவரை நடைபெற்றுள்ளன. இவ் ஆய்வுகள், தமிழிசைக்கே அன்றி இயற்றமிழ் நூல்களுக்கும், நாடகத் தமிழ் நூல்களுக்கும் புதிய பார்வையைத் தந்துள்ளன. இதுவரை விளக்கம் பெறாத இசைப் பகுதிகள், விளக்கம் பெறுகின்றன. இசைச் சங்கத்தின் ஆண்டு விழாவினால், பொதுமக்கள் எல்லோரும் தமிழமுதம் மாந்துகின்றனர். இசை ஆராய்ச்சிக் குழுவின் ஆய்வினால், முத்தமிழ் அறிஞர்களும் புலமைக் கடலில் மூழ்கி எழுகின்றனர்.

ஆண்டுதோறும் கூடும் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு, ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளையும், ஆய்விற் கலந்துகொண்டவர்களையும், அவர்கள் கூறிய அரண் முரண் கருத்துக்களையும், முடிந்த முடிபுகளையும் நூல் வடிவில் அச்சிட்டுப் பலர் அறிய வழங்கி வருவதை, நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இவ் வெளியீட்டினால், நன்முடிபுகளைக் குழுவிற் கலந்து கொள்ளாதாரும் கற்க முடிகின்றது; வழிவழியினரும் வரலாறு அறிய முடிகின்றது.

தமிழிசை இயக்கம், இசை இயக்கம் மட்டுமன்று. நடுவணதாகிய இசை, இயலையும் இயக்குகின்றது; நாடகத்தையும் இயக்குகின்றது. இவற்றோடு தமிழ் இனத்தையும் தமிழ்ப் பண்பினையும் தமிழோடு தொடர்புடைய அனைத்தையும் ஒன்றுபடுத்தி இயக்குவதைக் காண்கிறோம்.

வாழ்க தமிழிசைச் சங்கம்!
வாழ்க தமிழிசை ஆராய்ச்சிக் குழு!
வாழ்க அரசர் குடும்பம்!

## பேராசிரியர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்

மொழியியல் துறைத் தலைவர், கேரளப் பல்கலைக் கழகம்,
செயலாளர்-தலைவர், உலகத் தமிழ்க் கழகம்

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், தமிழகத்தில் தமிழிற் பாட எதிர்ப்பு எழுந்தபோது, தாய்மொழியிற் பாடினால்தான் தமிழர் கலையனுபவம் பெற முடியும் என்ற பொது உண்மையை எடுத்துக் கூறித் தமிழ் மக்களிடையே ஆவேசத்தைத் தோற்றுவித்தவர்கள், சர் அண்ணாமலை மன்னர், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலியவர்கள். வெறும் பிரசாரத்தோடு நில்லாமல், தமிழிசைச் சங்கம் ஒன்றை நிறுவிக் கல்லூரி அமைத்துப் பண்ணாராய்ச்சி செய்வதற்கு வழியமைத்தவர், அண்ணாமலையரசர் ஆவர். இன்றைய கர்நாடக இசைக்கு அடிப்படையாக அமைந்த அம்சங்கள் பல, பண்டைத் தமிழ் இலக்கிய இசையிலும், திராவிட மொழிகளிற் காணும் நாடோடிப் பாடல்களிலும் காணப்படுவது, இப்போது தெளிவாயிற்று. கர்நாடக இசையின் வளர்ச்சியும் வரலாறும் இன்று உறுதிப்பட்டு விட்டது. புதிய இசை முறைகளைத் தோற்றுவிக்க, இனிமேல் கல்லூரிகளும் ஆய்வாளர்களும் முயன்று வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

---

## டாக்டர் மெ. சுந்தரம்

தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், மாநிலக் கல்லூரி, சென்னை

பாட்டாலே சிறப்புற்றது பைந்தமிழ் மொழி. அப் பைந்தமிழ் இசைக்குப் பெருமை அளிப்பது, பண் அமைப்பு முறை. பண்ணோடு பாடி இசைப் பண் பாட்டை வளர்த்தவர்கள் பழந்தமிழர்கள். அவர்கள் கையாண்ட பழந்தமிழ்ப் பண்கள், இன்று இராகங்கள் என்ற பெயரில் உருமாறி உலா வருகின்றன. அந்த இராகங்களில் உருமாறி ஒளிந்திருக்கும் பைந்தமிழ்ப் பண்களைக் கண்டுபிடித்து நற்றமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமை, தமிழிசை ஆராய்ச்சிக் குழுவிற்கு உரியது. இருபத்தைந்து ஆண்டுக்காலம் பைந்தமிழ்ப் பண்போடு நடாத்தப் பெற்ற பண் ஆராய்ச்சி, பல்வேறு அரிய உண்மைகளை நாட்டிற்கு வெளிப்படுத்தியது.

பண்களைப் பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரித்தற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அரிய முடிபுகளைப் பண் ஆராய்ச்சிக் குழு வெளியிட்டுள்ளது. பழம் பண்களாகிய கொல்லி, இன்று வழங்கும் நவரோசு இராகம் என்றும், சீகாமரம், நாதநாமக்கிரியை என்றும், செவ்வழி, யதுகுலகாம்போதி என்றும், கௌசிகம், பைரவி என்றும், பஞ்சமம், ஆகிரி என்றும், செந்துருத்தி, மத்தியமாவதி என்றும், வியாழக்குறிஞ்சி, சௌராஷ்டிரம் என்றும், தக்கேசி, காம்போதி என்றும், காந்தாரபஞ்சமம், கேதாரகௌளம் என்றும், நட்டபாட்டை நாட்டை என்றும், நாட்டைக்குறிஞ்சி என்றும், பழம்பஞ்சுரம், சங்கராபரணம் என்றும், சாதாரி, பந்துவராளி என்றும் பல்வேறு அரிய ஆராய்ச்சி உண்மைகளை இப் பண் ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது.

கட்டளை என்பது சந்த வேறுபாடு என்ற அரிய இசையுண்மையும் இதனால் வெளிப்போந்தது. பண்களின் கால வேறுபாடு பற்றியும், பண்களின் கட்டளை வேறுபாடு பற்றியும், தேவாரம் பாடுவதற்குப் பயன்பட்ட இசைக் கருவிகள் பற்றியும், தேவாரத்தில் கூறப்பட்ட இசைக் கருவிகள் பற்றியும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண்கள் பற்றியும், திருப்புகழின் தாள நுட்ப வேறுபாடுகள் பற்றியும், திருப்புகழில் வரும் தொங்கல் என்னும் தனிச்சொல் அமைப்புப் பற்றியும் சீரிய ஆராய்ச்சிகள், சிறப்புற மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

இத்தகைய ஆராய்ச்சிகள், அரிய பல தொன்மை உண்மைகளை இசையுலகிற்கு வழங்கியுள்ளன. இவற்றை வழங்கிய கொடைக்கரம், கோமகன் செட்டிநாட்டுப் பேரரசர் செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியார்

அவர்களின் பொற்கரமாகும். தண்டமிழ் வேந்தருக்கெல்லாம் பெருவேந்தராகிய இத் தமிழிசை வேந்தர், தொலைநோக்கோடு, தொலையாப் பெருவளஞ் சான்ற தமிழிசை தொலையாதிருக்கும் பொருட்டுத் துலைநாவன்ன சமனிலையோடு, உருவாக்கிய தமிழிசை இயக்கம், இப் பண் ஆராய்ச்சியின் உயிர் இயக்கமாகும். தமிழ்த்தாயின் தன்னிகரற்ற மன்னராக விளங்கும் தந்தையார் அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் செந்தமிழ்ப் பண்பாளர் செட்டிநாட்டரசர் டாக்டர் இராசா சர் முத்தையவேள் அவர்கள், இப் பண்ணுராய்ச்சியின் உயிர்த் தன்மையினை உணர்ந்து, அதன் வெற்றிக்கு ஆக்கவுரையும், ஊக்க உரையும் நல்கி வருகின்றுர்கள். அவர்களின் அருமை இளவல், வணிகவேள், தண்டமிழ்க்குரிசில், சென்னையின் முன்னுள் வணக்கத்திற்குரிய நகரத் தந்தை திரு. மு. அ. சிதம்பரனுர் அவர்கள், இப் பண் ஆராய்ச்சியினைக் கண்ணெனக் காத்துப் போற்றி வருகின் றனர். இப் பண் ஆராய்ச்சியின் ஊனுய், உயிர் நாடியாய் உலவிவரும் முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதனுர் அவர்களின் அரிய ஆராய்ச்சிப் பணிகள், தமிழிசை வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கத் தக்கனவாகும். அப் பேராசிரியப் பெருந்தகை அவர்கள், இப் பண் ஆராய்ச்சிப் பணியினை நல்லாற்றுப்படுத்தி, நயனெடு, பயன் தரும் நற்றமிழ் இசை முடிவுகள் பல வெளிவரக் காரணமாய் அமைந்துள்ளார்கள். முத்தமிழ் உலகில் முடியுடை மூவேந்தர் போன்று விளங்கும் இம் முப் பெரு மக்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம், என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையது.

இப் பெருமக்கள் ஈன்றெடுத்த பண்ணுராய்ச்சிக் குழவி, இன்று காளைப் பருவம் எய்திக் கன்னித் தமிழ் நாட்டில் ஏறுநடை போட்டு உலா வருகிறது. உலா வரும் அந்த வெள்ளி விழாத் தலைமகனைப் புதுமணல் பரப்பிப் பொங்கலிட்டுப் பூவணிந்து வரவேற்போம்.

வாழ்க தமிழிசை ! வெல்க பண் ஆராய்ச்சிப் பணிகள் !!

---

## பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார்

**தமிழ் ஆராய்ச்சித் துறை, சென்னைக் கிருத்துவக் கல்லூரி**

பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்டு அரசர் டாக்டர் இராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களால் 1943ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசைச் சங்கம், தமிழிசைக்கு மறுமலர்ச்சியினை அளித்துள்ளது என்பதனைக் கற்ருேரும் மற்ருேரும் அறிவர். இச் சங்கத்தின் வாயிலாகப் பல அரிய கீர்த்தனை களும், தமிழ்ப் பாக்களும் வெளி வந்துள்ளன. தமிழிசைச் சங்கத்தின் சார்பாகத் தமிழிசைக் கல்லூரியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழிசைச் சங்கத்தின் சார்பில், 1949ஆம் ஆண்டு முதல், தேவாரம் பாடும் ஓதுவார்களையும், முத்தமிழ்ப் புலவர்களையும், பல அறிஞர் பெருமக்களையும் கூட்டித் தேவாரப் பண்கள் பற்றிய ஆராய்ச்சிக் கூட்டங்கள், ஆண்டுதோறும் நடைபெற்று வந்துள்ளன. இப் பண் ஆராய்ச்சிக் குழுவின் வெள்ளி விழா, இவ் ஆண்டு டிசம்பர்த் திங்களில் நடைபெற இருப்பதைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். யானும் இப் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில், பலமுறை கலந்து கொண்டதுண்டு. பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில், தேவாரப் பண்களுக்கும் கர்நாடக இசைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எடுத்துக் காட்டப் பெற்றன. அவ் ஆராய்ச்சிகள் பல, நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழிசைச் சங்கத்தின் பயனுல், மக்கள், தேவாரப் பாடல்களைக் கேட்பதிலும், அவைகளைப் பண்முறையோடு பாடும் ஓதுவார் களைப் போற்றுவதிலும் ஊக்கம் காட்டி வருகின்றனர்.

தற்போது, சில ஓதுவாமூர்த்திகள், மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற கருத்தினுல், தேவாரப் பாடல்களைப் பழைய பண் முறைகளில் பாடாமல், அவை களைக் கர்நாடக இசையில் அமைத்துப் பாடி வருகின்றனர். இது, கவலைக்கிடமாக உள்ளது. எனவே, கூடுமானவரையில் பழைய பண் முறைப்படியே தேவாரங்களைப் பாடும்படி, யான் ஓதுவாமூர்த்திகளைக் கேட்டுக் கொள்கின்றேன். யான் எனது இளமைப் பருவத்தில் ஒரு தேவார சபையில் சேர்ந்து, தேவாரப் பாடல்களைப் பண்முறையோடு பயின்றுள்ளேன். ஆதலின், பழைய பண்களை மாற்றிப் பாடு

வதைக் கேட்பதற்கு என் உள்ளம் இடம் தரவில்லை. தமது அருமைத் தந்தையாரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசைச் சங்கத்தைப் போற்றித் தமிழிசைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களின் கொடைத் திறத்தினையும், தமிழ்ப் பற்றினையும் யான் பாராட்டுகின்றேன். கடந்த 25 ஆண்டுகளாக, இப் பண் ஆராய்ச்சிக் குழுவின் செயலாளராக இருந்து பணி யாற்றிவரும் பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் தமிழ்ப் பணியும் பாராட்டத் தக்கது. எல்லாம் வல்ல தில்லை அம்பலவாணர் திருவருளால், பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறக்க நடைபெறுவதாக.

---

## பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

**தமிழ்த்துறைத் தலைவர், துணை முதல்வர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை**

பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்ற தமிழ் இசைச் சங்கம், தமிழ்நாட்டில், சிறந்த தொண்டாற்றி வருகின்றது; தமிழ்நாட்டில் தமிழில் பாடுவது தரக் குறைவு என்று எண்ணி இருந்தவர்களைத் தலைகுனியவைத்துத் தமிழ்ப் பாடல்கள் மேடைகளில் முழங்க வழி செய்தது; ஆம்! அத்துடன், பண் ஆராய்ச்சிப் பகுதி யைத் தோற்றுவித்துக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில், அச் சங்கம் ஆற்றும் தொண்டு அளவிடற்கரியது.

பண் ஆராய்ச்சி தொடங்கப்பெற்றுக் கால் நூற்றாண்டு கழிந்து விட்டது; வெள்ளி விழாவின் இடையில் நாம் நிற்கின்றோம். இந்த இருபத்தைந்து ஆண்டு களில், இசை வல்லுநர்களையும், தேவாரப் பாட்டிசைக்கும் பண்பாளர்களையும், தமிழ்ப் பேராசிரியர்களையும், பிற நல்லவர்களையும் 'வருக' என்றழைத்துத் தமிழ் இசைச் சங்கம் மேற்கொண்ட ஆய்வுகள் அளப்பரியன.

தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் பண்களை ஆய்ந்தும், தேவாரப் பண் களின் மரபு நிலைகளை விளக்கித் தற்கால இராகங்களோடு ஒத்து நோக்கியும், எங்கெங்கோ கிடந்த பல இசையொடு பொருந்திய கலைகளுக்கு உயிர் கொடுத்தும், அவற்றில் வல்லாரைப் போற்றிப் புரந்தும் கடந்த கால் நூற்றாண்டில், தமிழ் இசைச் சங்கம் செய்த தொண்டு, அளவிடற்கரியது; போற்றற்குரியது.

இந்த வெள்ளி விழா ஆண்டில், அதன் பணி சிறக்கவும், மேன்மேலும் அதன் ஆக்கச் செயல்களால் தமிழும் தமிழரும் தரணியும் நலம் பல பெறவும் அருளவேண்டுமென அம்பலக் கூத்தன் அடிகளை வணங்குகின்றேன்.

---

## பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ்

**தமிழ்த்துறைத் தலைவர், தூய சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து பண் பற்றியும், இசைத் தொடர் பான ஏனைய செய்திகள் பற்றியும் தக்கவர்களைக் கொண்டு முறையான ஆராய்ச்சி கள் நிகழ்த்தியுள்ளது, அரிய திருப்பணியாகும். சங்க காலத்தில், கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ் போல அண்மைக் காலத்தில், இந்த ஆய்வுகளால் இசைத்தமிழ் ஒளி பெற்றது; இனிமை பெற்றது. தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி, தமிழகக் கலை வரலாற்றில் நிலை பெறுவது பாராட்டுதற்குரியதாகும்.

---

## பேராசிரியர் டாக்டர் சுப. அண்ணாமலை

**தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை**

தண்ணார் தமிழிசையைத் தாரணியில் ஓங்குவிக்கும்
அண்ணா மலைமன்றம் ஆர்வமுடன்—பண்ணாய்ந்து
வெள்ளிவிழாக் காண்கின்ற வேளையினில் என்வாழ்த்தை
உள்ளமுறத் தந்தேன் உவந்து.

## திரு. பி. சி. தேவர்

துணைச் செயலாளர் (எம்), சங்கீத நாடக அக்காதெமி, புது தில்லி

நீண்ட காலமாகத் தமிழ் இசைச் சங்கத்தையும், அதன் பல்வேறு கிளை அமைப்புக்களையும் நாங்கள் அறிவோம். மேலும், சங்கத்தின் முன்னேற்றங்களைக் கூர்ந்து கவனித்து வருவதோடு, அதன் வளர்ச்சிக்கு ஓரளவு துணை புரிந்தும் வருகிறோம்.

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு, தன் பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவை நினைவூட்டும் வகையில், மலர் ஒன்றை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். சங்கத்தின் நடைமுறைகளும், குழுவின் நடைமுறைகளும் தமிழ்ப் பண்பாட்டை— சிறப்பாகத் தமிழ் இசையை மேலும் ஆழமாக அறிந்து கொள்ள உதவி புரியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

---

## கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

சென்னை

உள்ளமெலாம் துள்ளுவிழா உலக மெங்கும்
ஒப்பில்லாத் தமிழ்ப்பண்கள் ஆராய்ச் சிக்கு
வெள்ளிவிழா இனியதமிழ் இசைச்சங் கத்தின்
வெற்றிவிழா இசைஇயக்க வீர வேந்தர்
வள்ளல்அண்ணா மலையாரும் அருவ மாக
வாழ்த்துகின்ற மகிழ்ச்சிவிழா உணர்ச்சி வேக
வெள்ளமது பண்ணாய்வுப் பணிக ளாக
விரிகின்ற விழாவதனைப் போற்று வோமே.

எத்திசையும் தமிழ் இசை மணக்கச் செய்யும் இயக்கத்தில் வெற்றி கண்டுள்ள தமிழ் இசைச் சங்கத்தின் இணையற்ற முயற்சியே பண் ஆராய்ச்சி. 1949ல் தொடங்கிய தேவாரப் பண் ஆராய்ச்சி, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல அரிய முடிவுகளைக் கண்டுள்ளது என்பதை ஆராய்ச்சி வல்லுநர்கள் நன்கு அறிவார்கள்.

உலகம் பிறந்த உடனே பிறந்தது தமிழ் மொழி. இயலாகப் பிறந்து, இசையாக மலர்ந்து, நாடகமாகக் கனிந்து முத்தமிழ் எனப் பெயர்பெற்றது. தொன்மை வாய்ந்த தமிழிசையின் தரத்தைக் காப்பாற்றி வருபவை, பழந் தமிழ்ப் பண்களே. பண்களின் மரபு வழுவாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்துள்ள பெருமை, நம் மறை இசைவாணர்களான ஓதுவாமூர்த்திகளையே சேரும். எனவே ஓதுவாமூர்த்திகளின் துணையோடும் இயல்-இசை அறிஞர்களின் ஆதரவோடும், தேவாரப் பண்களை ஆராய்ச்சி செய்வது, பயன்மிக்க பணியாகும் என்பதைத் தமிழ் இசைச் சங்கம் நன்கு உணர்ந்து, ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கிய பெருமை பாராட்டுக்குரியது.

தமிழ் இசைச் சங்கம் கண்ட பெருமை, வள்ளல் அண்ணாமலை அரசருக் குரியது என்றால், பண் ஆராய்ச்சியைத் தொடங்கி வைப்பதில் ஊக்கம் காட்டிய தனிப்பெருமை, அவரது அருமை மைந்தர்களான செட்டிநாட்டரசர் திரு. மு. அ. முத்தைய செட்டியார் அவர்களுக்கும், அவரது இளவல், தொழில் நிபுணர் திரு. மு. அ. சிதம்பரம் அவர்களுக்கும் உரியது. பொருளியல் மேதை டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் 1949ல் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு தொடங்கப்பட்டது. டாக்டர் ஆர். கே. எஸ். அவர்களுக்குப் பின் தொடர்ந்து தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராக விளங்கிய கோவைக் கோமான் திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும், இப்போது தலைவராக இலங்கும் தமிழவேள் திரு. தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை அவர்களும் பண் ஆராய்ச்சிப் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஊக்கம் காட்டியவர்களாவர். தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் செயலாளராக,

பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், தொடக்க முதல் ஆற்றிவரும் அடக்கமான ஆக்கப் பணிகளை அனைவரும் அறிவர்.

பண் ஆராய்ச்சியின் தொடக்கக் காலம் முதல் இன்றுவரை அதனோடு அன்பு கலந்து ஒன்றியிருந்து தொண்டாற்றும் பேறு எனக்குக் கிடைத்துள்ளது. ஆரம்பக் காலத்தில் பல ஆண்டுகள் பண் ஆராய்ச்சி அறிக்கைகளை உருவாக்கும் பணியும் எனக்குப் பெருமகிழ்ச்சி தந்தது. எனவே, பண் ஆராய்ச்சிப் பணியின் வெள்ளி விழா, என் உள்ளம் துள்ளும் வெள்ளி விழாவாக உணர்ச்சி ஊட்டுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் பண் ஆராய்ச்சி எவ்வளவு சுவையாக நடைபெற்று வருகிறது என்பதைக் கண்ணாரக்கண்டு மகிழ்ந்து வருகிறேன்.

தேவாரப் பதிகங்களைத் திருமுறைகளாக வகுத்த நம்பியாண்டார் நம்பியின் பெருமையைப் போலத் தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிப் பணிகளும் வரலாற்றில் இடம் பெறத்தக்க மாபெரும் சாதனையாகும். இன்று வழங்கும் இராகங்களில் இன்னின்ன ராகங்கள் இன்னின்ன பழந்தமிழ்ப் பண்களுக்குப் பொருந்தும் என்ற சிறந்த முடிவுகள் பல, பண் ஆராய்ச்சி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும். இருட்டில் கிடந்த பண்களின் தனித் தன்மைக்கு ஒளியூட்டிய பெருமை பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்கு உரியது.

தேவாரப் பண்கள் ஆராய்ச்சியோடு, இசை சம்பந்தமான பலதுறை ஆராய்ச்சிகளையும் தமிழ் இசைச் சங்கம் மேற்கொண்டுள்ளது. திருப்புகழ், திவ்வியப் பிரபந்தம், சங்கப் பாடல்கள் முதலானவற்றில் காணும் இசை நுட்பங்களையும் ஆராய்ந்து வருகின்றது. தமிழ் இசைச் செல்வங்களாக விளங்கும் பழமையான பல நாட்டிய நாடகங்களை ஆராய்ச்சி அங்கமாக அரங்கேற்றிய பெருமையும் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவிற்கு உண்டு.

பண் ஆராய்ச்சி என்பது, எளிதில் முடியாத ஒரு தொடர் வரலாறு. ஆராய்வதற்குரிய பொருள்கள் இன்னும் எவ்வளவோ உள்ளன. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையிலும், விளக்க உரையிலும் காணப்படும் இசை நுணுக்கங்கள் பற்றியெல்லாம் இன்னும் பல ஆண்டுகள் ஆராய்ந்து, மறைந்து போனதாகக் கருதப்படும், இசை நூல்களின் சாரத்தையாவது கண்டறிய வேண்டும். இத் துறையில் வெற்றிகாணத் தமிழ் இசை ஆராய்ச்சிக்குழு, மிகவும் ஆர்வமாக உள்ளது. பண் ஆராய்ச்சிப் பணியைத் தொடர்ந்து இன்னும் பல அரிய சாதனைகளைக் காண்போம் என்று, தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவினரோடு, அனைத்துலகத் தமிழ் அறிஞர்களும், கலைஞர்களும் அன்பர்களும் இணைந்து, வெள்ளிவிழா உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் இசையின் எதிர்காலம் இன்னும் ஒளிமயமாக மிளிர்வதற்குப் பண் ஆராய்ச்சி, தொடர்ந்து சிறந்த பணிபுரியும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க தமிழ் இசை !

வளர்க பண்ணாராய்ச்சி ! !

வெல்க தமிழிசைச்சங்கம் ! ! !

## திரு. தி. க. பகவதி

சென்னை

தமிழ் இசைச் சங்கம் தனிச் சிறப்புடன் ஆண்டுதோறும் நடத்திவரும் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் வெள்ளி விழா, இந்த ஆண்டு நடைபெறும் செய்தி அறிந்து மகிழ்கின்றேன்.

தொடக்கம் முதல் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்கு மிகுந்த ஆர்வத்துடன் யானும், என் அருமை அண்ணுச்சி அமரர் திரு. 'அவ்வை' சண்முகம் அவர்களும் ஆண்டுதோறும் சென்றிருந்து மகிழ்ந்துள்ளோம். சுவையான விவாதங்களும், நுட்பம் செறிந்த கருத்துக்களும், செவிக்கினிய பாடல்களும் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்குச் சிறப்பு வழங்கின. அவற்றுடன், ஆண்டுதோறும் புதிய புதிய நாட்டிய நாடகங்களைப் பழைய இலக்கியங்களைக்கொண்டு நடத்திக் காட்டிய பெருமையும் தமிழ் இசைச் சங்கத்திற்கு உரியது.

தொன்மை வாய்ந்த தமிழ் இசைக்குப் புத்துயிர் அளித்து, அதன் திட்ப நுட்பங்களைத் தெளிவாக உணரச் செய்வதற்குப் பண் ஆராய்ச்சி, மிகச் சிறந்த வழிகாட்டியாக இயங்கி வருவது குறித்துப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ் இசை!
வெல்க தமிழ்ப் பண்கள்!
வளர்க தமிழ் இசைச் சங்கம்!

---

## திரு. பொ. மாணிக்கவாசகம்

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், திருச்சி-8.

சென்னைத் தமிழிசைச் சங்கம் தொடங்கி, முப்பத்திரண்டு ஆண்டுகளாகின்றன. இசை விழாவின்போது, பண் ஆராய்ச்சி, இருபத்தைந்து ஆண்டுகளாகத் திறனாய்வு கண்டு வெள்ளி விழாவினைக் காண்கிறது. இந்த நன்னாளில் பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவும், இசை விழாவும் சீருடனும் சிறப்புடனும் நடைபெறக் கந்தகோட்டத்தில் உள்ள கந்தவேளை வணங்குகிறேன்.

எங்களுடைய உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

# வெள்ளி விழாத் தலைமையுரையும்,
# கட்டுரைகளும்

# இசைப்பேரறிஞர்கள்



திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின்
முன்னாள் உறுப்பினர்

கும்பகோணம் திரு. கே. இராசமாணிக்கம் பிள்ளை
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின்
முன்னாள் உறுப்பினர்



திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின்
முன்னாள் உறுப்பினர்
முன்னாள் கௌரவ முதல்வர்,
தமிழ் இசைக் கல்லூரி




அரியக்குடி திரு. டி. இராமாநுச ஐயங்கார்
முன்னாள் கௌரவ முதல்வர்,
தமிழ் இசைக் கல்லூரி

# இசைப்பேரறிஞர்கள்

வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்

மதுரை திரு. மணி ஐயர்



முசிறி. திரு. சுப்பிரமணிய ஐயர்
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்



சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்



திரு. பாபநாசம் சிவன்

திருமதி கே. பி. சுந்தராம்பாள்

திரு. திருமுருக கிருபானந்தவாரியார்



பாலக்காடு திரு. டி. எஸ். மணி ஐயர்
தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்
கௌரவ முதல்வர், தமிழ் இசைக் கல்லூரி

# இசைப்பேரறிஞர்கள்



செம்மங்குடி திரு. ரா. சீநிவாச ஐயர்

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி

மதுரை திரு. எஸ். சோமசுந்தரம்

திருமதி டி. கே. பட்டம்மாள்

# தமிழ் இசை ஆராய்ச்சியாளர்கள்

ராவ்சாகிப் கே. கோதண்டபாணிப் பிள்ளை



வித்துவான் க. வெள்ளைவாரணனர்

யாழிசைப் புலவர் வி. எஸ். கோமதிசங்கர ஐயர்

# பண் ஆராய்ச்சி வெள்ளி விழாத் தலைமையுரை

நாதசுர வித்துவான், பத்மஸ்ரீ

**திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்**

---

உயர் நீதிமன்ற நடுவர், பெருமதிப்பிற்குரிய உயர்திரு மகாராஜன் அவர்களே! தமிழ் இசைச் சங்கத் தலைவர் உயர்திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்களே! செட்டிநாட்டு அரசர் ராஜா சர். அவர்களே! உயர்திரு, மு. அ. சிதம்பரம் செட்டியார் அவர்களே! உயர்திரு டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்களே! இசைப்பேரறிஞர்களே! பண் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக நிற்கும் ஓதுவாமூர்த்திகளே! புலவர் பெருமக்களே! அறிஞர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் வெள்ளி விழா நடக்கும் இந்த ஆண்டு, என்னைத் தலைமையேற்கக் கட்டளையிட்ட தமிழ் இசைச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களே! உங்கள் அனைவருக்கும் எனது பணிவன்புடன் கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**தமிழகமே இசைப் பயிரின் முதற் பண்ணை**

இசை-ஒலியின் எடுப்பும், படுப்பும், துடிப்பும், அசைவும் அமைந்த ஒன்று. எடுப்பு-உச்சஸ்தாயி; படுப்பு-நீசஸ்தாயி; அசைவு-ஆலாபனம்; துடிப்பு-ஆரோகண, அவரோகண முறைகளில், இடைக்கிடை கலையின் கற்பனா சக்தியால் விளையும் உயிரோட்டமான பிடிப்பு வகைகள். இவற்றுள் தலைசிறந்தது துடிப்பே. துடிப்பு இல்லையானால் இசை, களை கட்டாது. இசைத் தட்டுக்களில் ஓர் இசையைப் பல காலம் கேட்கிறோம். ஏதோ ஒரு வகையில் மன நிறைவும் ஏற்படச் செய்கிறது. ஆனால், அதைப் பாடியவரைக் கொண்டு மீண்டும் கேட்டால், முன்னதிலிருந்து அதே இசையில் புதிய கற்பனைகள் பொருந்த ஒரு புதிய உணர்ச்சி, கேட்பவருக்கு விளைகிறது. இசைத் தட்டில் இசை பதிவாகிறது. இசைத் தட்டில் இசைத்தவன் மனோநிலை, காலத்திற்குக் காலம் கற்பனை மெருகு ஏறுகிறது; ஒளி பெருகிறது. இதனால், இசை எங்கும் ஒரு மாதிரியாக இருந்தாலும் பாடுவோனது —கலைஞனது கலைமைக்கு ஏற்ற வண்ணம் பெருகுவதைப் பார்க்கலாம். தமிழில் சிலம்பு நூல் தெரிவிக்கின்றபடி குரல் முதலிய ஏழு சுரங்களும் அன்றும் இருந்தன; இன்றும் இருக்கின்றன. ஆனால், சுரங்களுக்குக் கொடுக்கின்ற பெயர்தான் வேறு.

கர்நாடக இசை என்பது என்ன? சில இசை மாநாடுகளில், இந்துஸ்தானி இசை வடநாட்டில் தோன்றியபோது, தென்னாட்டில் தோன்றிய இசைக்குக் கர்நாடக இசை என்று பெயர் அமைந்தது என்று பலர் சொல்லக் கேட்கிறோம். நாம் நமக்குத் தெற்கே உள்ளவர்களைத் தெற்கித்தியர் என்கிறோம். நமக்கு வடக்கே உள்ளவர்கள், நம்மைத் தெற்கித்தியர் என்கிறார்கள். அதுபோல இந்துஸ்தானிக்காரர்கள், தமிழ் இசைக்கு வைத்த பெயரே அன்றி, இயற்கையான பெயர் கர்நாடக இசை என்பதில்லை. தமிழ் இசை தமிழ் இசைதான். தமிழ் இசை என்பது, தமிழ் மொழியால், தமிழ் மொழியாகிய உடம்பில் இயங்குகின்ற இசையாகிய உயிர் என்று பொருள் கொள்ளலாம். ஆனால், தமிழ் என்பது இனிமை, பண்பு, என்று நிகண்டு கூறுகிறது. ஆகவே, தமிழ் இசை என்பது இனிய இசை என்று பொருள் காணுதல் சிறப்பல்லவா! நான் ஒரு கலைஞன். கலைஞன், மொழி வேறுபாட்டிற்கும், இன வேறு பாட்டிற்கும், அப்பாற்பட்டவன். நடுநிலையில் இருந்து சொல்கிறேன். நீங்களும் சிந்தியுங்கள்.

இந்துஸ்தானி இசையிலே வன்மை, மென்மை, ஒறுத்தல், உரசுதல் முதலிய வேறுபாடு உண்டு. அதனால், இசையிலும் ஒலி வேற்றுமை உண்டாகிறது. தமிழ் இசையோ, குடுவையிலிருந்து ஊற்றுகின்ற தேன்போல, இடையறுது இழும் என்னும் ஓசையோடு இனிமையைத் தருகின்றது. ஆதலால், தமிழ் இசை என்பதற்கு இனிமையான இசை என்று பொருள் கொண்டால், நீங்களும் ஒத்துக் கொள்ளவே செய்வீர்கள். திருவனந்தபுரத்துக்குச் சென்று நம் பகுதி நாணயத்தைக் கொடுத்தால், பாண்டிக் காசு செல்லாது போ என்பார்கள். நான் சோழ நாட்டவன்; என் காசு இது என்றாலும் அவர்கள் சொல்வதும் பார்ப்பதும் பாண்டிக் காசு என்ற நோக்கமே. கேரள நாட்டை அடுத்து அதனோடு ஒட்டி இருப்பது பாண்டிய நாடு. ஆகையால் அந்தப் பழக்கத்தால்,

இந்தக் காசைப் பாண்டிக் காசு என்கிறார்கள். அதுபோல வட இந்தியாவை ஒட்டி இருப்பது கர்நாடகமாகிய கன்னடமாகையால், செந்தமிழ் இசையைக் கர்நாடக இசை என்று அவர்கள் வழங்குவதில் தவறு இல்லை.

அல்லாமல் சில சொற்கள், தம்முடைய பொருளை விட்டுச் சமுதாயத்தில், வேறு ஒரு பொருளில் வழங்கப்படுவது இயற்கையே. இது, வளரும் மொழிக்கும் வாழும் மொழிக்கும் உள்ள தனித்தன்மை. அதுபோல, கர்நாடகம் என்பது மொழிக்கும், மொழி வழங்கும் நாட்டுக்கும் பெயராய் இருந்த நிலை மாறி, இசைக்கும் பெயராயிற்று அல்லவா? அதுபோல, மிகமிகப் பழைமையான பண் இசைதான், கர்நாடக இசை என்று சொல்லப் பட்டதாதல் வேண்டும்.

ஆனாலும், பக்கத்து நாட்டில் வழங்கும் இசையோடு கலந்து கலந்து வேற்று உருவை ஏந்தி, இவை கர்நாடக இசை, இவை பண் இசை என்ற வேறுபட்ட பெயர்களை அடைந்துவிட்டது. ஆனாலும், பழமையான இசை இதுதான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

வேற்றுக் கலப்போடு விரவிய கர்நாடக இசையோடு, அதாவது, பழைமையான பண்ணிசையோடு கலந்து வாழ்கின்ற திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள் இவற்றின் உதவி கொண்டு, இசையைக் கொண்டு, பழைய பண்ணிசை எவ்வாறு இருந்தது என்பதை நாம் ஆராய்ந்து காணலாம்.

இதனை ஆய்ந்து ஒரு வகையில் துணிந்து முடிவு காண முயன்ற திரு. ஆபிரஹாம் பண்டிதர் அவர்களையும், விபுலானந்த அடிகளார் அவர்களையும், இவற்றை எல்லாம் கூர்ந்து ஆய்ந்து தொகுத்துக் காட்டி,மேலும் ஆராயத் தூண்டுகின்ற திரு. க. வெள்ளை வாரணர் அவர்களையும் இங்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இவர்களுக்கு முன்பு திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய ஆதீனங்கள் இரண்டும் தமிழின் பழைய மரபைப் பாதுகாத்து வந்தன. அவற்றுள் திருவாவடுதுறைப் பண்ணிசை முறை பற்றித் திரு. சு. பொன் ஓதுவாமூர்த்தி அவர்களும், தருமபுர ஆதீனப் பண் முறையைச் சிதம்பரம் திரு. நடராச மூர்த்தி அவர்களும் போற்றி வந்திருக்கிறார்கள். திருவாவடுதுறைக் கோயில் கட்டிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருவாவடுதுறைப் பண் முறையை இசைக்கும் திரு. குருசாமி ஓதுவார் அவர்களைக் 'குருசாமிக் குரல்' என்றும், 'கோகிலம், கோகிலம்! கோகிலமே!' என்றும் பாராட்டியுள்ளார்கள். அவர்களுடைய பேரனாகிய திரு. பொன் ஓதுவார் அவர்கள், ''தேவாரப் பண் முறை ஆராய்ச்சி'' என்ற தலைப்பில், ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள். காரைக்குடித் திரு. நடராச தேசிகர் அவர்கள், ''தேவாரப் பண்'' என்ற தலைப்பில், ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளார்கள். சீகாழித் தமிழ் வித்துவான் திரு. முத்துத் தாண்டவராயப் பிள்ளை அவர்கள், ''தேவாரப் பண் ஆராய்ச்சி'' என்ற தலைப்பில், 'செந்தமிழ்ச் செல்வியில்'தொடர் கட்டுரை எழுதி வந்திருக்கிறார்கள். சென்னை டாக்டர். எஸ். இராமநாதன் அவர்கள், ''பண்களும் இசைகளும்'' என்ற தலைப்பில், ஒரு ஆராய்ச்சி நூலும் வெளியிட்டுள்ளார்கள். இவற்றையெல்லாம் துணைக் கொண்டு, அரபத்த நாவலர் எழுதிய பரத நூலையும், அடியார்க்கு நாவலர் எழுதிய உரையையும் ஊன்றி ஆய்ந்து, நாம், பண்ணிசை ஆராய்ச்சியில் அடிவைக்க வேண்டும். இந்த இருபத்து ஐந்து ஆண்டுகளில், பண்ணிசை ஆராய்ச்சி செவ்வனே நடைபெற்று வந்திருக்கின்றது.

ஆராய்ச்சி என்று வரும் பொழுது, இயல், இசை நாடக அறிஞர்கள் ஒருங்கிணைந்து, தாள சாஸ்திர நுணுக்கங்களை அறிந்தவர்களோடு கூடி ஆராய்வதே உண்மையான முறை என்பதை உணர்ந்து, இந்த மாநாடு, செயல்பட்டு வந்திருக்கிறது.

இனிமேலும், பல துறையிலும் வல்ல நாம் ஒருங்கிணைந்து பண்பட்ட உள்ளத்தோடு காழ்ப்பின்றி, ஆராய்ந்தால், நல்ல முடிவைக் காண முடியும். அதற்காக நாம் பாடுபடுவோமாக.

பழைய அமைப்பில் பழகி வருகின்ற பெருமக்கள் அனைவரும் பழைய வரலாற்றுக் கண்ணாடி அணிந்து கொண்டு, பண் அமைப்பின் மாற்றத்தையும் தோற்றத்தையும் பார்ப்பார்கள். ஆனால், அவரவர்கள் பயின்றதே பழைமையானது, சிறந்தது என்று ஒருபோதும் சாதிக்க முன் வர மாட்டார்கள்.

'' எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்பதை, மேல் அறிவுச் சட்டமாகக் கொண்டு ஆய்ந்து உண்மை காண முற்படுவார்கள். அம் முறையிலேயே,, இந்த மாநாடு இவ்வாண்டும் நடைபெறும் என நாம் எதிர்பார்க்கலாம் எனத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

# தமிழ் இசைச் சங்கமும், பண் ஆராய்ச்சி வரலாறும்

பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்'' என்றார், திருநாவுக்கரசர். இந் நிலை மாறிப் பிற மொழியோடு இசை பாடுதல், பல நூற்றாண்டுகளாகத் தமிழகம் முழுதும் பரவி யிருந்த இழிநிலையினை மாற்றித் தமிழ் மக்கள் உள்ளங்களில், உணர்ச்சியும், கிளர்ச்சியும் ஊட்டித் தமிழ்நாடு எங்கும் தமிழ் இசை முழங்கச் செய்து, தமிழ் இசையினை அரியணை ஏற்றியவர்கள், பெருங்கொடை வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்களால், 1943 ஆம் ஆண்டில், சென்னையில் நிறுவப் பெற்று வளர்ந்து வருகின்ற தமிழ் இசைச் சங்கம், 1967ஆம் ஆண்டில், தன் வெள்ளி விழாவினை, மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. இச் சங்கம், 1949 ஆம் ஆண்டில் தொடங்கி நடத்திவரும் பண் ஆராய்ச்சிக்கு இவ் ஆண்டு டன், இருபத்தைந்து ஆண்டுகள் நிறை கின்றன. இவ்வாறு, இச் சங்கம், கால் நூற் றாண்டாக, இசையுலகில் பெரியதோர் ஆராய்ச்சிப் பணியினைத் தொடர்ந்து நிகழ்த்தி வருவது, அனைவரும் பாராட்டும் அருஞ் செயலாகும். இதனைச் சிறப்பிக்கும் முறை யில், இவ் ஆண்டில், பண் ஆராய்ச்சியின் வெள்ளி விழாக் கொண்டாடப் பெறுகின்றது.

இந்த நல்ல நேரத்தில், இசைத் தமிழின் பழமையான வரலாறும், தமிழ் இசை இயக்க நிகழ்ச்சிகளும், தமிழ் இசைச் சங்கமும், பண் ஆராய்ச்சியும் தோன்றி வளர்ந்து வருகின்ற வரலாறும், இவ் வகையில், அன்றுமுதல் இன்றுவரை அறிஞர் பெருமக்கள் ஆற்றிய அரும் பெரும் பணிகளும் நம் நினைவிற்கு வருகின்றன.

## இசைத் தமிழின் வரலாறு

தமிழ்நாடு தமிழ் மன்னர்களால் ஆளப் பட்ட கடைச்சங்க காலம் வரையில், இசைத் தமிழ், நன்கு வளர்ந்து வந்தது. பின்பு, கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல், கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையில், தமிழ்நாடு முழுதும் பிற மொழி பேசும் அயலார் ஆட்சிக்கு உட்பட்டிருந்தமையால், அக் காலத்தில் இசைத்தமிழ், போற்றுவா ரற்று வீழ்ச்சி அடைந்தது. கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில், பாண்டியன் கடுங் கோன என்பவன், களப்பிரரைப் போரில் வென்று, பாண்டிய நாட்டைக் கைப்பற்றி னான். அக் காலம் முதல், அந் நாடு, பாண்டி யர்களின் ஆட்சிக்கு உள்ளாயிற்று. அந் நாட்டின் தலைநகரமாகிய மதுரையில், ஓர் இசைச் சங்கம் நிறுவி, இசைத் தமிழைப் பாண்டிய மன்னர் வளர்த்தனர் என்பது தெரிகின்றது.

'கூடலின் ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ'

(திருக்கோவையார்)

என்னும் ஆன்றோர் வாக்கு இதனைப் புலப் படுத்தும். மேலும், பாண்டிய மன்னன் ஒருவன், தன் அரியணைக்கு, 'இசையளவு கண்டான்' எனப் பெயரிட்டிருந்தனன் என் பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில், திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமிழோடு இசைபாடி, இசைத்தமிழை வளர்த்தனர். வேற்று நாட்டினரும் நம் நாட்டிற்கு வந்து இசை பயின்றனர் என்ற உண்மை, திரு ஞானசம்பந்தர் தேவாரத்தினால் அறியப்படு கின்றது. அக் காலத்தில் தொண்டை நாட் டினையும், சோழ நாட்டினையும் ஆண்ட முதல் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ வேந்தன், இசைக் கலையில் வல்லவனாக விளங்கினான்; இசைத் தமிழுக்கு ஏற்றம் அளித்துப் போற் றினான். கி. பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண் டுகளில், சுந்தரமூர்த்தி நாயனாரும், பெரி யாழ்வார் முதலிய ஆழ்வார்களும் அருட் பாக்கள் பாடி, இசையை வளர்த்தனர்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முதல் ஆதித்த சோழன், சோழர் பேரரசை நிறுவினான். இவனால் நிறுவப் பெற்ற சோழ மன்னர்களின் ஆட்சி, கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில், ஏறக்குறைய நானூறு ஆண்டு களுக்கு மேல் நடைபெற்றது. அக் காலத்தில், சோழ அரசர்கள், நம் சமய குரவர்களின் அருட்பாக்களைத் திருக்கோயில்களில் நாள் தோறும் பண்களுடன் பாடுவதற்கு அறக் கட்டளைகள் நிறுவினர்; அவ்வாறு பாடு வோர்க்குத் தமிழ்ப் பண்களைக் கற்பித்தற்குப் பாணர்களை நியமித்தனர்; அப் பாணர்களுக்கு வரி இல்லாமல் நிலம் வழங்கினர். முதற் குலோத்துங்க சோழன், இசைத் தமிழ் நூல் ஒன்று இயற்றியிருந்தான் என்று கலிங்கத் துப் பரணி என்னும் நூல் குறிப்பிடுகின்றது. அச் சோழனின் மனைவி, இசைப் புலமையில் சிறந்து விளங்கினாள். இதனால், அவள், ஏழிசை வல்லபி எனச் சிறப்புப் பெயரும் பெற்றிருந்தாள். மேற்கூறிய செய்திகளை நோக்கும்போது, சோழர்களின் இசைப் புல மையும், இசைத் தமிழ் வளர்ச்சிக்கு அவர்கள் செய்த நிலையான தொண்டுகளும் புலனாகும்.

இவ்வாறு இனிது வளர்ந்து, மிக உயர் நிலையில் இருந்த இசைத் தமிழ், முகம்மதியர் படையெழுச்சியால் உண்டாகிய குழப்பத்தி னால் வீழ்ச்சி அடைந்தது. பின், விசயநகர வேந்தன் படையெடுத்துத் தமிழகத்தினைத் தன்னடிப்படுத்தினமையாலும், அதன் பின் அரசாண்ட நாயக்க மன்னர்களின் விருப்பத் திற்கு ஏற்பவும் தெலுங்கு இசைப் பாடல் கள், தமிழ் நாட்டில் பரவலாயின. அந்நிலை, இவ் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மாறாமலிருந்தது. எனவே, தெலுங்கு மன்னரின் ஆட்சி நீங்கியும் தெலுங்குப் பாடல்களின் ஆட்சி நீங்கவில்லை. இதனால், தமிழகத்தில் நிகழ்ந்து வந்த இசை அரங்கு கள் எல்லாவற்றிலும் பிற மொழிப் பாடல் களே மிகுதியாகப் பாடப்பட்டும், இசை யரங்கின் இறுதியில், துக்கடா என்ற பெய ரில், இரண்டொரு தமிழ்ப் பாடல்களே பாடப்பட்டும் வந்தன.

### தமிழ் இசை இயக்கம்

இந் நிலையில், தமிழ்நாடு செய்த தவப் பயனாகத் தோன்றியவர்களும், தனி ஒரு வராய் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவித் தமிழ்த் தாய்க்குப் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெருங்கொடை வள்ளலும் ஆகிய, செட்டிநாட்டரசர் டாக் டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் இசைக்கு வாழ்வளிக்க முன் வந்தார்கள்.

அண்ணாமலை அரசர் அவர்கள், இசைக் கலையில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். முன்னரே இசைக் கலைக்குப் பெரும் பணி ஆற்றியவர்கள். 1929ஆம் ஆண்டிலேயே, சிதம்பரத்தில், இசைக் கல்லூரியினை நிறுவி, அதனை, 1932 ஆம் ஆண்டில, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் சேர்த்தவர்கள. இந் திய நாட்டில், இசைக் கலையினை நானகு ஆண்டுகள் கற்பித்துப் பட்டம் வழங்குகின்ற முதற் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல் கலைக் கழகமேயாகும். ஆயினும், 1940ஆம் ஆண்டுவரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைப் பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசைவாணர்களும் தமிழ்நாட்டு இசை அரங்குகளில், பிற மொழிப் பாடல்களையே பாடுவாராயினர்.

தமிழ் இசை வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் இத் துன்ப நிலையினைக் கண்டு, அண்ணாமலை அரசர் அவர்கள் உளம் வருந்தினார்கள்; பொருள் தெரியாத வேற்றுமொழிப் பாடல் களால், தமிழர் பொருளுணர்ச்சியுடன் இசை இன்பத்தினை நுகர இயலவில்லையே என ஏங்கினார்கள்; சங்க காலத்திலும், சமய காலத்திலும் தமிழகத்தில் தனியாட்சி புரிந்து வந்த தமிழ் இசைக்கு உரிய இடத் தினைப் பிற மொழிப் பாடல்கள் கவர்ந்து கொண்டனவே எனக் கவலையுற்றார்கள். நம் நாட்டு இசை அரங்குகளில், வேற்று மொழிப் பாடல்கள் பாடப்பெறுவது நியாய மில்லை; பயனுமில்லை என்ற உணர்ச்சி, அண்ணாமலை அரசர் அவர்களின் உள்ளத்தில், ஆழமாக வேரூன்றியது. இதனால், அரசர் அவர்கள், தமிழ் நாட்டில் பாடப் பெறுகின்ற இசைப் பாடல்கள், தமிழ்ப் பாடல்களாகவே இருத்தல் வேண்டும் என முழங்கினார்கள். பிற மொழிப் பாடல்களையே கேட்டுக் கேட்டுக் காதிருந்தும் செவிடர்களாய் வாழ்ந்த தமிழ் மக்களின் காதுகளில், தமிழ் இசை என்னும் இன்பத் தேன் பாய, வழி வகுக்க எண்ணினார்கள். இத்தகைய சிறந்த எண்ணம்- மறைக்கப்பட்டிருந்த இசைத் தமிழைத் தோற்றுவித்து வளர்த்தல் வேண்டும் என்ற நல்லெண்ணம், அண்ணாமலை அரசர் அவர் களுக்கே முதன்முதல் தோன்றியது. இவ் எண்ணமே, தமிழ் இசை இயக்கமாக உரு வெடுத்தது. தமிழ் இசை என்னும் பயிர் தழைத்து வளர, அண்ணாமலை என்னும் மேகம், பெரு மழையைப் பெய்யத் தொடங் கியது.

### தமிழ் இசை வளர்ச்சிக்கு அண்ணாமலை அரசரின் நன்கொடை

தமிழ் இசை வளர்ச்சிக்காகப் பல்வேறு இடங்களில், பல்வேறு சமயங்களில், அண்ணா மலை அரசர் அவர்கள் தொடர்ந்து வழங்கிய

நன்கொடை பெருங் கொடையாகும். அவற்றுள் முதல் ஒரு பகுதியாக, 16–11–1940ல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலும், பின்னர், 30–9–1941ல் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் கொண்டாடிய போதும் இருபத்தையாயிரம் ரூபாய், பல்கலைக் கழகத்திற்கு நன்கொடை வழங்கினுர்கள். புதிய தமிழ் இசைப் பாடல்கள் இயற்றுவதை ஊக்குவிப்பதற்கும், இசைவாணர்கள் சிலரது நினைவில் மட்டும் உள்ள பழைய தமிழ் இசைப் பாடல்களைத் தமிழ் மக்களிடையே பரவச் செய்வதற்கும் அப் பொருள் பயன்படுதல் வேண்டும் என்று கருதினுர்கள்.

### தமிழ்நாடு எங்கும் தமிழிசை முழக்கம்

இவ்வாறு, தமிழகமெங்கும் நன்கொடைகள் பல வழங்கி, இசைத் தமிழ் வளர்ச்சியை ஊக்குவித்த அண்ணுமலை அரசர் அவர்கள், தமிழ் மக்கள், தம் தாய்மொழியாம் தமிழ் மொழி இசையின் பழமையையும், சிறப்பினையும், பயனையும் உணர்ந்து இன்புறுதற்குத் தமிழ்நாடு எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார்கள். முதல் தமிழ் இசை மாநாடு, 14–8–1941 முதல் 17–8–1941 வரை நான்கு நாட்கள், அண்ணுமலை நகரில் நடைபெறச் செய்தார்கள். இம் மாநாட்டினைத் தொடர்ந்து தேவகோட்டை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, ஆத்தங்குடி, கும்பகோணம், திருப்பத்தூர், தஞ்சாவூர், வலம்புரி, ஐயம்பேட்டை முதலிய இடங்களில், தமிழ் இசை மாநாடுகள் விரைந்து நடைபெற்றன. பல்வேறு இடங்களில், தமிழ் இசைக் கழகங்களும் கல்லூரிகளும் தோன்றின. அண்ணுமலை அரசர் அவர்கள், இவற்றிற்கு ஊக்கமும், உதவியும் அளித்தும், இவற்றின் விழாக்கள் பலவற்றில், தாம் பேருரைகள் நிகழ்த்தியும், இவற்றிற்கு ஒளியூட்டினுர்கள். தமிழ்நாடு எங்கும் தமிழ் இசை முழங்கலாயிற்று.

### அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இசைப் பணிகள்

அரசர் அவர்களின் விருப்பத்திற்கும், தமிழ் மக்களின் ஆதரவிற்கும் ஏற்ப, அண்ணுமலைப் பல்கலைக் கழகம், தமிழ் இசை வளர்ச்சிக்குத் தன் பணிகளை விரைந்து செய்யத் தொடங்கியது. வேற்றுமொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த அண்ணுமலைப் பல்கலைக் கழக இசைப்பகுதி, தமிழ் இசை கற்பிக்கும் பகுதியாக மாறியது. பழையனவும், புதியனவும் ஆகிய தமிழ் இசைப் பாடல்களையும், இசை இலக்கண நூல்களையும் வெளியிடும் பெரு முயற்சியினை, அரசர் அவர்களின் பேராதரவினுல், பல்கலைக் கழகம் மேற்கொண்டது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில், தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று, 1943ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றது. அக் குழுவிற்குப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், செயலாளராகப் பணியாற்றினுர். வெளியிடங்களில் உள்ள புகழ் பெற்ற இசைவாணர் பலரும், இசைப் பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப் பல்கலைக் கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லாரும், வித்துவான் மு. அருணுசலம் பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, அரசர் அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று, விரைந்து செய்த பெரு முயற்சியின் பயனுகத், தமிழிசை நூல்கள் இருபது, பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்தன. இவற்றிற்குப் பின்னும் சில இசைத் தமிழ் நூல்களை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. இந் நூல்கள் எல்லாவற்றிலும் சேர்த்துப் பார்க்கும்போது, 1300க்கு மேற்பட்ட தமிழ் இசைப் பாடல்கள், 230 வரை உள்ள இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், இப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுதிகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேள கலாநிதி, மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும், பரத சங்கிரகம் என்ற நூல்கள், இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத் தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர் திறமை பெறும் வண்ணம், இப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள மிருதங்க பாடமுறை என்னும் நூலும் இத் தொகுதிகளில் ஒன்ருகும். தமிழ் இசைக்கு அரும் பெரும் தொண்டுகள் புரிந்த அண்ணுமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப்பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசை மாலை' என்னும் பெயருடன், அண்ணுமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவின்போது வெளிவந்துள்ளன.

இவ்வாறு தமிழ் இசை வளர்ச்சிக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஆற்றிவரும் பணியில், இணைவேந்தர் டாக்டர் ராஜா சர் முத்தையசெட்டியார் அவர்கள், தம் தந்தையார் அவர்களைப் போலவே பேரூக்கம் காட்டி ஆதரவு அளித்து வருவது, இசைத் தமிழின் நற்பேருகும்.

தமிழ் இசை இயக்கம் வளர்ந்த வரலாறு இவ்வாருக, இதற்கிடையில், தமிழ் இசை

வளர்க்கும் தலைமை நிலையமாகச் சென்னை மாநகரில், தமிழ் இசைச் சங்கத்தினை அண்ணாமலை அரசர் அவர்கள் நிறுவிய வரலாற்றினை இனிக் காண்போம்.

## சென்னையில் தமிழ் இசைச் சங்கம்

அண்ணாமலை அரசர் அவர்கள், தாம் தோற்றுவித்த தமிழ் இசை இயக்கத்தில் வெற்றி கண்டு, தமிழ் இசையினை என்றும் வளர்க்கும் நிலையான நிறுவனமாகச் சென்னை மாநகரில், தமிழ் இசைச் சங்கம் நிறுவ எண்ணினார்கள். தமிழ இசை வளர்ச்சிக்கு உரிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்து, பேருக்கததுடன் உழைக்கும் பெருந்தகையார் ஒருவர், தம்முடைய பணிக்குத் துணையாதல் வேண்டும் என நினைத்தார்கள். அப்போது, அரசர் அவர்களின அகக் கண் முன், தமிழ் நாட்டின் தவப்புதல்வரும், உலகப் பேரறிஞரும் ஆகிய டாக்டர் சர். ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள் காட்சியளித்தாாகள். அவர்களிடம், தமிழ் இசை வளர்ச்சி பற்றிய தம் கருத்தினை அரசர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசர் அவர்களிடம் பெருமதிப்பும், நட்பும் உடைய சண்முகஞ் செட்டியார் அவர்கள, அது கேட்டுத் தம் கருத்தும் அதுவே ஆதலின, தமிழ் இசைச் சங்கததினைச் சென்னையில் தோற்றுவித்துத் தமிழ் இசை வளர்க்கும் முயற்சியில், முழுதும் ஒத்துழைக்க இசைந்தார்கள். இருவரும் உணர்ச்சி ஒத்து விரைந்து செயலாற்றத் தொடங்கினார்கள். தமிழ் இசையை, ஓர் உயிர்த்துடிப்பு உள்ளதாக ஆக்கினார்கள். தமிழ்ப் பாட்டுக்கள் பாடுவதற்கும், இயற்றுவதற்கும் இசைவாணர்களை ஊக்குவித்தார்கள். 1943ஆம் ஆண்டு மே மாதந்தில், தமிழ் இசைச் சங்கத்தினைச் சென்னையில் நிறுவினார்கள். இதற்கென நன்கொடையாகத் தாமே பெரும் பொருள் வழங்கியும், தக்க தமிழ்ப் பெருமக்களிடம் பொருள் சேர்த்தும் ஏறத்தாழ, நான்கு லட்சம் ரூபாய்க்கு மேலாகத் தமிழ் இசைச் சங்கத்திற்கு நிதி அமைத்தனர். இந்த நிதியில், அண்ணாமலை அரசர் வழங்கியது, இருபத்தையாயிரம் ரூபாய் ஆகும். இச் சங்கத்திற்கு அண்ணாமலை அரசர் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப் பெற்றது.

## சென்னையில் தமிழ் இசை முதல் மாநாடு

தமிழ் இசைச் சங்கம், 23-12-1943 முதல் 4-1-1944 வரை, பெரியதொரு தமிழிசை மாநாட்டினைச் சென்னை, அரண்மனைக்காரத் தெருவில் உள்ள செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடத்தியது. இம் மாநாடு, இதற்குமுன் எங்கும் நிகழாத பெருந் தமிழ்த் திருவிழாவாகக் காட்சியளித்தது. எத்தகைய கொள்கை வேறுபாடும் இன்றித் தமிழ் இசை வளர்ச்சி என்னும் ஒரே நோக்கத்துடன், தலைவர்களும், அறிஞர்களும், தொண்டர்களும் இவ் விழாவில், ஒருசேரத் திரண்டிருந்தனர். வரவேற்புக் கழகத் தலைவர் ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார்கள். டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்கள். ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார், திரு. சி. இராசகோபாலாச்சாரியார், அறிஞர் திரு. சி.என்.அண்ணாதுரை, கல்கி திரு. ரா. கிருட்டிண மூர்த்தி, பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி முதலிய அறிஞர் பெருமக்கள் பன்னிருவரின் சொற்பொழிவுகள், அன்று நிகழ்ந்தன. இவ்வாறு, பெரியோர்களின் பயன் நிறைந்த பேச்சுக்களுடனும், நாட்டில் பெரும் புகழ் பெற்ற இசைவாணர்களின் இனிய தமிழ் இசை அரங்குகளுடனும் சீரும் சிறப்புமாக நிகழ்ந்த தமிழ் இசை மாநாட்டினைத் தொடர்ந்து, தமிழ் இசைச் சங்கத்தின் பணிகள், செவ்வனே நடைபெறத் தொடங்கின.

## தமிழ் இசைக் கல்லூரி

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக, 23-1-1944ல் தமிழ் இசைக் கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்று இனிது நடைபெற்று வருகின்றது. இக் கல்லூரியின் வளர்ச்சியில், அண்ணாமலை அரசர் அவர்கள், மிக்க கவனம் செலுத்தினார்கள். இக் கல்லூரியில், வாய்ப்பாட்டும், வீணையும், பிடிலும், மிருதங்கமும் கற்பிக்கப் பெற்று, இசைமணி, இசைச் செல்வம் என்னும் பட்டங்கள், வழங்கப் பெறுகின்றன. இக் கல்லூரியின் கௌரவ முதல்வர்களாக, இசைப்பேரறிஞர், அரியக்குடி இராமாநுச ஐயங்கார் அவர்களும், இசைப்பேரறிஞர் பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்களும், மிருதங்க வித்துவான் பழநி சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பணியாற்றியமை, பெருமையுடன் குறிப்பிடுதற்குரியது. இப்போது, இசைப்பேரறிஞர் பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் அவர்களும், பத்மபூஷண் எம். எல். வசந்தகுமாரி அவர்களும் கௌரவ முதல்வர்களாகப் பணியாற்றிச் சிறப்பளித்து வருகிறார்கள். இப்போது இசையுலகில் தலைசிறந்து விளங்கும் சீகாழி எஸ். கோவிந்தராசன் அவர்கள், இக் கல்லூரியின் தொடக்கக் காலத்தில், இங்குக் கல்வி பயின்று இசைமணிப் பட்டம் பெற்ற பழைய மாணவர் என்பது, பெரு மகிழ்வுடன் குறிப்பிடுதற்குரியது.

இப்போது, இக் கல்லூரியின் இயக்குநராக, இசைத்துறை அனுபவம் மிகுந்த திரு.

த. சங்கரன் அவர்களும், ஆசிரியர்களாக, இசைப் புலமை நிறைந்த பலரும் பணி புரிந்து வருகின்றார்கள். இப்போது இக் கல்லூரியில், மாணவரும், மாணவியருமாக, நூற்று ஒன்பதின்மர் தமிழ் இசை பயில்கின்றனர். இம் மாணவர்கள் எல்லோருக்கும் தேவாரப் பாடற் பயிற்சி கட்டாயமாக அளிக்கப் பெறுகின்றது. வெளிநாட்டினரும் இக் கல்லூரிக்கு விரும்பி வந்து இசை பயில்கின்றனர்.

இக் கல்லூரிக்கு நல்ல நூல் நிலையம் உள்ளது. இதில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அருமையாக வெளியிட்டுள்ள தமிழ் இசை வெளியீடுகளும், அப் பல்கலைக் கழகத்தின் பிற வெளியீடுகளும் உள்பட, ஆயிரம் நூல்கள் வரை உள்ளன. இந் நூல் நிலையத்தில் உள்ள நூல்களைப் பிற பல கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், மற்றவர்களும் படித்துப் பயன் பெறுகின்றனர்.

தமிழ் இசைச் சங்கத் துணைத் தலைவரும், தமிழ் இசை வளர்ச்சிக்கு அரும் பணி ஆற்றி வருகின்றவர்களுமாகிய, டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களின் 60ஆம் ஆண்டு நிறைவு விழாவினை, இக் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் கொண்டாடி, அவ் விழாவின் நினைவாகத் தேவாரப் பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மூன்று பரிசுத் திட்டங்களை நிறுவியுள்ளனர். இப் போட்டி, ஆண்டுதோறும் நடத்தப் பெற்று, இதில் வெற்றி பெற்ற மூவருக்குப் பரிசுகள் வழங்கப் பெற்று வருகின்றன.

இக் கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா, 26-12-1946ல், டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த, தமிழ் நாட்டு இசைச் சங்கப் பிரதிநிதிகளின் முதல் மாநாட்டில் நடைபெற்றது. அப்போது, இக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர் மூவருக்கு இசைமணி என்னும் பட்டத்தினை, டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வழங்கினார்கள். பின்னர், ஆண்டுதோறும், தமிழ் இசை விழாவில், இப் பட்டங்கள், வழங்கப் பெறுகின்றன.

மேலும், இக் கல்லூரியின் கிளைக் கல்லூரி ஒன்று, ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள சிருங்கேரி பிரவசன மண்டபத்தில், இசைப் பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களால், 6-10-1973ல் தொடங்கி வைக்கப் பெற்றுள்ளது. அவ் விழாவில் ராணி மெய்யம்மை ஆச்சி அவர்கள் பெயரில், தேவாரப் போட்டிப் பரிசுக்காக, இடையாத்த மங்கலம் அவிபக்த வைத்தியநாதையர் அறக்கட்டளையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய், திரு. வி. வைத்திய சுப்பிரமணிய ஐயர் அவர்களால் வழங்கப் பெற்றது. இக் கிளைக் கல்லூரியில், மாணவ மாணவியர் முப்பத்தொன்பதின்மர், இப்போது, தமிழ் இசை பயில்கின்றனர்.

**தமிழ் இசைச் சங்க வெளியீடுகள்**

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில், ஆண்டுதோறும் இசை விழாக் காலங்களில், அழகிய மலர் ஒன்று வெளியிடப் பெற்று வருகின்றது. இம் மலர்களில், இசை நுட்பங்கள் பற்றி அறிஞர்களால் எழுதப் பெற்ற சிறந்த கட்டுரைகளும், தமிழ் இசை விழாக்களில் பெருந் தலைவர்கள் நிகழ்த்தும் வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை முதலியனவும் தமிழ் இசைச் சங்கத்தின் பிற நிகழ்ச்சிகளும், அந்தந்த ஆண்டில் நிகழும் இசையரங்குகள், நாடகங்கள், நடனங்கள் முதலியவை பற்றிய நிகழ்ச்சி நிரல்களும் இடம் பெற்றுள்ளன.

இச் சங்கத்தின் வெள்ளி விழாவில், வெள்ளி விழாச் சிறப்பு மலர் ஒன்று, டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற வெள்ளி விழா மலர்க் குழுவினால், உயர்ந்த முறையில் வெளியிடப் பெற்றது. இம் மலர்களின் பதிப்பாசிரியர், பேராசிரியர் அன்பு கணபதி அவர்களின் பணி போற்றுதற்குரியதாகும்.

மேலும், ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களால் இயற்றப் பெற்ற கீர்த்தனை மஞ்சரி என்னும் நூல், தில்லையாடி அருணாசலக் கவிராயரின் 170ஆவது ஆண்டு விழா மலர், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் எழுதிய 'வானொலியில் தமிழ் இசை' என்னும் கட்டுரை, திரு. த. சங்கரன் அவர்கள் எழுதிய இசைமேதைகள் என்னும் நூல், இசைப்பேரறிஞர் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களால் இசை அமைக்கப்பெற்ற தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்கள் என்னும் நூல், மன்னார்குடிக் கொன்னக்கோல் வித்துவான் பக்கிரியாப் பிள்ளை அவர்கள் கையாண்ட முறைப்படி, கொன்னக்கோல் வித்துவான், மன்னார்குடி ப. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களால் தொகுக்கப் பெற்ற தாளமும் அனுபவமும் என்னும் நூல் முதலியனவும் தமிழ் இசைச் சங்க வெளியீடுகளாகும்.

மேலும் இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களால் இயற்றப்பெற்ற முருகன் அருள்மணி மாலை என்னும் நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் அண்மையில் வெளியிட்டுள்ள யாழ் நூலின் இரண்டாம் பதிப்பு முதலிய நூல்களின் வெளியீடுகளுக்குத் தமிழ் இசைச் சங்கம், பொருள் உதவியும் செய்துள்ளது.

மேலும், தமிழ் இசைச் சங்கத்தினல் இது வரை நடத்தப்பெறறுள்ள பண் ஆராய்ச்சிக் கூட்டங்கள் இருபத்து நான்கின் நிகழ்ச்சிகள் முழுதும் அறிக்கை வடிவில், இருபத்து நான்கு பெரு நூல்களாக, வெளிவந்துள்ளன. 24-12-1949ல் நிகழ்ந்த பண் ஆராய்ச்சியின் முதற் கூட்டத்தில், பண் வரலாறு என்னும் பொருள் பற்றித் திரு. ம.ப. பெரியசாமித் தூரன் அவர்கள் படித்த கட்டுரையும், பண் - ராக ஆராய்ச்சி என்னும் பொருள் பற்றிப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் படித்த கட்டுரையும் சேர்ந்த ஒரு தனி நூலும் வெளியாகியுள்ளது.

இவை அல்லாமல், ஆண்டுதோறும் தமிழ் இசை விழாக்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் பெரியோர்களால் நிகழ்த்தப் பெற்ற வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை, சிறப்புரை, நன்றியுரைகளும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் நடைபெறும் நாட்டிய நாடகங்கள் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும் அவ்வவ் விழாக் காலங்களிலேயே, பல்லாயிரக் கணக்காக வெளியிடப் பெற்று, விழாக்களுக்கு வருகின்ற பொது மக்கள் அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கப்பெறுகின்றன. இவை, பொதுமக்கள் கைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதில், அரசர் முத்தைய செட்டியார் அவர்களின் கவனம் பெரிது. தமிழ் இசை விழாக்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் பேருரைகள் நிகழ்த்தியவர்களின் பெயர்கள், ஆண்டுகளின் முறையில், இக் கட்டுரையின் இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன. அதனை நோக்கினல், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க பேரறிஞர்கள் அனைவரும் தமிழ் இசை வளர்ச்சியில் பங்கு கொண்ட பாங்கு புலனுகும்.

### தமிழ் இசைச் சங்கத்தில் தமிழ் இசைப்பாடற் போட்டிகள்

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாகப் பல்வேறு தமிழ் இசைப் பாடல் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டி, 1948ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்று வருகின்றன. கோபால கிருஷ்ண பாரதியார் பாடல் போட்டியில் முதலாக வெற்றி பெற்றவர்களுக்குத் திரு சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பெயரால் தம்புராப் பரிசு வழங்குவதற்குத்தான், ராஜா சர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள், கடைசியாக நன்கொடை வழங்கினர்கள். மேலும், இச் சங்க வெள்ளி விழாவின் நினைவாகவும் தமிழ் இசைப் பாடல் போட்டிகள் நடத்தப் பெற்றுப் பரிசுகள் வழங்கப் பெற்றன. போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பது, தமிழ் இசை வளர்ச்சிக்கு உரிய வழிகளுள் ஒன்றுதலின், தமிழ் இசைச் சங்கம், இப் பணியினையும் தொடர்ந்து செய்து வருகின்றது. இவ்வாறு பாடற் போட்டி நடத்துவதன்றித் தமிழ் இசைப் புலவர்களின் நாட்களையும் இச் சங்கம் கொண்டாடி வருகின்றது.

### டாக்டர் ராஜா சர் அண்ணமலைச் செட்டியார் அவர்களின் பெரும்பிரிவு

தமிழ் இசைச் சங்கம் பல்லாற்றுனும், பயன் மிக்க பணியாற்றி வளர்ந்து வரும் காலத்தில், தமிழ் இசைச் சங்கத்தைத் தோற்றுவித்த முதல் தலைவரும், தமிழ்நாடு எங்கும் தமிழிசை முழங்கவேண்டும் என்னும் ஆவலுடன், இச் சங்கத்தினைக் கண்ணும் கருத்துமாய், ஐந்து ஆண்டுகள் பேணி வளர்த்து வந்தவர்களும் ஆகிய அண்ணமலை அரசர் அவர்கள், 15-6-1948ல் இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள். இவர்களுடைய பிரிவினல், தமிழ் மக்கள் அனைவரும் ஆற்றெணுத் துயரத்தில் ஆழ்ந்தார்கள்.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவி வளர்த்தற்கும், வேறு பல வகை அறங்களுக்கும், கோடிக்கணக்கான செல்வத்தினை வாரி வழங்கிய இப் பெருங்கொடை வள்ளல், தமிழ் இசை வளர்ச்சிக்கு மட்டும் வழங்கியது, ஒன்றரை இலட்சம் ரூபாயாகும். இவர்கள் இறையடி நீழல் எய்துவதற்கு முன் எழுதிய கடைசிக் கடிதம், தமிழ் இசை வளர்ச்சிக்கு நன்கொடை வழங்குவதைப் பற்றியதாகவே இருந்தது. அக் கடிதம், அப்போது கல்கத்தாவில் கவர்னராக இருந்த திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களுக்கு எழுதப் பெற்றது. கோபாலகிருஷ்ண பாரதியார் நாள் கொண்டாட்டத்தில், ஆண்டுதோறும் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இராசகோபாலச்சாரியார் அவர்கள் பெயரால் தம்புராப் பரிசு வழங்கும் செய்தியும், அதற்கு மூலதனமாகத் தமிழ் இசைச் சங்கத்திற்கு அண்ணமலை அரசர், 3001 ரூபாய் நன்கொடை அளிக்குஞ் செய்தியும் அக் கடிதத்தில் குறிக்கப் பெற்றிருந்தன. அக் கடிதத்திற் கையெழுத்திடுவதற்கு முன், அண்ணமலை வள்ளல் அவர்கள், இறைவன் திருவடி நீழல் அடைந்து விட்டார்கள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதனை நன்குணர்ந்த டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், தம் தந்தையாரின் விருப்பத்தினை நிறைவேற்றினர்கள். இப் பரிசு, 1948 முதல், ஆண்டுதோறும் தமிழ் இசை விழாவில் வழங்கப் பெற்று வருகின்றது.

ராஜா அண்ணாமலை மன்றம்
கலைக்கோயிலின் கவின்மிகு திருவாயில்

ராஜா அண்ணாமலை மன்றத்தின் முன்றிலை அணிசெய்து நிற்கும்
அரசர் அண்ணாமலை அவர்களின் திரு உருவம்

ராஜா அண்ணாமலை மன்றத்து முன்புறத்தின் அழகிய தோற்றமும், மன்றத்து முன்றிலில் பெருமிதமாகக் காட்சியளிக்கும் அரசர் அண்ணாமலை அவர்களின் திருவுருவமும்

அண்ணாமலை வள்ளல் உருவச்சிலை முன், டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்,
டாக்டர் சர் சி. பி. இராமசாமி ஐயர், மைசூர் மன்னர்,
திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை ஆகியோர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து வந்த தமிழ் இசை, நெடுங்காலம் மறைந்திருந்த நிலையில், அதற்குப் பல்லாற்றானும் உயிர் கொடுத்த தாயும் தந்தையும் அண்ணாமலை அரசரே ஆவார்கள். இவர்கள் தோற்றுவித்த தமிழ் இசை இயக்கத்தினைப் போல, வேறு எந்த இயக்கமும் இவ்வளவு விரைவான வளர்ச்சியும், பொது மக்களின் ஆதரவும் பெற்றதில்லை என்று கூறினால், அது மிகையாகாது. தமிழ் இசையின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் இவர்கள் ஆற்றிய அரும் பெரும் பணிகளைத் தமிழ் மொழி உள்ளவரையும் ஒருவராலும் மறத்தல் இயலாது. இவர்களின் ஒல்காப் புகழினை வாழ்த்தி, இவர்கள் ஆற்றிய தொண்டுகளைத் தொடர்ந்து செய்வது நம் கடமையாகும்.

## டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்களின் தலைமை

அண்ணாமலை அரசர் அவர்களை அடுத்து, டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள், சங்கத் தலைவரானார்கள். டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள், தமிழ் இசை இயக்கத்தில், அண்ணாமலை அரசர் அவர்களுடன், தோளோடு தோள்நின்று தொண்டாற்றியவர்கள். உலகப் பேரறிஞர்களில் ஒருவர். பொருளாதாரத் துறை அறிவிற் பெரும் புகழ் பெற்றவர்கள். மத்திய சட்ட சபைத் தலைவராகவும், கொச்சித் தனி அரசின் திவானாகவும், இந்திய நாடு உரிமை பெற்றவுடன், அதன் முதல் நிதி அமைச்சராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் இருந்து, நாட்டிற்கும், மொழிக்கும் இவர்கள் ஆற்றிய அரும் பெரும் பணிகளை நாடு முழுதும் நன்கு அறியும்.

இவர்கள், தமிழ் இசை வளர்ச்சிக்கு ஆற்றிய போற்றுதற்குரிய பணிகளை, நாம் ஒரு நாளும் மறத்தல் இயலாது. தமிழ் இசை வளர்ச்சிக்குத் தோன்றிய எதிர்ப்புக்களுக்கு அழுத்தம் திருத்தமாக மறுப்புக் கூறுவதில், இவர்கள் மிக வல்லவர்கள். தமிழ் இசை பற்றி அவ்வப்போது இவர்கள் கூறிய கருத்துக்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும் தமிழ் மக்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்தன. இவர்களின் ஊன்றிய தமிழ்ப் பற்றினையும் நாடறியச் செய்தன. உறங்கிக் கிடந்த தமிழ் மக்களுக்கு உள்ளக் கிளர்ச்சி ஊட்டின. இச் சங்கத்திற்குப் பத்து ஆண்டுகள் நிறைந்து கொண்டிருக்கும்போது, (5-5-1953ல்) இவர்கள், நம்மை விட்டுப் பிரிந்தார்கள். இவர்கள் தலைவராய் இருந்த போது, இச் சங்கத்தின் ஏழாம் ஆண்டு விழாவில், இவர்கள் தம் அரிய முயற்சியினால், பண் ஆராய்ச்சியினைப் பேரார்வத்துடன் தொடங்கி, நான்கு ஆண்டுகள் செவ்வனே வளர்த்தார்கள். இது, தொடர்ந்து பெரு வளர்ச்சி பெற்று, வெள்ளி விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில், இவர்களின் உருவச் சிலையினை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், 20-12-1974ல் திறந்துவைக்கும் செய்தியும், இவர்களின் பெரு நண்பரும், இப்போது இச் சங்கத்தின் இனிய தலைவராய் இருக்கின்றவர்களும் ஆகிய திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், இச் சிலையினைத் திறந்து வைப்பதும் எல்லோருக்கும் இன்பம் தருவதாகும்.

## திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் தலைமை

டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களின் பிரிவிற்குப் பின், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள், சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இவர்கள், கோயமுத்தூர், நகரசபையின் முதல் தலைவராக இருந்தவர்கள். இவர்கள் தலைவராக இருந்த காலத்தில், இவர்களது பெரு முயற்சியினால்தான், சிறுவாணித் திட்டம் உருவாக்கப் பெற்றுக் கோவை மாநகருக்கு நல்ல குடி தண்ணீர் கிடைத்தது. இவர்கள் பல பொது நலச் சங்கங்களுக்குத் தலைவராக இருந்து பணியாற்றியுள்ளார்கள்; தமிழ் இசைச் சங்கத்தின் தொடக்கக்காலம் முதல் பங்கு கொண்டு உழைத்தவர்கள். தமிழ் இசை விழாக்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு அவ்வப்போது இவர்கள் வழங்கிய கருத்துக்கள், பயன் நிறைந்தனவாகும். இவர்கள், 15-9-1956ல், நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

## திவான் பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்களின் தலைமை

திரு சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களை அடுத்துத் திவான்பகதூர் தி.மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்சப் பெற்றார்கள். இவர்கள் தமிழ் இசைச் சங்கப் பணிகளில் தொடக்கம் முதல் தொடர்பு கொண்டவர்கள். சென்னை மாநில இந்து சமய அறநிலைய அட்சித்துறைத் தலைவராகவும், சென்னை மாநில அரசினர் பணிகளுக்கு அலுவலாளர்களைத் தேர்ந்தெடுக்கும் கழகத்தின் தலைவராகவும் இவர்கள் பணியாற்றியவர்கள். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் துணை வேந்தராக இருந்து, கல்விக்குப் பெருந் தொண்டு

புரிந்தவர்கள். தமிழ் ஆர்வம் மிக்கவர்கள்; இவர்கள், தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராக இருந்தாலும் தம்மைத் தமிழ் இசைச் சங்கத்தின் தொண்டராகவே கருதிப் பணியாற்றும் பண்பாடு உடையவர்கள்; கடவுட் பற்றும், நற்குணங்களும் நிறையப் பெற்றவர்கள். சமயம் சார்ந்த தமிழ் இசையைத் தழைத்தோங்கச் செய்தல் வேண்டும் என்ற குறிக்கோள், இவர்களிடம் மிகுதியாக உண்டு. இடைவிடா முயற்சி மேற்கொண்டு, பெரும் பொருள் திரட்டிப் பல நூறு ஆயிரம் ரூபாய்ச் செலவில், திருவானைக்காத் திருக்கோயிலை இவர்கள் புதுப்பித்த பெருமை, இவர்களின் ஆழ்ந்து அகன்ற கடவுட் பற்றிற்கு எடுத்துக்காட்டாகும்.

தமிழ் இசைச் சங்கத்தினை நிறுவிய டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம், இவர்களுக்கு மிகுந்த ஈடுபாடும், பக்தியும் உண்டு. அதனை இவர்கள், தமக்குச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துரைக்கத் தயங்குவதில்லை; 'தமிழ் நாட்டில் தனி ஒருவர் இத்தகைய மகத்தான புரட்சியை ஏற்படுத்தித் தமிழ் மக்களை வாழ வைத்திருக்கிறார்' என்று வியப்புடனும் பெருமிதத்துடனும் அடிக்கடி குறிப்பிடுவார்கள். தமிழ் இசைச் சங்கத்தின் முன்னேற்றத்தில் இவர்களுக்கு உள்ள ஆர்வத்தினை, இச் சங்க விழாக் காலங்களில், இவர்கள் கூறும் வரவேற்புரை, நன்றியுரைகளால் நன்கு அறியலாம். இத்தகைய நல்லோர் தலைமையில், தமிழ் இசைச் சங்கம், பதினெட்டு ஆண்டுகளாக, இனிது வளர்ந்து வருகின்றது.

**தமிழ் இசைச் சங்கத் துணைத் தலைவர் பத்மபூஷண் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள்**

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், தமிழ் இசை இயக்கம் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்து, தம் தந்தையார் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடன் சேர்ந்து, தமிழ் இசை வளர்ச்சிக்கு அரும் பெரும் பணியாற்றி வருகின்றவர்கள். நல்லறங்கள் பலவற்றிற்குப் பெரும் பொருள் வழங்கி வரும் வள்ளல். அருள், அன்பு, ஆர்வமாக விருந்துபுறந்தருதல், முதலிய இனிய பண்புகளாலும், தொண்டுகளாலும் எல்லோருடைய உள்ளங்களையும், கொள்ளை கொண்ட தலைவர். ஆட்சித் திறம் படைத்தவர்கள். தீயன சிந்தியாதவர்கள். எப்பொழுதும் நற்பெருஞ் செயல்களையே எண்ணித் துணிந்து எண்ணியாங்கு நிறைவேற்றும் சான்றோர். நாட்டின் எதிர்காலத்தினை உருவாக்கும் சிறந்த கொள்கைகள் எனத் தாம் கண்டனவற்றை. அஞ்சாமல் அழுத்தம் திருத்தமாக வற்புறுத்திக் கூறும் உறுதி உடையவர்கள்.

ஐம்பது ஆண்டுகளாக, நாட்டிற்கும், மொழிக்கும் இவர்கள் ஆற்றிவரும் பணிகள் அளவிடற்கு அரியன; நாட்டு வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கன. நாட்டு நலம் பற்றிய நற்பெரும் பணிகளில், இவர்கள் பங்கு கொள்ளாதவைகள் இல்லையென்று கூறலாம். சென்னை மாநகரின் முதல் மேயர், சென்னை மாநிலத்தின் அமைச்சர், பச்சையப்பர் அறநிலையப் பாதுகாப்புக் குழுவின் தலைவர், அனைத்து இந்திய வணிகர் சங்கத்தின் தலைவர், நாற்பது ஆண்டுகள் தொடர்ந்து சென்னைச் சட்ட மன்ற உறுப்பினர், இந்தியன் வங்கி இயக்குநர் குழுவின் தலைவர், உயர் தொழில் நிறுவனங்கள் பலவற்றின் ஆட்சிக் குழுத் தலைவர் முதலியனவாக, இவர்கள் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க பெரும் பதவிகள் பற்பலவாகும். இவர்களின் இத்தகைய பணிகளையும், குணநலன்களையும் கண்டு உணர்ந்த சான்றோர் பலர், இவர்கள்பால், தாம் கொண்டுள்ள பெரு மதிப்பினையும் பேரன்பினையும் புலப்படுத்தும் முறையில், தம் உளமார எடுத்துரைத்த நல்லுரைகளின் உறைவிடமாக, இவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மலர் விளங்குவதைக் காணலாம்.

எல்லாவற்றிலும் மேலாக, இவர்கள் உள்ளத்தில் சிறப்பிடம் பெற்றிருப்பனவை, தம் புகழ் பெற்ற தந்தையார் அவர்களால் நிறுவப் பெற்றனவாகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், தமிழ் இசைச் சங்கமுமே ஆகும். இவ் இரு பெரு நிலையங்களையும் தம் தந்தையார் அவர்களைப் போல இவர்களும் தம் இரு கண்களாகப் பேணி, அனைவரும் பாராட்டிப் பயன் பெறுமாறு வளர்த்து வருகின்றார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராகிய இவர்கள், அங்கே தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் அளித்துவரும் தனிப்பேராதரவு, தமிழ் மக்கள் என்றும் நன்றியுடன் போற்றற்கு உரியதாகும். 1955 ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாவினையும், 1967ஆம் ஆண்டில், தமிழ் இசைச் சங்க வெள்ளி விழாவினையும் நாடெங்கும் பாராட்டுமாறு சீரும் சிறப்புமாக, இவர்கள் நடத்தி வைத்தார்கள்.

தமிழ்நாட்டு வானொலிகளில் தமிழ் இசைக்கு உரிய பங்கு கிடைக்கச் செய்த பெருமை, சிறப்பாக இவர்களைச் சேரும். தமிழ்நாட்டு வானொலிகளில், இசை ஒலி பரப்புப் பகுதியில், தமிழ் இசைக்கு முதன்மையானதும் மிகுதியானதுமான பங்கு அளித்தல் வேண்டும் என்பதனை, எப்போதும் இடித்துரைத்து வற்புறுத்துவதில், இவர்களுக்கு நிகரானவர்கள் இவர்களே.

இவர்கள் தமிழ் இசை விழாக்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் தவறாமல்—

கலந்து கொள்வார்கள். தமிழ் இசை விழாக் காலங்களில், வேறு எந்தச் செயலிலும் இவர்கள் ஈடுபடுவதில்லை. தமிழ் இசைவாணர்களுக்கும், நாடக நாட்டியக் கலைஞர்களுக்கும், இசை ஆராய்ச்சியாளர்களுக்கும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்கு வரும் ஓதுவார்களுக்கும் இசை நிகழ்ச்சிகளைக் கேட்டும் கண்டும் இன்புற வருபவர்களுக்கும் இவர்கள், அகமும், முகமும் மலர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் முறை, ஒரு தனிச் சிறப்பும் கவர்ச்சியும் உடையதாகும். தமிழ் இசைச் சங்க விழாக்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் அவ்வப்போது இவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை, சிறப்புரை, நன்றியுரை முதலியன, தமிழ் இசை விழா மலர்களிலும், பண் ஆராய்ச்சிக் கூட்ட அறிக்கைகளிலும் வெளிவந்துள்ளன. அவற்றில், தமிழ் இசை வளர்ச்சியில் இவர்களுக்கு உள்ள பேரார்வத்தினையும், தமிழ் இசை வளர்ச்சிக்கு மேலும் மேலும் இவர்கள் கூறும் ஆலோசனைகளையும், அவை நிறைவேற இவர்கள் அளிக்கும் ஆதரவினையும் காணலாம். முன்பு தமிழ் இசை இயக்கக் காலத்தில், இசை மாநாடுகளிலும், பிற பொதுக் கூட்டங்களிலும் தமிழ் இசை குறித்து இவர்கள் நிகழ்த்திய பேருரைகள், மக்கள் உள்ளத்தில் பசுமரத்து ஆணி போல் பதிந்து பெரும் பயன் விளைத்துள்ளன.

பல நூறு ஆண்டுகளுக்கு முன், பாண்டிய அரசர்கள், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில், அரசர் முத்தைய செட்டியார் அவர்கள், தமிழ் இசை வளர்க்கத் திருவுளம் கொண்டு, 21-1-1974ல் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில், மதுரை மாநகரில், பெருந் திட்டத்துடன், தமிழ் இசைச் சங்கம் நிறுவியுள்ளார்கள். இப் பொதுநலப் பணி, எல்லோராலும் ஒரு முகமாக வரவேற்கப் பெற்ற பெரும் பணியாகும். இச் சங்கத்தின் தொடக்க விழாவினையும், தமிழ் இசை முதல் விழாவினையும் இவர்கள் இருந்து, சீரும் சிறப்புமாக நடத்தி வைத்ததும், இவ் விழாவில், ஏறத்தாழ ஏழாயிரம் மக்கள் பேரார்வத்துடன் கலந்து இன்புற்றதும் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ் விழாவில் தமிழ் இசை விழா, தமிழ் இசைச் சங்கத் தொடக்க விழாச் சிறப்பு மலர் ஒன்று, பலரும் பாராட்டும் முறையில், அரசர் அவர்களின் மேற்பார்வையில் வெளியிடப் பெற்றுள்ளது.

அரசர் முத்தைய செட்டியார் அவர்களைப் புரவலராகப் பெறும் பேறு பெற்ற இச் சங்கத்திற்குத் தலைவரும், கௌரவச் செயலாளரும், ஆட்சிக் குழு உறுப்பினர்களும் தகுதி நிறைந்த பெருமக்களாக அமைந்திருப்பது நற்பேறாகும்.

தமிழ் இசை உணர்வு மறைந்திருந்த இருண்ட காலத்தில், இவர்களின் தந்தையார் அவர்கள் தோற்றுவித்த தமிழ் இசை இயக்கத்திற்கு எழுந்த எதிர்ப்புக்கள் எத்துணையோ பலவாகும். அவற்றையெல்லாம் அறிவுத் திறத்துடனும், அமைதியாகவும் வென்று, குன்றின்மேல் இட்ட விளக்கினைப் போல், இன்று தமிழ் இசை விளங்கும் நிலைக்குக் கொண்டு வந்த அரும் பணியில், இவர்களின் தந்தையார் அவர்களுடன் சேர்ந்தும், அவர்கள் காலத்திற்குப் பின்பும் இவர்கள் மேற்கொண்ட தனிப் பெரும் பங்கினை, இந்த வெள்ளி விழாக் காலத்தில், எண்ணி எண்ணித் தமிழ் மக்கள், இவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். முத்தமிழ் வளர்ச்சிக்கு இவர்கள் செய்துள்ள அளவிற்குப் பணி செய்துள்ள புரவலர்கள், வேறு ஒருவரும் இல்லை என்று கூறலாம். இவர்களின் பேரருள், தமிழ் மொழிக்கு இன்று போல் என்றும் வாழ்வளிப்பதாகுக.

அரசர் முத்தைய செட்டியார் அவர்களின் குமாரர் திரு. மு. அ. மு. இராமசாமி அவர்கள், தமிழக அரசினால், அண்மையில், ஷெரிபாக, இரண்டாம் முறை நியமிக்கப் பெற்றிருப்பது, நம் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சி தருகின்றது. 1970-71ல், முதல் முறை இவர்களை ஷெரிபாக நியமித்த நம் தமிழக அரசு, உடனே இரண்டு ஆண்டுகளில், மீண்டும் ஷெரிபாக இவர்களை நியமித்திருக்கிறது. ஒருவரே இரண்டாம் முறை ஷெரிபாக நியமிக்கப்பெற்ற செய்தி கேள்வியுற்றதில்லை. அடுத்தடுத்து அமைந்த இந்த நியமனம், திரு. இராமசாமி அவர்கள் முதன் முறை ஷெரிபாக இருந்து ஆற்றிய பணிகளைப் பாராட்டித் தமிழக அரசு, இவர்களுக்குச் செய்துள்ள தனிச் சிறப்பாகும்.

## ஆட்சிக் குழு

தமிழ் இசைச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர்களாக, அறிவாற்றல் நிறைந்த பெருமக்கள் அறுவர் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:

1. திரு. வி. எஸ். தியாகராச முதலியார்
2. திரு. பி. வி. ஆர்.எம். குழந்தையன் செட்டியார்
3. திரு. ஆர். கே. வேங்கடாசலம் செட்டியார்
4. திரு. எல். அழகுசுந்தரம் செட்டியார்
5. திரு. ஓ. எம். எஸ்பி. எல். எம்.மெய்யப்ப செட்டியார்
6. திரு. ஆர். இரத்தினசபாபதி செட்டியார்

திரு. மு. அ. சிதம்பரம் அவர்களும், ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்களும் தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்களாகத் தொடக்கம் முதல் இருந்து தொடர்ந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆவன புரிந்து வருகின்றார்கள்.

### திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள்

சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள், அண்ணாமலை வள்ளலின் அருமைப் புதல்வர்களில் மூன்றாமவர். இவர்கள் சென்னை நகர மேயராகவும், தென்னிந்திய வணிக சங்கத்தின் தலைவராகவும் விளங்கித் தொண்டுகள் பல புரிந்தவர்கள். வாணிகத் துறையிற் சிறந்தவர்கள். வெளி நாடுகளுக்குப் பலமுறை சென்று ஆங்காங்கு உள்ள தொழில் முறை நுட்பங்களை அறிந்தவர்கள். தூத்துக்குடியில் உள்ள உரத் தொழிற்சாலையாகிய சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் பெருந்தலைவராக உள்ளார்கள். 120 கோடி ரூபாயச் செலவில் அமைக்கப் பெற்று வளர்ந்து வருகின்ற இத் தொழிற்சாலை, ஆசியா கண்டத்திலேயே மிகச் சிறந்த தொழிற்சாலையாய், இந்திய நாட்டிற்குப் புகழ் தேடித் தந்து கொண்டிருக்கிறது.

இவர்கள், இளமை முதல், கிரிக்கெட் விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர். அதன் பயனாகக் கிரிக்கெட் விளையாட்டிற்கு இவர்கள் ஆற்றியுள்ள அரும் பெரும் பணி, என்றும் போற்றுதற்குரியது. உலகப் புகழ் பெற்ற சேப்பாக் மைதானத்தில், புதிய அமைப்புக்களுடன், வியத்தகு முறையில், ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப் பெற்றுள்ள விளையாட்டு அரங்கம், இவர்களின் பெரும் முயற்சியினால் கட்டப்பெற்றது. இந்த அரங்கம், ஒரே நேரத்தில், ஐம்பதினாயிரம் மக்கள் இருந்து விளையாட்டினைக் காணுதற்கு ஏற்ற வசதி உடையது. இந்த நன்றியைப் பாராட்டிக் கிரிக்கெட் சங்கக் குழுவினர், ஒரு மனமாக முடிவு செய்து, இந்த விளையாட்டு அரங்கத்திற்கு எம். ஏ. சிதம்பரம் விளையாட்டு அரங்கம் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

திரு. சிதம்பரம் அவர்கள், பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தகையாளர். செய்வன திருந்தச் செய்யும் இயல்பு உடையவர்கள். கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். இவர்கள், தமிழிசைச் சங்கத்தின் ஆட்சிப் பொறுப்பில் பெரும் பங்கு கொண்டுள்ளார்கள். சங்கத்தின் பணிகளாகிய இசை விழாக்கள், இசை அரங்குகள், பண் ஆராய்ச்சிக் கூட்டங்கள், இசைக் கல்லூரி, இசை நூல் வெளியீடுகள் முதலியன சீர்பெற நடப்பதற்கும், சங்கத்திற்கு அழகிய புதுக் கட்டடம் விரைவில் தோன்றியதற்கும், அது உயர்ந்த நிலையில் பேணப்பெற்று வருவதற்கும் சிறந்த காரணம், திரு. சிதம்பரம் அவர்கள், கௌரவச் செயலாளராய் அமைந்தது என்று கூறினால், அது மிகையாகாது.

யாராயிருப்பினும் அவர்களிடம் இல்லாத பண்புகளைச் சொல்லி, டாக்டர் சர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் புகழ்ந்து உரைக்க மாட்டார்கள் என்பது, அவர்களிடம் பழகிய எல்லோருக்கும் தெரியும். அவர்கள், தமிழ் இசைச் சங்கத்தின் முதல் மாநாட்டின் நிறைவு நாளில், பின்வருமாறு கூறியது ஒன்றே, திரு. சிதம்பரம் அவர்களின் சிறப்பியல்பை நன்கு விளக்கும். "இசை விழா சரிவர நடைபெறப் பல தொண்டர்கள் சிரமம் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களில், ராஜா அவர்களின் புதல்வரான சிதம்பரம் செட்டியார் அவர்களை நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அவர்கள் மேற்கொண்ட சிரமம், பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். சிதம்பரம் செட்டியார் அவர்களின் வேலையை நான் பார்த்தபோது, தமிழில் தகப்பனுக்கா அல்லது மகனுக்கா யாருக்கு ஊக்கம் அதிகம் என்று தோன்றியது."

இத்தகைய பாராட்டுதலுக்கு உரிய சிதம்பரம் அவர்கள், அன்று முதல் இன்றுவரை திறமையும், நேர்மையும் ஆர்வமும் திகழப் புகழை விரும்பாமல், அரும் பணி ஆற்றி வருகின்றார்கள். இசை உலகம், இவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையது.

### ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்கள்

சங்கத்தின் மற்றொரு கௌரவச் செயலாளராகிய திரு. டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்கள், பொதுநலப் பணிகள் பலவற்றில் பங்கு கொண்டிருப்பவர்கள்; இனிய குணம் உடையவர்கள். தமிழ் இசைச் சங்கச் செயல் முறைகளில், மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். தமிழ் இசைச் சங்கத்தின் தொடக்கக் காலத்திலிருந்து இவர்கள் செய்து வரும் தொண்டுகள், நன்றியுடன் போற்றுதற்குரியனவாகும்.

### உதவிச் செயலாளர்கள்

இச் சங்கத்தின் உதவிச் செயலாளரும், கலைப் புலமையும், கலை ஆர்வமும் உடை

யவர்களும் ஆகிய திருமதி. சீதர் சிதம்பரம் அவர்களின் உயர்ந்த தொண்டுகளும், உண்மையுடன் திறமையாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து உழைத்து வரும் உதவச் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீராமன் அவர்களின் நேர்மையான பணிகளும் இவர்கள் கருத்திற்கு ஏற்பக் கடமை புரிந்து வரும் சங்க அலுவல் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்பும் சங்கத்திற்குப் பெருமை தருவனவாகும்.

**ராஜா அண்ணாமலை மன்றம்**

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்திற்கு நிலையான கட்டடம் ஒன்று வேண்டும் என்றும், அக் கட்டடத்தில், இக் காலத்திற்கு ஏற்ற முறையில், ஓர் இசை நிகழ்ச்சி மண்டபம் அமைதல் வேண்டும் என்றும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் விரும்பினார்கள். அவர்களின் அந்த ஆசை, அவர்கள் காலத்தில் நிறைவேறிப் பார்க்க அவர்களால் இயலவில்லை. தமிழ் இசைச் சங்கத்தின் முதல் எட்டு ஆண்டு விழாக்கள், சென்னை அரண்மனைக்காரத் தெருவில் உள்ள செயிண்ட் மேரீஸ் மண்டபத்திலும், ஒன்பதாம் விழா, எழும்பூர் மியூசியம் தியேட்டரிலும் நடைபெற்றன. இதற்கிடையில், சென்னை அரசியலாரின் பேராதரவினாலும், டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார், டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார், திரு. மு. அ. சிதம்பரம் முதலிய பெருமக்களின் நன் முயற்சியினாலும் சென்னை எஸ்பிளனேடில், தமிழ் இசைச் சங்கக் கட்டடம் உருவாயிற்று. இதன் அமைப்பினைத் திட்டமிடுவதில், டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களின் பங்கு பெரிது. இக் கட்டடத்திற்கு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பெயரால், ராஜா அண்ணாமலை மன்றம் என்று பெயரிடப் பெற்றுள்ளது. தமிழ் இசைச் சங்கத்தினைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளலின் பெயரினை, இக் கட்டடத்திற்குச் சூட்டித் தமிழ் இசைச் சங்கத்தினர், தம் நன்றி மறவா நல்லியல்பினைப் புலப்படுத்தியிருப்பது மிகப் பொருத்தமாகும்.

இம் மன்றத்தின் புதுமனை புகு விழா, 30-10-1952ல், சிறப்பாக நடைபெற்றது. அப்போது முதல் அமைச்சராய் இருந்த திரு. சி. இராசகோபாலாச்சாரியார், டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார், டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் முதலிய பெரியோர்கள், அவ் விழாவில் கலந்து கொண்டார்கள். தமிழ் இசைச் சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழா முதல், எல்லா விழாக்களும் இச் சங்கத்தின் பிற நிகழ்ச்சிகள் அனைத்தும் இங்கே நடைபெற்று வருகின்றன. இம் மன்றம், தமிழ் நாட்டின் தலைநகராகத் திகழும் சென்னை மாநகரில், தமிழ் இசையின் தலைமை நிலையமாய் நின்று, கலை ஒளி வீசுகின்றது. இம் மன்றம், சென்னைக்கு வருவோர் யாவரும் கண்டு களித்து வியப்புறத் தக்க அழகியதொரு பெருங் கட்டடமாய், ஈடும் எடுப்புமின்றி ஓங்கி விளங்குகின்றது.

இக் கலைக் கோயிலை உருவாக்குதற்கு அக் கால மதிப்பில் எட்டு லட்சம் ரூபாய் செலவாயிற்று. அண்ணாமலை அரசர் குடும்பத்தினர், இதற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினார்கள். இவ் வண்மையாளர்களுக்கும், இதற்கு ஆர்வமுடன் பொருள் உதவி செய்த தமிழப் பெருமக்களுக்கும் பொதுமக்களின் நன்றி உரியதாகும்.

தமிழ் இசை விழாக் காலங்களிலும், தமிழ்த் திருநாளாகிய பொங்கல் திருநாள், தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு முதலிய நன்னாட்களில் கட்டணமின்றியும் தமிழ் இசைச் சங்கம், இசை அரங்குகளை நடத்தி வருகின்றது. மேலும், பற்பல பிற நிறுவனங்கள், நெடு நாட்களுக்கு முன்னரே இம் மன்றத்தினை வேண்டிப் பெற்றுத் தத்தம் இசை, நாடகம், நடனம் முதலிய நிகழ்ச்சிகளை, எப்போதும் இம் மன்றத்தில் நடத்திக் கொண்டே இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், இம் மன்றத்தில் கலை நிகழ்ச்சி நடைபெறாத நாள், பெரும்பாலும் இல்லை என்று சொல்லலாம். இம் மன்றத்தின் அமைப்பு மிகவும் சிறந்திருத்தலால், கலை நிகழ்ச்சிகள் நடத்துதற்கு எப்பொழுதும் இம் மன்றத்திற்கு மதிப்பு இருந்து கொண்டே இருக்கிறது. மேலும், இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில், புதிய அமைப்புக்களுடனும், மிகுந்த வசதிகளுடனும் சீர்திருத்தம் செய்யப் பெற்று, இம் மன்றம், இப்போது, புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது. அரசியல் நிகழ்ச்சிகளுக்கு இம் மன்றம் கொடுக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடுதற்கு உரியது. கருத்து மாறுபாடுகள் உள்ள பேச்சுக்களுக்கும் இம் மன்றத்தில் இடமில்லை.

**இசைக் கருவி நிலையம்**

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக, இசைக் கருவி நிலையம் ஒன்று, அமைக்கப் பெற்றுள்ளது. இதன் திறப்பு விழா, 1-1-1956ல் நடைபெற்றது. சங்கத் தலைவர் திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள், இவ் விழாவில், வரவேற்புரை நிகழ்த்தியபோது, "இந் நிலையத்தினை ஏற்படுத்துதல் வேண்டும் என்று அண்ணாமலை அரசருக்கு இருந்த விருப்பம் இவ் ஆண்டில்தான் நிறைவேறியது" எனக் குறிப்பிட்டார்கள். அப்போது, சென்னை மாநில வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. எம். பக்த

வத்சலம் அவர்கள், இந் நிலையத்தினைத் திறந்து வைத்தார்கள். டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் நன்றி கூறினார்கள்.

பல ஆண்டுகளாக முயன்று, பல இசைக் கருவிகள், இந் நிலையத்தில் சேர்த்து வைக்கப் பெற்றுள்ளன, திருவாரூர், கும்பகோணம் முதலிய நகரங்களில் உள்ள திருக்கோயில்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சிறந்த இசைக் கருவிகளும், வழக்கற்று மறைந்து போன இசைக் கருவிகள் சிலவும் இங்கே உள்ளன.

### இசைக் கலைஞர்களின் உருவப் படங்கள்

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார், திரு. மு. அ. சிதம்பரம் திரு. பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார், திரு. ஆர். இரத்தினசபாபதி செட்டியார் முதலியோர்களால் வழங்கப் பெற்ற, புகழ் வாய்ந்த இசைக் கலைஞர்களின் உருவப் படங்கள் பல, ராஜா அண்ணாமலை மன்றத்தில் உள்ளன. அவைகளுள், தஞ்சை பொன்னையா (ஆதி), தஞ்சை வடிவேல், தஞ்சை கண்ணுச்சாமி நட்டுவனார், காஞ்சிபுரம் நாயனு சுப்பிரமணிய பிள்ளை, பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை, வீணை தனம்மாள், மிருதங்கம் தட்சிணாமூர்த்திப் பிள்ளை, மிருதங்கம் நாராயணசாமி அப்பா ஆகியவர்களின் உருவப் படங்கள் இருப்பது, குறிப்பிடத் தக்கது. இத்தகைய கலைஞர்களின் உருவப் படங்களைத் தமிழ் இசைச் சங்கம் சேர்த்து வைப்பது, காலப்போக்கில், மிக அரிய பணியாகும்.

### அண்ணாமலை அரசர் உருவச் சிலைத் திறப்பு விழா

தமிழ் இசைச் சங்கத்தைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளல் அவர்களின் முழு உருவச்சிலை, அண்ணாமலை மன்றத்தின் முன், காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இத் திரு உருவச் சிலை, வெண்கலத்தால் ஆயது; பன்னிரண்டு அடி உயரம் உடையது. சென்னை நகரத்தில் அமைந்த அழகு மிக்க சிலைகளுள் குறிப்பிடத் தக்க சிறந்த திருஉருவச் சிலையாக, இது காட்சி அளிக்கிறது. இவ் உருவச் சிலைத் திறப்பு விழா, *16-11-1964*ல், டாக்டர் சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது. அண்ணாமலை வள்ளலின் இவ் உருவச் சிலையினை, மைசூர் மாநில மன்னரும், அப்போது தமிழக ஆளுநராக இருந்தவரும் ஆகிய மேதகு சயசாமராச உடையார் பகதூர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், அண்ணாமலை வள்ளலின் திருஉருவச் சிலையினைத்திறந்து வைத்தார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

தமிழ் இசை இயக்கக் காலத்திலும், தமிழ் இசைச் சங்கம் தொடங்கப் பெற்ற ஐந்து ஆண்டுகள் வரையும் அவ் விழாக்களுக்கு வந்த அனைவரையும் ஆர்வமுடன் வரவேற்ற அண்ணாமலை அரசர் அவர்களின் பூதவுடல், இன்று நம்மிடையே இல்லையெனினும் அவர்களது புகழுடம்பின் வடிவாக, ராஜா அண்ணாமலை மன்றம் திகழ்கின்றது. இம் மன்றத்திற்கு வரும் அனைவரையும் எப்பொழுதும் வரவேற்பதுபோல், அவர்களின் திருஉருவச் சிலை, இம் மன்றத்தின்முன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அண்ணாமலை அரசர் அவர்களின் புகழ் வாழ்க.

### தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழா

மேற் கூறியவாறு, பல் வேறு வகைகளில் விரைந்து தமிழ் இசைப் பணியாற்றி, இருபத்தைந்து ஆண்டுகள் வளர்ந்த இச் சங்கம், *21-12-1967*ல் தனது வெள்ளி விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது. இவ் விழா, தமிழக வரலாற்றில் மிக உயர்வாகக் குறிககத் தக்க ஒரு நிகழ்ச்சியாகும். அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. பாரத ரத்னு சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், இவ் விழாவினைத் தொடங்கிவைத்தார்கள். இவ் இரு பெருந் தலைவர்களும் இத் தமிழ் இசைச் சங்கத்தின் தொடக்க விழாவில் பேருரை நிகழ்த்தியவர்கள். இவ் இருவரும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், இச் சங்கத்தின் வெள்ளி விழாவினையும் நடத்திவைக்கும் பெறற்கரிய பேற்றினை, இச் சங்கம் பெற்றது. கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வெள்ளி விழாச் சிறப்பு மலரினை வெளியிட்டார்கள். இவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்த காலத்தில்தான், தமிழ் இசை இயக்கம், அண்ணாமலை அரசரால் தோற்றுவிக்கப் பெற்றது. அக் காலத்திலிருந்தே தமிழ் இசை வளர்ச்சியில் அரும் பங்கு கொண்ட இவர்கள், விழாச் சிறப்பு மலரினை வெளியிட்டது, மிகப் பொருத்தமாக அமைந்தது.

இவ்வாறு தனிப் பெருஞ் சிறப்புடன் வெள்ளி விழாக் கொண்டு வீறு பெற்றுள்ள இச் சங்கம், தனது பண் ஆராய்ச்சிப் பெரும் பணிக்கு வெள்ளி விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில், பண் ஆராய்ச்சிக்கு இச் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆற்றி வருகின்ற உயர் பணிகளை நோக்குவோம்.

### தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு
### பண் ஆராய்ச்சிக் கூட்டம்

தமிழில் இசை அரங்குகளை நடத்துதல், தமிழ் இசைப் பாடல்களை மாணவர்களுக்குக்

கற்பித்தல் முதலிய பணிகள் மட்டுமன்றித் தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சிகளை நடத்திப் பல அரிய உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதும் தமிழ் இசைச் சங்கத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். ஆதலால், தமிழ்ப் பண் இசை ஆராய்ச்சிப் பணியினைத் தமிழ் இசைச் சங்கம், 1949 ஆம் ஆண்டில் தொடங்கியது. இப் பணியினை இனிது நடத்துவதற்காகத் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு ஒன்று, தமிழ் இசைச் சங்கத்தினால், அமைக்கப் பெற்றது. இக் குழுவில், பின் வரும் பெருமக்கள் இடம் பெற்றிருந்தனர்.

1. டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் தலைவர்
2. திரு. மு. அ. சிதம்பரம் (தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்)
3. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார்
4. பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை
5. கல்கி திரு. ரா. கிருட்டிணமூர்த்தி
6. திரு. ம. ப. பெரியசாமித் தூரன்
7. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்
8. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி
9. இசைமன்னர் சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
10. திரு. டி. என். சாமிநாத பிள்ளை
11. சங்கீத கலாநிதி கே. இராசமாணிக்கம் பிள்ளை
12. திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை
13. திரு. க. பொ. கிருட்டிணமூர்த்திப் பிள்ளை
14. பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

இக் குழுவினர், டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில், 25-11-49ல் கூடினர். அக் கூட்டத்தில், ''இசைத் தமிழ்ப் பழஞ் செல்வங்களாகிய தேவாரப் பண்கள், தொடக்கத்தில் ஒரே முறையில்தான் பாடப் பெற்றிருக்கும்; பின்பு காலம் செல்லச் செல்ல மக்கள், பல வகைகளில் பாடத் தொடங்கிவிட்டனர். அவ்வாறு பல வகையாகப் பாடும் ஓதுவார்களைக் கூட்டிப் பாடிக் காட்டச் செய்து ஆராய்ந்து பழைய முறையைக் கண்டு, அம் முறையை எங்கும் பரப்ப எல்லா முயற்சியும் செய்தல் வேண்டும்'' என்று முடிவு செய்தனர். இவ்வாறு ஆராயும் ஆராய்ச்சிக் கூட்டம் பற்றிய நடைமுறைகளைக் கவனிக்க,

1. திரு. மு. அ. சிதம்பரம்
2. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்
3. திரு. ம. ப. பெரியசாமித் தூரன்
4. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி
5. திரு. டி. என். சாமிநாத பிள்ளை
6. பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

ஆகியோர் அடங்கிய உட்குழு நியமிக்கப் பெற்றது. இக் குழுவினர் 27-11-1949, 18-12-1949 ஆம் நாட்களில் கூடிப் பல முடிவுகளைச் செய்தனர்.

அம் முடிவுகளின் படி, ஏழாவது தமிழ் இசை விழாவில், 24-12-1949 முதல், 27-12-1949 வரை, நான்கு நாட்களில், முற்பகல் நேரங்களில், சென்னை மெமோரியல் மண்டபத்தில், பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்குத் தமிழகத்தின் பல இடங்களிலும் உள்ள வயது முதிர்ந்த ஓதுவார்கள், இயற்றமிழ்ப் புலவர்கள், இசைத்தமிழ்ப் புலவர்கள், ஆகியோர் பலர் வந்து, ஆராய்ச்சியில் பங்கு கொண்டனர். மேலும், தமிழ்ப் பெருமக்களும், தமிழன்பர்களும் ஆர்வத்துடன் திரளாக இக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். முதலில், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். அடுத்துத் தமிழ் இசை விழாவின் வரவேற்புக் குழுத் தலைவர், திரு. எஸ். இராமசாமி நாயடு அவர்கள், கூட்டத்திற்கு வந்திருந்த அன்பர்களுக்கு நல்வரவு கூறினார்கள். டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள், இக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அவர்கள், தம் தொடக்கவுரையில்,

''தமிழ் இசை இயக்கம் தோன்றியதிலிருந்து இனிய தமிழிலேயே இசை அரங்குகள் அமைத்துத் தமிழர்களின் உள்ளத்தை நாம் கவர்ந்திருக்கிறோம். இந்த இசை இயக்கத்தின் உருவான நல்ல முயற்சியை இன்று நாம் கையாளப் போகிறோம். முதலில், எதைக் குறித்து ஆராயலாம் என்று கருதினோம். இசையின் உயிர்நாடியான பண்களைப் பற்றி ஆராய்வது என்ற முடிவிற்கு வந்தோம். அதிலும் தேவாரப் பண்களை முதலில் ஆராய்ந்து திட்டப்படுத்துவது அவசியம் என்று கண்டோம். அதன்படியே, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் தேவாரப் பண் இசைக்கும் பாடகர்கள் பலரை இங்கு வரவழைத்துள்ளோம். தேவாரம், உயர்ந்த இசை நயமும் நுணுக்கமும் வாய்ந்தது. பண்களைப் பகற்பண், இராப்பண், பொதுப் பண், என மூன்றாகப் பிரித்துள்ளார்கள்.

இவற்றின் தன்மையையும், அமைப்பு முறையையும் நாம் ஆராய வேண்டியது அவசியம். இந்த ஆராய்ச்சியின் பயனுகத் தமிழர்களுக்குத் தேவார இசையில் ஒரு புதிய ஊக்கம் ஏற்படும் என்று நம்புகிறேன். இக் கூட்டத்திற் கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவரும் தத்தம் கருத்துக்களைத் தெளிவாகத் தாராளமாகச் சொல்லலாம். எல்லோரும் நல்ல முறையில் ஆராய்ந்து முடிவு காண வேண்டும். தமிழ் இசை வளர்ச்சிக்கு இக் கூட்டம், மிகுந்த பயனைத் தரும் என்ற மகிழ்ச்சியோடு ஆராய்ச்சியைத் தொடங்கி வைக்கிறேன்'' என்று கூறினர்கள்.

பின்னர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையில், ஆராய்ச்சிக் கூட்டம் தொடங்கியது. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள், 'பண் ராக ஆராய்ச்சி' பற்றியும், திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள், 'பண் வரலாறு' பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். இச் சொற்பொழிவுகள் இரண்டும் சேர்த்து, நூல் வடிவில் அச்சிடப் பட்டு, எல்லார்க்கும் வழங்கப் பெற்றன.

இரண்டாம் நாள், மூன்றும் நாள், நான்காம் நாள் கூட்டங்களுக்கு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமை தாங்கினர்கள். டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள், நான்கு நாட்களிலும் இக் கூட்டத்திற்கு வந்திருந்து, அவ்வப்போது தம் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறியது, ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாவும், ஊக்கம் அளிப்பதாகவும் இருந்தது.

மேற் குறிப்பிட்டவாறு, பண் ஆராய்ச்சியின் முதலாம் ஆண்டுக் கூட்டம், 1949ஆம் ஆண்டிலும், இரண்டாம் ஆண்டுக் கூட்டம் 1950 ஆம் ஆண்டிலும் சென்னை மெமோரியல் மண்டபத்திலும், மூன்றும் ஆண்டுக் கூட்டம், 1951 ஆம் அண்டில், எழும்பூர் மியூசியம் தியேட்டரிலும் நடைபெற்றன. 1952ஆம் ஆண்டில், பண் ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெறவில்லை. 1953 ஆம் ஆண்டில், நான்காம் ஆண்டுக் கூட்டம் நிகழ்ந்தது. இதுமுதல் தொடர்ந்து இக் கூட்டங்கள், தமிழ் இசைச் சங்கத்திற்கு உரியதான ராஜா அண்ணுமலை மன்றத்தில், ஆண்டுதோறும் நான்கு நாட்களில், முற்பகல் நேரங்களில் நடைபெற்று வருகின்றன. இதுவரை இருபத்து நான்கு ஆராய்ச்சிக் கூட்டங்கள் நிகழ்ந்துள்ளன. இக் கூட்டங்கள், பழைய பண் இசையாகிய தமிழ் இசை ஆராய்ச்சி பற்றிய தலைசிறந்த கூட்டங்களாகும்.

இக் கூட்டங்களில், நாட்டிற் புகழ்பெற்ற இயற்புலவர்கள், இசைப் புலவர்கள், இசை ஆராய்ச்சியாளர்கள், தேவாரம் பாடும் ஓதுவார்கள் முதலிய அறிஞர்கள் பலர், தமிழ் நாட்டின் பல இடங்களிலிருந்து ஆண்டு தோறும் வந்து கலந்துகொள்கின்றனர். இவர்களில், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர், இசைப்பேரறிஞர்களாகிய பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, பேராசிரியர் எம். எம். தண்டபாணி தேசிகர், திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை ஆகியவர்கள் இவ் ஆராய்ச்சி தொடங்கப் பெற்ற காலம் முதல் நடைபெற்றுவரும் எல்லாக் கூட்டங்களிலும் தவருமல் பங்குகொண்டு அரும்பணி ஆற்றியமை, பெரு நன்றியுடன் குறிப்பிடுதற்குரியது. இசைப் பேரறிஞர் ம. ப. பெரியசாமித் தூரன், ராவ் சாகிப் கே. கோதண்டபாணிப் பிள்ளை, வித்துவான் க. வெள்ளைவாரணன், திரு. வி. எஸ். கோமதி சங்கரையர், திரு. டி. பி. மாணிக்கவாசகம் முதலியவர்கள், தொடக்கக் காலத்திலிருந்து ஆர்வத்துடன் இப் பணிக்கு ஒத்துழைப்பு நல்கி வருவது, சிறப்பாகக் குறிப்பிடுதற்குரியது.

இவ் ஆராய்ச்சியினுல் பண்கள், கட்டளைகள், முதலியவை பற்றிய அரிய நுண்ணிய பல செய்திகள் புலப்பட்டுள்ளன. ஆயினும், இசையிலும், இயற்றமிழிலும் வல்லார் பலர் கூடி இருபத்து நான்கு ஆண்டுகளாக ஆராய்ந்தும் இன்னும் சில பண்களின் இசை வேறுபாடுகளை அறிய இயலவில்லை. 29-12-1955ல், பண் ஆராய்ச்சியின் ஆருவது கூட்டத்தினைத் தொடங்கி வைத்த பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனர் அவர்கள் கூறிய பின்வரும் கருத்துக்கள், இவ் ஆராய்ச்சியின் நிலையினை விளக்குவனவாகும்:

''தமிழ்ப் பண்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஒரு தனிக் கலையாகப் போற்றி வகுக்கப்பட்டு விளங்கின என்பதை உணரும் போது, நமக்குள் ஒரு பெருமித உணர்ச்சி ஏற்படுகிறது. ஏன் எனில், இன்று செல்வாக்குப் பெற்றுள்ள மொழிகள் பல, அன்று தோன்றவேயில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த இசைக்கலை என்று வேறு நாட்டார், நம் போல் பெருமையுடன் சொல்லக் கூடியதான இசைக்கலை இன்று இல்லை. இந்தியாவிலேயே பழமையானது என்று போற்றப்படுவது, தென்னுட்டுக் கருநாடக இசை தவிர, வேறு எதுவும் இல்லை. அந்தக் கருநாடக இசையின் வரலாற்றை உள்ளவாறு நடுநிலையாக நின்று ஆராய்ந்தால், அது, தமிழ் நாட்டில் தோன்றிய இசையே என்பதும், தமிழ்ப் பண்களிலிருந்தே வளர்ந்து புதிய புதிய பெயர்களுடன் இராகங்கள் என்று அமைந்தது என்பதும் விளங்கும். ஆனுல், தமிழிசை பற்றிய பழைய இலக்கண நூல்களை—இசை நுணுக்கம் முதலான நூல்களை இழந்து விட்டோமே என்ற ஒன்று மட்டும் தீராக் குறையாக



சென்னை, செயின்ட்மேரி மண்டபத்தில், டி. கே. சி. தலைமையில் நடைபெற்ற தமிழ் இசை முதல் மாநாட்டில், டாக்டர் சர் ஆர். கே. எஸ்., பம்மல் சம்பந்த முதலியார், அரசர் அண்ணாமலை ஆகியோருடன் வரவேற்புக் குழுவினர். 23—12—1943

தமிழ் இசை பதினொன்றும் விழாவினைத் தொடங்கி வைத்த அமைச்சர் மாண்பு மிகு சி. சுப்பிரமணியம் அவர்களுடன், விழாத் தலைவர் திரு. பி. எஸ். குமார சாமி ராஜா அவர்களும், சங்கத் தலைவர் திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும், துணைத் தலைவர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் 25-12-1953.



தமிழ் இசைச் சங்கத்தின் புதிய கட்டடம் ''ராஜா அண்ணுமலை மன்றம்''
புதுமனை புகு விழாவில் டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார்
அவர்களின் வருகை 31—10—1952

ராஜா அண்ணுமலை மன்றம் புதுமனை புகு விழாவில், டாக்டர் இலக்குமணசாமி
முதலியார் அவர்களை டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள்
வரவேற்றல் 31—10—1952

ராஜா அண்ணாமலை மன்றம் புதுமனை புகு விழாவில், செட்டிநாட்டு அரசி மெய்யம்மை ஆச்சி அவர்களின் வருகை 31—10—1952



தமிழ் இசைக் கல்லூரி நூல் நிலையத்தை இசைப்பேரறிஞர், அரியக்குடி இராமாநுச ஐயங்கார் அவர்கள் திறந்து வைத்தபோது, டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், திருமதி சரஸ்வதிபாய் அவர்களும் வருகை தந்தார்கள்



தமிழ் இசை பன்னிரண்டாம் விழாவினைத் தொடங்கி வைத்து, முதலமைச்சர் மாண்புமிகு கே. காமராஜ் அவர்கள் உரையாற்றுதல் 24—12—1954.



தமிழ் இசை இருபதாம் விழாவில், சங்கத் தலைவர் திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல். 1962.



தமிழ் இசை இருபத்தொன்றும் விழாவினைத் தொடங்கி வைத்த அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களையும், விழாத் தலைவர் முசிறி. திரு. சுப்பிரமணிய ஐயர் அவர்களையும் சங்கத் தலைவர் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, கௌரவச் செயலாளர் திரு. மு. அ. சிதம்பரம், குமாரராஜா முத்தைய செட்டியார், திரு. எம். ஏ. எம். இராமசாமி முதலியோர் வரவேற்றல்.

*1963*



தமிழ் இசை இருபத்தோன்றும் விழாவில், இந்திய அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள், விழாத் தலைவர் முசிறி திரு. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கு இசைப்பேரறிஞர் என்னும் பட்டத்தினை வழங்குதல் 21—12—1963.

இசைக்கருவி நிலேயத்தைத் திறந்து வைத்த அமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்களுடன், திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள் 1—1—1956

ராஜா அண்ணுமலே மன்றத்தில், இசைக்கருவி நிலேயத்தைப் பார்வையிட்டுப் பார்வையாளர் புத்தகத்தில் கையொப்பமிட, டாக்டர் இராஜேந்திர பிரசாத் (குடியரசுத் தலேவர்) அவர்களுக்குச் சங்கச் செயலாளர், திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள் உதவுகிருர்கள். 13—8—1965

இருந்து வருகிறது. இந்தக் குறையால்தான், ஐந்து ஆண்டுகளாக நாம் எவ்வளவோ முயன்றும் சில உண்மைகளைக் காண முடியாமல் இடர்ப்படுகின்றோம். காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், என்னும் நான்கும் தனித்தனிப் பண்களாகத் தேவாரத்தில் குறிக்கப்பட்டிருக்க, நான்கின் இசையிலும் வேறுபாடு புலப்படாமல் இன்று திகைக்கிறோம். தக்க ராகம், தக்கேசி என்பவற்றினிடையிலும் போதிய தெளிவு பிறக்கவில்லை. ஆதார நூல்களை இழந்துவிட்ட குறையே, இவற்றிற்குக் காரணம் எனலாம். ஆயினும், இந்த அளவில் நின்றேனும் ஆராய்ச்சி செய்ய உறுதுணையாக இருப்பவை, ஓதுவார் பரம்பரை அளிக்கும் சான்றுகளே ஆகும். அந்தச் சான்றுகளும் இல்லையாயின், இயற்றமிழின் சான்றுகள் போதாமல், பண் ஆராய்ச்சி, இருளில் தேடுதலாக முடிந்திருக்கும்.

சீர்திருத்தத்திற்குச் சிறிதும் இடம் தராமல் பழமையை விடாமல் போற்றுதல் பற்றி ஓதுவார்கள்மேல் குறை கூறுதல் உண்டு. ஆனால், தமிழ்ப் பண்களைப் பற்றி இன்று ஏதேனும் அறிய முடிகிறது என்றால், அவர்களிடம் உள்ள அந்தப் பழமைதான் காரணம் எனலாம். அதற்காக, இன்று அவர்களுக்கு நன்றி கூற வேண்டியுள்ளது. தேவாரப் பண்கள் தரும் இன்பம், இணையற்றதாக உள்ளது. பண் ஆராய்ச்சிக்குப் பெருந் துணையாய் இருந்து வருபவர், இந்த மாநாட்டுத் தலைவர், திருவாளர் பி. சாம்பமூர்த்தி ஆவார்கள். அவர்தம் நுணுக்கமும் ஆழமும் வாய்ந்த இசை அறிவு, பண் ஆராய்ச்சிக்குப் பயன்படுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். கருநாடக சங்கீதத்தின் வரலாற்றிற்கு அடிப்படையானவை தமிழ்ப் பண்களே என்ற உண்மையை இசையுலகம் உணர வேண்டும் என்பது என் ஆசை. தேவார ஓதுவார்கள், கருநாடக சங்கீத வித்துவான்கள், இயற்றமிழ் அறிஞர்கள் ஆகிய முத்திறத்தாரையும் ஒருங்கே காண்பது, அரியதொரு காட்சியாகும். அத்தகைய சிறப்பு, இந்தப் பண் ஆராய்ச்சி மாநாட்டுக்கும், அரசர் அண்ணாமலை மன்றத்திற்குமே உண்டு. இந்த அரிய ஆக்கப் பணிக்குக் காரணமாக இருந்து, ஆர்வத்துடன் தமிழிசைத் தொண்டு வளர்த்த இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களையும், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களையும் நன்றியுணர்வுடன் நினைந்து போற்றுதல் கடமையாகும். இன்று, அவர்களின் நெறியில் நின்று, அவர்களின் உள்ளம் கவர்ந்த நற்பணியைத் தொடர்ந்து ஆற்றி மகிழும் திருவினர், இராசா சர் முத்தைய செட்டியார் அவர்களுக்கும், கோவைத் தலைவர் திருவாளர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களுக்கும், தமிழிசைச் சங்கத்துப் பொறுப்பினர்களுக்கும் இசை உலகம் மிகப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது. இத்தகைய பெரு மக்களின் ஊக்கமே துணையாக, இந்தப் பண் ஆராய்ச்சி சிறப்புற்று விளங்குவதாக''.

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் தொடர்பாக ஓதுவார்கள் இருவர் இருவராகச் சேர்ந்து நிகழ்த்தும் தேவாரக் கூட்டு இசையரங்கும், ஒருவர் நிகழ்த்தும் தேவார இசை அரங்கும் பெரும்பாலும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்ற பழைய பண் முறையில், தேவாரப் பாடல்கள், இவ் இசையரங்குகளில் பாடப் படுகின்றன. இத்தகைய தேவார இசை அரங்குகளுடன், திருப்புகழ் இசை அரங்கு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்த இசை அரங்கு, அபிராமி அந்தாதி இசை அரங்கு, திருவருட்பா இசை அரங்கு முதலியனவும் இவ் ஆராய்ச்சிக் கூட்டங்களின் தொடர்பாக நிகழ்ந்து வருகின்றன.

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில், தேவாரப் பண்களுடன், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண்கள், திருவிசைப்பாப் பண்கள், திருப்புகழ்த் தாள நுட்ப வேறுபாடுகள், சங்க நூல்களிலும், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் காணப் பெறும் இசை பற்றிய குறிப்புக்கள், பிற்கால இசைத் தமிழ்ப் பாடல்கள் முதலியனவும், இசைத் தமிழின் தொடர்பான வேறு பல செய்திகளும் ஆராயப் பெற்று வருகின்றன.

இசையரசு, எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் தம் கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் தொகுத்து, அவற்றை டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களுக்கு உரிமையாக்கித் தமிழ் இசைக் கட்டுரைகள் என்னும் பெயருடைய ஒரு நூலாக வெளியிட்டார்கள். இந் நூலினை அவர்கள், அரசர் அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக வழங்கிய நிகழ்ச்சி, பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பத்தாவது ஆண்டில், 28-12-1959 ஆம் நாளிலும், இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களால் இசை அமைக்கப் பெற்றுத் தமிழ் இசைச் சங்கத்தினால் உருவாக்கப் பெற்ற தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்கள் என்னும் நூலினை, டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்கள் வெளியிட்ட நிகழ்ச்சி, பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினேழாவது ஆண்டில் 23-12-1966 ஆம் நாளிலும் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளில், இசையரசு தேசிகர் அவர்களை அரசர் அவர்கள் பாராட்டி, அவர்களுக்கு ஊக்கம் ஊட்டினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்கு டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், பேராதரவு அளித்து வருகின்றார்கள். இக் கூட்டங்களில், இவர்கள் பங்கு கொள்ளும் முறை, கூட்டங்களின் நிகழ்ச்சி முழுமைக்கும் உயிராக விளங்கும். இக் கூட்டங்களின் நிறைவு நாளில், நன்றி சொல்லும் பணியினைப் பெரும்பாலும் இவர்கள் மேற்கொள்வார்கள். மேடைப் பேச்சுக்களைப் பொருட் செறிவுடன் அளந்து அழகாகப் பேசுவதில் சிறந்த சிலருள் இவர்கள், ஒருவராவார்கள். இவர்கள், தம் பேச்சுக்களில் பெரும்பான்மையான பேச்சுக்களை, இருபது நிமிட நேரத்திற்குள் முடித்து விடுவது வழக்கம். இதற்கு விலக்காகப் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் இவர்கள் கூறும் நன்றியுரை, ஒன்றரை மணி நேரம் வரை நிகழும்.

இந் நன்றியுரையில், தமிழ் இசை வளர்ச்சி பற்றிய இன்றியமையாத பல செய்திகளையும், தமிழ் இசை வளர்ச்சிக்கும், பண் ஆராய்ச்சிக்கும் இனிச் செய்ய வேண்டிய பணிகளையும் பற்றி விளக்கமாகவும், திட்டமாகவும் சொல்லிக் கூட்டத்தில் கலந்து கொண்ட எல்லாருக்கும் நன்றி கூறுவார்கள். இந்த ஆராய்ச்சிக் கூட்டங்களை நடத்துவதற்குத் தமிழ் இசைச் சங்கம், ஆண்டு தோறும் பெரும் பொருள் செலவிட்டு வருகின்றது. இதுவரை செலவிட்டுள்ள ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேலாகும். இக் கூட்டங்களில் பழைய பண் இசை பற்றி நல்ல ஆராய்ச்சி முடிவுகள் செய்யப் பெற்று, அம் முடிவுகளால், தமிழ் இசை உலகிற்கு நிலையான சிறந்த பயன்கள் விளைதல் வேண்டும் என்பது, அரசர் அவர்களின் விருப்பம் ஆகும். இவர்களின் பேருரை, இவர்கள் மற்றவர்களுக்கு நன்றி கூறுகின்ற உரையாக இருப்பினும், அவ்வுரை முடிந்தவுடன், பயனும் பணியும் பண்பும் நிறைந்த அந்த உரையினை நிகழ்த்தியதற்காக, வந்திருந்த எல்லாரும், இவர்களுக்கு நன்றி கூறி, இவர்களை வாழ்த்திச் செல்வார்கள்.

## பண் ஆராய்ச்சிக் கூட்ட அறிக்கைகள்

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கைகள், ஆண்டுதோறும் தமிழ் இசைச் சங்கத்தினுல் வெளியிடப் பெற்று எல்லாருக்கும் அளிக்கப் பெறுகின்றன. இதுவரை இருபத்து நான்கு அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இவ் ஆராய்ச்சிக் கூட்ட நிகழ்ச்சிகள் முழுதும் ஒலிப்பதிவு செய்யப் பெற்று, அதிலிருந்து இவ் அறிக்கைகள், செம்மையாகவும், முழுமையாகவும் உருவாதலால், இவ் அறிக்கைகளில், இக் கூட்ட நிகழ்ச்சிகள் முழுதும் குறைவின்றி அமைந்துள்ளன. இவ் அறிக்கைகளில், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் வரவேற்புரைகள், தொடக்கவுரைகள், தலைமையுரைகள, சிறப்புரைகள், நன்றியுரைகள், இக் கூட்டங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பற்றிய உரைகள், சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்கள், இசை அமைக்கப் பெற்ற தேவாரப் பாடல்கள் முதலிய எல்லாம் அடங்கியுள்ளன. இவ் அறிக்கைகளில், அறிஞர்கள் கூறிய கருத்துக்கள், எதிர்க் கருத்துக்கள், எடுத்துக் காட்டாக ஓதுவார்களால் பாடப் பெற்ற பாடல்கள், முடிவுகள் முதலிய எல்லாம் விடாமல் இடம் பெற்றிருத்தலால், இசை ஆராய்ச்சியின் சிறந்ததோர் உறைவிடமாக, இவ் அறிக்கை நூல்கள், பெரிய உருவில் விளங்குகின்றன. இதுவரை வெளியாகியுள்ள அறிக்கைகளில், அச்சில் பெரிய அளவில், சற்று ஏறத்தாழ இரண்டாயிரம் பக்கங்கள் உள்ளன. இதுவரை, நிகழ்ந்துள்ள பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை, சிறப்புரை, நன்றியுரை, ஆகியவற்றை நிகழ்த்திய சான்றோர்களின் பெயர்ப்பட்டியல், இக் கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இவர்களின் பேருரைகள், பொன்போற் போற்றத் தக்க பெருமதிப்புடையனவாகும்.

இவ் அறிக்கைகளை வெளியிடும் பதிப்பாசிரியராகத் தொடக்கம் முதல் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் செயலாற்றி வருகிறார். இப் பணியில், முதல் நான்கு ஆண்டுகளில் கவிஞர், புத்தனேரி திரு. ரா. சுப்பிரமணியன் அவர்களும், ஐந்தாம் ஆண்டு முதல் எட்டாம் ஆண்டு முடிய ஆலங்குடி திரு. ஆர். முத்தையன் அவர்களும், ஒன்பதாம் ஆண்டு முதல் இன்றுவரை டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களும் பேரன்புடன் உதவி செய்து வருகின்றனர். இவர்களுக்குத் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன். மேலும் தமிழ் இசைச் சங்க விழாக்களில் நிகழும் பேருரைகளை உடனுடன் வெளியிடுதற்கு ஏற்ப எழுதித் தருகின்ற வகையிலும், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தொடர்ந்து செய்து வரும் உதவி பெரிது.

இவ்வாறு, விரிந்து சிறந்த அறிக்கைகள் இருபத்து நான்கிலும் உள்ள ஆராய்ச்சிக் கருத்துக்கள் அனைத்தும் இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களால் தொகுக்கப் பெற்றுப் பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும் என்னும் ஒரு தனிப் பெரு நூலாக இச் சங்கத்தினுல் அச்சிடப் பெற்றுள்ளது. இந் நூலினைத் திரு. தூரன் அவர்களே, பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவில் வெளியிட உடன்பட்டிருப்பது, மகிழ்ச்சிக்குரியது. முத்தமிழ்ப் பெரும் புலவர்களால் நேர்மை நெறியில் நிகழ்த்தப் பெற்ற

ஆராய்ச்சி வளம் செறிந்த இந்நூல், வழிவழி வரும் இசை ஆராய்ச்சயாளர்களுக்குப் பயன் நிறைந்த மேற்கோளாய்ப் பெற்றகரிய பெரு நிதியாய் உண்மை ஒளிதரும் என்பதில் ஐயமில்லை.

## தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய டாக்டர். ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களும், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும், இக் குழுவின் உறுப்பினர்களில் சிலரும் நம்மை விட்டுப் பிரிந்த பின், சங்கத் தலைவர், திவான்பகதூர், தி.மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில், தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு, இப்போது, கீழ்க் கண்டவாறு அமைந்துள்ளது.

1. திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை (தலைவர்)
2. டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் (தமிழ் இசைச் சங்கத்தின் துணைத் தலைவர்)
3. திரு. மு. அ. சிதம்பரம் (தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்)
4. இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன்
5. திருமதி. சௌந்தரம் கைலாசம்
6. பேராசிரியர், இசைப்பேரறிஞர் சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
7. இசைப்பேரறிஞர், முசிறி. திரு. சுப்பிரமணிய ஐயர்
8. திரு. மீ. ப. சோமசுந்தரம்
9. இசைப்பேரறிஞர், பாலக்காடு திரு. டி. எஸ். மணி ஐயர்
10. இசைப்பேரறிஞர், வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை
11. பத்மபூஷண் எம். எல். வசந்தகுமாரி
12. பேராசிரியர் டாக்டர் சங்கீத பூஷணம் எஸ். இராமநாதன்
13. திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை
14. பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

இக் குழுவில் இருந்து, ஆராய்ச்சிகளுக்கு உதவி வரும் அறிஞர்களுக்குச் சங்கத்தின் நன்றி உரியதாகும்.

## இசைப்பேரறிஞர்

பண் ஆராய்ச்சிக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்பவர்கள், இசையுலகிற் புகழ் பெற்ற அறிஞர்களேயாவர். இத்தகைய தலைவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கம் உண்டாக்குமாறும், அவர்தம், இசைத் தொண்டின் பெருமையை எல்லாரும் அறிந்து போற்றுமாறும் அவர்களுக்கு இசைப்பேரறிஞர் என்னும் பட்டத்தினை வழங்கிப் பாராட்டத் தமிழ் இசைச் சங்கம், முடிவு செய்தது. அவ்வாறே, தமிழ் இசைக்காகத் தொண்டாற்றிய சிறந்த இசை அறிஞர்களுக்குத் தமிழ் இசைச் சங்கத்தின் ஒவ்வொரு ஆண்டு விழாவிலும் இசைப்பேரறிஞர் என்னும் பட்டம் வழங்கப் பெற்று வருகின்றது. இச் சிறப்பு நிகழ்ச்சி, முதன்முதலாகத் தமிழ் இசைச் சங்கத்தின் பதினைந்தாம்ஆண்டு விழாவில்(21-12-1957ல்) நடைபெற்றது. அப்போது, பேராசிரியர். எம். எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, கும்பகோணம் திரு. கே. இராசமாணிக்கம் பிள்ளை ஆகிய மூவருக்கும் இசைப்பேரறிஞர் என்னும் பட்டம் வழங்கப் பெற்றது. இப் பட்டம் பெறுபவர்களுக்கு இசைப்பேரறிஞர் என்னும் பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம், நன்மதிப்பு மலர், தமிழ் இசைச் சங்கத்தின் பெயர் பொறிக்கப் பெற்ற வெள்ளித் தட்டு, ஆகியவற்றைச் சங்கம் வழங்கி வருகின்றது. இப் பட்டம், இசை உலகில், பெரிதும் மதிக்கப்படுகின்றது. இதுவரை இப் பட்டத்தினைப் பெற்றுள்ள பதினெண்மரின் பெயர் விவரங்கள், இக் கட்டுரையின் இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவ் ஆண்டில் பத்மஸ்ரீ திருவீழிமிழலை, திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ள அவர்களுக்கு இப் பட்டத்தினை வழங்கச் சங்கம் முடிவு செய்துள்ளது.

## பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் சிறப்பு நிகழ்ச்சிகள்

கி. பி. 1798 முதல் 1832 வரை தஞ்சையை ஆண்ட இரண்டாவது சரபோஜி மன்னர், தஞ்சைப் பெருங்கோயில் விழாவில் பலகாலம் விட்டுப் போயிருந்த நாடகம் ஆடும் வழக்கத்தினைத் தம் காலத்தில் மீண்டும் தொடங்கி வைத்தார். அந் நாள்முதல், ஆண்டுதோறும் அக்கோயில் பெரு விழாவில், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம் நடைபெற்று வந்தது. பின்பு உண்டாகிய புதிய அரசியல் சட்டத்தின் காரணமாகச் சில ஆண்டுகளுக்கு முன்புதான் அது, கோயிலில் நிறுத்தப்பட்டது. தமிழர்களின் தனிப் பெருஞ் செல்வமாகிய, கண்டார் கண்களையும் கருத்தையும் கவர வல்ல இந் நாட்டிய நாடகக் கலை மறைந்து விடாதவாறு, அரும்பாடுபட்டுப் பெரும் பொருட் செலவில், எட்டாவது ஆண்டு விழாவில் (27-12-1950ல்) இதனை நடத்திக் காட்டிய பெருமை, தமிழ் இசைச் சங்கத்தைச் சேர்ந்தது. தஞ்சை திரு. க. பொ. கிருஷ்ண

மூர்த்திப் பிள்ளை அவர்கள், பெரிதும் முயன்று மகளிர் சிலரைப் பயிற்றுவித்து இந் நிகழ்ச்சியினைச் சிறப்பாக நடத்தினார்கள்.

இச் சிறப்பு நிகழ்ச்சியன்றிப் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் நான்காவது ஆண்டு முதல், சிறப்பு நிகழ்ச்சிகள் பல, ஆண்டுதோறும் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் நான்காவது ஆண்டில் (28-12-1953ல்) பந்தணை நல்லூர் நாட்டியக் கலாநிதி திரு. கு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், இப்போது வழக்கிழந்த நவசந்தி நடனங்களை இரு சிறுமிகளுக்குக் கற்பித்து நடித்துக் காட்டச் செய்தார்கள். இந் நிகழ்ச்சிக்குப் பின், இதனைச் சென்னை அனைத்து இந்திய வானொலி நிலையத்தினர், சென்னை வானொலியில்இருமுறை (16-3-1954, 19-5-1954ல்) ஒலி பரப்பினர்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஐந்தாவது ஆண்டில் 26-12-1954 ஆம் நாளிலும், பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஆறாவது ஆண்டில் 29-12-1955 ஆம் நாளிலும் பந்தணை நல்லூர் திரு. எம். முத்தையாபிள்ளை, தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை ஆகியோரின் மாணவியரால், நவசந்தி நடனங்களும், தேவாரப் பாடல்கள் சிலவற்றிற்கு அபிநயம் செய்து காட்டுதலும் நிகழ்த்தப் பெற்றன.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஏழாவது ஆண்டில் 25-12-1956ல் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய பல வகை இசைக் கருவிகளின் கூட்டு இசை நிகழ்ச்சியும், 28-12-1956ல் திருவீழிமிழலை திரு. எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவி செல்வி கமலாம்பாள், சிம்ம நந்தன தாளத்தில் பாடிக்காட்டுதலும், தஞ்சை திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள், நவசந்திக் கவுத்துவங்களைப் பாடிக் காட்டுதலும் நிகழ்ந்தன.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் எட்டாவது ஆண்டில் (24-12-1957ல்), திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பஞ்ச தலங்களில் இப்போதும் நடைபெற்று வரும் தாண்டவ தீபாராதனை, திருக்குற்றாலநாதர் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற குருக்கள் முருகவேளால், முறைபெ நடத்திக் காட்டப் பெற்றது. இத் தீபாராதனை, நாக சுரக்காரர் வாசிக்கும் இசைப்போக்கிற்கு ஏற்ப அமைந்திருந்தது. 25-12-1957ல், தென்காசி காசி விசுவநாதர் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற திரு. டி.என். ஆறுமுக ஓதுவாரால், சாரங்கி என்னும் பழைய இசைக் கருவி, வாசித்துக் காட்டப் பெற்றது. இது, விரல் நுனி கம்பிகளில் படாமல், விரல் நகங்கள் கம்பியில் உராய்வதன் மூலம் வாசிக்கப்படும் இசைக் கருவியாகும். இதனை, நிறுத்தி வைத்துக் கொண்டு அடியில் வில் போட்டும் வாசிக்கலாம். இக் கருவியில், தேவாரப் பண்கள், மிகவும் சிறப்பாக வாசித்துக் காட்டப் பெற்றன. 27-12-1957ல், தஞ்சை மாவட்டத்தில் உள்ள சப்த விடங்கத் தலங்களில் நடைபெறும் பல்லக்கு நடனத்திற்கு உரிய ஜதிகளையும், தீபாராதனைக் காலத்திலும், சோடசோபசாரக் காலத்திலும் வாசிக்கப்படும் ஜதிகளையும் திருநள்ளாற்றுத் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற திரு. இராமச்சந்திரன் பிள்ளை அவர்கள், சுத்த மத்தளத்தில் வாசித்துக் காட்டினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஒன்பதாவது ஆண்டில் (28-12-1958ல்) காந்திக் கிராம இசைக் குழுவினைச் சேர்ந்த திருவாட்டி என். சியாமளா முதலியோரின் முயற்சியினால் விராலிமலைக் குறவஞ்சி என்னும் நாட்டிய நாடகம் நடைபெற்றது. இந் நாட்டிய நாடகத்தில், தஞ்சை பிச்சையா பிள்ளை பரத நாட்டிய வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள், பங்குகொண்டு நடித்தனர். 30-12-1958ல், காந்திக் கிராம இசைக் குழுவினர், திரு. வி. வி. சடகோபன் அவர்கள் தலைமையில், நாட்டுப்புற இசை நிகழ்ச்சி நடத்தினர். 31-12-1958ல் கொழும்பு சைவ மங்கையர் கழகத்தினர், பல வகை இசைக் கருவிகளுடன் கூட்டு இசை நிகழ்த்தினர்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பத்தாவது ஆண்டில் (25-12-1959ல்) வேதாரணியம் திருவாட்டி பட்டம்மாள் அவர்களால் பயிற்றுவிக்கப் பெற்ற மாவெலி நாட்டிய நாடகம், மகளிர் சிலரால் நடித்துக் காட்டப்பெற்றது. 27-12-1959ல், நாட்டியக் கலைக் கொண்டல் குற்றாலம் திரு. எஸ். கணேசம் பிள்ளை அவர்கள், தம் மாணவியர்களைக் கொண்டு, திருக்கோயில்களில் குடமுறை வழிபாடு செய்யும் முறைகளை நடித்துக் காட்டச் செய்தார்கள். பின்பு, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சேர்க்கப்பெற்ற நாட்டுப்புறப் பாடல்கள் சிலவற்றைச் செல்வி என். சியாமளா அவர்கள் பாடிக் காட்டினார்கள். பின்னர், வேதாரணியம் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற மூவர், திருக்கோயிலில் பூசை வேளைகளிலும், இறைவன் திருவுலா எழுந்தருளும் காலங்களிலும் வாசிக்கப்படும் சுத்தமத்தள இசைக் கருவியினைத் தாளம், எக்காளம் ஆகிய கருவிகளுடன் வாசித்துக் காட்டினார்கள். பின்பு, காஞ்சிபுரம் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற இருவர், சூரிய வாத்தியம், சன்னவுடல் ஆகிய பழைய இசைக் கருவிகளை வாசித்துக் காட்டினர்.

28-12-1959ல் திருவான்மியூர் மருந்தீசர் திருக்கோயில் நிகழ்ச்சி முறைப்படி, தியாக ராசர் தலங்களில் நடைபெறும் பல்லக்கு நடனம் நடைபெற்றது. இது, ஒரு வியப் பளிக்கும் நடனம் ஆகும். மிகுந்த பொருட் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நடனத்தைப் பெருந்திரளான மக்கள் கண்டு களித்தனர்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினென் ருவது ஆண்டில் (25-12-1960ல்), சென்னை சரசுவதிகான நிலயத்தின் முதல்வர் திரு வாட்டி கே. லலிதா அவர்களால் பயிற்றுவிக் கப்பெற்ற அழகர் குறவஞ்சி நாட்டிய நாடகம் மகளிர் சிலரால் நடித்துக் காட்டப் பெற்றது. 26-12-1960ல், மதுரை மாவட்டத்துத் தான்றிக்குடியிலிருந்து வரவழைக்கப்பெற்ற ஆண்களும் பெண்களுமாகிய ஆதிவாசிகள் பதினொருவரின் சிங்கார இசை நிகழ்ச்சி, உரிய துணைக் கருவிகளின் இசையுடன் நடை பெற்றது. 27-12-1960ல், திரு. டி. என். மகாலிங்கம் அவர்கள், சங்கு என்னும் இசைக் கருவியில், தமிழ்ப் பாடல்களைத் துணை இசைக் கருவிகளுடன் வாசித்துக் காட்டினார் கள். 28-12-1960ல், சென்னை திரு. வேணு கோபால் ரெட்டியார் அவர்கள், முகவீணை வாசித்துக்காட்டினார்கள். பின்பு, சூலமங் கலம் திரு. இராதாகிருட்டினன் அவர்கள், தேவாரப் பாடல்கள் சிலவற்றிற்கு அபிநயம் செய்து காட்டினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பன்னிரண் டாவது ஆண்டில் (25-12-1961ல்), திருச் செந்தூர் திரு. ஆர். சரவணமுத்துப் பாகவதர் அவர்களால் பயிற்றுவிக்கப்பெற்ற செந்தில் குறவஞ்சி நாட்டிய நாடகம், மகளிர் சில ரால் நடித்துக் காட்டப்பெற்றது. 26-12-1961ல், மைசூர், செல்வி. டி. எஸ். பிரேமாவதி அவர்கள், ஒரே நேரத்தில் இரண்டு கைகளினாலும் வேறு வேறு தாளங் கள் போட்டுக் கொண்டு, வாயினால் கொனிப் பிக்கும் கொன்னக்கோல் நிகழ்ச்சியினை நடத் தினார்கள். பின்னர், இசைப்பேரறிஞர், வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை அவர் களின் மாணவியர், சிலப்பதிகாரத்தில் உள்ள ஆய்ச்சியர் குரவையையும், தமிழ்நாட்டில் உள்ள பழைய நாட்டுப் புறப் பாடல்களையும் கொண்ட கும்மி, பின்னல் கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர். 28-12-1961ல், திருச்செந்தூர், திரு ஆர். சரவணமுத்துப் பாகவதர் அவர்கள், காவடிச் சிந்துப் பாடல்களை, வழக்கத்தில் இல்லாத பழைய வர்ணமெட்டுக்களில் பாடிக் காட்டி னார்கள். பின்பு, உறையூர், திரு. அரங்காச் சாரியார் அவர்கள், தாமே முயன்று செய்த கின்னரி யாழினை வாசித்துக் காட்டி, அதன் அமைப்பினையும் விளக்கிப் பேசினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதின் மூன்றுவது ஆண்டில் (23-12-1962ல்), புதுகம்காட்டை இசை ஆசிரியை திருவாட்டி இலக்குமி அம்மாள அவாகளால் பயிற்றுவிக் கப்பெற்ற கபிலை நாட்டிய நாடகம், மகளிர் சிலரால் நடித்துக் காட்டப் பெற்றது. 24-12-1962ல், அரிச்சந்திர நாடகத் தெருக் கூத்துப் பாடல்களில் சிலவற்றைச் செம்பொனார் கோயில் திருவாட்டி அஞ்சுகம் அம்மையார் அவர்களும், திருவாலி திருவாட்டி சுந்தரக் கண்ணு அம்மையார் அவர்களும் பாடி நடித் துக் காட்டினார்கள். அடுத்து, குடிக்காடு விதூடக நடிகர் திரு. ஏ. கிருட்டிணன் அவர் கள், சிங்கனாகவும், சோழன்பேட்டை, திரு வாட்டி கோ. அம்புசம் அம்மையார் அவர்கள் சிங்கியாகவும், சிங்கன்—சிங்கி உரையாடல் நடத்திக் காட்டினார்கள். பள்ளுப் பாடல்கள் சிலவற்றைத் திருவாட்டி சுந்தரக் கண்ணு அம்மையாரும், திருவாட்டி எஸ். சகதாம் பாள் அம்மையாரும் பாடினர். 25-12-1962ல் ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் இருக்கும் தக்கை என்னும் இசைக் கருவியை, ஸ்ரீரங்கம் திருக்கோயிலிலிருந்து வரவழைக்கப் பெற்ற நாகசுர இசை வாணர், திரு. ஆர். எஸ். குமாரசாமி அவர்கள், வாசித்துக் காட்டினார் கள். பின்னர், திருச்செந்தூர் முருகப் பெருமானைப் பற்றிய, அச்சில் வெளிவராத தமிழ்ப் பாடல்கள் சிலவற்றைத் திருச்செந் தூர், திரு. ஆர். சரவணமுத்துப் பாகவதர் அவர்கள், பாடிக் காட்டினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினான் காவது ஆண்டில் (22-12-1963ல்), திரு வாட்டி எஸ். பத்மா அவர்களால் நிகழ்த்து விக்கப் பெற்ற மீனாட்சி கல்யாணம் நாட்டிய நாடகம், சென்னை நிருத்தோதயக் கலைக் குழுவினரால் நடித்துக் காட்டப் பெற்றது. 24-12-1963ல் நம் நாட்டில் முற்காலங்களில் வழக்கிலிருந்து, இப்போது கைவிடப்பட்டுப் பிற நாடுகளில் வழக்கில் உள்ள இசைக் கரு விகள் சில, விளக்கம் கூறப்பட்டும், வாசித் தும் காட்டப்பட்டன. கச்சபி என்னும் இசைக் கருவியினைப் பேராசிரியர் பி. சாம்ப மூர்த்தி அவர்கள், விளக்கியும் வாசித்தும் காட்டினார்கள். யாழ், சததந்தரி வீணை (நூறு தந்திகள் கட்டப்பெற்ற வீணை), சுர மண்டலி முதலிய இசைக் கருவிகளும் அவர் களால் வாசித்துக் காட்டப்பட்டன. 25-12-1963ல், தாழம்பூ, கரும்பு, சங்கிலி, தாம்புக் கயிறு, பாய் முதலிய பின்னல் வகை களில், பின்னல் கோலாட்டங்களைச் சுரசுவதி கான நிலய நாட்டியக் குழுவினர், நிகழ்த்தி, அவற்றிற்கு உரிய பாட்டுக்களையும் பாடினர். பின்னர், செல்வி சி. சுகுணா அவர்கள், சரபு நந்தன தாளத்திலும், ஸ்கந்த தாளத்திலும் பல்லவிகள் பாடிக் காட்டினார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினைந்தாவது ஆண்டில் (25-12-1964ல்), சீவக சிந்தாமணி நாட்டிய நாடகமும், பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினாறுவது ஆண்டில் (25-12-1965ல்), மணிமேகலை நாட்டிய நாடகமும், சென்னை நிருத்திய பாரதி குழுவினரைக் கொண்டு, அக் குழுவின் இயக்குநர் குமாரி பாரதி அவர்களால், நடித்துக் காட்டச் செய்யப்பெற்றன.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினேழாவது ஆண்டில் (23-12-1966ல்), தியாகேசர் குறவஞ்சி நாட்டிய நாடகம், திருவாட்டி, கே. லலிதா அவர்களால், சென்னை சரசுவதி கான நிலையக் குழுவினரைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பதினெட்டாவது ஆண்டில் (23-12-1967ல்), நாட்டிய ஆசிரியர் கே. என். தண்டாயுதபாணிப் பிள்ளை அவர்களால், செல்வி வித்தியா மூர்த்தி குழுவினரைக் கொண்டு, கும்பேசர் குறவஞ்சி நாட்டிய நாடகம் நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது. இந் நிகழ்ச்சியில், பத்மபூஷண் எம். எல். வசந்தகுமாரி அவர்கள் பதம் பாடினுர்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் பத்தொன்பதாவது ஆண்டில் (22-12-1968ல்), வல்லி பரதம் நாட்டிய நாடகம், குமாரி பாரதி அவர்களால், சென்னை தியாகராயநகர் நிருத்திய பாரதி கலைக் குழுவினரைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபதாவது ஆண்டில் (25-12-1969ல்), சுரகுரு நாட்டிய நாடகம், நாட்டியக் கலைக் கொண்டல், குற்றாலம் திரு. எஸ். கணேசம் பிள்ளை அவர்களால், அவர்களின் மாணவியரைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது. 28-12-1969ல் திருச்சி அனைத்து இந்திய வானொலி நிலையம், திரு. டி. எஸ். உலகநாதன் அவர்களால், பல்வேறு கவுத்துவங்கள் பாடிக் காட்டப் பெற்றன. திரு. உலகநாதன் அவர்கள் கவித்துவம் சொல்லத் திருமதி. எஸ். அரங்கநாயகி அவர்கள் மிருதங்கம் வாசித்தார்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபத்தொன்றுவது ஆண்டில் (25-12-1970ல்), திருமலை ஆண்டவர் குறவஞ்சி நாட்டிய நாடகம், வழுவூர் திரு. ஆர். சாம்ராஜ் அவர்களால், இசைப்பேரறிஞர் வழுவூர் பி. இராமையா பிள்ளை அவர்களின், வழுவூரார் பரத நாட்டிய குருகுல மாணவிகளைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபத்திரண்டாவது ஆண்டில் (23-12-1971ல்), மோகினி விலாசம் நாட்டிய நாடகம், நடன கலாரத்தினம், தஞ்சை திரு. டி.எம். அருணுசலம் பிள்ளை அவர்களின் ஸ்ரீசண்முகானந்த பரதநாட்டியப் பள்ளி மாணவியரால், நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபத்து மூன்றுவது ஆண்டில் (23-12-1972ல்), அர்த்த நாரீசுவரர் குறவஞ்சி நாட்டிய நாடகம், செல்வி பத்மா சுப்பிரமணியம், எம்.ஏ., அவர்களால், சென்னை நிருத்தியோதயா குழுவினரைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்யப்பெற்றது.

24-12-72ல் தமிழ் இசைப் புதிய பாடல்களின் அரங்கேற்றம் நடைபெற்றது. சொற்சுவையும், பொருட் சுவையும், பக்திச் சுவையும் நிறைய இசைப்பேரறிஞர் ம.ப. பெரியசாமித்தூரன் அவர்களால் இயற்றப் பெற்ற முருகன் அருள்மணி மாலை என்னும் நூலினை, மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனுர் வெளியிட்டு, நூலினையும், திரு. தூரன் அவர்களையும் பெரிதும் பாராட்டினுர்கள். நூலின் முதற் படியினை டாக்டர் ராதா தியாகராசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். திரு. டி. கே. கோவிந்தராவ் அவர்களின் மாணவியராகிய திருமதி சங்கரி நடராசன், திருமதி. கற்பகம் இராமன், செல்வி எஸ். எஸ். பத்மஜா, செல்வி. எம். பிரமீளா, திருமதி இலக்குமி இராமலிங்கம், திருமதி ராதா சின்னச்சாமி, திருமதி மரகதம் வேங்கடராமன் ஆகியோர், இந்நூலின் பாடல்கள் சிலவற்றை இனிமையாகப் பாடினுர்கள். இசைப்பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி அவர்கள், இந்நூற் பாடல்களின் இசையமைப்பிற்குப் பாராட்டுரை வழங்கினுர்கள்.

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபத்து நான்காம் ஆண்டில் 22-12-1973ல், வருணபுரிக் குறவஞ்சி நாட்டிய நாடகம், அடையாறு திரு. கே. இலக்குமணன் அவர்களால், சென்னை, பரத சூடாமணிக் குழுவினரைக் கொண்டு, நடித்துக் காட்டச் செய்யப் பெற்றது.

மேற்குறிப்பிடப் பெற்றனவே யன்றி, மேலும் பல சிறப்பு நிகழ்ச்சிகள், பல ஆண்டுகளில், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் நிகழ்த்தப் பெற்றுள்ளன. இந் நிகழ்ச்சிகளுக்குக் கட்டணம் இல்லை. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள், இந் நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து கண்டு கேட்டு வியப்பெய்தி இன்புற்று வருகின்றனர். இசை நயமும், இலக்கியச் சுவையும், நிறைந்திருந்

றும் மறைந்து போயிருக்கின்ற இத்தகைய பழந் தமிழ்க் கலைச் செல்வங்களுக்கு உயிர் கொடுத்தல், தமிழ் இசைச் சங்கத்தின் குறிக் கோள்களுள் ஒன்று; ஆதலால், பெரும்பொருட் செலவினைப் பொருட்படுத்தாது, தமிழ் நாட் டின் பல பகுதிகளில் உள்ள பேரூர்களிலும், சிற்றூர்களிலுமிருந்து, அருமையாக உள்ளவர் களையும் வரவழைத்து, இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகளைத் தமிழ் இசைச் சங்கம், ஆண்டு தோறும் ஆர்வத்துடன் நடத்தி வருகின்றது. இச் சிறப்பு நிகழ்ச்சிகள் முடிவு பெற்றவுடன், இந் நிகழ்ச்சிகளில், பங்கு கொண்டவர்களுக்கு சங்கத் தலைவர், திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை, இசைப்பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி, டாக்டர் மு. வரதராசனர் முதலியவர்களில் ஒருவர், பாராட்டுரை கூறி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டுதல் வழக்க மாகும். மேலும், இந்த நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்டோருக்குப் பல ஆண்டுகளில், தமிழ் இசைச் சங்கம், பரிசுகளும் வழங்கி யுள்ளது. எல்லா வகையிலும் எண்ணிப் பார்க்கும்போது, இப் பணியில் தமிழ் இசைச் சங்கத்திற்கு நிகராக, வேறு ஒரு நிறு வனத்தினைக் குறிப்பிடுதல் இயலாது என்று கூறினல், அது மிகையாகாது. இச் சிறப்பு நிகழ்ச்சிகள் இனிது நிகழ்தற்கு உதவி வரு கின்ற பெருமக்கள் பலராவர். இவ் வகை யில், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தொடர்ந்து பொறுப்பாகச் செய்து வந்த உதவிகளும், அவர்கள் காலத்திலும், பின்னரும் இசைப்பேரறிஞர், பெரியசாமித் தூரன் அவர்கள் செய்துவரும் உதவிகளும் நன்றியுடன் போற்றுதற்கு உரியனவாகும்.

**பண் ஆராய்ச்சி வெள்ளி விழா**

பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் இருபத் தைந்தாவது ஆண்டாகிய இவ் வெள்ளி விழா ஆண்டில், விழா நாட்கள் ஐந்திலும் பேருரைகளும், ஆராய்ச்சிகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும் பற்பல நிகழவிருத்தல், மகிழ் வுடன் குறிப்பிடுதற்குரியதாகும். முதல் நாளாகிய 22-12-1974ல், அரசு இசைக் கல்லூரி நாட்டிய ஆசிரியர் திரு. கே. என். பக்கிரிசாமிப் பிள்ளை அவர்களால், செல்வி வைஜயந்திமாலா குழுவினரைக் கொண்டு, சிக்கல் நவநீத ஈசுவர குறவஞ்சி நாட்டிய நாடகம் நடைபெறும். 23-12-1974ல் திரு வீழிமிழலை நாதசுர வித்துவான்கள், திரு. எஸ். கோவிந்தராச பிள்ளை அவர்கள், திரு. எஸ். தட்சிணமூர்த்தி பிள்ளை அவர்கள் குழுவின ரால், நாதசுரத்தில் மல்லாரியும், ரக்தியும் தவிலில் அலாரிப்பும் வாசித்துக் காட்டப் பெறும்.

24-12-1974ல், திருநீலகண்ட நாயனர் சரித் திரக் கதா காலட்சேபம், திரு. எம்பார் விசய ராகவாச்சாரியார் அவர்களால் நிகழ்த்தப் பெறும். 25-12-74ல், அமெரிக்க நாட்டு இசை வாணர் பேராசிரியர் வில்லியம் ஸ்கெல்டன் அவர்கள், தேவாரப் பாடல்கள் சிலவற்றைப் பழைய பண் முறைப்படி, இசைக் கருவியில் வாசிப்பார்கள். நாட்டியக் கலையின் மறைந்து வரும் சில மரபுகள் பற்றிய விளக்க நிகழ்ச்சி, திருமதி இந்திரா ராஜன் அவர் களால், செல்வி சுஜாதா ராஜன் அவர்களைக் கொண்டு, நடித்துக் காட்டச் செய்யப்பெறும். 26-12-1974ல், நாட்டுப்புறப் பாடல்களும் நடனங்களும் திரு. ர. ஐயாசாமி எம்.ஏ., அவர்களால் நடத்தப்பெறும். இந் நிகழ்ச்சி யில், பாடல்களைச் செல்வி ஜெயஸ்ரீ குழு வினர் பாடுவர்.

மேலும், இசைப் பேரறிஞர் ம. ப. பெரிய சாமித்தூரன் அவர்களால் இயற்றப் பெற்ற கீர்த்தனை அமுதம் என்னும் புதிய நூலின் அரங்கேற்றம், 26-12-1974ல் நடைபெறும். பாடல்கள் சிலவற்றைச் சங்கீத வித்துவான் செல்வி. எஸ். எஸ். பத்மஜா அவர்கள் பாடுவார்கள்.

மேலும், இவ் வெள்ளி விழாவின் சிறப்பு வழிபாட்டு நிகழ்ச்சியாகத் திருக்கோயில் திருவீதிப் பண் இசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளன. 20-12-1974 இரவு, மணி 7-30 முதல் 9-30 வரை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுரர் திருக்கோயில் தெற்கு மாட வீதியில் உள்ள வெள்ளீசுரர் திருக்கோயிலில் தொடங்கி, மாட வீதிகள் நான்கிலும் ஓது வார் குழுவினரால், தேவாரப் பண் இசை நடைபெறும். அதனுடன், திருச்சேறை திரு. டி. வி. எஸ். சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நாகசுர இசை, திருவாளப்புத் தூர் திரு. டி. ஏ. கலியமூர்த்தி அவர்கள், தென்சித்தூர் திரு. எஸ். என். சுந்தரம் அவர் கள் ஆகியோர் தவிலுடன் நிகழும். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண் இசை.

21-12-1974 இரவு, மணி 7-30 முதல் 9-30 வரை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்த சாரதிப் பெருமாள் திருக்கோயிலில் தொடங்கி மாட வீதிகள் நான்கிலும் காஞ்சிபுரம், சங்கீத வித்துவான், அருளிச் செயல் திலகம் எம். என். வேங்கடவரதன் அவர்களின் குழுவினரால், நாலாயிரத் திவ்வியப் பிரபந் தப் பண் இசை நடைபெறும். அதனுடன், மதுரை திரு. சேதுராமன், பொன்னுச்சாமி சகோதரர்களின் நாகசுர இசை, திருக்கோ கர்ணம் திரு. கே. செல்லையா அவர்கள், திருப்பதி திரு. சி. எம். முனிராமையா அவர் கள் ஆகியோர் தவிலுடன் நிகழும்.

பண் ஆராய்ச்சி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுதற்கு அடிப்படையாகவும் வளர்துணையாகவும் இருந்து வருகின்ற ஓதுவார்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், வெள்ளி விழாவில் சிறப்புச் செய்தும், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்குத் தவறாமல் வந்து பணியாற்றிய திருக்களர் திரு. தி. சுப்பையா தேசிகர், காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார் ஆகிய ஓதுவார் இருவருக்கும் வெள்ளி விழாவில் பொற்பதக்கம் வழங்கியும் மகிழ்வு கொள்ளத் தமிழ் இசைச் சங்கம் முடிவு செய்துள்ளது. இவர்கள் எல்லோருக்கும், இப் பெரும் பணியில் ஒத்துழைத்த பெரியோர்கள், இயற் புலவர், இசைப் புலவர், நாடகப் புலவர், நாட்டியப் புலவர், அன்பர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் தமிழ் இசைச் சங்கம் நன்றி நவில்வதுடன், இப் பணிக்கு மேலும் மேலும் ஒத்துழைப்பு நல்குமாறு, எல்லோரையும் வேண்டிக் கொள்கின்றது.

சென்னை உயர் நீதிமன்ற நடுவரும், இலக்கியங்களின் சொற்பொருட் சுவைகளிலே தோய்ந்து தோய்ந்து இன்புறும் இயல்பு உடையவர்களும் ஆகிய சான்றோர் திரு. எஸ். மகராசன் அவர்கள், பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவினைத் தொடங்கி வைப்பதும், நாகசுரக் கலையிலே வேந்தராக விளங்கும் பத்மஸ்ரீ திருவீழிமிழலை திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்குவதும், பண்பார்ந்த தமிழ்ப் பெரியார் இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள், வெள்ளி விழாச் சிறப்பு மலரினையும், பண் ஆராய்ச்சித் தொகுப்பினையும் விழாவில் வெளியிடுவதும், வெள்ளி விழாவிற்குப் பெருமை தருவனவாகும்.

## வாழ்த்து

வெள்ளி விழா வெற்றி பெற்றுப் பண் ஆராய்ச்சி முதலாகத் தமிழ் இசை ஆராய்ச்சிப் பணிகள் பற்பலவும், இப் பணிகளை நிகழ்த்தும் தமிழ் இசைச் சங்கமும் ஆல் போல் தழைத்து, ஓங்கி, மேலும் மேலும் வளர, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

தமிழ் இசைச் சங்க வெள்ளி விழாவில், முதலமைச்சர் அறிஞர் மாண்புமிகு சி.என். அண்ணாதுரை அவர்களைச் சங்கத் துணைத்தலைவர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், ராஜா அண்ணாமலை மன்றத்தினுள் அழைத்து வருதல். 21-12-1967



தமிழ் இசைச் சங்க வெள்ளி விழாவில், பாரத ரத்ன சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், விழாத் தொடக்கவுரை நிகழ்த்துதல் 21-12-1967

தமிழ் இசைச் சங்க வெள்ளி விழாவில், முதலமைச்சர் அறிஞர் மாண்புமிகு சி. என். அண்ணாதுரை அவர்கள், தலைமையுரை நிகழ்த்துதல் 21-12-1967

தமிழ் இசைச் சங்க வெள்ளி விழாவில், கல்வி அமைச்சர் நாவலர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வெள்ளி விழாச் சிறப்பு மலரினை வெளியிட்டு உரை நிகழ்த்துதல். 21-12-1967

தமிழ் இசை வெள்ளி விழாவினைத் தொடங்கி வைத்த பாரத ரத்னு சி. இராச கோபாலாச்சாரியார் அவர்களைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர்கள் திரு. மு. அ. சிதம்பரம் அவர்களும், ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்களும் மேடையிலிருந்து அழைத்து வருதல். 21–12–1967.

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## தமிழ் இசை விழாக்களில்

### வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை நிகழ்த்தியோர் பெயர்கள்

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 1. | 1943—44 | திரு. பம்மல் சம்பந்த முதலியார் | டாக்டர் ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் | திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் |
| 2. | 1944—45 | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை | சர். பி. டி. இராசன் | |
| 3. | 1945—46 | திரு. எம். இராதாகிருட்டிணப் பிள்ளை | திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | |
| 4. | 1946—47 | ராவ்பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை | அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் | |
| 5. | 1947—48 | கல்கி திரு. ரா. கிருட்டிணமூர்த்தி | அமைச்சர் திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் | |

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 6. | 1948—49 | திரு. சி. என். முத்துரங்க முதலியார் | முதல் அமைச்சர் திரு. ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் | |
| 7. | 1949—50 | திரு. எஸ். இராமசாமி நாயடு | நாமக்கல் திரு. வே. இராமலிங்கம் பிள்ளை | |
| 8. | 1950—51 | | முதல் அமைச்சர் திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா | திரு. சுத்தானந்த பாரதியார் |
| 9. | 1951—52 | திரு. எஸ். இராமசாமி நாயடு | திரு. எஸ். நடேச பிள்ளை | |
| 10. | 1952—53 | திரு. டி. செங்கல்வராயன் | முதல் அமைச்சர் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் | பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை |
| 11. | 1953—54 | | அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் | திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா |
| 12. | 1954—55 | திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் | முதல் அமைச்சர் திரு. கு. காமராஜ் | பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 13. | 1955—56 | பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை | தவத்திரு குன்றக்குடி அடிகளார் | அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் |
| 14. | 1956—57 | ராவ்சாகிப் கே. கோதண்ட பாணிப் பிள்ளை | அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் | பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் |
| 15. | 1957—58 | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை | சட்டமன்றத் தலைவர், திரு. எம். ஏ. மாணிக்கவேலு நாயகர் | நாமக்கல் திரு. வே. இராமலிங்கம் பிள்ளை |

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 16. | 1958—59 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் | தவத்திரு. சோமசுந்தர ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் |
| 17. | 1959—60 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | டாக்டர் பி. சுப்பராயன் | சென்னை, உயர் நீதிமன்ற நடுவர் திரு. கணபதியாப் பிள்ளை |
| 18. | 1960—61 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் | இசைப்பேரறிஞர், அரியக்குடி டி. இராமாநுச ஐயங்கார் |
| 19. | 1961—62 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திருவாட்டி, சௌந்தரம் கைலாசம் | இசைப்பேரறிஞர், வழுவூர் பி. இராமையா பிள்ளை |
| 20. | 1962—63 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | சட்டமன்றத் தலைவர், திரு. செல்லப் பாண்டியன் | இசைப்பேரறிஞர், மதுரை மணி ஐயர் |
| 21. | 1963—64 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் | இசைப்பேரறிஞர், முசிறி சுப்பிரமணிய ஐயர் |
| 22. | 1964—65 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. நல்லசேனபதிச் சர்க்கரை மன்றாடியார் | இசைப்பேரறிஞர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை |
| 23. | 1965—66 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. கோ. பூவராகன் | இசைப்பேரறிஞர் பாபநாசம் சிவன் |

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 24. | 1966—67 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. வி. இராமையா | இசைப்பேரறிஞர் கே. பி. சுந்தராம்பாள் |
| 25. | 1967—68 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. சி. இராசகோபாலாச் சாரியார் | முதலமைச்சர் அறிஞர் திரு. சி. என். அண்ணாதுரை<br>வெள்ளி விழாச் சிறப்பு மலர் வெளியீடு : அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் |
| 26. | 1968—69 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி | இசைப்பேரறிஞர், பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் |
| 27. | 1969—70 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் | இசைப்பேரறிஞர், செம்மங்குடி ரா. சீநிவாச ஐயர் |
| 28. | 1970—71 | திரு. மு. அ. சிதம்பரம் | ஐ. நா. அவைத் தலைமைச் செயலர் திரு. சி. வி. நரசிம்மன் | இசைப்பேரறிஞர் எம். எஸ். சுப்புலட்சுமி |
| 29. | 1971—72 | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா | இசைப்பேரறிஞர், மதுரை எஸ். சோமசுந்தரம் |
| 30. | 1972—73 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் | இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் |
| 31. | 1973—74 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | சென்னை உயர் நீதிமன்ற நடுவர் திரு. பி. ஆர். கோகுல கிருட்டிணன் | இசைப்பேரறிஞர் டி. கே. பட்டம்மாள் |

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## இசைப்பேரறிஞர் பட்டம் வழங்கப் பெற்றவர்கள்

| எண் | பட்டம் பெற்றவர்களின் பெயர் | பட்டம் வழங்கப் பெற்ற இசை விழா எண்ணிக்கை | ஆண்டு | பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் | 15 | 1957 | 8 |
| 2. | திரு. பி. சாம்பமூர்த்தி | ,, | | ,, |
| 3. | கும்பகோணம் திரு. கே. இராசமாணிக்கம் பிள்ளை | ,, | | ,, |
| 4. | திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை | 17 | 1959 | 10 |
| 5. | அரியக்குடி திரு. டி. இராமாநுச ஐயங்கார் | 18 | 1960 | 11 |
| 6. | வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை | 19 | 1961 | 12 |
| 7. | மதுரை திரு. மணி ஐயர் | 20 | 1962 | 13 |
| 8. | முசிறி திரு. சுப்பிரமணிய ஐயர் | 21 | 1963 | 14 |
| 9. | சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை | 22 | 1964 | 15 |
| 10. | திரு. பாபநாசம் சிவன் | 23 | 1965 | 16 |
| 11. | திருமதி கே. பி. சுந்தராம்பாள் | 24 | 1966 | 17 |
| 12. | திரு. திருமுருக கிருபானந்தவாரியார் | 25 | 1967 | 18 |
| 13. | பாலக்காடு திரு. டி. எஸ். மணி ஐயர் | 26 | 1968 | 19 |
| 14. | செம்மங்குடி திரு. ரா. சீநிவாச ஐயர் | 27 | 1969 | 20 |
| 15. | திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி | 28 | 1970 | 21 |
| 16. | மதுரை திரு. எஸ். சோமசுந்தரம் | 29 | 1971 | 22 |
| 17. | திரு. ம. ப. பெரியசாமித்தூரன் | 30 | 1972 | 23 |
| 18. | திருமதி. டி. கே. பட்டம்மாள் | 31 | 1973 | 24 |

# தமிழ் இசைச்

## பண் ஆராய்ச்சிக்

### வரவேற்புரை, தொடக்கவுரை முதலியவை

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் |
|---|---|---|---|
| 1. | 1949 | திரு. எஸ். இராமசாமி நாயடு | டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் |
| 2. | 1950 | டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் | திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ண சாமி ஐயர் |
| 3. | 1951 | டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் | குன்றக்குடி, திருவண்ணுமலை ஆதீனம், தவத்திரு. தெய்வசிகா மணி அருணுசல தேசிக சுவாமி கள் |
| 4. | 1953 | திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் | |
| 5. | 1954 | திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் | பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை |
| 6. | 1955 | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்<br>பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (முன்னுரை) | பேராசிரியர் டாக்டர் மு. வரத ராசஞர் |
| 7. | 1956 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் |
| 8. | 1957 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | நாகர்கோயில் திரு. ஆறுமுக நாவலர் |
| 9. | 1958 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ண சாமி ஐயர் |
| 10. | 1959 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் |
| 11. | 1960 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நடுவர் திரு. பி. வி. இராச மன்னர் |

# சங்கம், சென்னை

## கூட்டங்களில்

### நிகழ்த்தியோர் பெயர்கள்

| தலைவர் | சிறப்புரை நிகழ்த்தியவர் | நன்றி கூறியவர் |
|---|---|---|
| பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி (முதல்நாள்) | .. | டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் |
| பேராசிரியர் எம். எம். தண்டபாணி தேசிகர் (இரண்டு, மூன்று, நான்காம் நாட்கள்) | | |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | .. | கல்கி. திரு. ரா. கிருட்டிண மூர்த்தி |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | .. | ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | .. | திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | .. | திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | .. | திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் |
| பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் கும்பகோணம் கே. இராசமாணிக்கம் பிள்ளை | .. | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் கும்பகோணம் கே. இராசமாணிக்கம் பிள்ளை | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் திருவிடைமருதூர் பி. எஸ். வீருசாமிப் பிள்ளை | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் |
| இசைப்பேரறிஞர் அரியக்குடி, டி. இராமானுச ஐயங்கார் | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |

| வரிசை எண் | ஆண்டு | வரவேற்புரை கூறியவர் | தொடங்கி வைத்தவர் |
|---|---|---|---|
| 12. | 1961 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. எம்.எஸ். சாரங்கபாணி முதலியார் |
| 13. | 1962 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் |
| 14. | 1963 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) |
| 15. | 1964 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திருவாசகமணி கே. எம். பால சுப்பிரமணியம் |
| 16. | 1965 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. திருமுருக கிருபானந்த வாரியார் |
| 17. | 1966 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | டாக்டர் மா. இராசமாணிக்கனார் |
| 18. | 1967 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார் |
| 19. | 1968 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | தவத்திரு. சாந்தலிங்க இராம சாமி அடிகளார் |
| 20. | 1969 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | தவத்திரு. சிவஞான பாலய சுவாமிகள் |
| 21. | 1970 | திரு. மு. அ. சிதம்பரம் | தவத்திரு. ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் |
| 22. | 1971 | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | பத்மபூஷண் ம. ப. பெரியசாமித் தூரன் |
| 23. | 1972 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் |
| 24. | 1973 | திவான்பகதூர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளை | சென்னை. உயர் நீதிமன்ற நடுவர் திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் |

| தலைவர் | சிறப்புரை நிகழ்த்தியவர் | நன்றி கூறியவர் |
|---|---|---|
| இசைப்பேரறிஞர் வழுவூர் பி. இராமையா பிள்ளை | .. | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் (முதல் நாள்) திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை (நான்காம் நாள்) |
| இசைப்பேரறிஞர், மதுரை மணி ஐயர் | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் முசிறி சுப்பிரமணிய ஐயர் | .. | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை | | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இசைப்பேரறிஞர் பாபநாசம் சிவன் | .. | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இசைப்பேரறிஞர் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இவ் ஆண்டில் இசைப்பேரறிஞர் பட்டம் பெற்ற திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள், நான்காம் நாள் ஆராய்ச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். | | |
| திரு. திருமுருக கிருபானந்தவாரியார் | திவான்பகதூர். தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இசைப்பேரறிஞர் பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் | .. | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இசைப்பேரறிஞர் செம்மங்குடி ரா. சீநிவாச ஐயர் | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை |
| இசைப்பேரறிஞர் எம். எஸ். சுப்புலட்சுமி | .. | பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் |
| இசைப்பேரறிஞர் மதுரை எஸ். சோமசுந்தரம் | .. | டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் |
| இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் | .. | |
| இசைப்பேரறிஞர் டி. கே. பட்டம்மாள் | | |

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## பண் ஆராய்ச்சிக் கூட்டங்கள் எல்லாவற்றிற்கும், கூட்டங்கள் பலவற்றிற்கும், கூட்டங்கள் சிலவற்றிற்கும் வந்திருந்து பங்கு கொண்ட தேவார ஓதுவார்களின் பெயர்கள்

### (ஓதுவார்கள் பங்கு கொண்ட ஆண்டு முறைப்படி)

1. சிதம்பரம் திரு. இலக்குமண ஐயர்
2. காஞ்சிபுரம் திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்
3. திருக்களர் திரு. தி. சுப்பையா தேசிகர்
4. காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார்
5. தருமபுரம் திரு. டி. வேலாயுத ஓதுவார்
6. திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்
7. மதுரை திரு. வி. சுப்பையா ஓதுவார்
8. சென்னை திரு. அப்பாசாமி ஓதுவார்
9. அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்
10. திருக்கடவூர் திரு. டி. சாமிஐயா தேசிகர்
11. தேவகோட்டை திரு. ஆர். கணேச பிள்ளை
12. திருச்சேறை திரு. சொ. சட்டநாத தேசிகர்
13. சிதம்பரம் திரு. எஸ். இராமலிங்க ஓதுவார்
14. திருவிடைமருதூர் வித்துவான் திரு. நடராச தேசிகர்
15. இலங்கை. சுன்னுகம் திரு. த. குமாரசாமிப் பிள்ளை
16. காளையார்கோயில் திரு. எஸ். சுப்பையா ஓதுவார்
17. சுவாமிமலை திரு. எஸ். கலியாண சுந்தர தேசிகர்
18. திருக்களர் திரு. தி. சுந்தரேச தேசிகர்
19. காரைக்குடி திரு. தி. சபாரத்தின தேசிகர்
20. காரைக்குடி திரு. அ. நடேச தேசிகர்
21. திருப்புத்தூர் திரு. சு. ஆவுடையப்ப தேசிகர்
22. தருமபுரம் திரு. சுவாமிநாத சிவாச்சாரியார்
23. திருவொற்றியூர் திரு. அமிர்தேசுவர சிவாச்சாரியார்
24. பழநி திரு. எஸ். சைலப்ப ஓதுவார்
25. தேவகோட்டை திரு. எஸ். ஆறுமுக தேசிகர்
26. திருவாரூர் திரு. பஞ்சநத தேசிகர்
27. பழநி திரு. எம். சுப்பையா முதலியார்
28. திருவாரூர் திரு. ச. சுந்தரேச தேசிகர்
29. வீரவநல்லூர் திரு. சுந்தர ஓதுவார்
30. சிதம்பரம் திரு.எம். கனகசபைப் பிள்ளை
31. திருவாரூர் திரு. து. அருணசல தேசிகர்
32. திருவாவடுதுறை திரு. து. சோமசுந்தர தேசிகர்
33. திருவானைக்கா திரு. எம். நடராசப் பிள்ளை
34. கீழையூர் திரு. ச. நடராச தேசிகர்
35. சென்னை திரு. டி. எஸ். லோகநாத ஆச்சாரியார்
36. தேவகோட்டை திரு. பொ. தியாக ராசப் பிள்ளை
37. வேதாரணியம் திரு. க. மணி தேசிகர்
38. கீழைப்பூங்குடி திரு. தி. ஞானப் பிரகாச தேசிகர்
39. பூவாளூர் திரு. கே. திருஞானசம்பந்த ஓதுவார்
40. திருவாரூர் திரு. மு. திருஞானசம்பந்த தேசிகர்
41. திருப்பேரூர் திரு. டி. கே. ஆவுடை நாயகம் பிள்ளை
42. சங்கீதபூஷணம் தருமபுரம் திரு. பி. சாமிநாதன்
43. வைதீசுரன்கோயில் திரு. க. சொக்கலிங்கம் பிள்ளை

44. சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தன்

45. திருநெல்வேலி திரு. நா. குற்றால லிங்கம் பிள்ளை

46. கும்பகோணம் திரு. ஆட்கொண்டார் ஓதுவார்

47. சங்கரநயினார்கோயில் திரு. அ. திரு ஞானசம்பந்த ஓதுவார்

48. கோயில்வெண்ணி திரு. சா. சிவஞான சம்பந்த ஓதுவார்

49. பேரளம் திரு. இராமலிங்கக் குருக்கள்

50. திருத்துறைப்பூண்டி திரு. ச. ஆப தோத்தாரண தேசிகர்

51. திருச்செந்தூர் திரு. நமச்சிவாய ஓதுவார்

52. திருவாவடுதுறை திரு. அ. நடராச ஓதுவார்

53. கும்பகோணம் திரு. தே. பி. சு.இராம லிங்கக் குருக்கள்

54. திருவிடைமருதூர் திரு. டி.எஸ். ஞானப்பிரகாச தேசிகர்

55. பள்ளத்தூர் திரு. தி. இரத்தின சபாபதி தேசிகர்

56. காளையார்கோயில் திரு. மு. சுந்தர மூர்த்தி

57. சங்கீதபூஷணம் லால்குடி திரு. எல். எம். சாமிநாதன்

58. ஈரோடு திரு. ஆ. நாகரத்தினம்

59. வடபழநி திரு. ந. ஆறுமுக ஓதுவார்

60. திருவாலங்காடு திரு. மா. வே. சிங்கார வேல் ஓதுவார்

61. திருமணஞ்சேரி திரு. கொ. பா. திரு. ஞானசம்பந்த ஓதுவார்

62. திருப்புவனம் திரு. தி. ரா. சிவப் பிரகாச தேசிகர்

63. திருச்சி திரு. தி. சுப்பிரமணிய தேசிகர்

64. சென்னை திரு. ரா. பாலசுந்தரம்

65. சென்னை திரு. த. நடராசன்

66. திருப்புத்தூர் திரு. எஸ். சரவண பவானந்தன்

67. திருவானைக்கா திரு. பொன். பழநி யப்ப ஓதுவார்

68. திருமருகல் திரு. எஸ். சங்கர நாராயண ஓதுவார்

69. சங்கீதபூஷணம் புலவர், கோவூர் திரு. மு. கு. புண்ணியகோடி

70. திருச்சி அ. இரத்தின ஓதுவார்

71. திருத்தணி திரு. சி. கிருஷ்ண ஓதுவார்



தமிழ் இசை இருபத்தாறும் விழாவினைத் தொடங்கிவைத்து, அமைச்சர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் உரையாற்றுதல் 21—12—1968.



தமிழ் இசை இருபத்தாறும் விழாவில், சங்கத் துணைத்தலைவர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் நன்றியுரை நிகழ்த்துதல் 21—12—1968.

தமிழ் இசை இருபத்தொன்பதாம் விழாவில், சங்கத் துணைத்தலைவர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துதல் 22—12—1971.

தமிழ் இசை இருபத்தொன்பதாம் விழாவினைத் தொடங்கி வைத்துத் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் உரையாற்றுதல் 22—12—1971.

தமிழ் இசை முப்பதாம் விழாவினைத் தொடங்கிவைத்து, அமைச்சர் பேராசிரியர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் உரையாற்றுதல் 22—12—1972.

தமிழ் இசை முப்பத்தொன்றாம் விழாவில், சென்னை உயர் நீதிமன்ற நடுவர் திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள், தொடக்கவுரை நிகழ்த்துதல். 21–12–73.

பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்குத் தவறாமல் வந்து பணியாற்றியதைப் பாராட்டும் முறையில்

தமிழ் இசைச் சங்கத்தினால், பொற்பதக்கம் வழங்கப் பெறும் ஓதுவார் இருவர்



திருக்களர் திரு. தி. சுப்பையா தேசிகர்

காஞ்சிபுரம் திரு. அ. விநாயக முதலியார்



தமிழ் இசைக் கல்லூரி ஆண்டு விழாவில் (1972) கௌரவச் செயலாளர் திரு. மு. அ. சிதம்பரம் அவர்களுடன், துணைச் செயலாளர் திருமதி சீதா சிதம்பரம், துணைச் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீராமன், கல்லூரி இயக்குநர் திரு. த. சங்கரன் ஆகியோரும், கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும்.

தமிழ் இசைக் கல்லூரி ஆண்டு விழாவில் (1972) கௌரவச் செயலாளர் திரு. மு. அ. சிதம்பரம் அவர்களுடன், துணைச் செயலாளர் திருமதி சீதா சிதம்பரம், துணைச் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீராமன் கல்லூரி இயக்குநர் திரு. த. சங்கரன் ஆகியோரும், கல்லூரி ஆசிரியர்களும் மாணவியரும்

# பண் ஆராய்ச்சியும் அதன் பயனும்

இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன்,

தலைமைப் பதிப்பாசிரியர், தமிழ்க் கலைக் களஞ்சியம், சென்னை.

**பண்** என்னும் இசையின் அடிப்படைத் தத்துவம், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்தில் தோன்றி நன்கு வளர்ந்துள்ளது. இசைக் கலையைப் பற்றி அக்காலத்தில் எழுதப்பட்ட பெருங் குருகு, பெருநாரை, இசைநுணுக்கம் போன்ற பல நூல்கள் மறைந்து விட்டபோதிலும், பரிபாடல் முதலான பல சங்க இலக்கியங் களிலும், சிலப்பதிகாரத்திலும், அதன் உரையிலும், இடைச்சங்கத்திற்கே இலக்கணமாக அமைந்த தொல்காப்பியத்தின் வாயிலாகவும் அன்று வளர்ந்த இசைத்தமிழின் சிறப்பைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

ஏழு, எட்டு, ஒன்பது நூற்றுண்டுகளில் தோன்றிய தேவாரப் பாடல்களும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களும் இந்தப் பண் முறையிலேயே பாடப்பட்டுள்ளன. திவ்வியப் பிரபந்தத்திற்கும், முக்கியமாகத் திருவாய் மொழிக்கும் வகுத்த பண்முறையில் இப்பொழுது பாடுபவர்கள் அரியராகி விட்டனர். ஆனுல், தேவாரப் பாடல்களை ஓதுவாமூர்த்திகள், பண் முறையிலேயே இன்றும் பாடி வருகின்றார்கள்.

சிலப்பதிகாரத்தில், ஆயிரக்கணக்கான பண்களும், அவற்றில் பிறந்த திறம், திறத்திறம் போன்ற இசை வடிவங்களும் கூறப்பட்டுள்ளன. முக்கியமாக, அந் நூலிலும், பிங்கல நிகண்டிலும் 103 பண்கள் பேசப்படுகின்றன. ஆனுல், தமிழகத்திலே அதன் வரலாற்றில் ஏற்பட்ட குழப்பங்களால் இடையிடையே நமது இசை ஆதரிப்பாரற்று நலியலாயிற்று.

இராஜராஜன் காலத்தில்தான் தமிழிசை புத்துயிர் பெற்றது. அக்காலத்தில், தேவாரப் பதிகங்கள் அடங்கிய சுவடிகளும் அரிதாகி விட்டன. நல்லவேளையாகச் சிதம்பரம் கோயிலில், அரசனது முயற்சியால் அந்தச் சுவடிகள் கிடைத்தன. அவற்றிலும் பல ஏடுகள் செல்லரிக்கப்பட்ட நிலையிலிருந்தன.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்மணியைக் கொண்டு, அன்று அகப்பட்ட தேவாரப் பதிகங்களுக்கு இசை கண்டுபிடித்தனர். ஆனுல் 103 பண்களும் நமக்குக் கிடைக்கவில்லை. இருபத்துமூன்று பண்களே கிடைத்தன. அவற்றைப் பின் பற்றி ஓதுவா மூர்த்திகள், பக்தியோடு அவற்றில் மாறுதல்களுக்கு இடந்தராமல், இன்றுவரை பாடி வந்துள்ளது, நமது தவப் பயனுகும். அவர்களும் பெரிதும் போற்றத் தக்கவர்கள்.

பண் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும் என்று உற்சாகத்தோடு, அன்று தமிழிசைச் சங்கத்தின் தலைவராக விளங்கிய டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள், 1949ஆம் ஆண்டில் தொடங்கினுர்கள். தமிழிசைச் சங்கத்தின் துணைத் தலைவரான ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், கௌரவச் செயலாளர்களான திரு. எம்.ஏ. சிதம்பரஞ் செட்டியார் அவர்கள், திரு. டி.எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்கள் மற்றுமுள்ள உறுப்பினர்கள் அனைவரும் இம் முயற்சியிலே பெரிதும் ஒத்துழைத்தார்கள். பேராசிரியர் பண்டித வித்துவான் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், இந்த ஆராய்ச்சிக்குச் செயலாளராக வாய்த்தது, மிகப் பொருத்தமாக அமைந்தது. ஆண்டு அறிக்கைகளைக் கவனமாகப் பார்த்து வெளியிட்டதே, அவர்களுடைய பொறுப்பு உணர்ச்சிக்குச் சீரிய எடுத்துக்காட்டாக உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய பண்கள், ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றுண்டுகளில், தேவாரப் பாடல்களின் மூலமாக, நாடெங்கும் ஒலித்தன என்றுலும் பின்னர் நலியத் தொடங்கின என்று முன்பே குறிப்பிட்டேன்.

1949ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் தொடங்கிய ஆராய்ச்சி, இவ்வளவு பெரிய கால இடைவெளிக்குப் பின், அவற்றை ஆராய்ந்து உண்மையை அறியத் தொடங்கியது, மிகவும் போற்றுதற்குரிய துணிச்சலான அருஞ்செயலாகும்.

தமிழகத்தில் ஆதரவு குறைந்த காலத்தில், சமஸ்கிருதத்தில் சாரங்கதேவர் போன்றேர்,

இந்த இசை முறையைப் பின்பற்றி நூல்கள் எழுதினுர்கள். பண்களின் பெயர்கள் எல்லாம் சமஸ்கிருத மொழிக்கு ஏற்றவாறு மாறின. இது இயல்பு. இதில், தவறு எதுவும் இருப்பதாகக் கருதுவதும் சரியல்ல.

வால்மீகி முனிவர் பாடிய ஆதிகாவியமான இராமாயணத்தைக் கம்பன் தமிழில் ஆக்க முயன்றபோது, பல மாறுதல்களைச் செய்துள்ளான். அவ்வாறே, பிற மொழியில் உருவாகிய இராமாயண காவியங்களும் அந்தந்த மொழியினரின் மரபுக்கு ஏற்ப, மாறுதல் அடைந்துள்ளன. ஆனுல், அடிப்படை நிலைத்து நின்றது.

அதுபோலவே, தமிழகத்தில் வளர்ந்த இசையைப் பற்றியும் கருதவேண்டும். பண்களைப் பாடும்போது, அவை, கருநாடக இசை என்று இன்று கூறப்பெறும் இசையில் உள்ள இராகங்களாகவே அமைந்திருப்பதை அறிந்தோம்.

பண் இராகமாயிற்று. பெயர்கள் மாற்றமடைந்தன. ஆனுல், அடிப்படையான இசை மரபு நிலைத்து நிற்பதை இந்த இருபத்து ஐந்து ஆண்டு ஆராய்ச்சி, மெய்ப்பித்துக் காட்டிற்று. கௌசிகம் என்ற பண், அன்று இருந்தது; தேவாரப் பாடலில் இன்றும் இருக்கிறது. அதுவே, பைரவி என்ற பெயரில் பிற்காலத்தில் வழங்கலாயிற்று என்பதையும் நாம் கண்டோம். இவ்வாறே, பல பண்கள், இன்று வேறு பெயர்களில் வழங்குவதைத் தேவாரப் பாடல்கள் மூலம் அறிந்து, இந்த உண்மை, ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாயிற்று.

இது, பண் ஆராய்ச்சியின் மிகப் பெரிய பயனுகும். எனினும் நாம் இன்னும் தொடர்ந்து ஆராய வேண்டிய பகுதிகள் நிறைய உள்ளன. நமக்குக் கிடைத்த 23 பண்களிலும் சில பண்கள், இன்று ஒரே ராகத்தில் பாடப்படுவதை உணருகிறேும். எடுத்துக்காட்டாக, கொல்லி, கொல்லிக் கௌவாணம், பியந்தை, பியந்தைக்காந்தாரம் ஆகிய நான்கு பண்களும் பெரும்பாலும் நவரோசு என்ற ராகத்தில், சில சிறு மாறுதல்களோடு பாடப்படுகின்றன. இவை நான்கும் தனித்தனி ராகங்களே யாகும். அவற்றை நாம் மேலும் ஆராய்ந்து கண்டு பிடிக்கவேண்டும். இதைப் போலவே, வேறு சில பண்களையும் தனித்தனியாகக் கண்டறிய வேண்டும். சாளரபாணி என்பது போன்ற பண்கள், நமக்கு இன்னும் தெளிவாகவில்லை. மேலும் 103 பண்கள் எவை யென்றும் அறுதியிட்டுக் கூறவும் இயலவில்லை. இவற்றில் ஒரு சில பண்களே நமக்குத் தெளிவாகின்றன.

ஆயிரக்கணக்கான பதிகங்களைப் பாடிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர், 23 பண்களில் மட்டும் பாடியிருக்கமாட்டார்கள். குறைந்தது 103 பண்களையாவது அவர்கள், கையாண்டிருக்கவேண்டும். அவர்கள், தெய்வ அருள் பெற்றவர்கள். அவர்கள் வாக்கிலே இசை களிநடம் புரிந்தது. ஆகவே, அவர்கள் பாடிய மற்ற பண்களையும் நாம் கண்டறிதல் வேண்டும். ஒவ்வொரு நிலத்திற்கும் வகுக்கப்பட்ட யாழ்களைப் பற்றியும், முல்லைத் தீம்பாணி முதலிய பண்களைப் பற்றியும் நாம் நன்கு ஆராய்ந்து முடிவு காணவேண்டும்.

எத்தனையோ நூற்றுண்டுகளுக்குப் பின், இப்பொழுது கண்டறிந்த உண்மைகளே, நம்மை நாமே பாராட்டிக் கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன. இன்னும் துருவி ஆராய்வோமானுல், இருட்டிலே மறைந்து கிடக்கும் பல அரிய உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். அப்படி வருவதால், நமது இசை, மேலும் வளம் பெற்றுச் சிறப்படையும் என்பதற்கு எவ்வகையான ஐயமும் இல்லை. இதையே, பண் ஆராய்ச்சி மாநாடுகளின் பயன் என்று உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், மேலும் மேலும் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றும் நான் வேண்டிக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரத்தையும், அதை விளக்க எழுந்த உரைகளையும் ஆழ்ந்து ஆராய்ந்தால், பல புதிய உண்மைகள் கிடைக்கும் என்பது திண்ணம். விபுலாநந்த அடிகளார் எழுதிய யாழ்நூலையும், ஆபிரகாம் பண்டிதர் கண்டறிந்த உண்மைகளையும் துருவிப் பார்ப்பது நல்ல பயன் தரும் என்பதையும் குறிப்பாகக் கூறிக்கொண்டு, இக் கட்டுரையை முடிக்கிறேன். பண் என்னும் இசைத் தத்துவம், நமது பண்பாட்டை உயர்த்துக.

# முல்லைப் பண்ணின் தொன்மையும் சிறப்பும்

இராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை.

முல்லைப் பண் என்பது எத்திறத்தது, அதன் சுரங்கள் எவை எவை, அதன் இசை முறை யாது எனச் சென்ற ஆண்டின் பண் ஆராய்ச்சிக் குழு தீர்மானித்தது. அம் முல்லைப் பண்ணின் தொன்மையையும் சிறப்பையும் விளக்க எழுந்தது இக் கட்டுரை.

### முல்லை என்னும் பெயரே அதன் தொன்மைக்கு ஒரு சான்று

முல்லை என இசைமுறை ஒன்றிற்குப் பெயர் அமைந்தது, அது தோன்றி வளர்ந்த நிலத்தின் பெயரால் அமைந்ததாகும். முல்லை என்பது, தமிழ்நாட்டின் நால்வகை நிலங்களுள் முதலிடம் பெற்றது. இக்காலத்தில் இராகங்களுக்குப் புனைந்த பெயர்கள், பெரும்பாலும் பொருளற்ற கற்பனைப் பெயர்களே. வரலாற்றுக்கு எட்டாத மிகப் பழங்காலத்தில் உலக நாடுகளில் இசைப் பண்பாடு சிறந்து விளங்கிய நாடுகள், அவற்றின் இசை முறைகளுக்குக் கற்பனைப் பெயர்களைப் புனைந்தில. இசை முறை ஒன்றைத் தோற்றுவித்து, வளர்த்த நிலத்தின் பெயரையே அந்த இசை முறைக்கும் சூட்டினர் என்பதைப் பழைய வரலாறு உணர்த்துகிறது.

### எகிப்தில் கிரேக்கர் நாட்டில் நிலத்தின் பெயரே இசையின் பெயர்

தமிழ் நாட்டிற்போல எகிப்தியரும், பழைய கிரேக்கர்களும் அவர்களின் பழைய இசை முறைக்கு நிலத்தின் பெயரையே அளித்தனர். தோரியன் (Dorian) என்னும் நிலப் பகுதியில் வாழ்ந்த தோரியர் என்னும் கிரேக்கரின் மிகப் பழைய மக்கள், தாம் வாழ்ந்த தோரியன் என்னும் நிலத்தின் பெயரையே அதில் வழங்கிய இசைக்கு அளித்தனர். இத் தோரியர் என்பார் எகிப்திலிருந்து வந்து, குடியேறியவர்கள். அவர்கள் வாழ்ந்த நிலத்தின் பெயரையும் இசையின் பெயரையும் அவர்கள் குடியேறிய நாட்டிலும் மேற்கொண்டனர் என்பது வரலாறு. தோரியன் என்ற இசைமுறைக்கே அன்றி ஏனைய இசை முறைகளுக்கும் தமிழ் நாட்டிற்போல், லிதியன் (Lydian) பிரிசியன் (Phrigian) ஐயோனியன் (Ionian) என நிலத்தின் பெயரையே வழங்கினர் என்பதும் வரலாறு. இவற்றைப் புருனே எழுதிய இசையின் பொது வரலாறு (A General History of Music என்னும் நூலிற் காணலாம். இவற்றிலிருந்து இசைப்பண்பாடு பெற்ற பழம் பெரு நாடுகளிற் போலவே வரலாற்றிற்கு எட்டாத மிகு தொன்மை வாய்ந்தவை; முல்லைப் பண் என்னும் இசை முறையும் அதன் பெயரும் என்பவை பெறப்படும்.

### தோரியன் இசையின் சுரங்கள்

எகிப்தியரின் இசை எத்தகையது என நிறுவப் போதிய சான்றுகள் கிடைத்தில. ஆயினும் எகிப்தியக் குடிகளான கிரேக்கரின் பழைய தோரியன் இசையைக் குறித்த சில சான்றுகளைக் கொண்டு அந்த இசையில் நான்காம் கீ (Key) F உழை என்பதும், ஏழாம் கீ, B, தாரம் என்பதும் பயின்றில எனக் காண்கின்றனர், ஆய்வாளர்கள். இப் பழைய இசையே புதிய இசையைவிடச் சிறந்தது, உயர்ந்தது எனச் சிறந்த அறிஞர்கள், பிளாட்டோ, அரிஸ்டாடில் என்போர் கூறி உள்ளார் என்பர் புருனே. உழையும் தாரமும் முல்லைப் பண்ணில் பயின்றில என்பதைச் சென்ற ஆண்டின் ஆய்வில் கண்டோம்.

### சீனர் இசையும் அதன் சுரங்களும்

இசைப் பண்பாடு பெற்ற பழம்பெரு நாடுகளில் சீனவும் ஒன்றாகும். அந்நாட்டு மக்கள் தொன்று தொட்டுப் பயின்று வந்த இசை, முல்லை என்பதை, அதன் சுர அமைப்புக் காட்டும்.

| சீனர் இசை | தமிழ் | | ஆரியம் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| கூங் (Kung) | குரல் | — | ச | C |
| இட்சி (Tchi) | இளி | — | ப | G |
| சாங் (Chang) | துத்தம் | — | ரி | D |
| யூ (Yu) | விளரி | — | த | A |
| கியோ (Kyo) | கைக்கிளை | — | க | E |

குரல், இளி, துத்தம், விளரி கைக்கிளை என்ற ஐந்தின் முறையில் இயங்கும் ஐந்து சுரங் களைக் கொண்ட சீனர் இசை, முல்லைப் பண் ணைப் போன்றது; முல்லைப் பண்ணே என்பது உறுதியாகின்றது.

இச் சுரங்களும் அவற்றின் இசைமுறையும் பயின்றது, ஸ்காட்லாண்டு நாட்டுப் பழைய இசை என்பர் டாக்டர் புருனே. ஆனல் இந்த இசை ஒரு நாட்டிலிருந்து மற்றெரு நாட் டிற்குப் பரவியது எனக் கருத வேண்டுவ தில்லை. உலகத்திலேயே மக்களின் பண் பாட்டுக் குழவிப் பருவத்திலும் கலைப் பண் பாட்டின் குழவிப் பருவத்திலும் இயற்கை யாகத் தோன்றிய இசை முறை இது என் பர் இசைப் பேராசிரியர் ஆய்வாளர் டாக்டர் புருனே. மேலும் அவர் ஆங்கிலத்தில் எழுதி யதை முற்றிலும் அடியிற் காண்க.

It is not my intention to insinuate by this the one nation had its music from the other or either was obliged to ancient Greece for this melody though there is strong resemblance in all three. The similarity at least proves to be more natural than they at first seem to be as well as more ancient. The Chinese are extremely tenacious of old customs and equally enemies to innovation with the ancient Egyptians which favours the idea of the high antiquity of this simple music and as there is reason to believe it very like that of the most ancient. Greek melodies, it is not difficult to suppose it to be a species of music that is natural to a people of simple manners during the infancy of civilization and arts among Them!"

A general history of music,
by Dr. Charles Burney 1935 edition,
Vol I Page 48.

பழம்பெரு நாடுகளின் இசை முறையில் காணும் ஒப்புமை, டாக்டர் புருனே கூறுமாறு அவற்றின் மிகு தொன்மைக்குச் சான்று கின்றது. தமிழ் நாடும் அதன் எளிய முல்லைப் பண்ணும் அப் பெரு நாடுகளுடனும் அவற் றின் இசை முறையோடும் ஒத்த தொன்மை வாய்ந்தன. முல்லைப் பண்ணில் சுரங்கள் பெற்ற முறையை இளங்கோ அடிகள் ''தொன்றுபடுமுறை'' என்று மட்டும் கூறு கின்றூர். அத் தொன்மை எவ்வளவிற்கு என்பதை மேலே கூறியன எடுத்துக் காட்டும்.

முல்லைப் பண்ணின் சிறப்பு

இம் முல்லைப் பண், அதன் குழவிப் பரு வத்திலே, பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றது மட்டுமே அதன் சிறப்பன்று. இசை முறைகளின் முன் தோன்றி மூத்த அதன் முதுமைத் தொன்மை மட்டுமே அதன் சிறப்பன்று. இசை முறைகளின் ஆக்கத்திற்கும் பெருக்கத்திற்கும் இந்த எளிய இசையே வழியாக அமைந்தமை, அதற்கு மிகு பெருமையும் சிறப்பும் அளித்தது.

குரல் குரலாக அதாவது குரலே முதல் சுரமாக எழுந்தது முல்லைப்பண். துத்தம் குரலாக கைக்கிளை குரலாக, இளி குரலாக மாற்றி இயக்கியபோது வேறு வேறு இனிய பண்கள்-இராகங்கள் தோன்றின. முறைப் படி பண்களைப் பெருக்குதற்கு இதுவே தக்க வழி-சிறந்த வழி என இயற்கையாகக் கண் டனர். இவ் வழியையே இளங்கோ அடிகள் ''தொன்முறை இயற்கை'' என்றூர். முல்லைப் பண்ணே செவ்வழி என்ற பெயரும் பெற் றது. பிங்கலந்தை ''நேர்திறம் பெயர்திறம் சாதாரி முல்லை என, நாலும் செவ்வழி நல்யாழ்த் திறனே'' எனக் கூறுவதைக் காண்க.

செவ்வழி என்பது வடமொழியில் மார்க்கா என மொழிபெயர்க்கப்பட்டது. மானியர் வில்லியம்சு, மெக்டொனல்டு முதலியோரின் அகர முதலிகள், மார்க்க என்பதற்கு correct path, செம்மையான வழி செவ்வழி எனப் பொருள் கூறுவன. ஆனல், கல்லிநாதர் என்னும் வடமொழி இசை ஆசிரியர் இச் சொல்லை மார்கிதா எனத் திரித்துத் ''தேடிக் கண்டது'' எனப் பொருள் கொண்டார். எங் கிருந்து தேடியது? தமிழ் இசை முறையில் இருந்து தேடி எடுத்தது எனப் பொருள் கொள்ளவும் அவர் செய்த திரிபு இடம் தருமே!

இந்த மார்க்க இசையே வடநாடு எங்கும் பரவியிருந்தது. வேத இசைக்கும் இந்தியப் பெருநாட்டில் வழங்கும் பல பழைய இசை முறைகளுக்கும் செவ்வழி இசை முறையே வழிகாட்டியதாகும். இதனை மேலும் விளக்க, இக்கட்டுரை இடம் தாராது. இவற்றின் விரிவை இவற்றிற்குக் கிடைத்த மறுக்க முடியாத பற்பல சான்றுகளைப் பழந் தமிழ் இசை என்னும் நூலிலிருந்து தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழா மலரில் வெளியான ''இசைக்கு வழிகாட்டி'' என்னும் கட்டுரை யிற் காண்க. இம் முல்லைப் பண்ணைப் போல இசையின் அளவற்ற பெருக்கத்தையும் ஆக்கத் தையும் தந்த பெருமையும், சிறப்பும் வேறு எந்த இசை முறைக்கு எந்த இரா கத்திற்கு உள! வாழ்க தொல் தமிழ் இசை! இந்த ஆய்வினை வளர்த்த, மென்மேலும் வளர்க்கும் அண்ணாமலை அரசர் தமிழ் இசைச் சங்கமும் அதன் பண் ஆராய்ச்சி முறையும் பல்லாண்டு பல்லாண்டு பல நூறு ஆண்டு வாழுமாக.

# யாழ் நூலின் அமைப்பும், சிறப்பும்

**வித்துவான் க. வெள்ளைவாரணனார்,**

தமிழ்த் துணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

---

'இசையொடு சிவணிய யாழின் நூல்' எனக் கொங்குவேளிரும், 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும் குறிப்பிட்ட இசைத் தமிழ் இலக்கண நூலும், அதன்கண் விரித்து விளக்கப்பெறும் இசை உருவங்களும், அவற்றை வாசித்தற்குரிய கருவியாகப் பண்டைத் தமிழர் கையாண்ட யாழும் இருந்த இடந் தெரியாது மறைந்துபோன இக் காலத்திலே, யாழ்க்கருவியின் தொன்மையினையும், அமைப்பினையும், அதன்கண் வாசிக்கப்பெற்ற பழந்தமிழ் இசை நுட்பங்களையும் எடுத்துக் காட்டித் தமிழிசைக்குப் புத்துயிர் அளிக்கத் தோன்றியது, அருள்மிகு விபுலாநந்த அடிகளார் இயற்றிய யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலாகும். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலே அரங்கேற்று காதையில், யாழாசிரியனது இயல்பு கூறிய இருபத்தைந்து அடிகளுக்கு உரிய விரிவுரையாகவும், சங்க காலத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கையிலே தோன்றிக் காலந்தோறும் படிப்படியாக வளர்ந்து பண்பட்ட இசைத் திறங்களை விரித்துக் கூறும் இசை வரலாற்று நூலாகவும், தமிழிசைக் கருவிகளில் தொன்மை வாய்ந்த யாழின் உருவ அமைப்பினைக் கண்டறிந்து, அக் கருவி வாயிலாகப் பழந்தமிழ்ப் பாலை நிலைகளையும், பண்களையும் இசைத்துக்காட்டும் செயன்முறை நூலாகவும் திகழ்வது இவ் யாழ் நூலாகும். இந்நூல், பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலைத் திரிபியல், பண்ணியல், தேவார இயல், ஒழிபியல் என்னும் ஏழு பகுதிகளையுடையது.

## 1. பாயிரவியல்

இதன்கண், இசை நரம்புகளின் பெயர், முறை, அவற்றிற்குப் பிற்காலத்தார் வழங்கிய பெயர்கள், இணை கிளை பகை நட்பு நரம்புகள், இசை, பண் என்பவற்றின் பெயர்க் காரணம், மந்தரம், மத்திமம், தாரம் என்னும் மூவகைத் தானங்கள், ஆரோசை அமரோசை என்னும் ஏற்ற இறக்கங்கள், மிடற்றுப் பாடலும் கருவிப்பாடலும், பாணர் வரன்முறை, பண்டைத் தமிழர் வாசித்த யாழ்க்கருவி எகிப்து சுமேரியா கிரேத்தம் முதலிய பிற நாடுகளிற் பரவிய வரலாறு முதலியன, விளக்கப் பெற்றுள்ளன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பழந்தமிழர் குறித்த ஏழிசைச் சுருதிப் பகுப்பு நிரல்கள், முறையே மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இக் காலத்தில் வழங்கும் ஏழிசைச் சுருதிப் பகுப்பு நிரலைக் குறித்த பெயர்கள் என்னும் உண்மை, இவ் இயலில் விளக்கப் பெற்றுள்ளமை, கூர்ந்து நோக்கத் தகுவதாகும்.

## 2. யாழ் உறுப்பியல்

இதன்கண், தமிழ்நாட்டின் இசைக் கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், செம்முறைக் கேள்வியென்னும் சகோட யாழ் என்பனவும், அவற்றின் உறுப்புக்களாகிய பத்தர்,கோடு, வறுவாய், போர்வைத்தோல், யாப்பு, உந்தி, கவைக்கடை என்பனவும், அவ் உறுப்புக்களின் பயனும் அவற்றை உருவாக்கி வாசித்தற்கு ஏற்ற வண்ணம், வரைபடங்களுடன் தெளிவாக விளக்கப் பெற்றன.

## 3. இசை நரம்பியல்

பூதநூல் முறைப்படி, ஓசையை அளக்கும் முறையும், அளவு கோலும், ஓசையின் இயக்கமும் வேகமும், குழல் என்னும் துளைக் கருவியின் இலக்கணமும், இசையோசையினை அளத்தற்குரிய கட்டளை யாழை அமைத்துக் கொள்ளும் முறையும், நரம்பின் முதலிசையைச் சார்ந்து தோற்றும் வழியிசைகளும், கிளை மரபாக இசை கூட்டும் முறையும், ஏழிசைகளின் பிறப்பும், அலகெண்ணும், அலகுநிலையெண்ணும், கிளை இயைபினாற் பிறக்கும் பதினோரிசை நிலைகளும், நட்பியைபினாற் பிறக்கும் பதினோரிசை நிலைகளும், மேனாட்டில் வழங்கும் விளரிக் கிரமமும்,

இருபத்திரண்டு இசை நிலைகளைத் தெளிவாகக் குறிக்கும் சுருதி வீணையின் அமைப்பும், இசை நரம்புகளின் சிற்றெல்லையும், பேரெல்லையும், மெலிவின் மெலிவு, மெலிவு, சமன், வலிவு, வலிவின் வலிவு, வலிவு முக்கோடு, வலிவு நாற்கோடு என்னும் எழு வகை இசைத் தானங்களும், சுருதிப் பகுப்பும், பன்னிரு இராசி வீடுகளிலும் இசை நரம்புகள் நிற்கும் முறையும் இவ் இயலில், விரித்து விளக்கப் பெற்றுள்ளன.

## 4. பாலைத் திரிபியல்

பாலை என்னும் சொல் வழக்கும், மூர்ச்சனைகளாகிய ஏழ் பெரும் பாலைகளும், இசை நிலை இராசிகளும், பன்னிரு பாலையின் பொது உருவங்களும், ஏழ் பெரும் பாலைகளைக் காந்தாரக் கிரமம், ஷட்ஜக் கிரமம், மத்திமக் கிரமம் என்னும் மூன்று கிரமங்களிலும் தோற்றுவித்தலும், பன்னிரு பாலைகளையும் கருவியிலே தோற்றுவித்தலும், வட்டப் பாலை இடமுறைத் திரிபும், எதிர் நிரல்நிறைப் பாலைகளும், துத்தக் கிரமம், விளரிக் கிரமம், புதிய விளரிக் கிரமம் என்பனவும், கிரமங்களுக்கிடையே அமைந்த தொடர்பும், சகோட யாழ்க் கருவிக்கு இசை கூட்டும் முறையும், சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் யாழ் ஆசிரியன் அமைதி கூறிய செய்யுட் பகுதிக்கு உரையும் இவ் இயலில் இடம் பெற்றுள்ளன.

## 5. பண் இயல்

இதன்கண், பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நாற்பெரும் பண்களும், இருபத்தொரு திறங்களும், அவை, அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என வகைக்கு நான்காகி முறையே பதினாறும் எண்பத்து நான்கும் ஆதலும், அவற்றுடன் தாரப்பண் திறம், பையுள் காஞ்சி, படுமலை என்னும் மூன்றும் கூடப் பண்கள் நூற்று மூன்றாதலும், அவற்றின் பெயர்களும் நிரல் பெற விளக்கப் பெற்றுள்ளன. பாலை நிலை, பண்ணு நிலை, ஐவகைக் கிரமங்களிலும், ஏழ்பெரும்பாலைகள் எய்தும் இசை நிலை, பன்னிரு பாலையின் உரு, திணைப் பண்களின் பாலை நிலையும் நரம்படைவும், நூற்று மூன்று பண்களைச் சுருதி வீணையில் அமைத்துக் காட்டுதல், பழந்தமிழ் இசை மரபிற்கும் வட நாட்டு இசை மரபிற்கும் இடையே அமைந்த தொடர்பு, சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் அமைந்த முல்லைப் பண், வேனிற் காதையில் அமைந்த மருதப் பண், திரிகோணப் பாலை, சதுரப் பாலை பற்றிய விளக்கம், இடைக் காலத்து வழக்கில் நாற்பெரும் பண்களும் நால்வகைச் சாதிகளாய் நிற்கும் முறை என்னும் இசை நுட்பங்கள், நன்கு விளக்கப் பெற்றன.

## 6. தேவார இயல்

இவ் இயலில், இசைப்பா வகையும், தேவாரம் என்னும் பெயர்க் காரணமும், தேவாரப் பண்களில் ஒவ்வொரு பண்ணுக்கும் அமைந்த கட்டளை வகையும், தேவாரப் பதிகங்களின் யாப்பமைதியும், பண்-இரதம்-தாளம் என்னும் மூவகைப் பாகுபாடும், தேவாரப் பதிகங்களின் இசை அமைதியும், சங்கீத ரத்தினாகரத்திற் குறிக்கப் பெற்றுள்ள பண்கள் சிலவற்றின் இலக்கணங்களும் விரித்து உரைக்கப் பெற்றன.

## 7. ஒழிபு இயல்

இசை ஆராய்ச்சிக்கு இன்றியமையாத எண்ணலளவை, இசைக்கணிதம், என்னும் கணித நூல் பற்றிய முடிபுகளும், நாற்பத்திரண்டு சுருதிகளும், கிரம வழக்கு வேறுபட்ட இடைக்காலத்துச் சுருதிகளும், அகோபல பண்டிதரும் வேங்கடமகியும் கொண்ட சுருதிகளும் இவ் இயலில் தரப் பெற்றன. ஆயிர நரம்பு தொடுக்கப்பட்ட பெருங்கலம் என்னும் பேரியாழின் நரம்பு அமைதியும், மகேந்திரவர்ம பல்லவனால் குடுமியா மலையில் வரையப் பெற்ற இசைக் கல்வெட்டின் விளக்கமும், வேங்கடமகி கூறும் எழுபத்திரண்டு மேள ராகங்களின் மூர்ச்சனைகளும், சங்கீத ரத்தினாகரம் கூறும் காந்தாரக் கிரமத்தின் மூர்ச்சனைகளும், நரம்புக் கருவிகளை வாசிப்போர்க்குப் பெரிதும் பயனளிக்கின்ற இசைச் சுரங்களின் நிரல்களாகச் சங்கீத பாரிஜாத நூலாசிரியர் கூறும் அலங்காரங்களும், அரபத்த நாவலர் கூறிய தாளங்களின் அமைப்பும், தொல்காப்பியனார் கால முதல் அருணகிரிநாதர் காலம் வரை, தமிழ் நாட்டில் வளர்ந்து சிறந்த இசை நூல் வரன்முறையும், முடிபுரையாக இந் நூலாசிரியர், தமது இசை ஆராய்ச்சியிற் கண்டுணர்த்திய அரிய முடிபுகளும் இவ் இயலில், தெளிவாகக் காட்டப் பெற்றன.

தேவாரப் பண்களின் கட்டளை வகையினைப் புலப்படுத்தும் தேவார இசைத்திரட்டும், அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் மேற்கோளாகக் காட்டியனவும், பிங்கலந்தையிற் காணப்படுவனவும் ஆகிய இசை நாடகச் சூத்திரங்களும் இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தரப் பெற்றுள்ளன.

## யாழ் நூலின் சிறப்பு

பாரத நாட்டின் தென் பகுதியாகிய தமிழகத்திலே, பன்னூறாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி வளர்ந்த இசைக்கலையின் நுட்பங்களையும், பழந்தமிழர் கையாண்ட

யாழ்க் கருவியின் அமைப்பினையும், அக்கருவியினை நிலைக்களமாகக் கொண்டு தோன்றிய ஏழ் பெரும் பாலை, பன்னிரு பாலை, நூற்று மூன்று பண்கள் என்னும் இசை உருவங்களையும் வரலாற்று முறையில் நின்று, சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், முதலிய பழந் தமிழ் நூல்களின் துணை கொண்டும், சங்கீத ரத்தினகரம், சதுர் தண்டிப் பிரகாசிகை முதலிய வட மொழி நூல்களின் துணை கொண்டும், எண்ணூல், பூதநூல் முதலிய அறிவியல் நூல்களின் துணை கொண்டும் நுண்ணிதின் ஆராய்ந்து விளக்கும் இசைத் தமிழ் இலக்கண நூலாகத் திகழ்வது, அருண் மிகு விபுலாநந்த அடிகளார் இயற்றிய இவ் யாழ் நூலே ஆகும்.

ஆயிரம் ஆண்டுகளாக வழக்கிழந்து மறைந்து போன யாழ்க் கருவியின் தொன்மை வடிவத்தையும், அதன்கண் வாசிக்கப்பெற்ற பழந் தமிழ் இசை நுட்பங்களையும், நுண்ணிதின் ஆராய்ந்து காணும் பணியினை மேற்கொண்ட இந் நூலாசிரியர், 'மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்' எனத் தொல்காப்பியர் அறிவுறுத்திய ஆய்வு முறையைக் கடைப்பிடித்துப் பண்டைத் தமிழ் நூல்களிற் காணப்படும் இசைநூற் குறிப்புக்களை ஒருங்கு தொகுத்து வகைப்படுத்தி ஒப்பு நோக்கி ஆராய்ந்துணரும் முறையில் இந் நூலை இயற்றியுள்ளார். யாழ்க் கருவியின் இலக்கணம், பத்துப்பாட்டில் நான்கு பாட்டுக்களில் தனித்தனியே உவமை வாயிலாகக் கூறப்பட்டுளது. ஒரு பாட்டிற் காணப்படாத சிறப்பியல்பு, ஏனைய பாடல்களிற் கூறிய உவமங்களால் தெளிவுபடுகின்றது. இவ்வாறே, நாற்பெரும் பண்களின் இலக்கணம், சிலப்பதிகாரத்தில் ஐந்து இடங்களில் தனித் தனியே கூறப்பட்டுள்ளது. அவற்றை ஒருங்கு வைத்து நோக்குமிடத்துப் பெரும் பண்ணின் இலக்கணம் தெளிவாகப் புலப்படுகின்றது என்பதனை அடிகளார், யாழ் நூல் முடிவுரையில் எடுத்துக் காட்டுகின்றார்.

## யாழ் நூலின் இசை விளக்கம்

சிலப்பதிகாரத்தில், யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்த விரிவுரையாகத் தொடங்கப் பெற்ற இவ் இசை ஆராய்ச்சி, மேலும், பல துறைகளில் விரிவடைந்தது. இந் நூல், தமிழ்நாட்டில், வழக்கொழிந்து மறைந்த இசைக்கலையினை வகுத்துரைக்கும் இசை நூல் இலக்கணமாகத் திகழ்கின்றது. நூற்று மூன்று தமிழ்ப் பண்களின் இசை உருவங்களை நிரற்படுத்தித் தந்தும், அப் பண்களை இசைத்தற்கு வேண்டிய இசைச் சுரங்களின் அலகு நிலைகளைக் குறிப்பிட்டும் பல்லாண்டுகளாக வழக்கிழந்து மறைந்து கிடந்த பழந்தமிழ் இசை மரபுக்கு இந் நூல் புத்துயிர் அளிக்கின்றது. கிரம வழக்கு வேறுபட்டுள்ள இக் காலத்தில், பண்டைக் காலத் தமிழ் மக்கள் கொண்ட இருபத்திரண்டு சுருதிகள் இவையென உணர்த்தி, இருபத்து மூன்றுவதாக நின்ற பிரமாண சுருதியெனும் விதியிசையின் அளவினையும், அது அளவிற் சிறிதாயினும் எண்ணிக்கைக்கு ஈரலகு பெறும் என்னும் பேருண்மையினையும் நன்கு விளக்கிச் சுருதி வீணை என்னும் கருவியையச் செய்து முடித்து, இந் நூல், இடைக்காலத்தில் நேர்ந்த வழுவினைக் களைந்து இசை ஆராய்ச்சிக்கு ஒளி வழங்கியுள்ளமை குறிப்பிடத் தகுவதாகும். ஐவகைக் கிரமங்களின் அமைப்பினை எடுத்துக் காட்டிக் கிரம வழக்கினைப் பண்டு போல் என்றும் நிலவச் செய்ததும் இந் நூலேயாகும்.

கி.பி. ஏழாம் நூற்றுண்டில் குடுமியாமலையில் மகேந்திர வர்மனல் வரையப்பெற்ற இசைநூற் கல்வெட்டின் பொருள், ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி இந் நூலில் தெளிவாக விளக்கப் பெற்றது.

எழுபத்திரண்டு மேள ராகங்களை வகுத்துக் கருநாடக சங்கீதத்தை முறைப்படுத்திய வேங்கடமகி என்பார் கையாண்ட சதுர் தண்டி வீணை என்பது, பஞ்ச சுருதி ரிஷபத்தில் சுத்த காந்தாரமும், பஞ்ச சுருதி தைவதத்தில் சுத்த நிஷாதமும் பேசுவது எனத் தெளிவு படுத்தி, முந்நூறுண்டுகளாக வழக்கற்ற வீணையினை மீண்டும் உருப்படுத்திக் காட்டி, அதன்கண் எழுபத்திரண்டு மேளங்களின் இசை அமைப்பினை விளக்கிய பெருமை, இவ் யாழ் நூலுக்கு உரியதாகும்.

ஆயிர நரம்புடைய பெருங்கலம் என்னும் பேரியாழின் கணக்கினைக் கண்டறிந்து, அதனை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புக்களை இந் நூல் தெளிவாக எடுத்து உரைக்கின்றது.

அரங்கேற்று காதையில், மாதவி வாசித்த யாழ்க் கருவியின் அமைப்பும், பாடிய இசையின் அமைப்பும் இந் நூலில், விரிவாக விளக்கப் பெற்றன. கோடபதி எனவும், சகோட யாழ் எனவும் பெயர் பெற்று விளங்கியதும், இளங்கோவடிகளால் 'செம் முறைக் கேள்வி' எனக் குறிக்கப் பெற்றதும் ஆகிய யாழ்க் கருவியின் இசை, தமிழகத்தில் மீண்டும் பரவுதற்கு இந் நூல் துணை புரியும் என்பது, நூலாசிரியரின் உள்ளக் கிடக்கை ஆகும்.

இந் நூலின் தேவாரவியல், தேவாரத்துக்கு உரிய தமிழ்ப் பண்களையும், யாப்பமைதி கட்டளையமைதி ஆகியவற்றையும் விளக்கு

வதாய்த் தேவாரத்தைப் பயில்வோர்க்கு மிகவும் பயன் தருவதாகும். சிலப்பதிகார உரையில் அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் எடுத்தாளுகின்ற பாலை, இளி (ஷட்ஜம்) முதல், உழை (நிஷாதம்) ஈருகக் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் குரற் (மத்திமக்) கிரமத்து எதிர் நிரல் நிறைக்கு உரியது என்பது, யாழ் நூல் ாகடு ஆம் பக்கத்தில் தெளிவாகக் காட்டப் பெற்றது. இந் நூல் ஒழிபியலிற் கூறப்பட்ட எண்ணலளவை, இசைக் கணிதம் முதலிய கணக்குகள், இசை ஆராய்ச்சி முடிபினை உணர்தற்கு இன்றியமையாதன. இசை நரம்புகளின் அசைவெண் விகிதம், நரம்பு நீள விகிதம், சதவிலக்கம் இவற்றைக் கணக்கிடும் முறைகளும், துளைக் கருவியினை முறைப்படி அமைக்கும் வழியும், ஆயிர நரம்பு யாழுக்கு அடிப்படையாகிய இருநூறு சுருதிகள் தோன்றும் முறையும்; பிறவும் இந் நூலில் தெளிவுபடுத்தப்பெற்றன.

சங்க காலத் தொடக்கத்தில், தமிழ் நாட்டில் வழங்கிய யாழ்க் கருவி, கோடு வளையப் பெற்றதாய்க் கண்ணுக்கினிய தோற்றப் பொலிவின்றிச் செவிக்கினிய இசை நலங்களைத் தந்தது. இளங்கோவடிகள் காலத்தில், இக் கருவியிலுள்ள கோடு என்னும் உறுப்பின் வளைவினைச் சிறிது மாற்றி நேராக்கிக் கண்ணுக்கினிய தோற்றம் வாய்ந்த செங்கோட்டியாழ் முதலிய கருவிகள் அமைக்கப் பெற்றன. ஒவ்வொரு சுரத்திற்கும், தனித் தனி நரம்புடையது யாழ்க்கருவி. ஒரு நரம்பிலேயே பல சுரங்களையும் வாசித்தற்கேற்ற தான நிலைகளைக் கொண்டது, பிற்காலத்து வீணைக் கருவி. யாழும் வீணையும் இருவேறு இசைக்கருவிகள் என்பதனைத் திருமுறை ஆசிரியர்கள், தெளிவாகக் குறித்துள்ளார்கள். சங்கச் செய்யுட்களில் யாழைப் பற்றிக் காணப்படும் குறிப்புக்களையும், அமராவதி, கோலி என்னும் ஊர்களிற் கிடைத்த யாழ்க் கருவியின் உருவச் சாயலையும், தாராசுரம், திருவெருக்கத்தம்புலியூர் ஆகிய ஊர்களில் உள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவுருவத்தில் அமைந்த யாழ்க்கருவியின் உருவத் தோற்றத்தையும் கூர்ந்து நோக்கிய விபுலாநந்த அடிகளார், பண்டைத் தமிழர் வாசித்த யாழும் இக் காலத்து வீணையும் வெவ்வேறு கருவிகள் என்பதனைத் தெளிவாக உணர்ந்து, பன்னூறாண்டுகளாக மறைந்து போன யாழ்க் கருவியினை உருவாக்கி, அதன் வாயிலாகப் பண்டைத் தமிழர் வளர்த்த இசைக் கலையின் நுட்பங்களை உலகிற்கு உணர்த்தும் முறையில், யாழ் நூல் என்னும் இந் நூலை இசையுலகிற்கு வழங்கியுள்ளார்கள். 5-6-1947ல் வெளிவந்த இந் நூல், 22-8-74ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால், இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெற்றுளது.

வரலாற்று முறையிலும், அறிவியல் முறையிலும் பண்டைத் தமிழிசையின் நுட்பங்களை ஆராய்ந்து விளக்கும் இசைத் தமிழாராய்ச்சி நூலாகிய யாழ் நூலை நன்கு பயின்று, இந் நூலில் தரப்பெற்றுள்ள இசை ஆராய்ச்சிக்கு வேண்டப்பெறும் கணித முறைகளையும், பிற அரும்பொருட் குறிப்புக்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து, திசையனைத்தும் தமிழ்நாட்டின் இசைநலம் பரவத் துணை புரிதல், இயல் இசை வாணர்களாகிய தமிழ் அன்பர்களின் தலைசிறந்த கடமையாகும்.

பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டம் **24-27** டிசம்பர் **1949**

**(சென்னை மெமோரியல் மண்டபம்) ஆராய்ச்சி நடைபெறும் தோற்றம்**

டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார், திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், திரு. மு. அ. சிதம்பரம், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, திரு. எம். பி. பெரியசாமித்தூரன் முதலியோரும், ஓதுவார்களும்.



**சென்னை, மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற பண் ஆராய்ச்சி முதல் கூட்டத்தில், ஓதுவார்கள் ஆராய்ச்சி நிகழ்த்தும் தோற்றம். *24–12–1949.***

தேவாரப் பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட இசைக் கலைஞர்களும், ஓதுவார்களும்,
பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரும். 24—12—1949



**பண் ஆராய்ச்சியின் மூன்ருவது கூட்டம்**

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிருர்கள். டாக்டர் சர். ஆர்.கே. சண்முகஞ் செட்டியார், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் முதலியோரும், ஓதுவார்களும் அமர்ந்துள்ளனர். *26-12-1951.*



**பண் ஆராய்ச்சியின் ஐந்தாவது கூட்டம்**

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிருர்கள். *26–12–1954.*

பண் ஆராய்ச்சியின் ஆருவது கூட்டம்

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிருர்கள்.
28-12-1955

பண் ஆராய்ச்சியின் ஆருவது கூட்டம்

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுச் செயலாளர் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் முன்னுரை நிகழ்த்துதல். 29–12–1955.



பண் ஆராய்ச்சியின் ஏழாவது கூட்டம்

திறப்பாளர், ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி அவர்களையும் சங்கத்தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 24-12-1956.



பண் ஆராய்ச்சியின் எட்டாவது கூட்டம்

திறப்பாளர், நாகர்கோயில் ''தொண்டன்'' ஆசிரியர் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் கும்பகோணம் திரு. கே. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 24-12-1957.

பண் ஆராய்ச்சியின் எட்டாவது கூட்டத்தின்போது நடைபெற்ற பல்லக்கு நடனத்தினைப் பலரும் கண்டு மகிழ்தல். *26—12—1957*



**பண் ஆராய்ச்சியின் ஒன்பதாவது கூட்டம்**

திறப்பாளர், திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களையும், தலைவர் இசைப் பேரறிஞர் கும்பகோணம் திரு. கே. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். *28–12–1958.*

# யாழ்: இசை எழாலும் கரணங்களும்

**பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன்,**

முதல்வர், ஸ்ரீ சத்குரு சங்கீத வித்தியாலயம், மதுரை

---

யாழ்க் கருவியின் உறுப்புக்கள், பத்தர், கோடு, ஆணி, நரம்பு முதலியவை என்றும், பண்ணல் முதலிய எட்டு வகைகளில் யாழில் இசை எழுப்புவர் என்றும், வார்தல் முதலிய எட்டுக் கரணங்களால் யாழ் வாசிப்பர் என்றும் சிலப்பதிகாரத்தில் உள்ள கானல் வரிக் கட்டுரை அறிவிக்கின்றது :

''சித்திரப் படத்துட் புக்கு. .
. . செவியின் ஓர்த்து''

அரும்பதவுரை ஆசிரியர், மேற்கோள் சூத்திரங்கள் பல தந்து, இவற்றை விளக்கியுள்ளார். அவற்றின் துணை கொண்டு, யாழில், இசை, எழால், இசைக் கரணங்கள் ஆகியவற்றைக் காண்போம்:

### பண்ணல்

'வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்கும்
இணைவழி யாராய்ந்து இணைகொள முடிப்பது
விளைப்பறு மரபிற் பண்ணல் ஆகும்.'

வலக்கைப் பெருவிரலால் குரல் நரம்பை மீட்டி, சிறு விரலால் இளி நரம்பை மீட்டி, அவ் இரண்டு நரம்புகளும் ஒத்திசைக்குமாறு சுருதி செய்துகொண்டு வலிவு, மெலிவுகளில் நிற்கும் குரல், இளி நரம்புகளையும் சுருதி சேர்க்க வேண்டும்.

'' ஏற்றிய குரல்இளி என்றிரு நரம்பின்
ஒப்பக் கேட்கும் உணர்வினள் ஆகி''

என்று இளங்கோ அடிகள் கூறியுள்ளபடி, இவ்விரு நரம்புகளையும் ஒத்திசைக்கும்படி சேர்த்தல், யாழ் வாசிக்கத் தொடங்குமுன் இன்றியமையாததாகும். ''சுருதி பண்ணிக் கொள்'' என்ற வழக்கு இன்றும் உள்ளது.

மேனாட்டு ஹார்ப் (Harp) என்ற கருவியிலும் குரல் (C) நரம்பை வலக்கைப் பெருவிரலாலும், இளி (G) நரம்பை வலக்கைச் சிறு விரலாலும் இசைப்பது, ஒப்புநோக்குதற்குரியது.

### பரிவட்டணை

''பரிவட் டணையி னிலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவிற் றாகி
வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ
இடக்கை விரலி னியைவ தாகத்
தொடையொடு தோன்றியும் தோன்றாதாகியும்
நடையொடு தோன்று நயத்த தாகும்.''

பண்ணல், பரிவட்டணை ஆகிய இரு இசை எழால்களில், வலக்கைப் பெருவிரல், சிறு விரல், இடக்கை விரல்கள் ஆகியவற்றைக் கொண்டு நரம்புகளை மீட்டி வாசித்தனர். ஆகவே, யாழ்க்கருவி, ஹார்ப் (Harp) போன்ற கருவியே என்பது தெளிவாகின்றது.

### ஆராய்தல்

''ஆராய்தல் என்பது அமைவரக் கிளப்பிற்
குரல்முத லாக இணைவழி கேட்டும்
இணையி லாவழிப் பயனொடு கேட்டும்
தாரமும் உழையும் தம்மிற் கேட்டும்
குரலும் இளியும் தம்மிற் கேட்டும்
துத்தமும் விளரியும் துன்னறக் கேட்டும்
விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும்
தளரா தாகிய தன்மைத் தாகும்.''

முதலில் குரல் முதலியவற்றின் இணை நரம்புகளைச் சுருதி செய்து கொள்ள வேண்டும். அதாவது வலிவு, மெலிவுத் தானங்களில் நிற்கும் குரல் முதலிய நரம்புகளை இணை (Unison) யாகச் சேர்க்க வேண்டும். பின் வரும் இரட்டைகளை ஒத்திசைக்குமாறு செய்தல் வேண்டும் :

தாரம் (நி), உழை (ம):
குரல் (ச), இளி (ப);
துத்தம் (ரி), விளரி (த);
விளரி (த), கைக்கிளை (க).

ஏழிசை நரம்புகள், ஒன்றற்கொன்று உள்ள இடைவெளி, மாத்திரைகளாகக் கணக்கிடப் பெற்றுள்ளன :

| | | | |
|---|---|---|---|
| குரல் | — | 4 | மாத்திரை |
| துத்தம் | — | 4 | ,, |
| கைக்கிளை | — | 3 | ,, |
| உழை | — | 2 | ,, |
| இளி | — | 4 | ,, |
| விளரி | — | 3 | ,, |
| தாரம் | — | 2 | ,, |

குரலிலிருந்து மற்ற நரம்புகளின் மாத்திரை அளவைக் கணக்கிட்டால், அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| குரல் | — | 0 |
| துத்தம் | — | 4 |
| கைக்கிளை | — | 7 |
| உழை | — | 9 |
| இளி | — | 13 |
| விளரி | — | 16 |
| தாரம் | — | 18 |
| வலிவுக் குரல் | — | 22 (0) |

குரலிலிருந்து ஐந்தாம் நரம்பாகிய இளி 13ஆவது மாத்திரையில் உள்ளது. 18ஆம் மாத்திரையில் உள்ள தாரத்திலிருந்து, 9ஆம் மாத்திரையில் உள்ள உழை ஐந்தாம் நரம்பு; 13ஆம் மாத்திரையில் உள்ளது :

$$18 + 13 = 31 ; \quad 31 - 22 = 9.$$

உழையிலிருந்து குரல் 13ஆம் மாத்திரையில் உள்ளது :

$9 + 13 = 22$ அல்லது 0

குரலிலிருந்து இளி 13ஆம் மாத்திரையில் உள்ளது. இளியிலிருந்து துத்தம் ஐந்தாம் நரம்பு; 13ஆம் மாத்திரையில் உள்ளது.

$$13 + 13 = 26 \quad ; \quad 26 - 22 = 4.$$

துத்தத்திலிருந்து ஐந்தாம் நரம்பாகிய விளரியை 13ஆம் மாத்திரையில் கொண்டால்,

$4 + 13 = 17$ ஆவது மாத்திரையில் வர வேண்டும்.

அவ்வாறே விளரியிலிருந்து ஐந்தாம் நரம்பாகிய கைக்கிளை $17 + 13 = 30$ ; $30 - 22 = 8$ ஆவது மாத்திரையில் வரவேண்டும்.

இவ் இரண்டையும் 17, 8 ஆகக் கொள்ளாமல், ஒரு மாத்திரை குறைத்து 16,7 ஆவது மாத்திரையாகக் கொள்ள வேண்டும் என்பதனால்தான் சூத்திரத்தில்,

''விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும்'' என்று தெளிவாக்கப் பெற்றுள்ளது.

தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு ஆகிய எழால்களைப் பற்றி அரும்பதவுரையில் உள்ள மேற்கோள் சூத்திரங்களில் காண்க.

**யாழ் இசைக் கரணங்கள்**

**வார்தல்** – சுட்டுவிரற் செய் தொழில்

**வடித்தல்** – சுட்டு விரலும் பெரு விரலும் கூட்டி, நரம்பை அகமும் புறமும் ஆராய்தல். நரம்பை மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் மீட்டுதல். வீணை மீட்டுவதில், இச் செய்கை, இன்றும் காணப்படுகின்றது.

உந்தல் – நரம்புகளை உந்தி, வலிவிற்பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரல் பட்டதும் நிரல் விழி பட்டதும் என்று அறிதல்.

இதன் பொருள் தெளிவாக இல்லை.

**உறழ்தல்** – ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்.

| | | |
|---|---|---|
| குரல், | கைக்கிளை, | இளி; |
| துத்தம், | உழை, | விளரி; |
| கைக்கிளை, | இளி, | தாரம்; |
| உழை, | விளரி, | குரல்; |

என்று மீட்டும்போது, மேனாட்டிசையில் உள்ள கார்டு (Chord) என்ற முறை அமைந்து இருப்பதைக் காண்க.

| | | |
|---|---|---|
| குரல், | உழை, | தாரம்; |
| துத்தம், | இளி, | குரல்; |

என நாலாம் நரம்பாகிய நட்பு நரம்பை ஆராய்தலும் காண்க.

**உருட்டல்** : இடக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், சுட்டொடு பெருவிரல் கூட்டி உருட்டலும், இரு பெரு விரலும் இயைந்து உடன் உருட்டலும் என வரும்,

சுட்டு விரலையும், பெரு விரலையும் கொண்டு இயைத்து மீட்டுவதனல், ஐந் தாம் நரம்பாகிய கிளை நரம்பை ஆராய்த லாகும்.

தெருட்டல்

''தெருட்டல் என்றது செப்புங் காலை
உருட்டி வருவ தொன்றே மற்ற
ஒன்றன் பாட்டுமடை யொன்ற நோக்கின்
வல்லோர் ஆய்ந்த நூலே ஆயினும்
வல்லோர் பயிற்றும் கட்டுரை ஆயினும்
பாட்டொழிந் துலகினில் ஒழிந்த செய்கையும்
வேட்டது கொண்டு விதியுற நாடி''

என வரும். இவை இசைத் தமிழ்ப் பதினறு படலத்துட் கரணவோத்துட் காண்க —

*சிலப் 7: கட்டுரை 12–16 அரும்பதவுரை.*

**அள்ளல்** என்னும் கரணம் பற்றிய மேற் கோள் சூத்திரம் காணப்படவில்லை.

**பட்டடை :** வண்ணப் பட்டடை என்றும் ஏருடைப் பட்டடை என்றும் குறிப்பிடப் பெறும். இச் சொல், நரம்புகளில் இளிக்குப் பெயர் என்றும், இளிக் கிரமம் என்று பொருள் படும் என்றும் உரையாசிரியர்கள், அரங்கேற்று காதை உரையில் கூறியுள்ளனர்.

இசை நரம்புகளின், பிறப்பைக் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார்; 'தாரம் முதலில் தோன்றிய நரம்பு' என்றும் தாரத்திலிருந்து உழை, உழையில் குரல், குரலில் இளி, இளி யுள் துத்தம், துத்தத்துள் விளரி, விளரியில் கைக்கிளை என்ற முறைப்படி இவை பிறக் கும் என்றும் உரைத்துள்ளார்.

தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்னும் இவை, ஒன்றற் கொன்று ஐந்தாம் நரம்பாக அமைந்துள் ளமை காண்க.

அதனல் இக் கிரமம், இளிக்கிரமம் எனப் பட்டது, இளி ஐந்தாம் நரம்பாதலின்.

# இராகங்களில் பழந் தமிழ்ப் பண்களின் செல்வாக்கு

**சேலம் திருமதி எஸ். செயலட்சுமி,**

சென்னை.

நம் நாட்டு இசை, இராகங்களை அடிப் படையாகக் கொண்டு வளர்ந்துள்ளது. ஒற் றைச் சுரங்களால் கோவை செய்து பாடப் பெறும் இம் முறை, melodic system என்று கூறப்படும். மேனாட்டு இசையறிஞர்கள், நம்முடைய இராகங்களிலே இசைக்கப்படும் கணக்கற்ற நுண்சுரங்களைக் கேட்டு மலைக் கின்றனர். மேனாட்டு இசை, பற்பல சுரங்கள் ஒருங்கே ஒலிக்கும் harmony என்ற முறை யைப் பின்பற்றியது; மேனாட்டு இசையின் வடிவம், பேருருவம் பெற்று, விண்ணும் மண்ணும் அளாவியதாகத் தோன்றினாலும் அவர்கள் கையாளும் சுரங்கள், பன்னி ரண்டு அரைச்சுரங்கள் தாம் (12 semitones.) பொதுவாக, இந்திய இராகங்களில், அரைச் சுரங்களைக் காட்டிலும் நுண்ணியதான காற் சுரங்கள், அரைக்காற் சுரங்கள் பெருமளவில் பயன்படுத்தப் பெறுகின்றன. வட இந்திய இசை, சில நுண் சுரங்களைக் கையாள்கிறது. ஆனால், தென்னிந்திய இசையில் வழங்கப் பெறும் சுரங்களைக் கணக்கிடும்போது, வட இந்திய இசையும் மிக எளிதாகக் காணப்படு கிறது. தென்னிந்திய இசையைக் கற்கவும், ஆராய்ச்சி செய்யவும் இந் நாட்டிற்கு வரும் மேலை நாட்டு இசையறிஞர்களும், இசைப் பேராசிரியர்களும் இந்த இசையின் தனித் தன்மையையும், இலக்கணத்தையும் கண்டு திகைக்கின்றனர். இதுவரை கற்றும், இசைத் தும் பேணி வரப்பெற்ற இராக வடிவங் களுக்கு இலக்கணம் கூற வேண்டிய பொறுப்பு வாய்ந்த நிலையில், இன்று நாம் இருக்கிறோம்.

இன்று கர்நாடக இசையில் வழக்கில் இருந்து வரும் இராகங்களின் வரலாறு, அவை தோன்றிய காலம், எந்த இசை-இலக்கண நூலை அடிப்படையாகக் கொண்டு அவை வளர்ந்தன? ஆகிய கேள்விகள், நம் முன்னே எழுகின்றன. இசை மாமேதை களான தியாகையர், தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர், கடந்த இருநூறு ஆண்டுகளில் தோன்றியவர்கள். அவர்கள், தம்முடைய பாடல்கள் மூலம் இராகங் களுக்கு நிலையான உருவத்தை ஏற்படுத்தி, இசையுலகிற்கு ஒப்பற்ற தொண்டு புரிந் துள்ளனர். ஆனாலும் அவர்கள் காலத்திற்கு முன்பே இராகங்கள், பல காலமாக வழக் கில் இருந்து வந்துள்ளன என்பதை இசை நூல்கள், நமக்கு அறிவுறுத்துகின்றன.

இப்போது வழக்கில் உள்ள இசை, பழைய காலம் தொட்டு நம்மிடையே வழங்கி வந்துள்ளது என்றால், இதற்கு அடிப்படை யான இலக்கண நூல்கள் நம்மிடையே உள்ளனவா? அப்படியாயின் அவை யாவை? என்ற கேள்விகள் எழுகின்றன.

இசைக் கலையானது, நம் நாட்டிலே, சென்ற பல நூற்றாண்டுகளாக, குரு சிஷ்ய-பரம்பரை வழியாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. உணர்ச்சி பாவம் ததும்பும் பல இராகங்களும், அவற்றுள் பொன்னில் வயிரம் பதித்தாற் போன்று இசைக்கப்படும் நுண்சுரங்களும் நமக்கு இவ் உண்மையை உணர்த்துகின்றன. நமது இசைக் கலையைப் பிறநாட்டினரும் போற்ற வேண்டுமானால், அவர்களுக்கு அக் கலையின் இலக்கணத்தையும் நாம் எடுத்துச் சொல்ல வேண்டுமே? இசைக் கலை, நம் நாட்டில் மட்டும் உலவி வந்த காலம் மலையேறி விட்டது! கர்நாடக இசை யாகிய தென்னிந்திய இசை, இப்போது உலகம் முழுவதும் பரவி நிற்கும் இசையாக அல்லவோ ஆகிவிட்டது. நம் இராகங்களின் இலக்கணத்தை ஆராயும்போதுதான், பல சிக்கல்கள் தோன்றுகின்றன. காரணம்—நமது இராகங்கள், பியானோ, ஹார்மோனியம் போன்ற பன்னிரண்டு அரைச் சுரங்கள் கொண்ட வாத்தியங்களின் அளவுக்கு உட் படாதனவாக இருக்கின்றன.

இந்திய இசை வித்துவான்களை, ''நீங்கள் பாடும் இராகங்களுக்கு இலக்கணம் கூற முடியுமா?'' என்று கேட்டால், அவர்கள், பெரும்பாலும், ''பாடும் இசையை எப்படிப் பேச்சில் சொல்ல முடியும்? இசை, பாடுவதற் குத்தானே இருக்கிறது? அதைப் பற்றிப்

பேசி என்ன பயன்?'' என்பார்கள். மேலும் கேட்டால், ''என் குருநாதர் இவ்விதம்தான் இந்த ராகத்தை எனக்குக் கற்பித்தார். அவ்விதமே நானும் பாடிக் கொண்டிருக்கிறேன்!'' என்பார்கள். இந்நிலைக்குக் காரணம்—இசைபாடும் முறைக்கும், இலக்கணத்திற்கும் இடையே, இடைக்காலத்தில், பெரும் இடைவெளி ஏற்பட்டு விட்டதே யாகும். இசை பாடும் திறமை பெற்ற வித்துவான்கள், இசை இலக்கண நூல்களைப் பொருட்படுத்துவதில்லை. இலக்கணம் கற்கும் இசைப் பேராசிரியர்களுக்கு இசை பாடும் வன்மை இராது. இசையிலுள்ள நுட்பங்கள் தெரியாது. இவ்விதமாக இசைமுறை, இசை இலக்கணம் (Practice and Theory) ஒன்றை விட்டு ஒன்று வெகுதூரம் விலகிவிட்டது.

இன்று, நமது இசை முறையைத் தக்கபடி விளக்கக்கூடிய இலக்கண நூல்கள், நம்மிடையே இல்லை. 15-வது, 16-வது நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய பல இசை நூல்கள், பன்னிரண்டு அரைச்சுரங்கள் கொண்ட இசையைத்தான் விளக்குகின்றன. காற்சுரம், அதனினும் நுண்ணிய சுரங்கள் Quarter - tone, Micro tone ஆகியவை பற்றி எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை. மேலும் இராகங்கள் தோன்றிய வகை என்ன? இராக வடிவங்கள் எங்ஙனம் அமைக்கப்பட்டன? என்பன போன்ற கேள்விகளுக்கு அவற்றில் எங்கும் விளக்கமில்லை.

ஹெரால்டு பவர்ஸ் என்ற அமெரிக்க இசைப் பேராசிரியர், தமது ''தென்னிந்திய இராக இலக்கணத்தின் அடிப்படை'' (The Background of the South Indian Raga System, P. 17) என்ற நூலில் :– ''1550ஆம் ஆண்டுக்குப் பின் வந்த தென்னிந்திய இசை நூலாசிரியர்கள், பண்டைய நூல்களை ஆதாரமாக வைத்துச் சுருதிகள், பண்டைய இராகங்களின் தோற்றம், அவை வகுக்கப்பட்ட முறை இவைகளைப் பற்றி மிகைபடப் பேசினாலும் அவர்கள், பழைய நூல்களைச் சற்றும் புரிந்து கொள்ளவில்லை என்ற உண்மை நன்றாகப் புலப்படுகிறது. அந் நூல்களை இனியேனும் எவரும் புரிந்து கொள்ள முடியுமா என்பதும் சந்தேகமே! ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது! 16ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல்கள், பழைய கிராமம், மூர்ச்சனை, ஜாதி போன்ற அடிப்படைகளை விடுத்து, ஒரு புதிய மேள வகுப்பு முறையை வளர்ப்பதில், தீவிரமாக ஈடுபட்டன என்று தெரிகிறது'' என்று கூறியுள்ளார்.

இராகங்களின் இலக்கணத்தைத் தேடி, நாம் 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திற்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். 12வது நூற்றாண்டில் தோன்றிய சாரங்கதேவர் என்பார், தமது சங்கீத ரத்னாகரம் என்ற நூலில், 22 சுருதிகள் என்ற காற்சுரங்களைக் (Quarter tone) கையாளும் முறையையும், இராகங்கள், ஜாதிகள், மூர்ச்சனைகளைப் பற்றியும் கூறியுள்ளார். சாரங்கதேவர், பரதரது நாட்டிய சாத்திரத்தைத் தழுவி எழுதியுள்ள நூலே சங்கீத ரத்னாகரம். அந் நூலைப் படிப்போர் பலர், பல முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டு, மேலும் குழப்பத்தை அடைகின்றனர். நமக்கு இப்போதுள்ள இசையறிவு, அந் நூல்களைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானதாக இல்லை எனத் தெரிகிறது.

இராகம் என்ற சொல் எப்போது ஏற்பட்டது என்று, ''இந்திய இசையின் வரலாறு'' என்ற நூலை எழுதிய ஓ. கோசுவாமி என்பார் கூறுவது: ''பரதருடைய காலத்தில், இராகம் என்னும் சொல் வழங்கவில்லை. ஜாதி என்ற சொல்லே, இராகம் என்று நாம் இப்போது கொள்ளும் பொருளில் குறிக்கப் பெற்றது. அவர் மேலும் கூறுவது:— ''இந்திய இசையின் அடுத்த முன்னேற்றத்தை மதங்கரின் 'ப்ருஹத் தேசி' என்ற நூலில் காண்கிறோம். இந் நூலின் பெயரே, இந் நூல், நாட்டிலே ஏற்கெனவே செழித்திருந்த தேசிய இசையைப் பற்றியது என்று கூறுகிறது. இங்கேதான் இராகம் என்ற சொல், முதன்முதலாக வருவதைக் காண்கிறோம். இராகத்தைப் பற்றி மதங்கர், ''அழகிய கமகங்களோடு கூடிய சுரக்கூட்டங்கள் என்றும், மக்கள் கேட்டு இன்புறும் தன்மையது என்றும் கூறுகிறார்.'' கோசுவாமி அவர்கள் மேலும் குறிப்பிடுவது : ''முதன் முதலாக மதங்கர்'' நாட்டு இசை, தேசிய இசையின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். வேறு எந்த நூலிலும் பண்டைய இசையைப் பற்றிய விவரம் ஒன்றும் காணப்படவில்லை. மதங்கர், முதன் முதலாகப் பண்டைய இசையின் சிறப்புக்களைக் கூறுவதோடு, அதைச் சார்ந்த இராகங்களின் பெயர்ப் பட்டியலையும் கொடுக்கின்றார். (The Story of Indian Music—By O. Goswami, p. 46, 52, 53.) வட மொழி நூல்களை ஆராய்பவர், இசையின் அடிப்படை இலக்கணத்தைக் காண இயலாது திகைக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, தமிழிசை நூல்களில், இராகம் என்ற சொல் வழங்கப்படாமல் இல்லை. உதாரணமாகப் பல பண்களின் பெயர்கள், இராகம் என்ற சொல்லையே அணிந்துள்ளன. அவையாவன: தக்கராகம்,

பழந்தக்கராகம், நட்டராகம், மேகராகக் குறிஞ்சி, அராகம், சோமராகம் ஆகியவை.

பண்களின் இலக்கணத்தைப் பற்றிச் சிலப்பதிகாரப் பெருங்காப்பியம், நமக்குப் பல செய்திகளைத் தருகின்றது. சிலப்பதிகார காலத்திலேயே, இசை மிகச் சிறந்த நிலையை அடைந்திருந்தது என்று நமக்குத் தெரிகிறது. ஆனால், அப்போதிருந்த இசை-வழக்கு, இக்காலத்தில் நமக்குள்ள இசையறிவுக்கு எட்டுவதாக இல்லை. அக்காலத்தில், ஒரே சுருதியை ஆதாரமாகக் கொள்ளாது, இக்காலத்து, மேனாட்டு இசையைப் போல, அவ்வப்போது சுருதிகளை மாற்றிப் பண் இசைத்துள்ளார்கள். பழந் தமிழிசை நூல்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டதால், மூடப் பட்டுக் கிடக்கும் அந்த இசைச் செல்வத்தை அணுகுவதே நமக்கு மிகக் கடினமாகத் தெரிகிறது. தமிழிசையுடன் ஒருங்கு திகழ்ந்த (contemporary) கிரேக்க இசையைப் பற்றி மேனாட்டில் பல நூல்கள் உள்ளன. மேல் நாட்டினர், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, இராக இசையை (Melodic music) விடுத்துப் பற்பல சுரத்தை ஒரே காலத்தில் இசைக்கும் harmony என்னும் இசையை மேற்கொண்டதால், கிரேக்க இசை போன்ற பழைய இசை முறைகளை முற்றும் மறந்து விட்டனர். ஆனால், இசை இலக்கணத்தைக் குறித்த நூல்கள் பல, அவர்களிடம் உள்ளன. நம்மிடையே இசை முறைகள், பாடும் பழக்கத்தில் உள்ளன ; நூல்கள் மறைந்துவிட்டன. இந் நிலையிலே, பழந் தமிழிசையோடு கிரேக்க இசையை ஒப்பிட்டுப் பார்ப்பதில், நமக்கு நல்ல பயன் ஏற்படலாம் என்பது என்னுடைய நம்பிக்கை. இவ்வித ஆராய்ச்சிகள், தமிழிசை மரபின் தோற்றத்தையும், தொன்மையையும் விளக்கக்கூடும். மேலும் ஆதாரத் தமிழ் நூல்கள், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, மற்றவர்கட்கும் கிடைக்கும் வழி ஏற்பட்டால்தான் உலகிற்குப் பல அரிய உண்மைகள் தெரியவரும்.

தேவார ஆசிரியர்கள் காலத்தில், பண்கள் நன்கு நிலைபெற்று, மக்களிடையே பழக்கத்தில் இருந்தன என்று வரலாறுகள் நமக்குக் கூறுகின்றன. பண் என்பது, பல பெயர் கொண்டதாகத் திகழ்கிறது. சிலப்பதிகார காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் பண் என்பது—பாலை என்றும், யாழ் என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. பாலை, யாழ் என்ற சொற்கள், பல பொருள்களில் பல இடங்களில் வருகின்றன. பாலை என்ற சொல்லும், யாழ் என்ற சொல்லும் பண்ணைக் குறிக்கும் இடங்களில், தாய் இராகங்கள் (Main modes) என்ற பொருளில் வருகின்றன. யாழ் என்ற சொல், வீணை போன்ற நரம்புக் கருவிகளையும் குறிக்கும். குறிஞ்சி யாழ், மருத யாழ், முல்லை யாழ், பாலை யாழ் எனப்படும் இவை, அடிப்படைத் தாய்ப் பண்களைக் குறிக்கும்.

''பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழியென
நால்வகை யாழாம் நாற்பெரும் பண்ணே''

என்று பிங்கலந்தை நிகண்டும்,

''யாம யாழ்ப்பெயர் குறிஞ்சி யாழும்
செவ்வழி யாழ்ப்பெயர் முல்லை யாழும்
பாலை யாழும் மருத யாழுமென
நால்வகை யாழும் நாற்பெரும் பண்ணே''

என்று சேந்தன் திவாகரமும் கூறுகின்றன.

இதேபோல் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை ஆகியவை, இராகங்களைக் குறிக்கின்றன. ஆனால், ஆயப்பாலை, வட்டப் பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை என்பவை, இசை முறைகளைக் (Musical systems) குறிக்கின்றன :

''ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும்.''

இசைத் தமிழானது, நான்கு இசை முறைகளை அல்லது நான்கு பாலை முறைகளைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. அவை ஏழிசை முறை, பன்னிரு இசை முறை, இருபத்து நான்கு கால்சுரங்கள் கொண்ட முறை, இதற்கு மேலும் நுண்ணிய சுரங்களை இசைக்கும் முறை என்பன. இவ்வாறு நான்கு வகையான இசை முறைகள் இருந்தன என்று வேறு எந்த நூலும் அறிவிக்கவில்லை. கிரேக்க இசையைப் பற்றிய நூல், இவற்றில் மூன்று முறைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றது. அவை : Diatonic genus, Chromatic genus, enharmonic genus ஆகியவை.

Diatonic scales, நம் ஆயப்பாலை இசைக்கு ஒத்ததாகும். பன்னிரு அரைச் சுரங்களில், ஏழு சுரங்களை, (ஐந்து முழுச்சுரங்களும் இரண்டு அரைச்சுரங்களும்) எடுத்துப் பாடும் முறை ஆயப்பாலையாகும், செம்பாலை, படுமலை, செவ்வழி, கோடி, அரும்பாலை, விளரி ஆகிய பாலைகள், இந்த நிரலைச் சேர்ந்தவை. இவையே, இக்காலத்துச் சங்கராபரணம், கரகரப்பிரிய, தோடி, கல்யாணி, அரிகாம்போதி, நட-பைரவி ஆகிய இராகங்களாகும். ஏழாவது பாலையான மேற்செம்பாலை, இரு மத்திமங்களை அடுத்தடுத்துப் பெறுகிறது. ஆகவே diatonic ஆயப்பாலை முறையில், இதைப் பாடற்குதவாப் பண் என்றனர். கிரேக்கர் இசையும் இந்த முதல் ஆறு பண்களையே

கைக்கொண்டது என்பது, வியக்கத்தக்க ஒற்றுமையைக் காட்டுகின்றது.

''ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னேரேழ் பாலை நிறுத்தல் வேண்டி''

என்று, ஏழிசை முறையை அரங்கேற்று காதையில், சிலப்பதிகாரம் சொல்கிறது. இம் முறை எளியது; எல்லோரும் பாடற் குரியது.

அடுத்து வருவது Chromatic scales. இம் முறை, அரைச் சுரங்களை அடுத்தடுத்துப் பயன் படுத்துவதாகும். இதற்கு இணையாகத் திரி கோணப் பாலையைச் சொல்லலாம் என்பது என் துணிபு. இசை முறையில் இது ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. வேங்கடமகியின் எழுபத்திரண்டு மேளங்களில் நாற்பது இராகங்கள், இந்த Chromatic முறையைச் சார்ந்தனவாக உள்ளன. எஞ்சிய முப்பத்திரண்டு இராகங்கள், முதல் வகையான diatonic முறையைச் சார்ந்தவை. இந்த இரண்டு முறைகளுக்கும் இடையே கருத்து வேற்றுமை, என்றுமே இருந்து வருகிறது. வேங்கடமகியின் நாற்பது மேளங்கள், பாடற்குதவாப் பண்களாகவே பெரும்பாலும் இருந்து வருகின்றன. இத்தகைய இராகங்களைக் கையாள்வது கடினம்; மிகத் திறமையோடு பாட வேண்டும்; அதிகம் பயன்படுத்தினாலும் இசையின் இனிமை குறையும்.

Diatonic, Chromatic முறைகளின் இடையே உள்ள சச்சரவு, நமது இசையுலகில் மட்டுமல்ல, மேனாட்டு இசையுலகிலும் உள்ளது என்று அறிய, நமக்கு வியப்பு உண்டாகும். இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய இசை என்ற நூலில், ஆர்னால்டு ஷான்பர்க் என்பார், எவ்விதம் இந்தப் பன்னிரு இசை முறையை ஊக்குவித்தார் என்று கூறப்பட்டுள்ளது. வாக்னர் போன்ற மேனாட்டு இசைவல்லுநர்கள், இப் பன்னிரு இசை முறையை அரைச் சுரங்களை அடுத்தடுத்துப் பயன்படுத்தும் முறையைக் கையாள்வதால், இசை எவ்விதம் பல கோணங்களில் முன்னேறக்கூடும் என்று பரிசோதனை செய்து பார்த்தனர். புதிய கருத்துக்கள் பல கிடைத்தாலும் அதனால், இசையின் அழகும் இன்பமும் குறையவும் வாய்ப்பிருக்கிறது என்று, அம்முறையைப் பின்னர்த் தவிர்க்கலாயினர்.

வேங்கடமகி, தமது மேளங்களைச் சுத்த மத்திம, பிரதி மத்திம மேளங்களாகப் பிரித்தார். இரு மத்திமங்களும் ஒருங்கே வரும் இராகம், கர்னாடக இசையில் இல்லாது போயிற்று. இரு மத்திமங்களை-ஒருங்கே கொண்ட வட இந்திய இராகங்கள் பல, மிக அழகியவை; உதாரணம்-கேதார், லலத், பியாக் முதலிய இராகங்கள். பண்டைய தமிழிசையில், இது போன்ற இராகங்கள் இருந்திருக்கின்றன. இப்போது நாம், இத்தகைய இராகங்களை வட இந்தியாவிலிருந்து கடனாகப் பெற்றோம் என்று தவறாகச் சொல்லிக்கொள்கிறோம். பழந்தமிழ் இசைக்கும் வடநாட்டு இசைக்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. காலங்களுக்குத் தக்கவாறு பண்களைப் பாடும் முறையை இன்றும் வடநாட்டவர் கையாள்கின்றனர். தென்னிந்தியாவில், அவ் வழக்கு மடிந்து விட்டது.

மூன்றாவதாகிய வட்டப்பாலை முறை - நாற்சுரங்களை - சுருதி அல்லது அலகுகளைப் பயன்படுத்தும் முறை, கிரேக்க இசையில் Enharmonic system என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வட்டப்பாலை முறை பன்னிரு இராசிகளை அமைத்து, ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு இரண்டு அலகு வீதம் வகுத்துச் சுரங்களை வாதிசம்வாதி முறை- ச-ப, ச-ம உறவில் ஓரலகு குறைத்தும் கூட்டியும் பாடும் முறையாகும். இந்த வகையைச் சார்ந்தவையே, நமது மூர்ச்சனை இராகங்களாகிய அடாணா, நீலாம்பரி, சாமா, சகானா, ஆனந்த பைரவி போன்ற இராகங்கள். பெரும்பண்களும், இசை வல்லுநர்கள் பாடும் திறனுக்கு ஏற்ப எண்ணற்ற நுண் சுரங்களைப் பெறுகின்றன. மேற் சொன்ன மூன்று முறைகளை Three genera என்று கிரேக்க இசை சொல்லும்.

தமிழிசை, நான்காவதாகச் சதுரப்பாலை என்ற Micro tonal இசை முறையைப் பற்றியும் பேசுகிறது. பல நுண்சுரங்கள் அடங்கிய இராகங்கள் நமக்கு கிடைத்ததற்கான கருவூலம், இந்த இலக்கணமே என்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

''நாற்பெரும் பண்ணும் சாதி நான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப் படுமே''

பெரும்பண்களின் திரிபு முறையால், பண்களும் திறன்களும் பலவிதமான சுரக் கூட்டங்களுடன் உயிர் பெற்றன. ஒவ்வொரு பெரும்பண்ணும் நான்குவிதத் திரிபு முறையால் நால்வகைச் சாதிப் பண்களைப் பெற்றன. நால்வகை யாழும் நால்வகைச் சாதியோடு சேர்ந்து பதினாறு பெரும்பண்களாயின. அகம், புறம், அருகு, பெருகு, என இவை, நான்குவகைத் திரிபுகளால், வெவ்வேறு பண்களாக மாறுகின்றன. நால் வகைச் சாதியை எவ்வாறு மருத யாழில் மாதவி வாசித்தனள் என்பது, சிலப்பதிகாரத்

தில் வேனிற் காதையில் விவரிக்கப் பெற்றுள்ளது :

''குரல்வா யிளிவாய்க் கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கில் ஐந்தினு மேழினும்
உழைமுத லாகவும் உழையீ ருகவும்
குரல்முத லாகவும், குரலீ ருகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி''

இரண்டு ஸ்தாயிகள் கொண்ட பதினுன்கு தந்திகள் பூட்டப் பெற்ற யாழிலே, திரிபு முறையால் (Modulation) சுருதி பேதம் செய்து மாதவி மருதப் பண்ணின், நான்கு சாதிகளை வாசித்தாள் என்று கூறப்படுகிறது. குரல்-வாய் இளிவாய்க் கேட்டனள் என்றதும், வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும் என்றதும் ச - ப, ச - ம உறவு, அதாவது குரல் - இளி, உழை-குரல் உறவுகளை ஒப்பக் கேட்கும் உணர்வோடு யாழை இசைக்க வேண்டும் என்று கூறிற்று. இம் முறையை 'அதிரா மரபு' என்றும், 'பிழையா மரபு' என்றும் இளங்கோ அடிகள் கூறுகின்ருர். இலக்கணத்தில் நாம் எவ்வளவோ பிறழ்ந்தும், ''ஒப்பக் கேட்கும் உணர்வு'' ஒன்று இருந்ததாலேயே, அந்த 'அதிரா மரபு' இன்றும் நம்மிடையே பண்களின் வடிவில், உயிரோடு உலவி வருகின்றது என்பது, பெரு வியப்பிற்குரிய பேருண்மை. இசைத் தமிழின் அழியாத் தன்மையையே அது உணர்த்துகிறது.

மேற்கூறிய நான்கு இசை முறைகளையும் விளக்கக்கூடிய சில இராகங்களை இங்கு ஆராய்வோம். பழைய பண்கள்தாம், இராகங்களின் பெயரில், இன்று உலவி வருகின்றன. தமிழ் மரபில் காணமுடியாத ஒரு பண்ணினைப் பிற்காலத்து இராகங்களில் கண்டு பிடிப்பது இயலாத காரியம். பிறமொழிக் கலைகள், ஆணிவேரைக் காண முடியாமல் அல்லற்படுகின்றன. அடிப்படை இலக்கணத்தை நம்மிடமே வைத்துக் கொண்டு, நாம் இன்னும் வேறு எங்கே தேடுவது! இனி, நம்முடைய ஒப்பற்ற கலைச்செல்வங்களைப் பிறமொழிகளில் ஆக்கி, உலகிற்கு உண்மையை உணர்த்துவதே நம் தலையாய கடனுகும்.

### பண்களும் இராகங்களும் அவற்றை இசைக்கும் முறைகளும்

**ஐந்திசைப் பண்கள் (Pentatonic Modes)**

அரைச் சுரங்கள் கலவாத ஐந்திசைப் பண்களைத்தான் சீனர்கள் இன்றும் கையாள்கின்றனர். இசை முறையை மாற்றினுல் தங்களுடைய பண்பாடு சீர்குலையும் என்று அஞ்சி அவர்கள் பழைய மரபையே பாதுகாத்து வருகின்ருர்கள் என்று சொல்லப்படுகின்றது. இவ்வகை இராகங்களுக்கு, பண் நட்ட பாடை (கம்பீர நாட்டை) பண் பழந்தக்கராகம் (சுத்த ஸாவேரி) பண் செந்துருத்தி (மத்யமாவதி) ஆகிய இராகங்கள் உதாரணம்: தேவாரங்கள்:

மைம்மரு பூங்குழல் (நட்ட பாடை)

சிறையாரும் (பழந்தக்கராகம்)

**ஏழிசைப் பண்கள் (Diatonic scales)**

செம்பாலைப் பண் என்ற சங்கராபரணம் (C Major), பண்முறையில், பழம்பஞ்சுரம் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பிரிவைச் சேர்ந்த முப்பத்திரண்டு மேளங்களில் மேலும் பண்களில் காணப்படுவன : பண் குறிஞ்சி (அரிகாம்போதி) பண் சாதாரி (பந்துவராளி) பண் பஞ்சமம் (சக்ரவாகம்), பண் சீகாமரம் (மாயமாளவ கௌள) ஆகியவை. மிகவும் புகழ் பெற்ற இராகங்களான பைரவி (பண் கௌசிகம்), காம்போதி (பண் தக்கேசி) ஆகியவையும் பண் திறன்களாக அமைந்துள்ளன. இந்த இசைமுறையில், தோடி, கரகரப்ரிய, கல்யாணி ஆகிய தாய்ப் பண்கள் காணப்படாத நிலை, இவை பண் வகைகளை முழுமையாய்க் குறிக்கவில்லை என்ற உண்மையை உணர்த்துகிறது. ஒரு முழுநூலின் சிற்சில பகுதிகளை மட்டும் வைத்துக்கொண்டு அவையே முழுநூல் என்று சொல்வது போலுள்ளது, இக்கூற்று.

உதாரணம்: வேத வேள்வியை-பழம்பஞ்சுரம்

பைங்கோட்டு மலர் -பஞ்சமம்

**பன்னிரு இசைமுறை : (Chromatic Scales)**

அரைச் சுரங்களை அடுத்தடுத்துப் பாடினுல், காதிற்கு அவ்வளவு இனிமை தராது. ஆனுல் ஒன்று விட்டு ஒன்று மாற்றி இசைத்தால், மிக இனிமையாக இருக்கும். விக்ருத சுரங்களில் அதாவது அந்தரங்களிலிருந்து பிறந்த இத்தகைய பண்கள், சிறுபாலைகள் என வழங்கப்பட்டன என்று யாழ்நூலாசிரியர் தவத்திரு விபுலானந்த அடிகள் கூறுவார். உதாரணம் : இராகம் பியாக், ஹமீர் கல்யாணி, நாட்டை. பண் வியாழக்குறிஞ்சி (சௌராஷ்டிரம்) மேகராகக்குறிஞ்சி(நீலாம்பரி)

**கார்சுர இசை (24 அலகு முறை) (Enharmonic system)**

ஏழிசை முறைப் பண்களையே இவ்விசையில் பாடுவோர், இசைமேதைகளாவர். இரண்டு

**பண் ஆராய்ச்சியின் பத்தாவது கூட்டம்**

திறப்பாளர், இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் பி. எஸ். வீருசாமிப் பிள்ளை அவர்களையும் சங்கத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 25–12–1959.



**பண் ஆராய்ச்சியின் பதினொன்றாவது கூட்டம்**

திறப்பாளர், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நடுவர் திரு. பி. வி. இராசமன்னார் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் அரியக்குடி திரு. டி. இராமாநுச ஐயங்கார் அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 25–12–1960.



பண் ஆராய்ச்சியின் பதினென்றும் கூட்டம்

சங்கத் தலைவர் திவான்பகதூர் தி.மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள். சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நடுவர், திறப்பாளர், திரு. பி.வி. இராசமன்னார், கூட்டத் தலைவர் அரியக்குடி திரு. டி. இராமாநுச ஐயங்கார், டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் முதலியோர் அமர்ந்துள்ளனர். 25–12–1960.

பண் ஆராய்ச்சியின் பதினென்றும் கூட்டம்

திருவாட்டி கே. லலிதா அவர்களால் நிகழ்த்துவிக்கப்பெற்ற அழகர் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சி. 25–12–1960.



பண் ஆராய்ச்சியின் பன்னிரண்டாவது கூட்டம்

திறப்பாளர், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்க பாணி முதலியார் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை அவர்களையும் சங்கத்தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 25–12–1961.

பண் ஆராய்ச்சியின் பதின்மூன்றாவது கூட்டம்

திறப்பாளர், திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களையும், தலைவர் இசைப் பேரறிஞர் மதுரை மணி ஐயர் அவர்களையும், சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள், முதலியோர் ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 23-12-1962.

**பண் ஆராய்ச்சியின் பதினான்காம் கூட்டம்**

திருவாட்டி எஸ். பத்மா அவர்களால் நிகழ்த்துவிக்கப்பெற்ற மீனாட்சி கல்யாண நாட்டிய நாடகத்தில் பங்கு பெற்ற நடிகர்கள். *22–12–1963.*



**பண் ஆராய்ச்சியின் பதினைந்தாவது கூட்டம்**

திறப்பாளர், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களையும், தலைவர் இசைப் பேரறிஞர் சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களையும், சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். *25–12–1964.*

பண் ஆராய்ச்சியின் பதினைந்தாவது கூட்டம்

டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் நன்றியுரை நிகழ்த்துதல் 28-12-1964.



பண் ஆராய்ச்சியின் பதினாறுவது கூட்டம்

திறப்பாளர், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் பாபநாசம் சிவன் அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 25–12–1965.

மூன்று சுரங்களில் ஓரலகு குறைத்து அல்லது கூட்டிப் பாடும் முறையால், இரா கங்களில் இனிமையும் அழகும் மிகவும் பெருகும்.

உதாரணம் : இராகம் சங்கராபரணம், பைரவி, கரகரப்ரிய, தர்பார், நாயகி ஆகியவை.

இராகம் : ஆரபி, தேவகாந்தாரி.

நுண்சுரஇசை : (Micro Music)

இவ்வகை இசையில் 1/8 சுரம், அதனினும் நுண்ணியதும் காணப்படும். ஒரு தாய் ராகத்தில் இத்தகைய சுரத்தை வைத்துப் பின்னர்த் திரிபு படுத்தினல், இத்தகைய மூர்ச்சனை இராகங்கள் பல ஏற்படும் என்றும் நால்வகை யாழும், நால்வகைச் சாதி முறையும் நமக்குத் தெரிவிக்கின்றன. அரைச் சுரங்கள் மூன்று அடுத்து வந்தாலும் அழகுபட இசைக்கும் முறை இதுவாகும்.

உதாரணம் : இராகம் : கௌள, வராளி ஆகியவை

யாழ் மூரிப் பண் (அடாணு) - மாதர் மடப்பிடி

வியாழக் குறிஞ்சி (சௌராஷ்டிரம்) -அவ் வினைக்கிவ்வினை

தமிழிசைச் செல்வமானது காரிருளில் புதைந்து அடைபட்டுக் கிடந்தபோது, அதற்குச் சுரங்கப் பாதை அமைத்து ஒளியும் வழியும் தந்து உதவிய கருணாமிருத சாகர நூலாசிரியர் தஞ்சை ஆப்ரஹாம் பண்டிதர் அவர்களுக்கும், யாழ்நூலாசிரியர் விபுலா னந்த அடிகளார் அவர்களுக்கும் இன்று இத் தகைய தமிழ்ப் பேரவையில் இசைத் தமிழைச் சிறப்பாக ஆராய்வதற்கு மூலகாரணராகிய வள்ளல் பெருந்தகை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் எனது சிறு காணிக்கையாக, இந்த ஆராய்ச்சிக் கட்டு ரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

# நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பண் ஆராய்ச்சி

**திரு. டி. எஸ். பார்த்தசாரதி**

சென்னை.

பரம்பொருளை இசையாகவும், இசைப்பயனாகவும் கருதித் தொன்று தொட்டு வழிபட்டு வரும் நமது செந்தமிழ் நாட்டில், இசையை ஒரு கலையாகவோ அல்லது பொழுதுபோக்குச் சாதனமாகவோ நாம் நினைப்பதில்லை. சங்கீதத்தை உபவேதங்களுள் ஒன்றான காந்தர்வ வேதம் என்றும், இறைவனை ஒலியையே சரீரமாகவுடைய நாதப்பிரும்மம் என்றும், இசையின் மூலம் பேரின்பம் பெறும் வழியை நாதோபாசனை என்றும் கூறுவதே நம் நாட்டு மரபு. இதற்குத் துணையாக, நமது மறைகள், புராணங்கள் முதலிய நூல்களில், நூற்றுக்கணக்கான சான்றுகள் கிடைக்கின்றன. மிகப் பழங்காலத்தில் இயற்றப்பெற்ற யாக்ஞ வல்கிய ஸ்மிருதி முதல், நூற்றிருபத்தைந்து ஆண்டுகட்கு முன் வாழ்ந்து வந்த தியாகராஜ சுவாமியின் கீர்த்தனங்கள் வரை, 'நாத வித்தையின் மர்மங்களை அறிந்தோர், எளிதில் வீடு பெறுவர்' என்ற உண்மையையே வற்புறுத்துகின்றன. ஆகவே, அடியார்கள், இறைவனைப் போற்றித் தாம் இயற்றும் வழிபாட்டுப் பாடல்களை, இசையுடன் கலந்தே உலகுக்கு வழங்கினர். வைதிக கானம் என்ற இப்பிரிவு, லௌகிக கானம் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தோன்றியது. தமிழிசைப் பாடல்களுள் பெரும்பாலானவை, இசை அமைக்கப் பெற்ற தோத்திரப் பாடல்களேயாகும்.

### நாலாயிரப் பிரபந்தம்

ஆழ்வார்களின் பாசுரங்கள், நாயன்மார்களின் பதிகங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலியவை, வைதிக கானத்துக்குச் சிறந்த உதாரணங்களாம். இவை வர்ணம், கீர்த்தனம் முதலியன போன்ற இசை வடிவங்கள் அல்ல எனினும் பலவிதப் பண்களிலும், தாளங்களிலும் அமைக்கப் பெற்றுள்ளமையால், கற்பித சங்கீதம் என்ற பகுதியில், இவை, முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இத்தகைய பாடல்கள், ஆதியிலேயே இசையுடன் பாடப்பெற்றவை என்பதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. பெரியாழ்வார் திருமொழியின் ஆசிரியரான பெரியாழ்வார், ''யானைக் கழுத்தில் கிடந்த மணிகளைத் தாளமாகக் கொண்டு பல்லாண்டு பாடி அருளினர்' என்றும், திருப்பாணாழ்வார், ''வீணையும் கையுமாகத் திருப்புகழ்கள் பாடிக்கொண்டிருந்தார்'' என்றும், ஞானசம்பந்தப் பெருமான், ''சீர்காழியில், கைத்தாளம் போட்டுக்கொண்டு பதிகங்கள் பாடச் சிவபெருமான் அவருக்குப் பொற்றாளங்களை அளித்தார்'' என்றும் வரலாறுகள் கூறுவதிலிருந்து இப் பெரியோர்கள், இசையிலும் வல்லவர்களாக இருந்திருக்கவேண்டும் என்றும், தாங்கள் அருளிச்செய்த பாடல்களை இசைவடிவிலேயே அமைத்தனர் என்றும் தெளிவாகிறது.

இவ்வகைப் பாடல்களுள், தமிழ் மறை என்று போற்றப்பெறும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், சிறந்த ஓர் இசைத் துதித் தொடராகும். இதில் மூன்றாவது ஆயிரம், இயற்பா என்று பெயர் பெற்றமையால், மற்றைய மூவாயிரம் பாடல்களும் இசையோடு பாடத்தக்கவை என்பது தெளிவாகின்றது. இவை ஆதியிலேயே பண்ணோடு பாடப்பெற்றவை என்பதற்குப் பல அகச் சான்றுகள், பாடல்களிலேயே உள்ளன. பெரியாழ்வார், ''பண் இன்பம் வரப்பாடும் பத்தர், இன்னிசை மாலைகள் இப்பத்தும் பண்பல பாடிப் பல்லாண்டு இசைப்பப் பண் பகர் வில்லிபுத்தூர்க்கோன்'' என்றும், ஆண்டாள், ''கோதை இன்னிசையால் சொன்ன மாலை'' என்றும், குலசேகராழ்வார், ''குலசேகரன் இன்னிசையில் மேவிச் சொல்லிய இன் தமிழ்மாலை'' என்றும், திருமங்கை ஆழ்வார், ''பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்குப் பண்கள் அகம் பயின்ற சீர்பாடல், விழுமிய இசையினோடும் ஒலிசொலும் அடியவர்'' என்றும், நம்மாழ்வார், ''பால்ஏய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தில்'' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவ் ஆழ்வார்களைப் பற்றிப் பிற்காலத்தில் துதிபாடிய கவிகளும், ''குருகூர்

நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே, பண்தரும் மாறன் பசுந்தமிழ், குருகையர் கோன் யாழின் இசை வேதத்தியல்'' என்று பாடியிருப்பதிலிருந்து ஆழ்வார்கள், இசை வல்லுநராகவும் இருந்தனர் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை.

இம் மூவாயிரம் பாடல்களும் ஐம்பது கர்நாடக இராகங்களிலும், ஐந்து தாளங் களிலும் பத்தொன்பது தமிழ்ப் பண்களிலும், நான்கு தமிழ்த் தாளங்களிலும் அமைக்கப் பெற்று வழங்கி வருகின்றன. அழகிய மண வாளப் பெருமாள் என்னும் ஆசிரியர் எழுதியுள்ள ஒரு நூலில், ''திவ்வியப் பிரபந்தத்திற்கும் எழுத்து, அசை, சீர், தளை அடி, தொடை, யாப்பு, பண்ணிசை, தாளம் முதலிய செய்கோலம் உண்டு'' என்று கூறி யிருப்பதிலிருந்து பாசுரங்கள், பண்ணுடனும் தாளத்துடனும் பாடப்பெற்று வந்தன என்பது உறுதியாகின்றது.

### திருமங்கை ஆழ்வார்

ஸ்ரீரங்கம் ஆலயத்தில், பாசுரங்களை இசை யுடன் பாடி, அவற்றிற்கு அபிநயம் பிடிக் கும் வழக்கம், கி. பி. எட்டாவது நூற்றாண் டில் வாழ்ந்தவரும், 'நாலுகவிப் பெருமாள்' என்ற விருதை உடையவருமான திருமங்கை யாழ்வாரின் காலத்திலிருந்து ஏற்பட்ட தாகக் 'கோயிலொழுகு' என்ற பழந்தமிழ் நூலிலிருந்து தெரிகிறது. ஆழ்வார் பாடிய இசையைக் கேட்டு மகிழ்ந்த இறைவன், நாம் உமக்குச் செய்ய வேண்டுவது என்ன?'' என்று கேட்க, ஆழ்வார், வடமொழி மறை களுக்கு இணையான பெருமையுடன், பாசுரங் களும் இக் கோயிலில் பாடப்பெறவேண்டும் என்று வேண்டினராம். இம்மரபை யொட்டி இன்றும் அரையர்கள் என்றழைக்கப்பெறும் கோயில் பாடகர்கள், திருவரங்கம், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய தலங் களில், திருவாய்மொழியை ஓதி அபிநயமும் செய்து வருகின்றனர். 'என்னை வருக' என்ற பெருமாள் திருமொழிக்கு ஸ்ரீரங்கத்தில், அரையர்கள் அபிநயம் பிடித்ததாகவும், 'என் சினம் தீர்வன் நானே' என்ற இடத் துக்கு இப்படி அபிநயம் செய்யவேண்டும் என்று எம்பார் என்ற வைணவப் பெரியார் திருத்தியதாகவும் நூல்களில் காணப்படு கின்றது.

### நாதமுனிகள்

தெய்வ மணங் கமழும் இத் தீஞ்சுவை இசைப் பாடல்கள், ஆழ்வார்களின் காலத் துக்குப் பின்னர், மறைய ஆரம்பித்தன. இந்நிலையில், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில், நாதமுனி என்ற வைணவப் பெரியார், மன்னார்குடியில் தோன்றினர். ஒருமுறை வெளியூரிலிருந்து வந்திருந்த சில வைணவர் கள், ஆலயத்தில், 'ஆராவமுதே' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினர். அதன் முடிவில், 'ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று வருவதைக் கவனித்த நாதமுனிகள், மிகுதி யுள்ள பாடல்களைக் குறித்து அவ் வைணவர் களை வினவியும் அவர்கள் அவை தமக்குத் தெரியாது என்று கூறினர். மிகுதியுள்ள பாடல்களை எவ்வாறேனும் சேகரிக்கவேண் டும் என்ற எண்ணத்துடன் நாதமுனிகள், நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரிப் பிரதேசத்துக்குச் சென்று, மிகுந்த முயற்சி யினல், அவற்றை அடைந்தார். திருமங்கை யாழ்வார் காலத்தில் அவை வழங்கியது போலவே, அவற்றை 'இயலும் இசையும் ஆக்கவேண்டும்' என்று கருதித் தம்முடைய மருமக்களான மேலையகத்தாழ்வார், கீழை யகத்தாழ்வார் என்ற இரண்டு இசை வல்லு நர்களின் உதவியைக் கொண்டு, பாசுரங்களை இசையில் அமைத்தருளினர். சமயத்திற்கே யன்றி இசைக்கும் இத்தகைய மகத்தான தொண்டு புரிந்த நாதமுனிகளை, ''காளம் வலம்புரி யன்ன நற்காதல் அடியவர்க்குத் தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்'' என்று வேதாந்த தேசிகர் போற்றுகின்றார். அவருடைய மருமக்களும் நாதமுனிகளின் கட்டளைப்படி ஆலயத்தில் இசை பாடிவர, இறைவன், ஒருவருக்கு மணவாளப் பெருமாள் அரையர் என்றும், மற்றவருக்கு நாதவிநோத அரையர் என்றும் விருதுகள் வழங்கி அவர்களுக்குக் குல்லாயும் தொங்கல் பரிவட்டமும் அளிக்கச் செய்தான் என்றும் கோயிலொழுகு கூறுகின்றது. இவை, இப்பொழுதும் ஸ்ரீரங்கத்தில் அரையர்களால் அணியப்பெற்று வருகின்றன.

நாதமுனிகள், கூரிய இசையறிவு படைத்த பெரியார் என்று அவருடைய சரித்திரத்தில் வரும் ஒரு சுவையான நிகழ்ச்சியிலிருந்து நாம் அறிகிறோம். அக்காலத்தே கங்கை கொண்ட சோழபுரத்தில் அரசு செலுத்தி வந்த சோழமன்னனின் சபையில் தேவ கானம் பாடுகின்ற பெண்மணி ஒருத்திக்கும் மானிடகானம் பாடுகின்ற ஒருத்திக்கும் வழக்கு ஏற்பட, மன்னன் பல இசைப் புலவர்களை அழைப்பித்து ஆராய்ச்சி நடத்தி, மானிடகானம் பாடிய மக்களுக்குச் சன் மானம் செய்து அனுப்பினனும். தேவகானம் பாடுகின்றவள், இது கண்டு மனமுடைந்து, 'நான் பாடும் இசையின் அருமையைத் தேவரே அறிவர்' என்று கூறித் தேவாலயங் கள்தோறும் பாடிவருங்கால், மன்னார்குடியில் நாதமுனிகள், அவளுடைய இசையைக் கேட்டு உகந்து கொண்டாடினர். இதைக் கேள்வியுற்ற சோழவேந்தன், அவரைத் தன் அவைக்கு அழைத்துவரச் செய்து, தேவ

கானத்தின் பெருமையைக் கூறுமாறு வேண்ட, அப்பெரியார், பற்பல சான்றுகளுடன் அவ் இசையின் மேன்மையை நிரூபித்தார். தேவ கானத்தின் சிறப்பை அறிவதற்குக் கூரிய சுருதி அறிவு வேண்டும் என்பதை உணர்ந்த நாதமுனிகள், சோழனுடைய சபையில், பல எடைகளையுடைய வெவ்வேறு தாளங்களை ஒலிக்கச் செய்து அவற்றின் ஓசையைக் கொண்டே ஒவ்வொன்றின் எடையையும் அறிந்து கூறினராம்.

கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டில் ஏற் பட்ட முகம்மதியரின் படையெடுப்புக் காரணமாக, ஸ்ரீரங்கம் இரத்த வெள்ளத் தில் மிதந்தது. பெருமாளின் விக்கிரகத்தை வைணவர்கள், முன்கூட்டியே எடுத்துச் சென்று பல பல ஊர்களைச் சுற்றி, இறுதி யில் திருப்பதியில் எழுந்தருளச் செய்தனர். ஏறக்குறைய ஐம்பதாண்டுக் காலம் தமிழ் நாட்டில் முகம்மதியரின் ஆட்சி நடைபெற்ற போது, ஸ்ரீரங்கம் கோயிலில் பல நூற்றுண்டு களாக நடைமுறையில் இருந்த 'பிரபந்தத் திருவிழா' என்ற திருவாய்மொழித் திரு நாள், மறைந்து போயிற்று. இப்போது, அங்குப் பிரபந்தங்களைக் கோஷ்டியாக ஓதும் முறை உள்ளதே தவிரப் பண்ணுடனும் தாளத்துடனும் பாடும் முறை காணப்பட வில்லை.

### பண் ஆராய்ச்சி

ஆயினும் கி. பி. 1865ஆம் ஆண்டில் அச் சிடப்பெற்ற பதிப்பு முதல், பல திவ்வியப் பிரபந்தப் பதிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்ற மையாலும், பல்லாண்டுகளாகத் தமிழிசைச் சங்கத்துப் பண் ஆராய்ச்சியினுல் கிடைத்த ஒளியைக் கொண்டும் ஓரளவுக்குப் பிரபந்தப் பண்களைக் குறித்த ஆராய்ச்சியை நாம் மேற் கொள்ள முடியும். சில பதிப்புக்களில், நம் மாழ்வாரின் பாசுரங்களுக்கு மாத்திரம் கீழ்க்கண்ட பத்தொன்பது பண்களும், நான்கு தாளங்களும் காணப் பெறுகின்றன.

### பண்கள்

1. முதிர்ந்த குறிஞ்சி
2. செருந்தி
3. இந்தளம்
4. தக்கராகம்
5. நாட்டம்
6. பழந்தக்கராகம்
7. பஞ்சமம்
8. கைசிகப்பாலையாழ்
9. நட்டராகம்
10. பாலையாழ்
11. நட்டபாடை
12. வியந்தம்
13. கொல்லி
14. புறநீர்மை
15. சீகாமரம்
16. தக்கேசி
17. குறிஞ்சி
18. காந்தாரம்
19. பழஞ்சுரம்

### தாளங்கள்

1. ஏழொத்து
2. இடையொத்து
3. நடையொத்து
4. ஒன்பதொத்து

வேறு சில பதிப்புக்களில், தேவாரத்தில் காணப்பெறுத கீழ்கண்ட பண்கள், திவ் வியப் பிரபந்தத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன.

1. நைவளம்
2. அந்தாளி
3. தோடி
4. கௌவாணம்
5. பியந்தை
6. குறண்டி
7. முதிர்ந்த இந்தளம்

மற்ற ஆழ்வார்களால் இயற்றப்பெற்ற பாடல்களுக்குச் சுமார் ஐம்பது கர்நாடக இராகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவற் றுள், சாதாரணமாக வழங்கும் தோடி, பைரவி, காம்போதி, கல்யாணி போன்ற இராகங்களுடன், கீழ்க்கண்ட அபூர்வ இராகங் களும் காணப்படுகின்றன.

1. அபரூபம்
2. கண்டா
3. சைந்தவி
4. சோகவராளி
5. தேசியராகம்
6. துசாவந்தி
7. எழுநாரராகம்

தாளங்களுள் ஆதி, ரூபகம், ஐம்பை, திரிபுடை, அடதாளம் ஆகிய ஐந்தே காணப்படுகின்றன. பாசுரங்களுக்கு அமைக்

கப் பெற்றுள்ள கர்நாடக இராகங்கள், பெரும்பாலும் அவற்றின் கருத்திற்கு இணங் கவே தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளன. எடுத் துக் காட்டாகத் திருப்பல்லாண்டுக்கு நாட்டை இராகமும், திருப்பள்ளியெழுச்சிக்குப் பூபா ளமும், தாலாட்டுப் பாடல்களுக்கு நீலாம் பரியும் அமைக்கப் பெற்றுள்ளன. பல பாசு ரங்களுக்குப் பண்களும், கர்நாடக இராகங் களும் ஒருங்கே தரப்பட்டுள்ளன. எனினும், பண்களுக்குப் பதிலாக, அதே இலக்கணங் களையுடைய இராகங்களை அமைத்திருப்ப தாகத் தெரியவில்லை. சீகாமரம் என்ற பண் ணில் இயற்றப்பெற்ற மூன்று வேவ்வெறு பதிகங்கள், பைரவி, முகாரி, நாதநாமக் ரியை ஆகிய இராகங்களில் மாற்றப்பட்டுள் ளன.

பிற்காலத்தில், இசைப் பேராசிரியர் வீணை எஸ். இராமநாதன் போன்ற இசையறிஞர் கள், பிரபந்தப் பண்களைக் குறித்து நடத்தி யுள்ள ஆராய்ச்சியின் பயனாக, நமக்குப் பல விவரங்கள் கிடைத்துள்ளன. பாலையாழ், அரிகாம்போதியின் சுரங்கள் உடையதென் றும், நைவளமும் நட்டபாடையும் ஒன்றே என்றும், அந்தாளி, சாமாராகம் ஆகும் என்றும் நாம் அறிகிறோம். தேவாரப் பண் களில் தோடி காணப் பெறவில்லை யாயினும் இது, ஏழிசைப் பாலைகளுள் ஒன்றான செவ் வழிப் பாலையிலிருந்து பிறக்கும் பண்ணாகும். படுமலைப் பாலை, கல்யாணியாகிறது என்பது, சிலப்பதிகாரத்திலிருந்து தெரிகின்றது. தக் கேசி என்பது, காம்போதி என்று பண் ஆராய்ச்சி மாநாட்டில் உறுதியாயிற்று. இத்தகைய ஆராய்ச்சியின் உதவிகொண்டு, வீணை இராமநாதன் அவர்கள், முப்பதுக்கு மேற்பட்ட பாசுரங்கட்குப் பண்டைய மரபை யொட்டி இசை அமைத்துச் சுரதாளக் குறிப்புக்களுடன் வெளியிட்டிருப்பது, தமிழ் இசைக்கு ஒரு சீரிய தொண்டாகும். தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளலாகிய நாதமுனிகளின் திருவுள்ளம் உகக்கும் வண்ணம், தெய்வமணம் கமழும் ஆழ்வார்களின் பாசுரங்களைத் தமிழகமெங் கும் ஒலிக்கச் செய்வது நமது கடமை. தமிழ் இசைச் சங்கத்தின் ஓர் உறுப்பான பண் ஆராய்ச்சி மாநாடு, தேவாரப் பண் குறித்துப் பல ஆண்டுகளாகச் சிறந்த ஆராய்ச்சிகளை நடத்தி, அவற்றின் இலக்கணங்களை வகுத்தது போல், திவ்வியப் பிரபந்தப் பண்களைப் பற்றிய ஆராய்ச்சியையும் மேற்கொண்டு, தமிழ் இசையைச் சிறக்கச் செய்யவேண்டும் என்பது, எனது தாழ்மையான வேண்டுகோள்.

வாழ்க தமிழிசை.

# பஞ்சமரபு என்னும் நூலின் வழியாக அறியப் பெறும் செய்திகள்

**பேராசிரியர், டாக்டர் எஸ். இராமநாதன்**

முதல்வர், ஸ்ரீ சத்குரு சங்கீத வித்தியாலயம், மதுரை.

சேரன் தம்பி இசைத்த சிலம்பு, இசைக் கலைக்கு ஓர் கருவூலமாகக் கருதப் பெறுகின்றது. அதன் உரையாசிரியர்களாகிய அரும்பதவுரைகாரர், அடியார்க்கு நல்லார் இருவரும் அதன் இசைப் பகுதிகளை விளக்குங்கால், பரத சேனாபதியம், இசை நுணுக்கம், கூத்த நூல், நாடகத் தமிழ் நூல், பஞ்சமரபு முதலிய பல இசைத் தமிழ் நூல்களினின்றும் மேற்கோட் செய்யுட்களைத் தந்துள்ளனர். இவற்றுள், பரத சேனாபதியமும், கூத்த நூலும் கிடைக்கப் பெற்று, அச்சியற்றப் பெற்றுள்ளன. சென்ற ஆண்டு வித்துவான். வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், பஞ்ச மரபு என்னும் நூலின் முதற் பகுதியை வெளியிட்டுள்ளார்.

அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் கடலாடு காதை உரையில் ''செப்பரிய சிந்து'' என்று தொடங்கும் பாடலைத் தந்து, அதன் ஆசிரியர் பஞ்ச மரபுடைய அறிவனூர் என்று கூறியுள்ளார். தம்மிடமிருந்த ஓலைச் சுவடியிலிருந்து பிரதி செய்து, ஏட்டிலிருந்த உரையுடன், தம்முடைய குறிப்புக்களையும் சேர்த்துப் பதிப்பாசிரியர் வெளியிட்டுள்ளார்.

### நூலின் அமைப்பு

240 வெண்பாக்கள் கொண்ட இந் நூல், இசை மரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு, அபிநய மரபு, தாள மரபு என்னும் ஐந்து பகுதிகளாக அமைந்துள்ளது. இப்போது, முதல் இரண்டு மரபுகள் அடங்கிய பகுதி வெளிவந்துள்ளது. நூலின் தொடக்கத்தில், பாயிரத்தின்கண் காப்புச் செய்யுள், திருமால் துதியாக உள்ளது. நிருத்த மரபின் தொடக்கத்தில், யானைமுகக் கடவுள் துதி உள்ளது.

### நூற் பொருள்

முதற்கண் யாழ் வகைகள், அதன் உறுப்புக்கள், அளவு, வாசிக்கும் முறை முதலியன கொடுக்கப்பட்டுள்ளன.

வட்டப் பாலையை விளக்குங்கால், அடியார்க்கு நல்லார் தந்துள்ள பல பாடல்கள், இந் நூலின்கண் காணப் பெறுகின்றன. 22 சுருதிகளைப் பற்றிய பாவும் பஞ்ச மரபில் இருக்கிறது.

14ஆம் செய்யுளில், ''எதிராகு மிராசி வல **மேடமாக**'' என்று உள்ளது கவனிக்கத் தக்கது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பில், ''எதிரு மிராசி வல**மிடமாக**'' என்று உள்ளது.

19ஆம் செய்யுளில், நாற்பெரும் பண்களுடைய பெயர்கள் பாலை, குறிஞ்சி, மருதம், **செவ்வழி**, என்று உள்ளமை கவனிக்கத்தக்கது.

இவை போன்ற பாட வேறுபாடுகள், மயக்கத்தைத் தீர்க்க வல்லவை.

103 பண்களைப் பற்றிய பல குறிப்புக்கள் இதன்கண் உள.

''வராடி ஒப்பது வசந்தன் கொல்லி'',
''சாதாரி ஒப்பது வராடி,''
''சாளர பாணி ஒப்பது நாட்டம்''

என்பவை போன்ற குறிப்புக்கள், ஒளி தரக் கூடும்.

பண்களில், மல்லாரி என்று ஒன்று உள்ளது. பதிப்பாசிரியர், மல்லாரி (நாட்டை) என்று 99ஆம் பக்கத்தில் தந்துள்ளார். நாட்டை என்பது இவர் சேர்த்ததா அல்லது ஏட்டில் இருந்ததா என்பது விளங்கவில்லை. இது போன்ற குழப்பம், பல இடங்களில் உள.

ஏட்டுப் பிரதியைத் தமிழிசைச் சங்கத்தினர் பதிப்பாசிரியரிடமிருந்து பெற்றுப் பாதுகாக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

1954ல், பரத சங்கிரகம் என்னும் நூலையும் இப்போது பஞ்ச மரபு என்னும் நூலையும் வெளியிட்டுள்ள பதிப்பாசிரியருக்குத் தமிழுலகும் இசையுலகும் என்றும் கடமைப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

# நாட்டுப்புறப் பாடல்களும், நடனங்களும்

**திரு. ர. அய்யாசாமி**

**தலைவர், நாட்டுப்புற அருங்கலை அரங்கம், சென்னை.**

**முன்னுரை**

தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், தனி அழகு வாய்ந்தவை. பொருள் நயமும், சொல்லழகும், இசை இன்பமும் ஒருங்கே இணையப் பெற்றவை. அவற்றின் பேரழகில், கவிக் கோமானாகிய கம்பர் பெருமானே கட்டுண்டு நின்றதாக, ஒரு வரலாறு கூறுகிறது. சங்கீத மும்மூர்த்திகளில் முதல்வரான தியாகராஜரும் நாட்டுப்புறச் சந்தங்களைத் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். பிற்கால நூல்களில், குன்றாத கவர்ச்சி கொண்டு விளங்கும் குறவஞ்சி, கும்மி, நொண்டிச்சிந்து, தெம்மாங்கு ஆகிய இசை வடிவங்களின் பிறப்பிடம், நமது வீடும், வயல் வெளியுமே அல்லவா?

இன்பம், துன்பம், சினம், அருள், வீரம், காதல், சிரிப்பு முதலான மனித உணர்ச்சிகள் எல்லாவற்றையும் நாட்டுப்புறப் பாடல்கள் எதிரொலிக்கின்றன. மக்கள் உள்ளக் கிளர்ச்சிகளை வடித்து நிரப்பிய மாணிக்கக் கலங்கள் அவை.

நாட்டுப்புறப் பாடல்களில், ஆசிரியர் வேறு பாடகர் வேறு என்ற பிரிவு கிடையாது. ஆசிரியரே பாடுகிறார், பாடகரே இயற்றுகிறார். ஆகவே ஒவ்வொரு பாடலின் சந்தமும், இயன்றவரையில், தெளிவாகவே இயங்குகிறது. பாடல்களில் சில, சேர்ந்து பாடக் கூடியவை. வேறு சில, தனித்துப் பாடப் பெறுபவை. அவற்றில், மகளிர் பாடல் எனவும், ஆடவர் பாடல் எனவும் பிரிவுகள் உண்டு. குழந்தைகளுக்கென்றே ஏற்பட்ட பாடல்கள் பல. இளைஞர் பாடல் எனவும், முதியோர் பாடல் எனவும் சில வற்றைத் தொகுத்துக் கூறலாம். எடுத்துக்காட்டாக, தாலாட்டுப் பாடல்கள், பெண்களே பாடத் தகுந்தவை. காதற் பாடல்களை இளைஞர்கள் பாடினால்தான் சுவையாக இருக்கும். கும்மிப் பாடல்களைப் பலர் சேர்ந்து பாடுவது மரபு.

பண்டைய பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் ஆராய்ந்து அறியவும் நாட்டுப் புறப் பாடல்கள் நமக்குத் துணை புரிகின்றன. பழமைக்குச் செல்ல, அவை, நமக்கு ஒரு அழகிய பாலமே அமைத்துத் தந்து விடுகின்றன. அண்மைச் சரித்திரமும் அவற்றில் இடம் பெறாமல் இல்லை.

நாட்டுப்புறப் பாடல்களின் இசையும், நயமும் இளமையிலேயே என்னை ஆட்கொண்டு விட்டன. அவற்றைத் திரட்டி எழுதிக் கொள்வதே தொழிலாக, நான் பல ஊர்களுக்கும் நடந்தே சென்றேன்.

பாடல்களை எழுதிக் கொள்ளும்போது, பல தொல்லைகள் தோன்றின. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பாடச் சொன்னால், கிராமத்து மக்கள், வாயடைத்துப் போனார்கள். இயற்கையாக, அந்தப் பாடல்களைப் பாடும் சூழ்நிலை இல்லாதபோது, அவர்களுக்குப் பாட்டே வரவில்லை. கண்ணுக்கு எட்டிய வரையில் வயலும், கையில் தலைக் கயிறும், உருளையின் ஓசையும் இன்றி, ஏற்றப்பாட்டை எப்படிப் பாடுவது? வண்டிச் சக்கரங்களின் ஒலி இல்லாதபோது, வண்டிக் காரர்களின் தெம்மாங்கு இரண்டே வரிகளுடன் நின்றுவிட்டது.

சிறிது காலத்துக்கு முன், சென்னை நகரத்திலும் எனக்கு இதுபோன்ற ஒரு அநுபவம் ஏற்பட்டது. மீனவர்களின் பாடல்கள் சிலவற்றை எழுதிக் கொள்ளத் திட்டம் போட்டிருந்தேன். ஆனால், கடலும், கட்டு மரமும், கையிலே துடுப்பும் இல்லாமல், மீனவர்கள், பாட மறுத்து விட்டார்கள். இறுதியில், அப் பாடல்களை எழுதிக் கொள்ள, அவர்களுடன் கட்டு மரத்திலேயே பயணம் செய்தேன். அது, ஒரு புதுமையான அநுபவம்.

இசை என்ற சிறகுகள் இருப்பதாலேயே, நாட்டுப்புறப் பாடல்கள், எளிதில் பரவும் தன்மை பெற்றிருக்கின்றன. நிலப்பரப்பின் எல்லைகளையும், மொழி வேறுபாடுகளையும்கூட, அவை கடந்து சென்றுள்ளன. உலகத்தில், எல்லா மக்களும் இசையின் வசப்பட்டவர்கள். இன்பம் வந்தபோதும், துன்பம் தோன்றுமிடத்தும் பாடுவது மனித இயல்பு. அதே

போலத் தொழில் புரியும்போது உற்சாகம் உண்டாகவும், வேலையின் கடுமை தோன்றாதிருக்கவும் நாம் பாடுகிறோம். யந்திரங்கள் வருவதற்கு முன், எல்லா வேலைகளையும் நாம் கைப்படச் செய்தோம்; உழுது பயிரிட்டோம்; நீர் பாய்ச்சி நிலம் காத்தோம்; நூல் நூற்று ஆடைகள் நெய்தோம்; நெல்லை உரலில் இட்டு இடுப்பு ஒடியக் குத்தினோம்; போக்கு வரவு யந்திர ஊர்திகள் தோன்றுவதற்கு முன், நெடுந்தூரம் கால் கடுக்க நடந்தே சென்றோம். அப்போதெல்லாம், களைப்புக்கு மருந்தாக, நமது நாவிலே பாடல்கள் தவழ்ந்து விளையாடின. ஆனால், நவ நாகரிகம் முதிர முதிர, நாட்டுப்புறப் பாடல்கள் மறையத் தொடங்கி விட்டன. அவை அடியோடு மறைந்துவிடாமல் பாதுகாக்கும் நோக்கத்துடன், சென்னை நகரத்தில், நாட்டுப்புற அருங்கலை அரங்கம் என்ற ஒரு நிறுவனத்தை நான் உருவாக்கியுள்ளேன்.

பாப் இசையும், திரைப்பட இசையும் நம்முடைய கலை அரங்குகளைக் கௌவிக் கொண்டுவிட்ட இந்தக் காலத்தில், நாட்டுப்புற இசைக்கு இடம் பிடிப்பது கடினம்தான். ஆயினும் யாராவது துணிந்து களத்தில் இறங்கியாக வேண்டும் அல்லவா?

பழமையான பாடல்களை, கிராம மக்கள் பாடிய அதே சந்தங்களில், பம்பை, உடுக்கை தம்பட்டம், புல்லாங்குழல் முதலான பண்டைய இசைக் கருவிகளின் துணையுடன் மேடையேற்றி வெற்றி கண்டு வருகிறது, நாட்டுப்புற அருங்கலை அரங்கம்.

பாடல்கள் மட்டுமல்லாமல், நாட்டுப்புற நடனங்களுக்கும், அது புத்துயிரூட்ட முயற்சி செய்கிறது.

இந்த ஆண்டு, தமிழிசைச் சங்கத்துப் பண் ஆராய்ச்சி வெள்ளி விழாவில், நாட்டுப்புறப் பாடல்களும், நடனங்களும் இணைந்த ஒரு நிகழ்ச்சியை நடத்தும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி, உண்மையிலேயே, அருங்கலை அரங்கம், பெருமை கொள்கிறது.

**1. மானம் கிடுகிடுங்க: கதிர் சுமப்போர் பாடல்**

கதிர் சுமப்போர் பாடும் மானம் கிடுகிடுங்க என்னும் பாடல், மதுரை மாவட்டத்தில் வழங்கப் பெறுவது. மோட்டாரும், ரயிலும், வானவிமானமும், வந்தபின் தோன்றியது. வயலிலே அறுவடையான பயிரைக் கற்றை கட்டித் தலைமீது சுமந்து செல்லும்போது, மக்கள் பாடும் பாடல். வரப்பின் மேல், அவர்கள், ஒருவர்பின் ஒருவராக நடந்து செல்வார்கள். பாடலின் தாளம், அவர்கள் எடுத்துவைக்கும் காலடிக்குப் பொருந்த ஒலிக்கும்.

**2. ஓலையக்கா கொண்டையிலே: பூநோன்புப் பாடல்**

அறுவடையான தானியம் வீடு நிறைந்ததும், பொங்கல் பண்டிகை வருகிறது. கிராம மக்களுக்கு அது பெரு நோன்பு. பொங்கலுக்கு முன், மார்கழி மாதம் முழுதும் நாள் தோறும், கிராமத்துக் கன்னிப் பெண்கள், வீட்டு முற்றத்தில் கோலமிட்டுச் சாணிப் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவார்கள். பொங்கலுக்கு மறுநாள், அவற்றை நீர் நிலைகளில் விட்டுவிடுவார்கள். அப்படி விடுவதற்குமுன், மலர் சொரிந்து கும்மி அடிப்பார்கள். மலர் பறிக்க, அதிகாலையிலேயே அவர்கள், வயற்புறத்துக்குக் கூட்டமாகப் போவார்கள். வழி நடக்கும் களைப்புத் தோன்றாமல் இருக்க, அவர்கள், குரலெடுத்துப் பாடுவார்கள். பாடல், ஓலையக்காள் என்ற ஒரு கற்பனைப் பெண்ணையும், அவளுடைய பேதமையையும் கருப் பொருளாகக் கொண்டிருக்கும், ஒருத்தி அடி எடுத்துப் பாட, மற்றவர்கள், ஒலே, ஒலே, என்று குலவையிடுவார்கள். இந்த நோன்புக்குக் கோயமுத்தூர் மாவட்டத்தில், பூநோன்பு என்று பெயர்.

**3. கரக ஆட்டம்**

நோன்பும், கோயில் திருவிழாவும் இணை பிரியாதவை. பராசக்தியைப் பல வடிவங்களில் கண்டு வணங்குவது நமது மரபு. அவள், 'ஆயி மகமாயி, ஆங்காரக்காரி'' யாகவும் காட்சி தருவாள். நோய் நொடி வராமல் தடுக்கவும், அவற்றிலிருந்து மீளவும் பஞ்சத்தைத் தவிர்க்கவும், மழை பெய்யவும் மாரியம்மனை வழிபடுவது, தொன்றுதொட்டு வரும் வழக்கம். ''ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது; மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா,'' என்பது, நாட்டுப்புறத்து மக்களின் அசையாத நம்பிக்கை. அவளை ஆராதிக்க, விழாக் காலங்களில் அடியவர்கள், கரகம் எடுத்து ஆடுவார்கள். அதில் நிறைந்துள்ள தண்ணீர், மாரியம்மனுடைய குளிர்ந்த அருளுக்கு அறிகுறி போலும். சில கோயில்களில், நிலையான சிலை இராது. அதற்குப் பதிலாக, அலங்காரக் குடத்தில் நீர் நிறைத்து, வேப்பிலை செருகி, அதையே தெய்வமாகக் கும்பிடுவார்கள். வேறு சில ஆலயங்களில், திருவிழா ஊர்வலத்தின்போது, உலோகச் சிலைகளை எடுத்துச் செல்ல மாட்டார்கள். கரகத்தையே பூசாரியின் தலைமேல் வைத்து நடத்திச் செல்வார்கள். எப்படியானாலும், கரகம், ஒரு அழகு ஓவியம். கரக ஆட்டமும், மேள தாளமும் மெய் சிலிர்க்க வைக்கும் அற்புத விருந்து.

பண் ஆராய்ச்சியின் பதினெட்டாம் கூட்டம்

திறப்பாளர், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களையும், சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசை வாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல்
23–12–1967



பண் ஆராய்ச்சியின் பத்தொன்பதாம் கூட்டம்

திறப்பாளர், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களையும், தலைவர் இசைப் பேரறிஞர் பாலக்காடு திரு. டி. எஸ். மணி ஐயர் அவர்களையும் சங்கத்தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர்,ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல்.
22–12–1968.



**பண் ஆராய்ச்சியின் இருபதாவது கூட்டம்**

திறப்பாளர், தவத்திரு. சிவஞான பாலய சுவாமிகள் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் செம்மங்குடி திரு. ரா. சீநிவாச ஐயர் அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசை வாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். *25–12–1969.*



**பண் ஆராய்ச்சியின் இருபத்தொன்றும் கூட்டம்**

திறப்பாளர், தவத்திரு. ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களையும் சங்கச் செயலாளர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில்வரவேற்றல். *25–12–1970.*



பண் ஆராய்ச்சியின் இருபத்தொன்ருவது கூட்டம்
சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. மு. அ. சிதம்பரம் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துதல். 25–12–1970.



**பண் ஆராய்ச்சியின் இருபத்திரண்டாம் கூட்டம்**

திறப்பாளர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் மதுரை திரு. எஸ். சோமசுந்தரம் அவர்களையும் சங்கத் துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணுமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். 23–12–1971.



**பண் ஆராய்ச்சியின் இருபத்துமூன்றும் கூட்டம்**

திறப்பாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல். *23–12–1972.*

**பண் ஆராய்ச்சியின் இருபத்து நான்காம் கூட்டம்**

வருணபுரிக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் பங்கு கொண்ட மகளிரும், நிகழ்த்துவித்த அடையாறு திரு. கே. இலக்குமணன், குறவஞ்சிப் பாடல்களுக்கு இசை வகுத்த மதுரை திரு. என். கிருட்டிணன், பாராட்டுரை வழங்கிய டாக்டர் மு. வரதராசனார், விழாத்தலைவர் இசைப்பேரறிஞர் டி. கே. பட்டம்மாள், இசைப்பேரறிஞர் ம. ப. பெரியசாமித்தூரன் ஆகியோரும். *22–12–1973.*

**பண் ஆராய்ச்சியின் இருபத்துநான்காம் கூட்டம்**

திறப்பாளர், சென்னை உயர் நீதிமன்ற நடுவர், திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்களையும், தலைவர் இசைப்பேரறிஞர் சங்கீத கலாநிதி திருமதி டி. கே. பட்டம்மாள் அவர்களையும் சங்கத் தலைவர், துணைத் தலைவர், இசைவாணர்கள், ஓதுவார்கள் முதலியோர், ராஜா அண்ணாமலை மன்றத்து வாயிலில் வரவேற்றல் *22—12—1973.*

## 4. வாராங்கோ வாராங்கோ : நடவுப் பாடல்

நாட்டுக்கே விருந்து படைப்பவன் உழவன். அவனுடைய உழைப்பினாலும், காவிரித் தாயின் கருணையாலும், தமிழகத்தின் நெற் களஞ்சியமாக விளங்குகிறது, தஞ்சாவூர். எங்கும் பச்சைப் பசேலென்ற வயல்கள் கண்கொள்ளாக் காட்சி. நாற்று நடும் பெண் களின் குலவைப் பாட்டும் தென்றலிலே மிதந்துவரும். நடவு நடக்கும்போது, நிலச் சொந்தக்காரர், அந்த வழியாக வந்து விட் டால், வேலை செய்யும் பெண்கள், நாற்றுக் கட்டு ஒன்றை எடுத்து, அவர் வரும் வரப் பின் மேல் போட்டுவிடுவார்கள். அவர், அதைத் தாண்டிச் செல்லக் கூடாது என்பது மரபு. போட்ட பெண்களே அதை அகற்றி வழிவிட வேண்டும். அப்படி வழிவிட, நிலச் சொந்தக்காரர், பணமாகப் பரிசு தரவேண் டும். அது எத்தனை என்பதைப் பெண்கள் பாடும் பாடலே குறிப்பாக உணர்த்தும்:

''வாராங்கோ வாராங்கோ
பண்ணுடி வாராங்கோ
பச்சைக் குடைபிடிச்சுப்
பயிர்பார்க்க வாராங்கோ
நீலக் குடைபிடிச்சு
நிலம்பார்க்க வாராங்கோ
நடையின்னு நல்லநடை
நாகரீகம் உள்ளநடை
குணமின்னு நல்லகுணம்
கொடுப்பாங்க அஞ்சுபணம்''

என்று பெண்கள் பாடும்போதே, அவர்கள் கையில் பணமும் வந்து விழும்.

## 5. கட்டு மரம் கட்டி : மீனவர் பாடல்

உழைப்பும் பரிசும் நெல் வயலில் மட்டு மல்லாமல், ஆழ்கடலிலும் உண்டு. அங்கே யும் பழமையான ஒரு பழக்கத்தைக் காண லாம். மீன்களில், கோலா மீன் என்பது ஒரு வகை. அதைப் பிடிக்கச் செல்லும்போது, மீனவர்கள், மிகுந்த பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள். ஒருவரை ஒருவர் வைது கொள்ள மாட்டார்கள். பிழை நேர்ந்து விட்டால், கோலா மீன் வரவே வராதாம். வராதபோது, மீனவர்கள், படகிலேயே எழுந்து நின்று, காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போட்டுக் கோலா மீனிடம் மன்னிப்புக் கேட்பார்கள். அதைக் காவலாளி என்று மரியாதையுடன் அழைப்பார்கள்:

''முன்னாலே பட்டகடன் காவலாளி
உன்னாலே தீரவேணும் காவலாளி
எண்ணாத தோப்புக்கரணம் காவலாளி
எண்ணியெண்ணிப் போடுகிறோம்
காவலாளி''

என்று மீனவர்கள் குறையிரப்பார்கள். உடனே கோலா மீன்கள், தாமாக வந்து வலையில் சிக்கிக் கொள்ளும் என்பது அவர் கள் நம்பிக்கை.

## 6. காடுவெட்டிக் கல் பொறுக்கி : உழவர் நடனப் பாடல்

மீனவர்கள் கடலின் மக்கள். குறவர்கள் வனத்தின் மக்கள். வனக் குறத்தியை நாடி வந்து மயில் முருகன் திருவிளையாடல் புரிந் தான் என்பது, பழமையான ஒரு வரலாறு. காடு வெட்டி, நிலம் திருத்திப் பயிரிடும் உழவன், குறமகளான வள்ளியே தன் வயலைக் காவல் காக்க வேண்டுமென்று விரும்பு கிறான். இறுதியில், விளை பொருளை வள்ளி, பங்கு போடுகிறாள்; எப்படி? ஆண்டிக்கு ஓர் உருண்டை என்றால் அண்ணனுக்கும் ஓர் உருண்டைதான். நம் முன்னோர்கள் கைக் கொண்டிருந்த ஒரு அரிய கொள்கை, இங்கே புலனாகிறது. ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாய நெறியே அன்றைய குறிக்கோள். அதைச் சொல்லாமல் சொல்லுகிற ஒரு நீண்ட பாடல், சென்னையில் வழங்கி வரு கிறது. அது, நடனம் புனைந்து ஆடுவதற்கு ஏற்ற பாடல்.

## 7. உப்புப் புடிச்ச வண்டி: வண்டிக்காரர் பாடல்

தமிழகக் கிராமியப் பாடல்களின் முக்கிய மான பிறப்பிடங்களில் ஒன்று நெடுஞ்சாலை. ரயிலும் லாரியும் அதிகமாகப் பழக்கத்துக்கு வராத அந்தக் காலத்தில், விளை பொருளை மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு, இரவு பகல் பயணம் போவார்கள். நீண்ட தூரம் தனிவழி செல்லும் வண்டிக்காரர்களுக்கு உற்ற துணை, அவர்கள் பாடும் தெம்மாங்கு. ஒரு இளைஞன்; திருமணம் ஆனவன்; தொழி லின் பொருட்டுப் பார வண்டி ஓட்டிச் சென் றாலும், அவன் மனம் வீட்டையே வட்ட மிடுகிறது. விளைபொருளை விற்று வீடு திரும் பும்போது, அவன், தன் அன்பு மனைவிக்குக் ''குவளைச்சரமும் நெல்லிச்சரமும்'' பரிசு வாங்கிக் கொண்டு போவானாம். அந்த ஆசையை, அவன் ஒரு பாடலிலே வடித்து, வான வீதியிலே மிதக்க விடுகிறான்.

## 8. சூதுக்காரியடி மாமியா : சின்னி பொம்மை கதைப் பாடல்

வண்டிக்காரனும் அவன் மனைவியும் ஒத்த உள்ளம் கொண்ட உத்தமர்கள். அப்படி யில்லாதபோது சண்டையும் பூசலுமே கண்ட பலனாகுமல்லவா? நீண்ட கதைப் பாடல் ஒன்று, அந்த அவலநிலையை எடுத்துக் கூறு கிறது. கையில் ஒரு சிறிய பொம்மையை

ஆட்டிக் கொண்டு, பெண் ஒருத்தி வருகிறாள்; பிச்சை எடுக்க வருகிறாள். பொம்மைக்குச் சின்னி பொம்மை என்று பெயர். அவள் கையின் வேகத்துக்கு ஏற்றபடி அது ஆடு கிறது; தாளம் போடுகிறது; மஞ்சள் அரைக் கிறது; குளித்துக் கூந்தலை உலர்த்திக் கொள்ளு கிறது; அடிபட்டு உள்ளம் சோர்கிறது; பின் ஆறுதல் பெற்றுத் துள்ளி நடக்கிறது. அதன் ஒவ்வொரு அசைவுக்கும் பொருத்தமாகப் பிச்சைக்காரப் பெண் பாடுகிறாள். அவள் வாய் மொழியாக, உள்ளத்தை நெகிழ வைக்கும் அழகிய கதை ஒன்று உருவெடுத்து விடுகிறது. அருமையாக வளர்ந்த ஒரு இள மங்கையின் கதை அது. அடிக்காத கணவன், அவளுடைய கன்னத்திலே அறைந்து விடுகிறான். பெண், நொந்து வெளியேறு கிறாள். கடைசியில் அவள் உள்ளம் கலங்கி, உயிரின் மீதும் ஆசை இழந்துவிட்ட சமயத் தில், தோழி ஒருத்தி வந்து ஆறுதல் கூறு கிறாள். கதையைப் போலவே, அதன் இசை யும் கேட்போர் மனத்தை உருக்க வல்லது.

### 9. தெருக் கூத்து

நாட்டுப்புறக் கலைகளில், பழம் பெருமை வாய்ந்தது தெருக் கூத்து. ஆடம்பரம் இல் லாத இயற்கைச் சூழ்நிலையில் நடத்தப் பெறு வது. மேடையும் திரையும் இன்றி, வெறும் தரையில் நின்றுகொண்டே, இசையாலும் சொல் அழகாலும், கதைகளுக்கு உயிர் ஊட்ட வல்லவர்கள், தெருக் கூத்துக் கலைஞர் கள்.

நாடக உறுப்பினர் ஒவ்வொருவரும் மேடை மீது, தம்மைத்தாமே அறிமுகப் படுத்திக் கொள்வது தெருக் கூத்தின் தனித்த இயல்பு. முதலில் நடிகர், ஒரு வெள்ளைத் துணியின் பின்புறத்திலே மறைந்து நிற்பார். பாடல் தொடங்கும்; பிறகு திடீரென்று துணி விலகும்; நடிகர், அவையோரின் முன் தோன்றுவார்; பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் தம்மை அறிமுகம் செய்து கொள்வார்.

திரையும் மேடையும் இல்லாவிட்டாலும் தெருக் கூத்திலே கண்ணைக் கவரும் ஆடை கள் உண்டு. புயக் கிரீடங்களும், மகுடங் களும் உறுப்பினர்க்கு ஒரு தனிக் கவர்ச்சி யைக் கொடுக்க வல்லவை. காலில் சலங்கை ஒலிக்க, அவர்கள், மேடைமீது ஆடிப்பாடு வது மரபு.

கூத்தின் கதைகள், ஊர் மக்களுக்குத் தெரிந்தவையாகவே இருக்கும். இதிகாச புராணக் கதைகளும், இலக்கியக் கதைகளும், நாட்டுப் புறத்துப் பழங்கதைகளும் நாடக வடிவம் எடுக்கும். அவற்றில் பாரதக்கதை, மிகவும் புகழ் பெற்றது.

பாரதத்துக்கு உயிரானவள் துரோபதை. அவள் பொருட்டே, பதினெட்டு நாட்கள் கடும்போர் நடந்தது. அவள், தீயிலே பிறந் தவள்; ஐவருக்கு மாலை இட்டும் அழியாத பத்தினியாக நிற்பவள்; எடுத்த நோன்பு முடியும்வரை, மலைபோல் வந்த துன்பங்களை யும் தாங்கிய சிந்தை உறுதி கொண்டவள். இந்தப் பண்புகள், நாட்டுப்புற மக்களைப் பெரிதும் கவர்ந்து விட்டதில் வியப்பு ஏதும் இல்லை. அவள், பல வேறு ஊர்களிலும் வழிபாட்டுக்கு உரிய தெய்வமாக விளங்கு கிறாள். அவள் திருக்கோயிலில், ஆண்டு தோறும் விழா நடைபெறுகிறது. தங்கள் அன்புக்கு அறிகுறியாகத் தீயிலும் நடந்து போகிறார்கள், மக்கள்.

அந்த விழாக்களின்போது, எட்டு நாட் கள், தொடர்ச்சியாகத் துரோபதை அம்மன் கதை, தெருக் கூத்தாக நடிக்கப் பெறும். துரோபதை சுயம்வரம், சுபத்திரை திரு மணம், துரோபதை துகில் உரிதல், அருச்சுனன் தவசு, கீசக வதம், கண்ணன் தூது, கர்ணன் சண்டை, துரியோதனன் போர், ஆக எட்டுப் பகுதிகளாகத் தெருக் கூத்து நிகழும். மக்கள், இரவு முழுதும் கண் விழித்து அவற்றைக் கண்டு களிப்பார்கள்.

போருக்கு மறுநாள் காலையில், துரோபதை அம்மன் கோயிலுக்கு அருகே, துரியோதனன், வீமன், கண்ணன், காந்தாரி, துரோபதை ஆக ஐவர் தங்கள் வேடத்துடன் தோன்று வார்கள். தரையில், துரியோதனனைப் போல, ஒரு பெரிய மண் பொம்மை இருக்கும். துரியோதனனுக்கும் வீமனுக்கும் வாக்கு வாதம் நடைபெற்றபின், பொம்மையின் தொடையைத் தாக்கி எடுத்துச் சண்டையை முடிப்பார்கள். பிறகு, மிக்க சிறப்பாகத் துரோபதையின் கூந்தலையும் முடிப்பார்கள்.

பின் நிகழ்ச்சிகள் எவை ஆனாலும், கூத்தின் முதல் பகுதிலே, மக்கள் மனத்தில் நீடித்து நிற்கும். அது, துரோபதை சுயம்வரம்.

### 10. மூக்குத்தி மினுமினுங்க : சாந்து இடிப்போர் பாடல்

நாட்டுப்புறப் பாடல்களில், எண்ணிக்கை யில் மிகுந்தவை தொழிற் பாடல்கள். இரும்பும் சிமெண்ட்டும் கிடைக்காத அந்தக் காலத்தில், கட்டிடங்களுக்கு வேண்டிய காரையை — அதாவது மணலும் சுண்ணும்பும் சேர்ந்த கலவையைப் — பெண்கள் இடித்துக் கொடுப்பார்கள்; இடித்துக் கொண்டே பாடு வார்கள். திருச்சியில், சாந்து இடிக்கும் பெண்களிடமிருந்து ஒரு பாடல் கிடைத்தது. அது, காட்டிலே குடியிருக்கும் ஒரு தேவதை யின் பெருமையைக் கூறுகிறது.

## 11. பாட்டனுர் எல்லையிலே : தாலாட்டுப் பாடல்

நாட்டுப்புறப் பாடல்களில், தாலாட்டு வகை, உலகனைத்துக்கும் பொதுவானது. அது, காலத்தை வென்றது. அழும் குழந்தையும், அதைத் தூங்க வைக்க இசை பாடும் ஒரு அன்புக் குரலும் இருக்கும்வரை, அதற்கு அழிவே இல்லை. தாய்மை என்னும் மிகச் சிறந்த உணர்ச்சிப் பெருக்கிலே பிறப்பதால், தாலாட்டுப் பாடல், கற்பனை நயமும், சொல்லழகும் பெற்றுத் தனக்கு உவமையின்றி விளங்குகிறது. ஒரு பாடலில், பிறந்த வீட்டின் பெருமையைப் பேசுகிருள் அன்னை. பாட்டனுர் எல்லையில் விற்கும் பட்டும், முப்பாட்டன் எல்லையில் விற்கும் முத்தும், குழந்தைக்குப் பரிசாக வருகின்றன. அவளுடைய கணவனே அவற்றைத் தேர்ந்தெடுக்கிருன். ஆனுல், பணம் கொடுப்பவன்? குழந்தைக்குத் தாய் மாமன்.

## 12. காவடி ஆட்டம்

காவடி ஆட்டம், முருகனுக்கு உரியது. அடியவர்கள், காவடியைத் தோளில் சுமந்து கொண்டு பல காதம் நடந்தே செல்வார்கள். நாகசுரமும், தவிலும், பம்பையும் முழங்கக் காவடிக்காரர்கள் ஆடுவார்கள். முருகன் புகழைப் பாடிக் கொண்டே ஆடுவார்கள். எடுத்துச் செல்லும் காணிக்கையை ஒட்டிக் காவடியின் பெயரும் அமைந்திருக்கும். பால் காவடி, பழக் காவடி, சந்தனக் காவடி-ஏன், மீன் காவடியும் உண்டு. காவடி ஆட்டக் காரர்கள், பெரும்பாலும் சிந்து என்னும் இசைப் பாடலைப் பாடுவார்கள். காவடிச் சிந்து பாடியவர்களில், சென்னி குளம் அண்ணுமலை ரெட்டியார் தலைசிறந்தவர். அவர் கையாண்ட சந்தம், தெவிட்டா இன்பம் அளிக்க வல்லது.

# தமிழிசை உரைக்கோவை

தொகுப்பு: பேராசிரியர் அன்பு கணபதி
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.

தமிழிசை இயக்கத்தின் தொடக்க காலத்தி லிருந்து தமிழிசைத் தலைவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோர் அவ்வப்போது நடை பெற்ற மாநாடுகள், விழாக்கள், கூட்டங் கள் ஆகியவற்றில் கூறிய உரைகளில் சிலவற் றைக் கீழே தந்துள்ளேன். இவற்றை ஒரு முறை படித்துப் பார்ப்போருக்கு எத்தகைய சிக்கல்களை எல்லாம் கடந்து தமிழிசை இயக் கம் இன்றைய உயர்நிலையை அடைந்தது என்பது விளங்கும்.

### நமது நோக்கம்

''தமிழ் நாட்டில் நடக்கும் இசையரங்கு களில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெற வேண்டும். அரங்கின் துவக்கமும், மங்கள மும் தமிழ்ப் பாட்டுகளாக இருக்கவேண்டும். கச்சேரியின் பெரும்பகுதி தமிழ்ப் பாடலாக இருக்க வேண்டும். இடையிடையே இதர மொழிப் பாடல்களையும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிறமொழிப் பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ் நாட்டில் நடக்கும் இசையரங்கைக் கேட்கும் தமிழருள்ளம், ''இன்று தமிழிசையரங்கு நடந்தது; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது'' என்று உணரவேண்டும். தமிழ்நாட்டில் நடக்கும் இசையரங்குகள் தமிழருக்கு இன்பமளிக்க வேண்டும். இதுதான் நமது நோக்கம்.''

—தமிழிசை முதல் மாநாட்டில் *1943*

இராசா சர். மு. அண்ணாமலைச் செட்டியார்

★

### எதிரிகளுக்குத் தகுந்த பதில்

''இந்த விழாவிற்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கியபோது கச்சேரிகளில் பாடுவதற்குப் பாடகர்கள் முன்வருவார்களோ என்ற சந் தேகம் பலமாக ஏற்பட்டிருந்தது. நம்முடைய இயக்கத்திற்கு விரோதமான சில வித்வான் கள் நம்முடைய விழாவைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகளைச் செய்தார்கள். ஆனால் நாங்கள் இதற்கெல்லாம் பயப்பட வில்லை. எந்த விதத்திலாவது கச்சேரிகளை நடத்திவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தோம். எந்தப் பாடகர்களும் வரமாட்டேன் என்று சொல்லி இருந்தாலும் கடைசி முடிவில் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களும் நானும் மேடையிலேறிப் பாடிவிடுவதென்றும் கூடத் தீர்மானித்திருந் தோம். சென்ற 12 தினங்களாக ஆயிரக் கணக்கான தமிழ் மக்களுக்கு இந்த மேடை யிலிருந்து தமிழ் இசை இன்பத்தை ஊட்டிய எல்லாப் பாடகர்களுக்கும், தமிழ் மக்கள் எல்லோரும் நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். தமிழில் கச்சேரிகள் செய்யப் போதுமான உருப்படிகள் இல்லை என்று சாதித்துத் கொண்டிருக்கும் எதிரி களுக்கு நம்முடைய இசை விழாவே தகுந்த பதில் ஆகும்.''

—தமிழிசை முதல் மாநாட்டில்

டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் *1943*

★

### தமிழிசை புதிதல்ல

''உணர்ச்சி யில்லாது ஏதோ சுரங்களை மேலும் கீழும் இழுப்பதல்ல சங்கீதம். வீணே பல வருஷம் கழிந்தது. இனி அப்படிக் கழிய விடக்கூடாது. சங்கீதம் உள்ளத்திலிருந்து பிறக்கவேண்டும். உயிரோடு பிறக்கவேண்டும் அறிவாளிகளை மட்டுமல்ல, சாதாரணமாகத் தெருவிலே போகிறவர் இதயத்தையும் சங் கீதம் வசப்படுத்த வேண்டும்.

தமிழிசை இயக்கம் புதிதல்ல. இரவீந்திர நாத் தாகூர் ''ஒரு கலையானது மேலே போக வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. உன்னுடைய இதயத்தை வைத் துப்பார், அது உன்னதமாகப் போகும்—விருத்தியடையும்'' என்று சொல்லி இருக் கிறார். அது போல நம் தமிழ்ச் சங்கீதம்

வெகு சீக்கிரத்தில் மேலுக்கு வந்துவிடும் என்று எண்ணுகிறேன்.''

—தமிழிசை முதல் மாநாட்டில்

டி. கே. சிதம்பரநாத முதலியார் *1943*

★

### தமிழ்ப் பாட்டு இல்லையா?

''நாடக மேடையில் தமிழ் நாடகமாகிய 'வள்ளித் திருமணம்' நடக்கின்றது. அந் நாடகத்தில் வரும் எல்லா வசனங்களும் பாட்டுகளும் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டியிருக்க, இடையிடையே அன்னிய மொழிப்பாட்டுகள் வருகின்றன. சுப்பிரமணி யராக நடிப்போன் 'ஜெய ஜெய கோகுல பாலா' என்னும் பாடலை ஏன் பாடவேண் டும்? அவன் அந்தப் பாட்டைப் பாடுவது அசந்தர்ப்பம் என்னும் குற்றமாகும். அக் குற்றம் ஒருபுறமிருக்கட்டும். அந்த இடத்தில் பாட்டைப் பாட வேண்டுமென்றிருந்தால் வேறு தமிழ்ப் பாட்டு இல்லாமற் போயிற்று?''

—தமிழிசை முதல் மாநாட்டில்

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் *1943*

★

### இயக்கத்தின் தத்துவம்

''யாராவது ஒருவர் இப்பொழுது காதலில் விழுந்தோமென்று வைத்துக்கொள்ளுங்கள். நான்தான் காதலில் விழுந்தேனென்று வைத் துக்கொள்ளுங்கள். வயது 80 என்று வைத் துக்கொள்ளுங்கள். காதல் கடிதம் எழுத வேண்டுமென்றால் நான் நல்ல இங்கிலீஷ் தெரிந்த ஆளிடம் போய் நீ இங்கிலீஷ் லவ்—லெட்டர் (Love Letter) ஒன்று எழுதிக் கொடு. நான் என் காதலிக்கு அனுப்ப வேண்டும். என்னால் எழுத முடியாது. நீ எழுதித்தா. அதை நான் அனுப்பிக் காதலை வளர்த்து ஜயிக்க வேண்டும் என்றால், அது முடியாது. இங்கிலீஷ் லவ்—லெட்டர் வாங்கி நான் அனுப்பினால் எவ்வளவு சிரிப்பாயிருக் கும். இராமனுக்கு அல்லது கிருஷ்ணனுக்கு நான் லவ்—லெட்டர் அனுப்பவேண்டுமானால் என் தாய் பாஷையில் எனக்குத் தோன்றிய முறையில் எழுதி, என் அன்புக்குத் தோன் றியபடி நான் பாடவேண்டுமே தவிர, இதற்காக மிக நல்ல சங்கீதம் என்று எடுத்து அதை நான் பாடினால் என்ன உணர்ச்சி எனக்கு உண்டாகும்? எனக்கு உண்டாகா விட்டால், கடவுளுக்கும் உண்டாகாது. நிச்சயம். இதுதான் இந்த இயக்கத்தின் தத்துவம்.''

—தமிழிசை முதல் மாநாட்டில்

சி. ராஜகோபாலாச்சாரியார் *1943*

★

### தமிழர் உள்ளக்கிடக்கை

''தமிழிசை, யாரும் எதிர்க்காமல் மறு மலர்ச்சியுடன் நறுமணத்துடன் விளங்க வேண்டும் என்பதும், தமிழருள்ளத் தில் தமிழிசை தேவை என்ற முக்கியமான உணர்ச்சி ஏற்படுவதும், அதில் பலதரப் பட்ட மக்கள் தங்கள் சொந்த அபிப்பிரா யங்களைவிட்டு ஒரு நிமிஷமாவது ஒரு மணி யாவது கவலையற்று ஒரே மேடையில் கூடி, ஒரே விஷயத்தைப்பற்றி ஒருமித்த கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதும்தான் என் போன்ற தமிழர்களுடைய உள்ளக்கிடக்கை யாகும்''.

—தமிழிசை முதல் மாநாட்டில்

அறிஞர் சி. என். அண்ணாதுரை *1943*

★

### தமிழில் தேனொழுகப் பாடியுள்ளனர்

''இன்னும் தமிழ்நாட்டின் தாய் பாஷை யாகிய அமிழ்தினுமினிய தமிழ் மொழியில், நம் முன்னோர்களான ஸ்ரீ சமயாச்சாரியாள், ஸ்ரீ முத்துத் தாண்டவர், ஸ்ரீஅருணாசலக்கவி, திருவிளையாடல் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதிகள், ஸ்ரீகவிகுஞ்சர பாரதிகள், ஸ்ரீ சிதம்பர பாரதி கள், ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதிகள் ஆகி யோர் பக்திப் பரவசத்தோடு ஆயிரக் கணக் கான பண்களும், கீர்த்தனங்களும், பதங் களும் தேனொழுகப் பாடியுள்ளார்கள். அவற் றில் தெலுங்கு முதலான பாஷைகளில் உள்ள பெரியவாளின் கீர்த்தனங்களைப் போலவே அந்தச் சந்தர்ப்பங்களுக்கு உகந்த வாறு ராகம் பாவம் தாளம் ஆகிய சிறந்த அம்சங்கள் விசேஷமாய்ப் பொருந்தியிருப் பதைக் காணலாம். ஆகையால் தமிழ்ப் பெரியாரின் கீர்த்தனங்களையும் சங்கீத வித் வான்கள் கையாள வேண்டுமென்பது என் அபிப்பிராயம்''.

—சங்கீத வித்வத் சபையில்

சங்கீத கலாநிதி, மழவராயநேந்தல்

சுப்பராம பாகவதர் *1942*

★

### உண்டோ நிகர்?

''வெந்தழல் நீராமால்
வெள்ளெலும்பு பெண்ணுமால்
வந்தமத வேழம்
வணங்கிடுமால்—சந்தமெழப்

பாடுவார் உள்ளுருகிப்
பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ
நிகர்''

**கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை**

★

**கன்னல் நிகர் தமிழிசை**

''என்னருமைத் தமிழ்நாட்டை
எழிற்றமிழால் நுகரேனே
செவியில் யாண்டும்

கன்னல்நிகர் தமிழிசையே
கேளேனே கண்ணெதிரில்
காண்ப தெல்லாம்

தன்னேரில் லாததமிழ்த்
தனிமொழியாய்க் காணேனே
இவ்வை யத்தில்

முன்னேறும் மொழிகளிலே
தமிழ்மொழியும் ஒன்றெனவே
மொழியே னேநான்!''

**பாவேந்தர் பாரதிதாசனர்**

★

**எது கலை?**

''கலையென்றால் உணர்ச்சிகளைக்
கவர வேண்டும்;
களிப்பூட்டி அறிவினைப்போய்க்
கவ்வ வேண்டும்;

நிலைகொள்ளாச் சிந்தனையை
நிற்கச் செய்து
நீதிநெறி தெய்வநினைப்
பூட்ட வேண்டும்;

விலையில்லாப் பெருமைபல
உடைய தேனும்
விளங்காத பாஷையிலே
பாட்டைக் கேட்டுத்

தலையெல்லாம் சுளுக்கேற
அசைத்திட் டாலும்
தனக்கதுவோர் கலைப்பயனைத்
தருவ தாமோ?''

—தேவகோட்டை, தமிழிசை மாநாட்டில்

**நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை** *1943*

★

**தமிழ்நாடு கடமைப்படுவதாக!**

''தமிழ்நாடு தனது பெருஞ் செல்வங்களை இழந்துவிட்டது. இது பிற்காலத் தமிழ் மக்களின் கவலை ஈனத்தால் விளைந்தது. இந் நாளில்—இவ்வறிய நாளில்—கலைகளின் உயிர் நாடியாகிய இசைக் கலைக்கு ஆக்கந்தேடத் தமிழிசை இயக்கம் காணப்பட்டது. இது களி பேருவகை யூட்டுகிறது. தமிழிசை இயக்கங் கண்டு, அதன் ஆக்கத்துக்கென்று ஓயாது உழைத்துவரும் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், தென்காசி சிதம்பரநாத முதலியார், ஸர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் உள்ளிட்ட தமிழ்ப் பெருமக்களுக்குத் தமிழ்நாடு கடமைப்படுவதாக. தமிழிசை இயக்கம் காலத்துக் கேற்றது. அஃது ஓங்கி வளர்க!''

—தமிழிசை மூன்றும் மாநாட்டில்

**திரு. வி. கலியாணசுந்தரனர்** *1945*

★

**கர்நாடக சங்கீதம்**

''தமிழிசை இயக்கத்தினல் கர்நாடக சங்கீதத்துக்குக் கேடு ஒன்றும் நேராது என்று உறுதியாகக் கூறுகிறேன். கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டிலே பிறந்து காவேரி தீரத்திலும், பாலாற்றின் ஓரத்திலும், தண்பொருனைக் கரையிலும் வளர்ந்து சிறந்த கலை. இதை ஆயிரம் கோயில்களில் சத்தியம் செய்து சொல்லத் தயாராயிருக்கிறேன்.

ஒரு காலத்தில் வடநாட்டைச் சேர்ந்தவர்கள், துங்கபத்திரை நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையெல்லாம் கர்நாடகம் என்றார்கள். நமது வேலூருக்கு அருகிலுள்ள ஆர்க்காட்டு நவாப்பைக் கர்நாடகத்தின் நவாப் என்று கூறினர்கள். அக்காரணம் பற்றியே தென்னட்டுக்குரிய இசைக்கலை ''கர்நாடக சங்கீதம்'' என்று பெயர் பெற்றது.''

—தமிழிசை விழாவில்

**கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி** *1947–48*

★

**சிறந்த கச்சேரி**

''ஒரு இசைக் கச்சேரி என்றால், எல்லா இன்பங்களும் அதன் மூலம் கிட்ட வேண்டும். ஏதோ சில கீர்த்தனங்கள் மட்டும் எடுத்துக் கொண்டு விஸ்தாரமாகப் பாடி ஞானம் அனைத்தையும் காட்டி, ஸ்வரம் பாடி முடித்துவிடுவது, நாம் வேண்டும் சிறந்த கச்சேரியாகாது. சங்கீத ஞானிகள் அவர்களுக்குள்ளே இவ்வாறு பாடித் தங்கள் சாமர்த்தியத்தைத் தெரிவித்துப் பரிசும் பாராட்டுதலும் பெறலாம். ஆனல் இசைக் கச்சேரிகள், நம்மைப் போன்ற சாதாரண இசைப் பிரியர்களுக்கு என்பது வற்புறுத்

தப் படவேண்டும். இசை ஞானத்திலும் இசை உணர்ச்சியிலும் வேறு எவர்க்கும் குறைந்தவர் களல்ல என்பதையும் நாம் வற்புறுத்து கிறோம்.''

—தமிழிசை விழாவில்

சி. என். முத்துரங்க முதலியார் *1948*

★

சிந்தைக்கு இன்பம்

''தமிழ் இசைச் சங்கம், இன்று 'அண்ணாமலை மன்றம்' என்னும் அழகிய கலைக் கோவிலில் அமர்ந்து காட்சி அளிக்கிறது. மன்றம் என்ற தமிழ்ச் சொல்லைக் கேட்பது செவிக்கு இன்பம்; அதன் பொருளை அறிவது சிந்தைக்கு இன்பம். பழந்தமிழ் மொழியில் மன்றம் என்பது, ஊர் நடுவே உள்ள பொதுவிடமாகும். இன்று தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னையம்பதியின் நடுவே, தமிழரின் சீர்மைக்கு ஒரு சான்றாக நிற்கும் இம் மாளிகை, தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாதலால், இதனை மன்றம் என்று அழைப்பது சாலவும் நன்றே.''

—ராஜா அண்ணாமலை மன்றப் புதுமனை புகுவிழாவில்

டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை *1952*

★

பரவ வேண்டுவது தமிழிசையே!

''பிறமொழிப் பாடல்களையும் ஒரு சிலர் பொருளறிந்து பாடுகிறார்கள்; ஒரு சிலர் பொருளறிந்து கேட்டு இன்புறுகிறார்கள். ஆனால் குடியரசில், ஒரு சிலர் மட்டும் இசையறிந்து இன்புற்றால் போதுமா? இசையில் ஈடுபடாத பிறப்பும், பிறப்பா? இசை வளராத பண்பாடும் பண்பாடா? எல்லோரும் இசையில் ஈடுபட, எந்த இசை இந்தத் தமிழ் நாட்டில் முதலில் வாழவேண்டும் என்பதே கேள்வி. உள்ளத்தைத் தொடுவது தாய் மொழி. ஆதலின் நமக்கு நாம் உண்மையாக இருக்கவேண்டுமானால் தமிழ் நாட்டில் தமிழிசையே பரவ வேண்டும்''.

—தமிழிசை விழாவில்

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் *1954-55*

★

தமிழரின் நன்னாள்

''தமிழிசை இயக்கம், தமிழின் மறுமலர்ச்சிக்கே புதியதொரு ஊக்கத்தைத் தந்திருக்கின்றது. ''இசைக் கலையால் நமது நாடு முழுவதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும், கலைக் கோயிலில் அன்புருவமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாள்'' என்று பதினொரு ஆண்டுகளுக்கு முன் காலஞ்சென்ற டாக்டர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் சொன்னார். அது மிகவும் உண்மை. தமிழ் இசை உணர்வு தமிழ் நாட்டில் சிதறிக் கிடக்கும் கூறுகளை ஒன்று சேர்க்கும் இயக்கமாக வளர்ந்தோங்கி இருக்கிறது. உடலால் பலராகித் தோன்றும் தமிழர், உள்ளத்தால் ஒருவராகித் தமிழ் அன்னையின் கலைக் கோவிலிலே கூடி இசை பாடி மகிழும் அந்நாள், தமிழரின் நன்னாள், அதிகத் தொலைவில் இல்லை அண்மையிலே உள்ளது.''

—தமிழிசை விழாவில்

சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் *1954-55*

★

நாட்டுப் பாடல்களைத் தொகுக்க

''பழைய பண்களையும், பழைய இசைக்கருவிகளில் இப்பொழுது வழக்கத்தில் இல்லாதவைகளையும், பிற கலைகளையும், நிபுணர்களைக் கொண்டு கண்டு பிடித்து மீண்டும் தமிழ் இசையில் இணைக்க, எல்லாம் வல்ல இறைவன், நம்மெல்லோருக்கும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அளிப்பாராக. தவிர பாமர ஜனங்களிடத்தில் இப்பொழுது பல துறைகளிலே வழக்கத்திலிருக்கும் நாட்டுப் பாடல்களையும், தமிழ் இசைச் சங்கம் சேகரித்து, அவைகளுக்குரிய முறையில் பண்களையும் அமைத்து, (தாலாட்டுப் பாட்டு முதல் சரமகவி வரையிலேயும்) அவைகளையும் மேலும் சீர்ப்படுத்தி, நவரசங்களையும் பரப்ப ஏற்பாடு செய்வார்களாக.''

—தமிழிசை விழாவில்

ஓ. பி. இராமசாமி ரெட்டியார் *1956-57*

★

பாட்டும் கூத்தும்

''இசை உருவமற்றது. அது உருவம் கொடுத்து வாழ வைப்பவை இரண்டு. ஒன்று பாட்டு (சாகித்தியம்); மற்றொன்று கூத்து (நடனம்) பாட்டும் கூத்துமாகிய இரு கலைகளும் இசையை உயிராகக் கொண்டவை. அதனாலேயே பழங்காலத்து ஆடல் பாடல் கலைஞராகிய பாணரும் விறலியரும் பொருநரும் கூத்தரும் இசையைப் பெரிதும் போற்றி வந்தார்கள். பிற்காலத்தே இசைக் கலையை விட்டுத் தமிழ்ப் புலவர் பிரிந்தனர். நடனக் கலையை விட்டுத் தமிழ்ச் சான்றோர் பிரிந்தனர்,

இப் பிரிவினுல் ஆடல் பாடலாகிய இரு கலை களுக்கும் வீழ்ச்சி நேர்ந்தது. அவற்றிற்குப் புத்துயிர் அளித்துப் போற்றும் நல்ல நூற்றுண்டு இது. நடனக்கலை மீண்டும் நாகரிகக் கலையாக உயர்வு பெற்று வருகிறது. தாய் மொழிப் பாட்டு, முன்போல் தலைமை பெற்றுச் செழித்து வருகிறது.''

—தமிழிசை விழாவில்

டாக்டர் மு. வரதராசனுர் *1956-57*

★

**பாடல்களைப் பதிவு செய்க**

''இசை ஆராய்ச்சிக்குப் பல இடையூறுகள் நிச்சயமாக உள. உழைப்பும் பொறுமையும் வேண்டப்படுவன. பெரிய கோயில்களிலும், சிறிய கோயில்களிலும் பாடப் பெறும் தேவாரங்களை, திருவாய்மொழிகளை அதிகமாக 'டேப் ரிகார்டு' செய்யவேண்டும். இசைகளைப் பற்றிச் சிறந்த குறிப்புக்களைச் சொல்ல வல்ல முதியோர்கள் இன்றும் இருத்தல் கூடும். இந்த முறைகளால் பழைய பாடல்களை மீண்டும் பெற முடியுமா என்பது நிச்சயமாகக் கூற முடியாது. ஆனுல் இன்று பாடுவதைவிட, பழைய முறைப் பாடல்களை இவ்வகைகளில் மிகுதியும் பெறலாம்.''

—தமிழிசை விழாவில்

டாக்டர் பி. வி. இராசமன்னுர் *1960-61*

★

**தெரிந்த மொழியில் பாடல்**

''பாடுபவர், பாட்டின் அர்த்த பாவங்களை உணர்ந்து உளம் ஒன்றிப் பாடினுல்தான் இசையின் உயர்வு வெளிப்படுகிறது. கேட்பவரும் நாதத்தையோ இராகத்தையோ உணர்ந்தால் மட்டும் இசையை அனுபவித்ததாகாது. அதன் விளக்கம் தெரிந்து அனுபவிக்க வேண்டும். அதிலும் பக்திரசப் பாடலை ஒருவர் பாவம் உணர்ந்து கேட்டால்தான் தீய எண்ணங்கள் விலகி உள்ளும் புறமும் துப்புரவாகி, சாந்தியும் சந்தோஷமும் அடைகிறுர். எனவே பக்திரசப் பாடல்களைத் தெரிந்த மொழியில் பாடுவது அவசியமாகிறது''.

—தமிழிசை பதினேழாம் விழாவில்

டாக்டர் ப. சுப்பராயன் *1959*

★

**கலையின் பிறப்பிடம் தமிழ்நாடு**

''தென்தேச இசைக்கலையே தமிழ்நாட்டில் தோன்றியது என்பதும், தமிழ் நாட்டில்தான் தற்காலம் வரையில் வாழையடி வாழையாகக் கையாளப் பெற்று வருகின்றது என்பதும் ஓர் இயற்கையாகவே இருப்பதை நன்ருக அறியலாம். இசைக்கலையை வளர்த்த பெரியோர்களும், மகனீயர்களும், வாக்கேயக்காரர்களும், ஆதரித்த பெரியோர்களும், மற்றவர்களும் நமது சங்கீதத்தைப் பொறுத்தமட்டில் நம் நாட்டுச் சங்கீத வித்துவான்கள். இவற்றையெல்லாம் மறந்துவிடக் கூடாது.''

—தமிழிசை விழாவில்

அரியக்குடி இராமாநுச ஐயங்கார் *1960-61*

★

**இருள் நீங்கியது**

''*1943* ஆம் ஆண்டில் இச்சங்கம் இருந்த நிலைமையும் இன்றிருக்கும் நிலைமையும் எண்ணிப்பார்ப்பதற்குரியனவாகும். அப்பொழுது சூழ்வினைகள் சுற்றிக்கொண்டு, சிலருக்குத் தமிழிசையில் சந்தேகம் ஏற்பட்டு, தமிழிசையின் உண்மை நோக்கம் தெரியாதிருந்தது. ஆனுல், இப்பொழுது அந்த இருள் நீங்கிவிட்டது. சூழ்வினைகள் வீழ்த்தப்பட்டு விட்டன. சந்தேகங்கள் ஒழிந்தன. எங்குப் பார்த்தாலும் மக்கள் தமிழிசையில் ஆர்வங்கொண்டு தமிழிசையை வரவேற்கிருர்கள். தமிழிசையின் நலமும், உண்மையும், ஒலியும் தெரியாதிருந்த இடத்திலெல்லாம் இப்பொழுது நல்ல வரவேற்பு—மக்கள் வரவேற்பது போலவே உள்ளது. எங்குப் பார்த்தாலும் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடுகள், திருமுறை மாநாடுகள்! இவை நல்ல பரந்த நோக்கமாக ஓதப்பட்டும் கேட்கப்பட்டும் வருகின்றன''.

—தமிழிசை விழாவில்

தி. மு. நாராயணசாமிப் பிள்ளை *1962-63*

★

**தேவாரத்தின் தொன்மை**

''மிகத் தொன்மையானது தமிழ் இசை. பழம்பெரும் இலக்கியங்கள் தவிர, கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் தோன்றிய சிலப்பதிகாரம், பழந்தமிழ் இசைச் செல்வத்தினைப் பற்றிப் பெரு விளக்கம் தருவதாக அறிகிறேன். தமிழின் தூய்மையான இசைக்குத் தொன்மையான எடுத்துக்காட்டு—தேவாரம் எனக் கருதப்படுகிறது. ஆண்டாளின் பாசுரங்களை அறியாதார் இல்லை. இசையும் தெய்வ ஆலயமும் ஒன்ருகக் கலந்தவை; ஒன்ருேடு ஒன்று இணைபிரியாதவை.''

—அண்ணுமலை அரசர் சிலைத்திறப்பு விழாவில்

மைசூர் மன்னர் *1964*

**தென்னகம் வழங்கிய சின்னங்கள்**

''தமிழிசை இயக்கம் தனித்த இயக்கமாகவும், பிரிவினைப் போக்குள்ள இயக்கமாகவும், இல்லாததோடு, இரு பெரும் பண்பாடுகளின் கூட்டுக் கலவையாகவும் இந்தியக் கொள்கைகள், கலைமுயற்சி ஆகிய இரு பெரும் பிரவாகத்தின் சங்கமமாகவும் விளங்குவதைக் காண்கிறேன். வடநாட்டைப் பற்றிக் குறிப்பிடாமல், இந்திய நாகரிகத்தைக் கண்ணோட்டமிட முடியாது. அதே சமயம், இந்திய நாட்டின் ஒருமைப்பட்ட அறிவியல் பண்பாட்டுக்கும் ஆன்மீக வாழ்வுக்கும் தென்னகம் வழங்கியுள்ள நிலையான நினைவுச் சின்னங்கள் இன்றியும் இந்திய நாகரிகம் முழுமை பெற முடியாது.''

—அண்ணாமலை அரசர் சிலைத்திறப்பு விழாவில்

**சர். சி. பி. இராமசாமி ஐயர்** *1964*

★

**நல்லது செய்துவர வேண்டும்**

''இந்தியாவில் முதன்முதலாக நான்தான் வானொலியைத் தொடங்கினேன். *1932-33*ல், நான் சென்னை மேயராக இருக்கும் பொழுது, இப்பொழுது 82 வயது நடக்கும் எஞ்சினீயர் சி. வி. கிருட்டிணசாமி செட்டியார் அவர்களைக் கொண்டு தொடங்கினேன். முதன் முதலில் அதில் ஒப்புக் கொண்டு பாட வந்தவர் முசிறி அவர்கள்தான். 'திருவடி சரணம்' என்ற பாட்டுப் பாடினார். பின்னால் தான் அரியக்குடி முதலியோர் எல்லாம் வந்தார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உங்கள் சொத்து. என்னுடைய தகப்பனார் அதனைத் தொடங்கியிருக்கலாம். நான் ஓடும் பிள்ளையாக இருந்து ஓடியாடி வேலை பார்த்திருக்கலாம். ஆனால், அது பொதுமக்களுடைய சொத்து. அதன் பெருமையோ சிறுமையோ உங்களைச் சேர்ந்தது. தமிழிசைச் சங்கத்தை ராஜா ஆரம்பித்திருக்கலாம். ஆனால், அதுவும் உங்கள் சொத்துத்தான். பத்துப்பேர் நல்லது என்று சொல்லும் செயல்களை நாள்தோறும் செய்துவரவேண்டும்.''

—பண் ஆராய்ச்சிக்கூட்ட நன்றியுரையில்

**டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்** *1964*

# பண் ஆராய்ச்சி உரைக்கோவை

தொகுப்பு: டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழ்த் துணைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

'எல்லையில் செல்வம் கண்டு, ஈகையின் பெருமை கண்டு, பல்கலைக் கழகங் கண்டு, பாரெலாம் புகழக் கண்டு. பெருவாழ்வு வாழ்ந்த தமிழ்த்தாய்க்குப் பல்லாற்றனும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த, பெருங் கொடை வள்ளல் செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், நலிந்துபோன தமிழ் இசைக்கு நல் வாழ்வு அளிக்க முன்வந்தார்கள். தமிழ் நாட்டில், தமிழிசை அரங்குகளில், பிற மொழி இசைகளே இடம்பிடித்து வந்த நேரத்தில், தமிழ் இசை வளர்ச்சிக்கென 1929ஆம் ஆண்டில், சிதம்பரத்தில் இசைக் கல்லூரியினை நிறுவினார்கள். 1932ஆம் ஆண்டில், அவ் இசைக் கல்லூரியினை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தார்கள். 1940 ஆம் ஆண்டில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், இவர்கள் தமிழ் இசைக்காகப் பதினாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். 1941 ஆம் ஆண்டில், அண்ணாமலை நகரில் முதல் தமிழ் இசை மாநாடு நடத்தினார்கள். 1943ஆம் ஆண்டில், சென்னையில், தமிழ் இசைச் சங்கம் கண்டார்கள். இதன் பிறகு, தமிழ் இசை எதிர்ப்பியக்கம், மெல்ல மெல்லத் தணிந்தது. செட்டிநாட்டரசர் அவர்களும், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும்கோவை திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும், நாளுக்கு நாள் வெற்றியை ஈட்டித் தந்தன. தமிழ் இசைச் சங்கத்தின் தொடக்கக் காலத்திலிருந்து, அரசியல் தலைவர்கள், பெரியோர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் முதலியோர், பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் கூறிய உரைகளில் சில, தரப் பட்டுள்ளன. இவற்றைப் படிப்போர், பண் ஆராய்ச்சி, ஆண்டுதோறும் வளர்ச்சிபெற்று வரும் உயர் நிலையினை ஒருவாறு காணலாம்.

## முதல் இசை

''உலகத்திலேயே முதன் முதலில் நம் நாட்டிலேதான் இசை என்ற ஒரு கலை சிறந்து விளங்கிற்று. மேல்நாட்டு இசைகள் எல்லாம் இங்கிருந்து ஏற்றுமதியான இசையை அதன் உருவை - முறையைக் கூட்டியும் குறைத்தும், நொறுக்கியும் சிதைத்தும் உரு வாக்கப் பட்டவையே'' இதுதான் நண்பர் டி. கே. சியின் முடிவு.

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் முதலாவது ஆண்டுக் கூட்டம் — 1949.

டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார்

## தமிழிசையே அடிப்படை

''கர்நாடக சங்கீதம் வேறு, தமிழிசை வேறு என்ற போலி வாதத்திற்கு, இனி, இடமே இல்லை. கர்நாடக சங்கீதத்திற்குத் தமிழிசை ஏற்றதன்று என்றால், கர்நாடக சங்கீதம் என்பது எங்கிருந்துதான் முளைத்தது என்று தெரியவில்லை. கர்நாடக சங்கீதம் என்பது, பழமையான இசை. எனவே அது, தமிழிசையை அடிப்படையாகக்கொண்டு தான் எழுந்திருக்க வேண்டும் என்பது திண்ணம்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் முதலாவது ஆண்டுக் கூட்டம் — 1949.

டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார்

## வாழ்வே இசை

''தமிழ் மக்களது வாழ்க்கையிலே, இசை ஒன்றியிருந்தது; இருக்கிறது. தமிழ் வளர்த்த சங்கங்களிலே, இசை பயிலுகின்ற இடம், தனியே இருந்தது. அத்தகைய இடத்தை; ''இசைச்சூழல்'' என்று குறிக்கின்றார் வாதவூரடிகள். தமிழே, 'முத்தமிழ்' என்றுதான் பேசப் பெறுகின்றது. தமிழ்ச் சமுதாயத்தில், குழந்தைப் பருவமுதல் இறுதிக்காலம் வரையில், இசை தோய்ந்திருக்கிறது. பிள்ளைப் பருவத்தில், பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டி உறங்க வைக்க, ''ஊசற் பாட்டுக்கள்''பாடப் பெற்றன. அப் பாட்டுக்கள், ''ஊசல் வரி'' என்று சங்க இலக்கியங்களில் பேசப் பெற்றுள்ளன. இன்னும், விளையாடுங் காலத்தில்

பாடுகிற பாட்டுக்கள், ''கந்துகவரி'' முதலியன, ''மங்கல வாழ்த்துப் பாடல்,'' ''செருப்பறை'', வள்ளைப்பாட்டு'' முதலிய பாவினங்களும் சங்க காலத்தில் பயின்றன; இவை அல்லாமல், ஆறுகள், கடற்கரைகள் முதலியவற்றின் இயற்கையின் எழிலின்பத்தில் ஈடுபட்டுப் பாடிய பாடல்கள், ஆற்றுவரி, கானல் வரி முதலியனவாம். தெய்வத்தைப் பரவும் பாட்டுக்கள் தேவபாணி எனப்படும். சங்க நூல்களில் ''பரிபாடல்'' என்பதும் ஒன்று. அது, முற்றும் இசைப்பாட்டினாலேயே ஆனது. பரிபாட்டு என்பது, ஒருவகையான இசைப்பாட்டுக்குப் பெயர். இவ்வாறு பண்டைத் தமிழ் மக்கள், எந்நிலையிலும் இசைப் பாடல்களில் மனந்தோய்ந்து மகிழ்ந்திருக்கிறார்கள். தற்பொழுதும் தமிழ் நாட்டிலே, எந்தத் தொழிலிலும் இசையைப் பயன்படுத்திக் களைப்புத் தெரியாத நிலையில், வேலையை முடிக்கின்றனர். அவை—ஏற்றப்பாட்டு, உழவுப்பாட்டு முதலியனவாம்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் மூன்றாவது ஆண்டுக் கூட்டம்—1951

தவத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்

**தமிழிசையின் அவசியம்**

''இசை உயிர்; பாடல் உடல். உயிரின்றி உடல் இயங்காது. உடல் இன்றேல் உயிருக்கும் இயக்கம் இல்லை, பயனுமில்லை. எனவே பாடுகின்ற பாடல்களின் பொருள் உணர்கின்ற நிலை வருகிற பொழுதே, இசைக் கலையின் பயனை அனுபவிக்கச் சாதாரண மக்களிலிருந்து பெரியவர்கள் வரை முடியும். மேலும் வாழ்க்கையை வளப்படுத்தத்தானே கலைகள்? வெறும் இசை, கேட்கச் சிறிது நேரம் இன்பமாக இருக்குமே ஒழிய, வளம் பயப்பதில்லை. நல்ல கருத்துள்ள பாடல்களை இசையுடன் பாடுகிற பொழுது கேட்பதினால் நல்ல உணர்ச்சியையும், மெய்ப்பாட்டையும் அடைய முடிகிறது. எனவே, தமிழிசை தான் இந்த நாட்டிற்குத் தேவை என்று நிச்சயமாக நம்புகிறோம். இந்த நம்பிக்கை, வேற்று மொழியின்கண் உள்ள வெறுப்பினால் அல்ல என்பதையும் உணர்த்த ஆசைப்படுகின்றோம். தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்த- உயர்த்த அவர்கள் எளிதில் கேட்டு அனுபவிக்கக்கூடிய தமிழிசை தேவை என்ற எண்ணத்தால்தான் இங்ஙனம் சொல்லுகின்றோம். நாட்டின் தேவையறிந்து, தக்க காலத்தில் தமிழிசை இயக்கத்தைக் கண்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதுங் கடமைப்பட்டுள்ளது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் மூன்றாவது ஆண்டுக் கூட்டம் — 1951.

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்

**முன்னோர்களின் தீர்க்க தரிசனம்**

''1200 ஆண்டுகளுக்கு முன்னர்த் தென்னிந்தியாவில் சங்கீதம் எப்படி இருந்தது என்பதைத் தேவாரம் விளக்குகின்றது. தேவார இசை, பண்டைக் காலத்து இந்திய இசையின் அமைப்பை உணர்த்துகிறது. அக்காலத்தில் கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம் என்னும் பிரிவு ஏற்படவில்லை. ஆலய நிகழ்ச்சிகளில் தேவாரத்திற்கு ஒரு முக்கிய இடத்தை நம் முன்னோர்கள், தீர்க்க தரிசனத்துடனேயே ஏற்படுத்தியுள்ளார்கள். ஓதுவார்கள், தேவாரம் பாடுவதற்காக ஆலயங்களில் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் தேவாரப் பாடல்களைத் தினசரி நிகழ்ச்சிகளிலும், திருவிழாக் காலங்களிலும் பாடினதன் பயனாக, எல்லோரும் பாடல்களைத் தெரிந்து கொண்டார்கள். பலர், கற்றுக் கொண்டு பாடவும் ஆரம்பித்தார்கள். ஓதுவார் கூட்டத்தில் தோன்றிய பலரால், தேவாரம் பாடும் சம்பிரதாயம், செம்மையாகக் காப்பாற்றப்பட்டு வந்துள்ளது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் நான்காவது ஆண்டுக் கூட்டம்—1953

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி

**வெற்றி உறுதி**

''தமிழ்நாட்டில் தமிழிசை வேண்டுமென்றால், அதுவும் ஒரு குற்றமா? இதனையே ஒரு குற்றமாக எடுத்துக் கொண்டு, தமிழிசை பற்றிய போராட்டம் தொடங்கப் படுகிறது. இப்போராட்டம் எவ்வளவு வேகத்துடன் எதிர்த்து வருகிறதோ அவ்வளவு வேகத்துடன் எதிர்த் தாக்குதலுக்கு உள்ளாகும் என்பதையும் அவர்கள் உணர்தல் வேண்டும். இறையருளால் இப் போராட்டத்தில் நாம் வெற்றியே பெறுவோம். தமிழிசை வளர்ந்தே தீரும். இது உறுதி.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஐந்தாவது ஆண்டுக் கூட்டம்—1954

திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார்

**தெய்வ மணக்கும் தமிழ்**

''தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதும் இசைவாணர்கள், ''ஓதுவார்'' என்னும் பெயருக்கு உரியவர்களாய் விளங்குகிறார்கள். இலக்கியத் தமிழில், ஓதுவார் என்றால், பொதுவாகப் படிப்போர் அனைவரையும் குறிக்கும். ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'', என்னும் முதுமொழியில், ஓதுதல் என்னும் சொல், படித்தல் என்ற பொருளைத் தருகின்றது. எனினும் இக் காலத்தில், தேவாரம் முதலிய தெய்வப் பாடல்களை ஆலயங்களில் ஓதுகின்ற இசை

வாணரே, ஓதுவார் என்று அழைக்கப் பெறுதல், தெய்வ மணக்கும் தமிழின் பெருமைக்கு ஒரு சிறந்த சான்ருகும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஐந்தாவது ஆண்டுக் கூட்டம்—1954

**பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை**

### தமிழிசை இயக்கம் ஏன் ?

''தமிழ்நாட்டில் தமிழிசை இயக்கம் என ஒன்று வேண்டுமா என்பதே கேள்வி. ஆங்கில நாட்டில் ஆங்கில இசை இயக்கம் என ஒன்று ஏற்படுமானுல், அதை ஏற்படுத்துகிறவர்களை அவ்வூரில் உள்ளவர்கள் எல்லோரும் பைத்தியக்காரரென்றே சொல்லிப் பரிகசிப்பார்கள். ஆனுல், நம் நாட்டின் நிலையே வேறு. இங்குள்ள சூழ்நிலையில் தமிழிசை இயக்கம் ஏற்படத்தான் வேண்டி இருந்தது. வேறு வழியில்லை.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஆருவது ஆண்டுக் கூட்டம்—1955

**டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்**

### குடும்ப வாழ்க்கையில் தமிழிசை

''அகநானூறு என்னும் பழைய தொகை நூலில், ஒரு பாட்டின் கற்பனையில், பழங் காலப் பண்முறை, மக்கள் வாழ்க்கையோடு எவ்வளவு சிறப்புடன் இயைந்திருந்தது என்பது விளங்குகிறது. அன்பான இல் வாழ்க்கை நடத்தி மகிழும் மனைவி ஒருத்தி, தன் தோழியிடம், தன் கணவனைப் போற்றிப் புகழ்ந்துரைத்தாள். திருமணமாகிச் சில ஆண்டுகள் கழிந்த பிறகும், தன் கணவன் முன்னைய அன்பு சிறிதும் குன்ருமல் நடந்து வருதல் பற்றி, அவள் மகிழ்ந்து சொன்ன சொல் அது. ''இசை நூலின் எண்முறைப்படி நிறுவப்பட்ட பண்களுள் கலைஞன் ஒருவன் புதிதாகப் படைத்த திறத்தை விட இனியவனுக, திருமண நாளில் இருந்ததை விட இனியவனுக இருக்கின்ருன்'' என்று உள்ளம் மகிழ்ந்து பாராட்டினுள்.

எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனுல் எமக்கே
(அகநா. 352)

அந்தப் பாராட்டு, தமிழ்ப் பண்களுக்கு அமைந்த பாராட்டாகவும், பழந்தமிழ் மக்களின் குடும்ப வாழ்க்கையில் அந்தத் தமிழ் இசை பெற்றிருந்த சிறப்பிடத்திற்கு விளக்கமாகவும் உள்ளது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஆருவது ஆண்டுக் கூட்டம்—1955.

**பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர்**

### கலை வளர்த்த நிலையங்கள்

''கங்கைகொண்ட சோழன் கோயில் கொலு மண்டபத்தின் உச்சியில், ராசி வட்டம் ஒன்றுள்ளது. அந்த ராசி வட்டத்தில், 12 துவாரங்கள் உள்ளன. அந்தத் துவாரங்களிலிருந்து கயிறுகள் தொங்கவிட்டு விழாக் காலங்களில் பெண்கள், பின்னல் கோலாட்டம் போட்டதாகத் தெரியவருகிறது. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் கூறப் பட்டுள்ள சில உண்மைகளை இதன்மூலம் கண்கூடாகக் காட்டுகிருர்கள் எனச் சொல்லலாம். தென்னிந்தியாவில் இசைக் கலையையும், நடனக் கலையையும், காப்பாற்றி வந்த ஸ்தாபனங்கள், தேவாலயங்கள் என்பதை நாம், நன்ருக உணர வேண்டும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஆருவது ஆண்டுக் கூட்டம்—1955

**பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி**

### பண் ஆராய்ச்சி ஏன் ?

''இத்தகையதொரு ஆராய்ச்சி வேண்டுவது தானு என்ருல், கட்டாயமாக வேண்டுவது தான். மிகப் பழங்காலந் தொட்டுத் தமிழர்தம் இசைக் கருவூலமாக இருந்து வருகிற இத் தேவாரப்பண்கள், எக்காரணம் பற்றியோ புறக்கணிக்கப்பட்டன. பாடும் வழக்கமும், பாடுவோர் தொகையும் குறையலாயின. அப்படியே விட்டுவிடுவோமானுல், குறைந்து, நாளடைவில் மறைந்து விடவும் கூடுமல்லவா, ஆகவே, இத்தகைய நன்முயற்சிதான்— இந்தத் தேவாரப் பண் ஆராய்ச்சிதான்— இன்றுள்ள நிலையில், தமிழிசை வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் தருவதாகும். ஆகவேதான் நம் தமிழிசைச் சங்கத்தாரும் பெரும் பொருட் செலவையும் பொருட்படுத்தாது இவ் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நன்முறையில் நடத்தி வருகிருர்கள்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஏழாவது ஆண்டுக் கூட்டம்—1956.

**திவான்பகதூர் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை**

### இசையே மருந்து

''நம் முன்னேர்கள், சங்கீதத்தைப் பல கொடிய உடல் நோய்களையும், மன நோய்களையும் தீர்க்கப் பயன்படுத்தி வந்தார்கள் என்று தெரிய வருகிறது. இது, சங்கீத சிகிச்சை, இராக சிகிச்சை முதலிய நூல்களிலிருப்பதாக அறியப்படுகின்றது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் ஏழாவது ஆண்டுக் கூட்டம்—1956

**திரு ஓ. பி. இராமசாமி ரெட்டியார்**

## பாப்ளி பாராட்டிய இசை

''இசையின் விஞ்ஞான முறையையும், மிடற்றுப் பாடல்களையும், வாத்திய இசைகளையும், இசைக் கருவிகளையும் தமிழ் நூல்கள் குறிப்பிடுவது, தென்னிந்திய திராவிட மக்களிடையே, கிறிஸ்து சகாப்த தொடக்கத்தில், மிக உயர்ந்த நிலையை இசைப்பயிற்சி அடைந்திருந்தது என்பதைத் தெளிவாக அறிவிக்கிறது'' என, பாப்ளி அவர்கள் கூறுகின்றார்கள்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினொன்றாவது ஆண்டுக் கூட்டம்—1960
திரு பி. வி. இராசமன்னார்

## தொண்டாற்றும் தூயோர்

''தமிழிசை இயக்கம் தொடங்கிய நாள் முதல் அறிஞர்கள், தமிழ் வித்துவான்கள், தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் இசை வாணர்கள் முதலிய பலரும் கலந்து கொண்டு, ஊக்கமும் ஆக்கமும் கொடுத்ததனால்தான் இச் சங்கமும் தன்னுடைய தொண்டினை நன்முறையில் செய்ய முடிந்தது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பன்னிரண்டாவது ஆண்டுக் கூட்டம்—1961
டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்

## நமது இசையின் தனிச் சிறப்பு

''என்றும் இனிமை குன்றாத, நமது இசையின் ஜீவநாடியான பண், நூற்றுமூன்று வகைப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றோடொன்று உறவு கொண்ட ஸ்வரங்களை அடுத்தடுத்துப் பிரயோகிப்பதால் ஒலிக்கும் இசைத் தொடர்ப் பகுதியைப் பண் என்றும், இராகம் என்றும் நாம் அடையாளம் கண்டு கொள்ளுகிறோம். இந்தப் பண் முறையின் பயனாக ஒலித்து நிற்கும் ஓசைநயம்தான், நமது இசையின் தனிச் சிறப்பாகும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதின்மூன்றாவது ஆண்டுக் கூட்டம்—1962
இசைப்பேரறிஞர் மதுரை மணி ஐயர்

## பழைய பண் முறை

''இப்படிப் பல சான்றுகள் எதை உணர்த்துகின்றன என்றால், நம்முடைய தமிழ் நாட்டின் பண் முறை மிகத் தொன்மையானது; இந்த இசை முறை, பாரத தேசத்தின் பல மொழிகளிலே உள்ள பாடல்களில் பயின்று வருவதோடு, கடல் கடந்த நாடுகளிலும் சென்று பரவியிருக்கிறது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினான்காவது ஆண்டுக் கூட்டம்—1963
திரு. மீ. ப. சோமசுந்தரம்

## இம்மைப் பயன்

''இடர் நீக்கும் ஆற்றலுடைய பதிகம், ''மறையுடையாய்'' என்று தொடங்குவதாகும். ''அவ்வினைக் கிவ்வினை'' என்னும் பதிகம், விஷக் காய்ச்சல் நீக்குவதாகும். இந் நாளில் எங்குப் பார்த்தாலும் பரவி வரும் ''டிங்கி''க் காய்ச்சலுக்கு இப் பண், கைகண்ட மருந்தாகும். பொருள் வருவாயும் பொன்னும் வேண்டுவோர், ''இடரினும் தளரினும்'' என்னும் பதிகம் பாடின், அவர்தம் நோக்கம் நிறைவேறுதல், ஒருதலை. பாம்புக்கடி விஷம் போக்க வேண்டின், ''ஒன்றுகொலாம்'' என்னும் பதிகம் பயன் தரும். அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடும் இந்தக் காலத்தில், நம் மக்கள் அனைவர்க்கும் உணவுப் பொருள் வழங்கி உதவக் கூடிய பதிகம், ''நீள நினைந்தடியேன்'' என்பதாகும். பெண்களைப் பீடிக்கும் பேய், பிசாசு, பில்லி சூனியம் தீர உதவுவது ''துணிவளர் திங்கள்'' என்ற அற்புதப் பதிகம். தீக்கு இரையாகா திருக்கப் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்ற பாடல் பாதுகாப்பளிக்கும். வெப்பு நோய் தீர ''மந்திரமாவது நீறு'' என்ற பாடலும், சூலைநோய் தீரக் ''கூற்றாயினவாறு'' என்ற பாடலும் முறையே உதவுவனவாகும். இவ்வாறு அநேக பாடல்கள் இருக்கின்றன என்பது, இங்குள்ள யாவரும் அறிந்த தொன்றே.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினைந்தாவது ஆண்டுக் கூட்டம்—1964
திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்

## வரலாற்றில் இடம்

''பண் ஆராய்ச்சி போன்ற பழமையான அரிய இசை ஆராய்ச்சி, தமிழகத்தில் வேறு ஒன்றும் தோன்றப் போவதே இல்லை. இதில் பங்கு கொள்வோர் யாவருமே நாட்டின் வரலாற்றில் இடம்பெறும் அளவில் போற்றப்படுவார்கள்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினைந்தாவது ஆண்டுக் கூட்டம்—1964
இசைப்பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

## மனம் அடங்க வழி இசையே !

''பேய்மனம் எளிதில் அடங்காது; ஒடுங்காது; எண்ணில்லாத காலமாக அலைந்து அலைந்து உழன்றது; அதன் கொட்டத்தை அடக்குவது மிகவும் கடினம்.

வடநாட்டில் மனம் அடங்கக் கஞ்சா, அபினி முதலியவற்றைச் சில துறவிகள் கையாளுகிறார்கள்.

நமது பொன்னுடாகிய தென்னுட்டில், மனம் அடங்கக் கண்டுபிடித்த வழி, இசைப் பாடலேயாகும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினுருவது ஆண்டுக் கூட்டம்—1965

திருமுருக கிருபானந்த வாரியார்

## முந்து தமிழ்

மொழிகளில் சிறந்த மொழி தமிழ். ஏனைய மொழிகள் கனமானவை. தமிழ் இலகுவான மொழி.

கனமான உடம்புடையவனும், மென்மையான உடம்புடையவனும் நடக்கத் தொடங்கினுல், பருத்த உடம்பை உடையவன் பிந்துவான்; மென்மையுள்ளவன் முந்துவான்.

வன்மையான பிற மொழிகள் பிந்தும்; மென்மையான தமிழ் முந்தும். அதனுலே அருணகிரி சுவாமிகள்,

''முந்து தமிழ்மாலை கோடி கோடி''

என்கிருர்.

இறைவனுடைய செவியில் முந்திச் சென்று சேரும் மொழி தமிழ். அது இனிய மொழி; என்றுமுள்ள இளந்தமிழ், சாவாதது; தேவாமிர்தம் போன்ற தித்திக்கும் மொழி; சித்திக்கும் முத்திக்கும் உரியது தமிழ்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினுருவது ஆண்டுக் கூட்டம்—1965.

திருமுருக கிருபானந்த வாரியார்

## வினுவும் விடையும்

''இசை என்று தோன்றியது என்னும் கேள்விக்கு மனிதனுக்கு உணர்ச்சி என்பது என்று தோன்றியதோ அன்றே இசையும் தோன்றியது என்று கூறுவதே பொருத்தமான பதிலாகும். எழுத்தறிவும் நாகரிகமும் இல்லாத ஒவ்வொரு நாட்டுப் பழைய மக்களிடத்தும், ஆடலும், பாடலும் முதன்மை பெற்றிருப்பதால்தான், இவ் விடை பொருத்தமாகிறது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினேழாவது ஆண்டுக் கூட்டம்—1966

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

## தமிழே மணக்க வேண்டும்

','தமிழ்' என்னும் பெயரை நினைத்தாலே எனது நெஞ்சு இனிக்கிறது. சொன்னுல் வாய் மணக்கிறது. தமிழிலே பாடக் கேட்டால் செவி குளிர்கிறது. சில சமயங்களில், என்னை நானே மறந்து விடுகின்றேன். தமிழர் வாழ்விலே, எங்கும், எதிலும் என்றென்றும் தமிழே இடம்பெற வேண்டுமென்ற கொள்கை எனக்குண்டு. அந்தக் கொள்கைப்படி தமிழ் இசை வளர்க்கப் பாடுபடும் உங்கள் அனைவரையும் தலையார வணங்கி, வாயார வாழ்த்துகிறேன். இசைத் துறையில் மட்டுமல்லாமல், தமிழர் சம்பந்தப்பட்ட துறை தோறும் தமிழே மணக்கும்படி செய்ய இறைவன் அருள்புரிவானுக.,'

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினெட்டாவது ஆண்டுக் கூட்டம்—1967

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

## செயற்கரிய செய்த பெரியார்

''அன்று, மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர், வழிவழி வந்த பாண்டிய மன்னர்கள். அந்த மன்னர் மரபு மறைந்து போனதால், அதே பாண்டி நாட்டின் ஒரு பகுதியான செட்டிநாட்டின் அரசர், ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள், தமிழிசை வளர்க்கத் தனிச் சங்கம் கண்டார். அதன் மூலம் தமிழ் மொழியின் வரலாற்றிலே ஒரு புதிய ஏட்டை, புரட்சி மிக்க அத்தியாயத்தைச் சேர்த்து வைத்தார். செயற்கரிய செய்த அந்தப் பெரியாருக்கு அஞ்சலி செலுத்துகின்றேன்.

பிறப்பிலே மட்டுமல்லாமல், தமிழிசைச் சங்கத்தைப் பேணி வளர்ப்பதிலேயும், அண்ணுமலை அரசரின் வாரிசுகளாக விளங்கும் என் பெரு மதிப்பிற்குரிய ராஜா சர் முத்தைய செட்டியாருக்கும், அவருடைய இளவலும் எனது பேரன்பிற்குரிய நண்பருமான திரு. மு. அ. சிதம்பரம் செட்டியாருக்கும் என்னுடைய வணக்கத்தையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் பதினெட்டாவது ஆண்டுக் கூட்டம்—1967

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

## இறைவனை எய்த இசையே வழி

''ஆண்டவனது அருள் நலம் உலகெலாம் பரவ வேண்டும். உலகம் எல்லாம் அவனை நினைக்க, துதிக்க வழிபட வேண்டும் என்று போதித்த அருளாளர்கள், அதற்கு வாயிலாக எல்லா உயிர்களும் சமம் என்பதை உணர்தல் வேண்டும் என்றனர். இவை அனைத்தும் இசையால் இயல்கிறது. இசையாக விளங்கும் இறைவனை எய்த வாயிலாக இசையே விளங்குகிறது என்பது உணர்தல் வேண்டும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் இருபதாவது ஆண்டுக் கூட்டம்—1969

தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள்

**பண் ஆராய்ச்சியின் சிறப்பு**

''பண்கள், இசையின் உயிர்நாடியானவை. பண் ஆராய்ச்சி, தமிழிசை இயக்கத்தின் உருவான நல்ல முயற்சி'' என்று டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், ''தமிழ்ப் பண்கள், இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன், ஒரு தனிக் கலையாய்ப் போற்றி வகுக்கப் பெற்று விளங்கின'' என்று டாக்டர் மு. வரதராசனுரும், ''கருநாடக சங்கீதத்தின் வரலாற்றிற்கு அடிப்படை யானவை, தமிழ்ப் பண்களே என்ற உண் மையை இசை உலகம் உணரவேண்டும் என்பது என் ஆசை'' என்று பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்களும் இம்மன்ற விழாக்களில் கூறியிருப்பதை, இப்போது நினைவூட்ட விரும்புகின்றேன். பண் ஆராய்ச்சி யின் சிறப்பைப் பற்றி, இதற்குமேல் நான் கூற வேண்டுவதில்லை.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் இருபத் தொன்ருவது ஆண்டுக் கூட்டம்—1970

**திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார்**

**இசையின் பிறப்பிடம் தமிழகமே !**

''கர்நாடக இசை என்பது, ஹிந்துஸ்தானி இசை வடநாட்டில் தோன்றியபோது, தமிழ் நாட்டில் தோன்றிப் பரவிய இசைக்கு ஏற் பட்ட பெயர் என்பது என் கருத்து. கரு நாடகத்திற்குத் தென் பகுதியில் உள்ளவர் கள் வழங்கி வந்த இசையைக் கருநாடக இசை என்று வடக்கிலுள்ளோர் கூறலாயினர். அந்தப் பெயரே இன்று நிலைத்து விட்டது. அருகில் உள்ள எந்தப் பகுதியிலிருந்து வருகிறதோ அந்தப் பகுதியின் பெயரையே கொடுப்பது பொதுவான ஒரு வழக்கம்.

இந்த இசையின் பிறப்பிடம், தமிழகமே ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இது, சிறந்த நிலையை அடைந்து இருக்கிறது. இசை உருவங்களும் பெயர் களும் மாறலாம். ஆனுல் அவற்றிற்கு அடிநிலையாகிய இசை, அக்காலத்திலேயே உண்டென்பதை அறிகின்றபோது, நாம் அதில் பெருமை கொள்ளாமல் இருக்க முடி யாது.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் இருபத் திரண்டாவது ஆண்டுக் கூட்டம் —1971

**பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன்**

**ஆளுநர் அளிக்கும் பாராட்டு**

''1800 ஆண்டுகளுக்கு முன் 1200 பண்கள் இருந்ததாகவும் அதில் 103 பண்கள்தான் சில நூற்ருண்டுகளுக்கு முன் தெரிந்ததாக வும், அதில் 23 பண்கள்தான் இப்போது இருப்பதாகவும் தெரிய வருகிறது.

பண் ஆராய்ச்சியைப் பற்றியோ, தமிழ் மொழியைப் பற்றியோ, பழைய பண்பாடு களைப் பற்றியோ, கலைகளைப் பற்றியோ இந்தி யாவை விடத் தென் இந்தியாதான் சிறந்தது என்று, ஆளுநரைப் போன்ற வட இந்தியர் கள் கூறுவதைக் கேட்டு மகிழ்வதால் மட்டும் பயனில்லை. தொடர்ந்து சிறப்பாக ஆராய்ச்சி நடத்த வேண்டும்.''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் இருபத்தி ரண்டாவது ஆண்டுக் கூட்டம்—1971

**டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார்**

உலகத்தில் எல்லா விஞ்ஞானத் துறையிலும் புதிது புதிதாகக் கண்டுபிடித்துப் பழையவை களைப் பற்றி ஆராய்ச்சி செய்துவரும் இக் காலத்தில், நாம், புதிதாகக் கண்டுபிடிக்கா விட்டாலும், நம் முன்னேர்கள் வகுத்து வைத்த பழைய பண்களைக்கூடக் காப்பாற்றிக் கொள்ளவில்லை யென்ருல், நமக்குப் பின்வரும் சந்ததியார்கள், நம்மை மிகவும் கடுமையாகப் பழிப்பது திண்ணம்,''

—தேவாரப் பண் ஆராய்ச்சியின் இருபத்து நான்காவது ஆண்டுக் கூட்டம்—1973.

**இசைப்பேரறிஞர் டி. கே. பட்டம்மாள்**

நாதசுர வித்துவான், பத்மஸ்ரீ,

# திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

**திரு. த. சங்கரன்**

**இயக்குநர், இசைக் கல்லூரி, தமிழ் இசைச் சங்கம், சென்னை**

---

இவ் ஆண்டு இசைப்பேரறிஞர் பட்டம்சூடும், நாதசுர வித்துவான், திரு.எஸ்.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், நாயன்மார்கள் திருப்பதிகம் பாடிய புனிதத் தலமான திருவீழிமிழலையில் 16-4-1893ல் தோன்றியவர்கள். தெய்வீகச் சூழ்நிலைக்கு ஏற்ப இசைக்கலையும் தோய்ந்த வட்டாரம் அது. அவருடைய தகப்பனார் சுவாமிநாத பிள்ளையும், பரம்பரைச் சங்கீதத்தில் ஊறி வளர்ந்தவர்; தாய் மாமன் — நாதசுர வித்துவான், நாகூர் சுப்பையா பிள்ளை. திருவீழிமிழலையை அடுத்த பல சிற்றூர்கள் இசைக் கோயில்களாகும். திருவீழிமிழலையை அடுத்த அச்சுதமங்கலம், மகாவித்துவான் பிடில் கோவிந்த சுவாமி பிள்ளை பிறந்த புண்ணிய பூமி. ஏறக்குறைய 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு, தஞ்சை மாவட்டத்தில், புகழ் பெற்று விளங்கிய நாதசுர வித்துவான்களுள் திருமருகல் நடேச பிள்ளை, மன்னார்குடி சின்னப்பக்கிரிப் பிள்ளை, நாகூர் சுப்பையா பிள்ளை, நாகப்பட்டினம் வேணுகோபால் பிள்ளை ஆகியோரின் சங்கீதமும், அதன் வரலாற்றுச் சிறப்புகளும் சங்கீத வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக இருந்து வந்தன. இந்தச் சூழ்நிலையில், திருவீழிமிழலை, சாமிநாத பிள்ளை அவர்களின் குமாரர்களான சுப்பிரமணிய பிள்ளை, நடராச சுந்தரம் பிள்ளை, கலியாண சுந்தரம் பிள்ளை ஆகிய மூவரும் சங்கீதத்தில் ஊறித் தேர்ச்சி பெற்றதில் ஆச்சரியமில்லை. அந்த நாட்களில், திருப்பாம்புரம் சாமிநாத பிள்ளையின் இரு குமாரர்களான நடராச சுந்தரம் பிள்ளை (புல்லாங்குழல் சாமிநாத பிள்ளையின் தந்தையார்)யும், சிவசுப்பிரமணிய பிள்ளையும் ஒன்ருகப் பயிற்சி பெற்றுக் கீர்த்தனைகளை ஒற்றுமையாக வாசிப்பதில் புகழ் பெற்றிருந்தார்கள். திருப்பாம்புரம் நடராச சுந்தரம் பிள்ளை, வீணை தனம்மாள், திருக்கோடிகாவல் பிடில் கிருஷ்ணையர் ஆகிய மூவரும், சாத்தனூர் பஞ்சுவையரிடம் பயிற்சி பெற்று, ராகம் வாசிப்பதிலும், உருப்படிகளைப் பாடுவதிலும் தனிச் சிறப்பைப் பெற்றிருந்தார்கள். ஆகவே, திருவீழிமிழலை சாமிநாத பிள்ளை அவர்களும் தம் மூத்த குமாரர்கள் இருவரும் திருப்பாம்புரம் சகோதரர்களைப் போல், நாதசுரப் பயிற்சி பெற வேண்டுமென்று விரும்பினர். செம்பொனார் கோயில் இராமசாமிப் பிள்ளை அவர்கள், தம் மகளைச் சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு மணம் செய்து கொடுத்ததும் அன்றி, நாதசுரக் கலையில் தமது மருமகனின் முன்னேற்றத்துக்கான ஊக்கத்தை வளர்க்கலானார். ஆகவே, சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், அவர்களின் தம்பி நடராச சுந்தரம் பிள்ளை அவர்களும் திருவீழிமிழலைச் சகோதரர்கள் என்று பெயர் பெற்று வந்தார்கள். இருவரும் நாதசுரக் கலையை வளர்த்து வந்தாலும், வாய்ப்பாட்டில் நல்ல தேர்ச்சி பெற்று வந்ததால், அவர்களுடைய கலை, சாகித்தியச் செழிப்பும் பெற்று வந்தது. புகழ் பெற்ற பாடகர்களாக விளங்கி வந்த கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயரும், காஞ்சிபுரம் நாயனா பிள்ளையும் பல உருப்படிகளை உதவி இச் சகோதரர்களின் பாடும் தரத்தை மிகப் பெரியதாக்கி விட்டார்கள். கடைசித் தம்பியான கலியாண சுந்தரம் பிள்ளை அவர்கள், பல ஆண்டுகள் நாயனா பிள்ளை அவர்களிடம் பாடம் சொல்லிக் கொண்டதனால், மூன்று சகோதரர்களுக்கும் உருப்படிகள் ஏராளமாகப் பாடம் ஆகி வந்தன. சங்கீதம் பரம்பரைச் சொத்து; மகாவித்துவான்களிடம் பெற்ற பயிற்சியும், அவர்களது ஆசியும் சேர்ந்து சங்கீத இலக்கணத்திலும் லயவின்னியாசத்திலும் பெரும் பயிற்சி ஏற்பட்டது. ஆகவே, திருச்சி கோவிந்தசுவாமிப் பிள்ளை, காஞ்சிபுரம் நாயனா பிள்ளை, கொன்னக்கோல் பக்கிரியாப் பிள்ளை ஆகிய மேதைகளின் பெரு மதிப்பும் கிடைத்தது. அழகுக்கு அழகு செய்வதுபோல், இவர்களுடைய மேளத்தில், அபிநவ நந்தீசர், நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தவில் வாசித்து வந்தார்கள்.

சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தஞ்சாவூர் ஜில்லா போர்டிலும், மாயூரம் நகர மன்றத்திலும் உறுப்பினராக இருந்தார்கள். ரேடியோ ஆடிஷன் போர்டிலும் சிறப்பிடம் பெற்றிருந்தார்கள்.

இச் சகோதரர்களுக்குத் திருச்சி கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களிடம் மிகவும் பக்தியுண்டு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் காலமான பிறகு, அவர்கள் நடத்தி வந்த தியாகராசர் விழாவை, ஆண்டுதோறும் திருவையாற்றில், சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

நாளடைவில், சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும், அவர்களின் தம்பி நடராசசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் பரிசு கிடைத்தது.

சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் இரு குமாரர்களான கோவிந்தராச பிள்ளை அவர்களும், தட்சிணாமூர்த்திப் பிள்ளை அவர்களும், தம் தந்தையாரைப் போலப் பிரபல நாதசுர வித்துவான்களாகப் புகழ் பெற்று விளங்குகிறார்கள்.

சென்ற ஆண்டில், சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு எண்பதாம் ஆண்டு விழா, சிறப்பாக நடைபெற்றது. அவர்கள், இன்னும் பலகாலம் வாழ்ந்திருந்து, இசைக்குத் தொண்டு செய்ய, இறைவன் அருள்வானாக.

# நன்றியுரை

தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிப் பணிகளிலும், பிற பல பணிகளிலும் ஒத்துழைத்து உதவி வருகின்ற நல்லவர்களுக்கும், வல்லவர்களுக்கும், இச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், விளம்பரங்கள் முதலியன தந்து உதவிய தலைவர்கள், கலைத்துறை, வணிகத்துறைப் பெருமக்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தமிழ் இசைச் சங்கம்
சென்னை–1
*22-12-1974*

டி. எஸ். கச்சாபிகேச முதலியார்
மு. அ. சிதம்பரம்
கௌரவச் செயலாளர்கள்

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## பண் ஆராய்ச்சி வெள்ளி விழா

**1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22, 23, 24, 25, 26 ஆம் நாட்கள்**

**இடம்: ராஜா அண்ணாமலை மன்றம்**

**நிகழ்ச்சி நிரல்**

**22-12-74 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை**

(காலை மணி 8 முதல் 10 வரை, இஞ்சிக்குடி திரு. கந்தசாமி சகோதரர்களின் நாகசுர இசை)

1. இறை வணக்கம்

2. வரவேற்புரை

**திவான்பகதூர், தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்**
(தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை)

3. தொடக்கவுரை

**திரு. எஸ். மகாராசன் அவர்கள்**
(உயர் நீதிமன்ற நடுவர், சென்னை)

4. தலைமையுரை

**பத்மஸ்ரீ, திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்**

5. பண் ஆராய்ச்சி வெள்ளி விழாச் சிறப்பு மலரும்,
பண் ஆராய்ச்சியும், அதன் முடிவுகளின் தொகுப்பும் என்னும் நூலும் வெளியிடுதல்

**இசைப்பேரறிஞர், பத்மபூஷண் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள்**
(தலைமைப் பதிப்பாசிரியர், தமிழ்க் கலைக் களஞ்சியம், சென்னை)

6. (அ) பண் ஆராய்ச்சிக் கூட்டங்களுக்குத் தவறாமல் வந்து பணியாற்றியதைப் பாராட்டும் முறையில், திருக்களர் திரு. தி. சுப்பையா தேசிகர், காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார் ஆகிய ஓதுவார் இருவருக்கும் பொற்பதக்கம் வழங்குதல்.

(ஆ) பண் ஆராய்ச்சியாளர்களுக்குச் சிறப்புச் செய்தல்

7. நன்றியுரை

**டாக்டர் ராஜா சர் முத்தையை செட்டியார் அவர்கள்**
(துணைத்தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை)

8. நாட்டிய நாடகம் (மணி 11-30 முதல் 1 வரை)

## சிக்கல் நவநீத ஈசுவர குறவஞ்சி

நாட்டிய அமைப்பும் நட்டுவாங்கமும் : திரு. கே. என். பக்கிரிசாமிப் பிள்ளை அவர்கள்
பரதநாட்டிய விரிவுரையாளர், அரசு இசைக் கல்லூரி, சென்னை.
பங்கு கொள்வோர் : செல்வி வைஜயந்திமாலா குழுவினர், சென்னை.

## தேவார இசை அரங்கு

**பிற்பகல் மணி 3-30 முதல் 4-30 வரை**

பாடுவோர் : திருக்களர் திரு. தி. சுப்பையா தேசிகர் அவர்கள்
பிடில் : திரு. எம். முருகேசன் அவர்கள்
மிருதங்கம் : திரு. சி. வி. குப்புச்சாமி அவர்கள்

| வ. எண் | பாடல் முதற் குறிப்பு | பண் | தாளம் | இயற்றி அருளியவர் |
|---|---|---|---|---|
| 1. | தோடுடைய செவியன் | நட்டபாடை | திஸ்ரம் | திருஞானசம்பந்தர் |
| 2. | மாதர் மடப்பிடியும் | யாழ்மூரி | திஸ்ரம் | திருஞானசம்பந்தர் |
| 3. | மட்டிட்ட-சுத்தாங்கம் | சீகாமரம் | | திருஞானசம்பந்தர் |
| 4. | என்ன புண்ணியம் | நட்டராகம் | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 5. | சிவனெனும் நாமம்-விருத்தம் | | இராகமாலிகை | திருநாவுக்கரசர் |
| 6. | இடரினும் தளரினும் | காந்தார பஞ்சமம் | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 7. | வானவன்காண்-திருத்தாண்டகம் | | | திருநாவுக்கரசர் |
| 8. | வானநாடனே-சுத்தாங்கம் | தக்கேசி | | சுந்தரர் |
| 9. | பூவார் மலர்கொண்டு | தக்கேசி | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 10. | வேண்டத்தக்கது-திருவாசகம்-சுத்தாங்கம் | | | மாணிக்கவாசகர் |
| 11. | ஒருபொழுதும்-திருப்புகழ் | | கண்டசாதி அடதாளம் | அருணகிரிநாதர் |
| 12. | காலத்தொடு-பிள்ளைத்தமிழ் | | இராகமாலிகை | குமரகுருபரர் |

## தேவார இசை அரங்கு

**மாலை மணி 4-30 முதல் 5-30 வரை**

பாடுவோர் : காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார் அவர்கள்
பிடில் : திரு. எம். முருகேசன் அவர்கள்
மிருதங்கம் : திரு. சி. வி. குப்புச்சாமி அவர்கள்

| வ. எண் | பாடல் முதற் குறிப்பு | பண் | தாளம் | இயற்றி அருளியவர் |
|---|---|---|---|---|
| 1. | தோடுடைய செவியன் | நட்டபாடை | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 2. | மட்டிட்ட புன்னையும் | சீகாமரம் | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 3. | கருவாய்க் கிடந்து—திருவிருத்தம்-சுத்தாங்கம் | | | திருநாவுக்கரசர் |
| 4. | பாடுகின்ற பண்டாரமே | பழம்பஞ்சுரம் | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 5. | கருவுற்ற நாள்முதலாக—திருவிருத்தம்-சுத்தாங்கம் | | | திருநாவுக்கரசர் |
| 6. | காதலாகிக் கசிந்து கண்ணீர் | கௌசிகம் | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 7. | நின்னுவார் பிறர்அன்றி—திருத்தாண்டகம் | | | திருநாவுக்கரசர் |
| 8. | மந்திரமாவது நீறு | காந்தாரம் | ரூபகம் | திருஞானசம்பந்தர் |
| 9. | செந்தமிழர் தெய்வமறை நாவர்-சுத்தாங்கம் | சாதாரி | | திருஞானசம்பந்தர் |
| 10. | வானவர்கள் தானவர்கள் | சாதாரி | ஜம்பை | திருஞானசம்பந்தர் |
| 11. | நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தர்-சுத்தாங்கம் | தக்கேசி | | சுந்தரர் |
| 12. | ஆலந்தான் உகந்து அமுது | தக்கேசி | ஆதி | சுந்தரர் |
| 13. | தானெனை முன்படைத்தான் | பஞ்சமம் | ரூபகம் | சுந்தரர் |
| 14. | வாழ்த்து : வான்முகில் வழாது பெய்க | | | |

**23-12-74 திங்கட்கிழமை முற்பகல் 9 மணி முதல் பகல் 12-30 மணி வரை**

1. யாழ் நூலின் அமைப்பும் சிறப்பும் என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படித்தல்-வித்துவான் க. வெள்ளைவாரணன் அவர்கள்.
2. 103 பண்கள் யாழ் நூலில் வகுத்துக் காட்டியது போலத் தேவாரத்தில் பாடிக் காட்ட முடியுமா?
3. 103 பண்கள் இருக்க, அவை இருபத்து மூன்றாகக் குறைந்தது ஏன்?
4. இராகங்களில் பழந் தமிழ்ப் பண்களின் செல்வாக்கு என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படித்தல்—சேலம் திருமதி எஸ். செயலட்சுமி அவர்கள்.
5. முல்லைப் பண்ணின் தொன்மையும் சிறப்பும் என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படித்தல்—ராவ்சாகிப் கே. கோதண்டபாணிப் பிள்ளை அவர்கள்.
6. பரிபாடல்களில் உள்ள பாடல்களுக்கு எவ்வாறு இசை அமைந்திருந்தது?
7. **நாதசுரத்தில் மல்லாரியும், ரக்தியும், தவிலில் அலாரிப்பும்** ஒரு மணி நேரம் வாசித்துக் காட்டுதல்—திருவீழிமிழலை திரு. எஸ். கோவிந்தராச பிள்ளை அவர்கள், திரு. எஸ். தட்சிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள் குழுவினர் (மணி 11-30 முதல் 12-30 வரை)

## தேவார இசை அரங்கு

**மாலை மணி 3-30 முதல் 5-30 வரை**

பாடுவோர் : திருமதி சொர்ணா சோமசுந்தரம் அவர்கள்
திருமதி உருக்குமிணி இராமசாமி அவர்கள்

பிடில் : திரு. எம். முருகேசன் அவர்கள்

மிருதங்கம் : திரு. சி. வி. குப்புச்சாமி அவர்கள்

| வ. எண் | பாடல் முதற் குறிப்பு | பண் | தாளம் | இயற்றி அருளியவர் |
|---|---|---|---|---|
| 1. | விநாயகனே-விருத்தம் | | | கபிலதேவ நாயனார் |
| 2. | பிறையணி படர்சடை | நட்டபாடை | ஆதி | திருஞானசம்பந்தர் |
| 3. | சிறையாரும் | பழந்தக்கராகம் | திரிபுடை | திருஞானசம்பந்தர் |
| 4. | காயமே கோயிலாக-திருவிருத்தம் | | | திருநாவுக்கரசர் |
| 5. | இன்று நன்று | சாதாரி | கண்டசாபு | திருஞானசம்பந்தர் |
| 6. | பக்தனாய்ப் பாடமாட்டேன்-திருநேரிசை | | சுத்தாங்கம் பண்ணாங்கம் ஆதி | திருநாவுக்கரசர் |
| 7. | மாதர் மடப்பிடி | யாழ்மூரி | ரூபகம் | திருஞானசம்பந்தர் |
| 8. | மீளா அடிமை | செந்துருத்தி | திரிபுடை | சுந்தரர் |
| 9. | வேதநாயகன்-திருக்குறுந்தொகை | | ஆதி | திருநாவுக்கரசர் |
| 10. | நின்னாவார் பிறரன்றி-திருத்தாண்டகம் | | | திருநாவுக்கரசர் |
| 11. | நன்றுடை யானை | குறிஞ்சி | திரிபுடை | திருஞானசம்பந்தர் |
| 12. | மாதர்பிறைக் கண்ணியானை | கொல்லி | ஆதி | திருநாவுக்கரசர் |
| 13. | வேண்டத் தக்கது-திருவாசகம் | | | மாணிக்கவாசகர் |
| | அண்ணா மலையான்-திருவாசகம் | | ஆதி | மாணிக்கவாசகர் |
| 14. | என்னையுன் பாதபங்கயம்-திருவிசைப்பா | | | கருவூர்த்தேவர் |
| | குழலொலி-திருப்பல்லாண்டு | | ஆதி | சேந்தனார் |
| 15. | புண்ணியம் செய்வார்க்கு-திருமந்திரம் | | | திருமூலர் |
| | உள்ளம் பெருங்கோயில்-திருமந்திரம் | | | திருமூலர் |
| 16. | பிறந்து மொழிபயின்ற-பதினோராம் திருமுறை | | | காரைக்காலம்மையார் |
| 17. | வேதநெறி-பெரியபுராணம் | | | சேக்கிழார் |
| 18. | திருப்புகழ் | | | அருணகிரிநாதர் |

**24-12-74 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் பகல் 12-30 மணி வரை**

1. பண்டைக் காலத்து இசைக் கலைச் சொற்களின் விளக்கம் – யாழ்: இசை எழாலும் கரணங்களும் என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படித்தல் – பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன் அவர்கள்.

